

# பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்தல்

# 21 ஆம் நூற்றாண்டு

# சீஷத்துவம்

**2 ஆம் புத்தகம்:**
**பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தல்**

**புதிய விசுவாசிகளுக்கான ஓர் பாடத்திட்டம்**

---

சுவிசேஷம் மற்றும் சீஷத்துவத்திற்கான பாடசாலையினால்(SED) உருவாக்கப்பட்டது.
இது குளோபல் பல்கலைக்கழகத்தின் ஒரு பிரிவாகும் – ICI

# உள்ளடக்கம்

*பாடம்* *பக்கம்*

அறிமுகம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 03

இப்பாடத்திட்டத்தை எவ்வாறு பயன்படுத்துவது . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 04

பாடம் 1 – கோபத்தை மேற்கொள்ளல் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .08

பாடம் 2 – மன்னிப்பு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .20

பாடம் 3 – சிறந்த உறவுகளைக் கட்டியெழுப்புதல் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 31

பாடம் 4 – விடாமுயற்சி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 51

பாடம் 5 – தேவனுடைய சரிப்படுத்லைப் பெற்றுக்கொள்ளல் . . . . . . . . . . . . . . . . . . . . . .67

பாடம் 6 – தோல்வியை எவ்வாறு கையாளுவது . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .81

பாடம் 7 – ஆவியானவரின் வரங்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 94

பாடம் 8 – உங்கள் பணம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .107

பாடம் 9 –ஏன் தேவன் பாடுகளை அனுமதிக்கின்றார்? . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 121

பாடம் 10 – தேவனுடைய சித்தத்தை எவ்வாறு கண்டுபிடிப்பது? . . . . . . . . . . . . . . . . . . . .140

பாடம் 11- ஆவிக்குரிய அதிகாரத்தை விளங்கிக்கொள்ளுதல் . . . . . . . . . . . . . . . . . . . . . . .156

பாடம் 12- ஊழியத்தில் உங்கள் இடத்தை கண்டுபிடித்தல் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 169

பாடம் 13- அதிசிறப்பிற்காக கடுமுயற்சிசெய்தல் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 184

# அறிமுகம்

***21 ஆம் நூற்றாண்டு சீஷத்துவம்*** புதிய கிறிஸ்தவர்களாகிய இது உங்களுக்கே. நீங்கள் இயேசு கிறிஸ்துவின் சீஷனாகியதோடு ஒர் அற்புதமான பயணத்தையும் ஆரம்பித்துள்ளீர்கள். சீஷன் என்பவன் கற்பவனும் முதிர்ச்சியடைபவனும் தன்னுடைய ஆசானைப்போலாகுபவனுமாவான், இவ்விடயத்தில் இயேசுவைப்போல். *பயணம்* என்கிற இச்சொல்லானது புதிய தேசத்தை நோக்கி முன்செல்லுதலாகும். நீங்கள் உங்களுக்கு பழக்கப்பட்ட இடத்தை விட்டு இதற்கு முன் ஒருபோதும் சென்றிராத இடத்தை நோக்கி முன்செல்லுதலாகும்.

இப்பயணத்தில் தேவனுக்கான உங்களுடையஅன்பும் நன்றியறிதல்களும் வளர்க்கப்படும். வேதாகமத்தை குறித்த உங்கள் புரிந்துணர்வும், அதனுடைய போதனைகளை கிரியையில் செய்வதற்கான திறமையும் வளரும். கிறிஸ்தவர்கள் எதை செய்கிறார்களோ அதை ஏன் செய்கிறார்கள். அதாவது ஜெபம், கொடுத்தல், தேவையுள்ளோர்க்கு உதவுதல், ஊழியம், போதித்தல் இவை போன்ற விடயங்கள் ஒரு அர்த்தத்தை ஏற்படுத்த ஆரம்பிக்கின்றது. உங்களை கீழே விழச்செய்யும் பொருட்டு கிரியை செய்த பழைய பழக்கவழக்கங்களும் தவறான எண்ணங்களும் மறைந்துபோக ஆரம்பிக்கும். தேவன் உங்களுக்கு குறிப்பிட்ட சில வழிகளில் வரங்களை அளித்திருப்பதை நீங்கள் கண்டுகொள்வீர்கள் அத்துடன் அவருடைய இராஜ்ஜியத்தின் வளர்ச்சிக்காக உங்களை பயன்படுத்த அவருக்கு வேண்டியுள்ளது. தேவனுடைய உதவியுடன் புதிய விதத்தில் கடினமான சவால்களுக்கு நீங்கள் முகங்கொடுப்பீர்கள். மற்ற கிறிஸ்தவர்களுடனான உங்கள் ஐக்கியம் உயர் பெறுமதி வாய்ந்ததாகவும் நம்புவதற்கரிய மகிழ்ச்சியின் ஊற்றுக்காரணமாகவும் அமையும்.

***21 ஆம் நூற்றாண்டு சீஷத்துவமானது*** இந்தப் பயணத்தில் உங்களுக்கு உதவிசெய்யும்படி ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கின்றது. உங்களுடைய பாதணியை அணிந்துகொண்டு எம்மால் நடக்கமுடியாது. என்றாலும், உங்களுக்கு உதவிசெய்யும் பொருட்டு உங்கள் அருகில் எம்மால் வரமுடியும். இப்பாடமானது உங்களைப் போன்ற மக்களுக்கு என்ன நடந்தது என்பதைக் குறித்து அக்கறைகொண்ட போதகர்கள், மிஷனரிகள் மற்றும் முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களாலே எழுதப்பட்டதாகும். தங்களுடைய திரட்டப்பட்ட அனுபவங்களைக் கொண்டும் தேவனுடைய வார்த்தையான வேதாகமத்தின் போதனைகளைக் கொண்டும் இப்பாடத்திட்டத்தை பெறுமதி வாய்ந்ததொன்றாக அமைத்தனர்.

கிறிஸ்துவை இன்னும் நன்றாக அறிந்துகொள்ளவும்; ஆவிக்குரிய ரீதியில் வளர்வதற்கு உதவிசெய்யவும்; நீங்கள் எவ்வாறானவராக வேண்டும் என கர்த்தர் எதிர்பார்க்கும் எல்லாமாகுவதற்காகவும் உங்களை தைரியப்படுத்துவதே இந்த பாடத்திட்டத்திற்கான எம்முடைய அடிப்படை இலக்காகும். உங்கள் வாழ்க்கையானது தேவனுக்கும் பல மனிதர்களுக்கும் முக்கியமானது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் உண்மையுள்ளவர்களாயிருப்பீர்களானால் நிச்சயமாகவே தேவன் உங்களுக்காக பல அற்புதமான காரியங்களை சேர்த்து வைத்துள்ளார். சீஷத்துவம் என்கிறதான பயணத்தை மகிழ்வுடன்அனுபவியுங்கள்!

# இப்பாடத்திட்டத்தை எவ்வாறு பயன்படுத்துவது

## பாடத்தைக் குறித்து

***21 ஆம் நூற்றாண்டு சீஷத்துவம்*** என்ற இந்தக் கோவையில் மூன்று கற்கை வழிகாட்டல்களோடு 13 பாடங்கள் / கற்கை வழிகாட்டல்கள் அமைந்துள்ளது. ஒவ்வொரு பாடங்களும் கீழ்கண்ட விதமாய் அமைந்துள்ளது.

- தலைப்பு
- அறிமுகம்
- முக்கிய அம்சங்கள்
- நோக்கங்களின் பட்டியல்
- பாட உள்ளடக்கம்
- முடிவு
- மனனம் செய்வதற்காக பரிந்துரைக்கப்பட்ட வேத வசனங்கள்
- சுய-பரீட்சை
- சுய-பரீட்சைக்கான பதில்கள்
- பாடத்தின் எழுத்தாளரைக் குறித்த தகவல்கள்

## சுய-பரீட்சை

நீங்கள் படித்த பாடத்தை மீளாய்வு செய்வதற்கு இந்த சுய-பரீட்சையானது மிகவும் உதவியாய் அமையும். வினாக்கள் யாவும் சரி/பிழை, பல தெரிவுகள் மற்றும் இடைவெளி நிரப்புதல் என்பவற்றின் தொகுப்பாகும். சுய-பரீட்சையை நீங்கள் நிறைவு செய்த பின் கொடுக்கப்பட்டிருக்கும் விடைகளுடன் உங்கள் விடையை ஒப்பிட்டுப் பார்க்கவும். ஒருவேளை நீங்கள் ஒரு வினாவிற்கு பிழையாக பதிலளித்துவிட்டீர்களெனில், சுய-பரீட்சையின் விடையானது சரியான விடையை பாடத்தில் எவ்விடத்தில் காணலாம் என்பதை சுட்டிக்காட்டியுள்ளது. உதாரணமாக விடை  இவ்வாறு இருக்குமெனில் அ (5.3). “அ” என்ற எழுத்து சுய-பரீட்சையின் சரியான விடையைக் குறிப்பிடுகின்றதோடு இலக்கம் 5 ஆனது எத்தனையாம் அத்தியாயம் என்பதை குறிப்பிடுகின்றது. இலக்கம் 3 ஆனது விடை காணப்படுகின்ற பாடத்தின் நோக்கத்தை குறிப்பிடுகின்றது. ஏதேனுமொரு வினாவிற்கு பிழையான விடையை கொடுத்திருக்கிறீர்கள் என்பதை நீங்கள் காணும்பொழுது முழு நோக்கத்தையும் மீளாய்வுசெய்வதற்கு இச்செயற்பாடு உதவியாய் அமையும்.

## கற்கும் வழிமுறைகள்

குறைந்தபட்சம் இரண்டு வழிகளுக்கூடாக இப்பாடத்திட்டத்தினை நீங்கள் கற்றுக்கொள்ளமுடியும்: சுயமாக அல்லது ஒரு குழுவாக. நாம் இவ்விரு முறைகளைக் குறித்தும் விளங்கிக்கொள்வோம்.

# சுயமாகக் கற்றல்

மக்கள் சுயமாகக் கற்றுகொள்ளுவதற்கு உதவிசெய்வதற்காகவே குளோபல் பல்கலைக்கழகமானது நிபுணத்துவம் பெற்றுள்ளது. தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொள்ளும் அனைவருக்கும் ஒரு சபைக்கான, போதகருக்கான அல்லது விஸ்தாரமான பலவகையான புத்தக வளங்களுக்கான அனுமதி கிடைப்பதில்லை என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே.எனவே தான் முழுமையான கற்றல் வழிகாட்டலை உங்களுக்கு கொடுக்க முயற்சி செய்கிறோம். ஓர் தேர்ச்சிபெற்ற ஆசானால் கவனமாக திட்டமிடப்பட்டு ஒவ்வொரு பாடங்களும் எழுதப்பட்டுள்ளது. அதனால் நீங்கள் வீட்டிலிருந்தபடியே அறிவையும் ஆவிக்குரிய வளர்ச்சியையும் பெற்றுக்கொள்ள முடியும்.

முன் ஒழுங்குசெய்யப்பட்ட வகுப்பு நேரங்கள் இல்லாதபடியினால், சுயமாகக் கற்றலானது தனிப்பட்ட உயர் உந்துவிசையையும் சுய-ஒழுக்கத்தையும் கோருகின்றது.தயவுசெய்து உங்கள் கரங்களில் வேதாகமம் ஒன்றிருப்பதை நிச்சயித்துக்கொள்ளுங்கள். வேதாகமமே உங்கள் மூல புத்தகமாகவும் அது மாத்திரமே தேவனுடைய ஏவுதலாகவும் காணப்படுகின்றது.தேவனுடைய வார்த்தயிலிருந்து அதிகமாக பெற்றுக்கொள்வதற்காகஇந்த ***21 ஆம் நூற்றாண்டு சீஷத்துவமானது*** உங்களுக்கு உதவிசெய்யுமொரு சாதாரண கருவியாகும். திறக்கப்பட்ட வேதாகமம், பரிசுத்தஆவியானர் மற்றும் சீஷத்துவ கற்கைநெறியுடன் நீங்கள் பரிசுத்த ஆவியானவருடைய வகுப்பில் இருக்கின்றீர்கள். உற்சாகத்தோடு பெரிய காரியங்கள் நடக்குமென்பதை எதிர்பார்த்திருங்கள்.

## சுயமாகக் கற்கும் நேரத்தை அதிகரித்தல்

1. கற்றுக்கொள்வதற்காக அமைதியானதும் வழக்கமானதுமான நேரத்தை ஒதுக்கிக்கொள்ளுங்கள். ஒவ்வொரு நாளும் அதே வழக்கமான நேரத்தில் கற்பதற்காக உங்கள் மனதை செலுத்தும்போது அவதானிப்பதற்கு மிகவும் இலகுவாக இருக்கும். நீங்கள் அதிகமாக விழிப்பாக இருக்கும் நேரத்தை தெரிவு செய்துகொள்ளுங்கள்.
2. ஒவ்வொரு பாடத்தையும் ஜெபத்தோடுகூட ஆரம்பியுங்கள். இந்த பாடப்புத்தகத்தை புரிந்துகொள்ளுவதற்கும் உங்கள் வாழ்க்கையில் அதை தகுந்த விதமாக நடைமுறைப்படுத்துவதற்கும் உதவிசெய்யும்படி கர்த்தரிடத்தில் கேளுங்கள்.
3. பாட நோக்கங்களை அல்லது பிரதான குறிப்புக்களை கவனித்துப் பார்க்கும்படி பாடத்திற்கூடாக ஒரு விரைவான வாசிப்பை மேற்கொள்ளுங்கள்.
4. இரண்டாம் முறையாகவும் பாடத்தின் நோக்கங்களைப் பாருங்கள்.
5. பாடத்தை மீண்டும் வாசிக்கவும். இம்முறை வேதாகம வசனங்களின்பால் அவதானத்தைச் செலுத்துங்கள். பயிற்சிகளை செய்வதோடு, பயனுள்ள குறிப்புக்களையும் எடுத்துக்கொள்வது உங்களுக்கு உதவியாயிருக்கும். நீங்கள் என்னத்தைக் கற்றீர்கள் என்பதையும் உங்கள் தினசரி வாழ்க்கையில் அதை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்போகின்றீர்கள் என்பதைக் குறித்தும் சிந்தியுங்கள்.
6. ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் கொடுக்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடையளியுங்கள். விடைகளை தெரிந்துகொள்ளத் தேவையெனில் மீண்டும் பாடத்திற்குள் சென்று உங்கள் விடைகளை சரிபார்க்கும்படிக்கு விடைத்தாளை சோதியுங்கள்.
7. போதியளவு நேரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். புதிய புத்தகத்திற்கு கடந்துபோகும்படி வற்புறுத்துவதற்காக எந்த மணி ஓசையும் ஒலிக்காது.

8. வேதவசனங்களுக்கான கருவிகளை இயன்றளவு உபயோகப்படுத்துங்கள். நீங்கள் அறிந்திராத பழக்கமற்ற வார்த்தைகளை அறிந்துகொள்ளும்படி விளக்கவுரைகள், அகராதிகளைப் பயன்படுத்துங்கள்.

# குழுவாகக் கற்றல்

***21 ஆம் நூற்றாண்டு சீஷத்துவத்தை*** குழுவாகவும் கற்றுக்கொள்ள முடியும். இம்முறையானது செயலாற்றும் திறமை கொண்டதும் பாடத்தின் உள்ளடக்கத்தை வலுப்படுத்துவதற்கு உதவிசெய்யகூடிய விதமாகவும் காணப்படுகின்றது. அத்துடன் ஏனைய கிறிஸ்தவர்களோடு நல்லதொரு சிநேகத்தை கட்டியெழுப்புவதற்கான வழியையும் ஏற்படுத்துகின்றது.

## குழுக் கற்றலுக்கான வழிமுறைகள்

1. மற்ற விசுவாசிகளுடன் சேர்ந்து கற்றுக்கொள்ள ஒரு நேரத்தை ஒதுக்கிக்கொள்ளுங்கள். வீட்டில், சபையில் அல்லது சந்திக்க வசதியாகவும் தடங்கலின்றியும் இருக்கின்ற ஏதேனுமொரு இடத்தை தெரிவுசெய்துகொள்ளுங்கள். அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நேரத்தில் ஆரம்பிக்கவும் முடிக்கவும் திட்டமிட்டுக்கொள்ளுங்கள்.
2. வழிகாட்டக்கூடிய ஒருவரையோ அல்லது கலந்துரையாடும் தலைவர் ஒருவரையோ நியமித்துக்கொள்ளுங்கள். வழக்கமாக நீங்கள் சமூகமளிக்கும் சபையின் போதகர் இந்த இடத்திற்கு ஊழியம் செய்யகூடிய திறமையான நபரை தெரிவு செய்வதற்கு உங்களுக்கு உதவி செய்வார்.
3. ஒரு வாரத்தில் ஒரு பாடத்தை மாத்திரம் கற்றுக்கொள்ளும்படி நாம் உங்களுக்கு ஆலோசனை கூறுகின்றோம். கற்றுக்கொள்ளும் குழுவிலுள்ள ஒவ்வொருவரும் சந்திப்பதற்கு முன்பாக வீட்டிலிருந்தே இப்பாடத்தை நன்கு வாசித்து வரவேண்டும். சுயமாகக் கற்கும் முறையில் காட்டப்பட்டிருக்கும் வழிகாட்டல்களை பின்பற்றுங்கள்.
4. குழு கற்றலை ஜெபத்தோடு ஆரம்பியுங்கள். அத்தோடு உங்களுடைய கலந்துரையாடல்களுக்கும் உங்கள் கற்கைகளுக்கும் உதவிசெய்யும்படி பரிசுத்த ஆவியானவரிடத்தில் கேளுங்கள். அதன்பின்னர், பாடத்தில் உள்ள நோக்கங்களை ஒவ்வொன்றாக கலந்துரையாடுங்கள். நோக்கங்களை உரத்த குரலில் வாசித்த பின்னர் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும் கேள்விகள் கேட்பதற்கும் இடமளியுங்கள். உங்களுடைய கருத்துக்களை முன்வைப்பதற்கு வெட்கப்படவேண்டாம். சிலவேளை உங்களுக்கு வழிகாட்டும் தலைவர்கள் முக்கியமான காரியங்களை சுட்டிக்காட்டலாம்.
5. கலந்தாலோசிக்கும் நேரத்தில் பாடத் தலைப்பிலிருந்து விலகிச் செல்லாமல் அவதானத்தோடு இருக்கவும்.
6. குழு செயற்பாடுகளின்போது கேள்வி கேட்பதிலும் ஆலோசனை வழங்குவதிலும் தனிநபர் ஆதிக்கம் செலுத்துவதை தவிர்த்துக்கொள்ளவும்.
7. ஜெபித்துடனேகூட ஒன்றுகூடலை நிறைவு செய்வது மிகவும் சிறந்தது. விசேடமாக அன்றைய தலைப்பில் கற்றுக்கொண்ட விடயங்கள் தொடர்பான தேவைகளுக்காக ஜெபிப்பது நன்று.

உங்களுக்கு யாதேனும் கேள்விகள் அல்லது கருத்துக்கள் இருப்பின், தயவுசெய்து எம்மை தொடர்புகொள்ளுங்கள்:

தொலைபேசி: (800) 443-1083 (சுவிசேஷம் மற்றும் சீஷத்துவம் எனும் நிலையத்தை அழையுங்கள்)
மின்-அஞ்சல்:ced@globaluniversity.edu

# பாடம் 1

## கோபத்தை மேற்கொள்ளல்

ஒரு தம்பதியினர் ஒருவரோடொருவர் சத்தமிட்டுக்கொண்டனர். அவர்களுடைய நடவடிக்கை கொடூரமாகவும் கோபத்தினால் அவர்களுடைய முகங்கள் சிவந்தும் காணப்பட்டது. அவர்களுடைய சிறிய மகள் அழுதுகொண்டிருந்தபடியால் அவளுடைய மூத்த சகோதரன் அவளை இறுக கட்டியணைத்துக்கொண்டபடி முன் அறையிலிருந்த சோபாவுக்குப் பின்னால் இருவரும் போய் ஒழிந்துகொண்டார்கள். அயலகத்தினரால் அக்கூக்குரலையும் அழுகையையும் கேட்கக்கூடியதாயிருந்தது. எனினும், அவர்களுக்கு அதில் தலையிட அவசியமற்றிருந்தது. இறுதியாக, அந்திசாயும் வேளையில் தகப்பன் வேகமாக வீட்டிலிருந்து வெளியேறி வீதிக்குச் சென்றார். தாய் படுக்கையறைக்கு ஓடிச்சென்று, கடுஞ்சீற்றத்துடன் தலையனையை குத்தியபடி உடைக்கப்பட்டவளாக கட்டிலின்மேல் விழுந்து கண்ணீர் விட்டாள். சண்டை முடிந்ததை உறுதிப்படுத்தின்கொண்டவர்களாக பிள்ளைகள் மெதுவாக சோபாவின் பின்னாலிருந்து உற்றுப் பார்த்தவண்ணம் வெளியே வந்தனர். இது அவ்வீட்டில் சாதாரணமாக வாரந்தோறும் நடக்கிற சம்பவமாகும்.

கோபம் என்பது பல்வேறு வித்தியாசமான சந்தர்ப்பங்களில் ஏற்படும் ஓர் வலிமை வாய்ந்த உணர்வுபூர்வமான எதிர் செயல் அல்லது பிரதி செயலாகும். கோபமானது வாழ்க்கைகளை வீணாக்குகின்றது. கோபம் என்பது பாவமா? கோபத்தைக் கட்டுப்படுத்தக் கூடுமா? என ஒருவர் கேட்கலாம். இந்தப் பாடமானது கோபத்தை புரிந்துகொள்ளுவதற்கான வேதாகமக் கோணத்தை உங்களுக்கு அளிக்கின்றது.

### பாடத்தின் முக்கிய அம்சங்கள்

கோபத்தின் பக்கங்கள்

கோபத்தை கையாளுதல்

அன்பின் கட்டளை

தேவனுடைய நீதியுள்ள கோபம்

### பாடத்தின் நோக்கங்கள்

1. *கோபத்தின் நேர்மாறான மற்றும் எதிர்மறான தோற்றத்தை விளக்குதல்.*

2. *கோபத்தை கையாளுதவதற்கான வழிமுறைகளை சுட்டிக் காண்பித்தல்.*

3. *நாம் கோபமாக இருக்கும்போது அன்பின் கட்டளை எவ்வாறு செயற்படுகின்றதென்பதை குறித்து கலந்துரையாடுதல்.*

4. *தேவனுடைய நீதியுள்ள கோபத்தின் தோற்றத்தை விபரித்தல்.*

## கோபத்தின் பக்கங்கள்

### *நோக்கம் 1:*

*கோபத்தின் நேர்மாறான மற்றும் எதிர்மாறான தோற்றத்தை விளக்குதல்.*

---

உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் கோபம் நம்மை பாதிக்கின்றது. கோபம் மூன்று அங்கங்களைக் கொண்டது: உணர்வுப்பூர்வம் (உட்பகுதியில் நீங்கள் எவ்வாறு உணர்கின்றீர்கள்), அறிவாற்றல் (நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்), மற்றும் உங்களுடைய நடத்தை (நீங்கள் என்ன செய்கின்றீர்கள்). சிந்தனையாலும் வார்த்தையாலும் அல்லது செயலாலும் செய்யப்படுகின்ற கோபத்தின் வெளிப்பாடுகள் மெய்யாகவே பாவமாக இருப்பினும், கோப உணர்வுகளானது பாவம் இல்லாமலுமிருக்கலாம். அதில் ஒரு உயிரியல் சார்ந்த கோபத்தின் அங்கமும் உண்டு. நாம் இதை குழந்தைகளிடம் காண்கின்றோம். குழந்தைகளை தங்கள் இஷ்டத்திற்கு நடக்க விடாதபோது அவர்களுக்கு கோபமுண்டாகின்றது. குழந்தைகள் கோபப்படுவது எப்படி என்பதைக் கற்றுக்கொள்ளத் தேவையில்லை ஏனெனில், அழுத்தம் மற்றும் ஏமாற்றத்தின் இயற்கையான பிரதியுத்தரமாகவே கோபம் காணப்படுகின்றது. பெரியவர்களில் இந்த உணர்வு தேவனுடைய வடிவமைப்பின் ஒரு பகுதியாக இருக்கக்கூடும். எனவே, இந்த உள்ளக அமைப்பானது கஷ்டமான அல்லது ஆபத்தான வேலையை நிறைவேற்றுவதற்கு வேண்டிய செயல் ஊக்கத்தையும் உந்துவிசையையும் மனிதனுக்குத் தருகின்றது.

கோபம் என்பது கற்றுக்கொள்ளப்பட்ட மாறுத்தரமாக பலதரப்பட்ட காரணிகளிலும் தங்கியுள்ளது. உதாரணமாக பெற்றோர்கள் உட்பட மற்றவர்கள் கோபத்தோடு செயற்பட்ட விதத்தைப்போல நாமும் கிரியை செய்யலாம். நீதிமொழிகள் 22:24-25 இவ்வாறு எச்சரிக்கின்றது, “கோபக்காரனுக்குத் தோழனாகாதே; உக்கிரமுள்ள மனுஷனோடே நடவாதே. அப்படிச் செய்தால் நீ அவனுடைய வழிகளைக் கற்றுக்கொண்டு, உன் ஆத்துமாவுக்கு கண்ணியை வருவிப்பாய்.” ஆகிலும் எல்லா கோபமும் பாவம் அல்ல. வேதாகமம் நம்மை கோபத்திலிருந்து விலகியிருக்கும்படி உற்சாகப்படுத்துகின்றது. சங்கீதம் 37:8 கூறுகின்றது “கோபத்தை நெகிழ்ந்து உக்கிரத்தை விட்டுவிடு; பொல்லாப்புச் செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம்.” சாலமோனும் இவ்வாறு எழுதுகின்றார், “மூடரின் நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும்.” (பிரசங்கி 7:9). நீதிமொழிகளின் எழுத்தாளர் இவ்வாறு கூறுகின்றார் “உக்கிரம் கொடுமையுள்ளது, கோபம் நிஷ்டூரமுள்ளது.” (நீதிமொழிகள் 27:4).

## கோபத்தின் எதிர்மாறான பக்கம்

கோபத்தின் பிரதிபலிப்பானது எரிச்சல், வெறுப்பு, பகைமை, சுய-அனுதாபம், கடுங்கோபம், தோல்வி, தன்னை குறைத்து மதிப்பிடல், நம்பிக்கையற்ற நிலை, அதேவேளை வாய் மூலமோ அல்லது சரீர ரீதியாக சண்டையிடுதல் ஆகிய உணர்வுகளை உள்ளடக்கின்றது. அநேகமாக மக்கள் கோபத்தை எவ்வாறு கையாளுவதென்பதை அறியாதுள்ளனர். பகைமை உணர்வுள்ள மனிதர்கள் சிலர் ஒன்றுசேரும்பொழுது அங்கே அவர்களால் அதிக கோபத்தை உருவாக்க முடிகிறது. நாம் இதை அநேகமாக செய்தி அறிக்கைகளில் காணக்கூடியதாக இருக்கின்ற அதேவேளை கண்டனம் தெரிவிப்போரின் செயல்கள் உச்சகட்டமாகும்போது அதன் பிரதிபலன் மரணத்தையும் காயத்தையும் ஏற்படுத்துகின்றது.

சில கோஷ்டிகள் அல்லது தீவிரவாத குழுக்கள் கோபத்தையும் பகைமையையும் மதிப்பாக கருதுகின்றனர். ஆனால் அதில் எவ்வித உண்மையும் மதிப்பும் காணப்படமாட்டாது. எபிரேயர் நிருபத்தின் எழுத்தாளர் இவ்வாறு கூறுகின்றார் “யாவரோடும் சமாதானமாயிருக்கவும் ….. யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும்” (12:14-15). நம்முடைய கோபத்தை விட்டுக்கொடுத்து மன்னிக்கும்படி இயேசு நம்மை உற்சாகப்படுத்துகின்றார். தீர்க்கப்படாத கோபம் மன்னிக்க முடியாமை ஆகியவைகள் புரிந்துகொள்ளக்கூடிய பிழைகளுக்கான சாதாரண மாறுத்தரங்கள் அல்ல. ஆனாலும் அது தேவனோடுள்ள நமது உறவை காயப்படுத்தும் ஒரு பெருமை மனப்பான்மையாகும்.

ஆதியாகமம் 4:1-16 கோபத்தைக் குறித்த ஒரு வலிமையான கதையை நமக்குக் காண்பிக்கின்றது. முதல் மனிதர்களான ஆதாம் ஏவாளுக்கு இரு புத்திரர்கள் இருந்தனர். ஒருவன் பெயர் காயீன் மற்றவன் ஆபேல். ஒருநாள் இவ்விரு புத்திரர்களும் தேவனுக்கு காணிக்கை செலுத்தினர். ஆபேலுடைய பலி தேவனை பிரியப்படுத்தியது. ஆனாலும் காயீனுடைய பலியில் இருந்த ஓர் தவறினால் அது தேவனை பிரியப்படுத்தவில்லை. காயீனுடைய பலியில் காணப்பட்ட குற்றம் என்னவென்று வேதாகமம் நமக்கு துல்லியமாக தெரிவிக்காதபோதிலும் இந்த முழு காரியத்தைக் குறித்தும் காயீன் மிகவும் கோபப்பட்டான் என்பதை நாம் அறிவோம். ஆதியாகமத்தில் 4:6-7காயீனுடைய கோபத்தைக் குறித்து தேவன் முகமுகமாக: “உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது? நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னை பற்றியிருக்கும் நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார்.” இதற்குப் பின், காயீன் தன் சகோதரனை வயல்வெளிக்கு அழைத்துச்சென்று அவனை கொலை செய்தான். சரித்திரத்தில் முதலாவது பதிவுசெய்யப்பட்ட கொலைக்குமூலக்காரணம் கோபமாகும்.

## கோபத்தின் நேர்மறான பக்கம்

நிச்சயமாக கோபத்திற்கு எதிர்மாறான பக்கம் இருப்பதுபோல, அதற்கு நேர்மாறான பக்கமும் உண்டு. உணர்வுபூர்வமாக பிழை ஏற்படும்போது கோபம் எச்சரிக்கை செய்யும் விதமாக செயற்படுகின்றது. ஏமாற்றம், தோல்விக்கான பயம், தீர்க்கப்படாத குற்றஉணர்ச்சிகள் மற்றும் சரீரத்தின் களைப்பு ஆகியவை கோபத்தின் அறிகுறிகளாகக் காணப்படலாம்.

கோபத்தின் நேர்மாறான மூலக்கூற்றை எடுத்துக்காட்ட 2 கொரிந்தியர் 11:29, "ஒருவன் பலவீனனானால் நானும் பலவீனனாகிறதில்லையோ? ஒருவன் இடறினால் என் மனம் எரியாதிருக்குமோ?" விசேஷமாக கள்ளப்போதகர்கள் மற்றும் மாயக்காரர்களால் ஜனங்கள் பாவத்திற்கு நேராக வழிநடத்தப்படும்போது பவுல் கோபங்கொண்டார். இவ்வகையான கோபம் அநேகமாக "நீதியான கோபம்" என்று விபரிக்கப்படுகின்றது. நீதியான கோபம் எப்பொழுதும் கட்டுப்பாட்டை மீறிச்செல்லாது; அது ஒருபோதும் நம்மை பாவத்திற்கு நேராக வழிநடத்தாது. அப்படிப்பட்ட சில அரிதான நிகழ்வுகளில் அவ்வாறு நடக்கையில் நம்மைச் சுற்றிலும் நாம் காணும் ஒழுக்கக்கேட்டின் நிமித்தம் நீதியான கோபம் நம்மை தேவனிடம் கிட்டிச் சேர்ப்பதற்கான காரணமாகிவிடுகின்றது. அதனால் தீமையையும் பாடுகளையும் எதிர்த்து நிற்கும்படி மனிதர்களைதூண்டிவிடகோபத்தால்முடிகின்றது.

இயேசுவும் கோபத்தை வெளிப்படுத்தினார். மாற்கு 3:5 "அவர்களுடைய இருதயக்கடினத்தினிமித்தம் [சில யூதர்கள்] அவர் [இயேசு] விசனப்பட்டு, கோபத்துடனே சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்து." ஓய்வுநாளில் இயேசு சூம்பின கையையுடைய மனிதனை குணமாக்கியது யூதர்களுக்கு பிரச்சினையாக ஒரு இருந்தது. மாற்கு 11:15-17 இல் இன்னுமொரு சம்பவத்தில் இயேசு கோபப்பட்டார் என்பதை பதிவுசெய்துள்ளது.

இயேசு எருசலேமிற்கு வந்து,தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்தில் விற்கின்றவர்களையும் கொள்ளுகிறவர்களையும் துரத்தி விட்டுகாசுக்காரருடைய பலகைகளையும், புறா விற்கிறவர்களுடைய ஆசனங்களையும் கவிழ்த்து, ஒருவனையும் தேவாயலத்தின் வழியாக யாதொரு பண்டத்தையும் கொண்டுபோக விடமால். "என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கவில்லையா? நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்று அவர்களுக்கு சொல்லி உபதேசித்தார்."

கோபமானது மனிதனுடைய சாதாரணமான பிரதியுத்தரம் என்றால், அநேக வேதாகம பதங்கள் அதை தவறு என்று ஏன் கூறுகின்றது? உதாரணமாக, கொலோசெயர் 3:8 இல் பவுல் இவ்வாறு எழுதுகின்றார், "இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள்." பவுல் மீண்டும் அறிவுறுத்துகிறார், "சகலவிதமான கசப்பும், கோபமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது" (எபேசியர் 4:31). கோபமானது பாவத்தின்பால் மனிதனை வழிநடத்திச் செல்லக்கூடியது. எனவேதான் முழு வேதாகமத்தின் பின்னணியிலும் கோபமானது பொதுவாக எதிர்மாறாக காண்பிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் சில நிகழ்வுகள் கோபத்தை உண்டாக்கும் பிரச்சினைகளாகும்:

1. ஒரு நபருடைய வேலைசெய்யும் சூழ்நிலை அல்லது அதிகாரத்துடனான கேள்வி அவனை அல்லது அவளை கோபப்படுத்துகின்றது.

2. வாகனத்தை செலுத்தும் அவசரமான நேரத்தில் போக்குவரத்துநெரிசலானதுஅவன் அல்லது அவளுக்கு கோப எரிச்சலை அல்லது கடுஞ்சீற்றத்தை உண்டாக்கலாம்.

3. உடல் நலக்குறைவு கோபத்தை அதிகரிக்கலாம்.

4. மது பாவனை கோபத்தை அதிகரிக்கலாம்.

5. குறைவான சுய-மதிப்பீடு கோபத்தை ஏற்படுத்தலாம்.

6. அதிகாரத்தின் மீது ஆசை அல்லது உறவுகளின் மீது கட்டுப்பாடானது கோபத்திற்கான பாலத்தை உருவாக்கலாம்.

7. முழுமையடையவேண்டும் என்ற ஆவல் கோபத்திற்கு நேராக வழிநடத்தலாம்.

8. தோல்வி, பதட்டம் மற்றும் உணர்ச்சிவசப்படல் போன்ற சூழ்நிலைகள் கிளர்ச்சியுள்ள கோபத்தை உருவாக்கலாம்.

9. மன அழுத்தம் கோபத்தை அதிகரித்திடலாம்.

## கோபத்தை கையாளுதல்

### *நோக்கம் 2:*

*கோபத்தை கையாளுதவதற்கான வழிமுறைகளை சுட்டிக் காண்பித்தல்.*

நாம் எம்முடைய கோபத்தை கட்டுப்படுத்த முடியும். நம்முடைய வாழ்க்கையையும் தேவனுடனான நமது உறவையும் அழிக்கும்படிக்கு நாம் கோபத்திற்கு இடம்கொடுக்கத் தேவையில்லை. கோபத்தை கையாளுவது எப்படி என்பதற்கான நடைமுறை அறிவுரைகள் வேதாகமத்தில் நிறைந்துள்ளது. எபேசியர் 4:26-27 இல், பவுல் கிறிஸ்தவர்களுக்கு இவ்வாறு கூறுகின்றார் “நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது; பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்.”

**நம்முடைய கோபமானது நம்மை பாவத்திற்கு நேராக வழிநடத்தக்கூடாது**

கோபமானது நம்மை பாவத்திற்கு நேராக கொண்டு செல்லுமாயின் அது நீதியான கோபம் அல்லவே. கோபத்தினால் சில நேரங்களில் ஜனங்கள் கொடூரமான செயலை செய்கின்றார்கள் அல்லது சொல்லை சொல்லுகின்றார்கள். அநேக நேரங்களில் கெவினாகிய நானும், கோபத்தின் நிமித்தம் செய்த தவறுகளைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் பின்னொரு நாளில் அக்குற்றங்களைக் குறித்து உணர்த்தியிருக்கின்றார். நான் புண்படுத்திய மனிதர்களிடம் மன்னிப்பும் கேட்டுள்ளேன். பல நேரங்களில் நான் இவ்வாறு செய்யும்படி தேவன் இடமளித்ததோடு கடைசியாக கோபமாக இருக்கும்போது அமைதியாக இருப்பது இலகு என்பதை நான் கற்றுக்கொண்டேன்.

உங்களுக்கு கோபம் வருகிறதென்று நீங்கள் உணரும்போது, அங்கிருந்து சற்று வெளியேறி அமைதியாகுங்கள். முடிந்தால் வேறு காரியங்களைக் குறித்துச் சிந்தியுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, கோபத்துடன் மாறுத்தரம் செய்யாதீர்கள். ஏனெனில் அது வெகுவாக உங்களை பாவத்திற்கு நேராக வழிநடத்தும்.

**சூரியன் அஸ்தமிக்கும் வரை கோபத்தை வைத்திருக்காதீர்கள்**

பவுல் இவ்வாறு எழுதுகிறார், “சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது” (எபேசியர் 4:26). விரைவாக மன்னித்து அடுத்த காரியங்களுக்கு கடந்துசெல்லுங்கள். கோபத்தை உங்கள் மனதில் மறைத்து வைத்துக்கொள்ள நீங்கள் அனுமதிப்பீர்கள் என்றால், அது எப்பொழுதும் கசப்பை வளர்க்கும். அநேக வேளை ஊழியங்களில்வரும் மிக கடினமான பிரச்சினை என்னவெனில் அநேக வருடங்களுக்கு முன்பு நடந்த காரியங்களைக் குறித்து இன்னும் கோபமாக இருப்பதுதான். உணர்வாலும் ஆவிக்குரிய விதத்தாலும் விரைவில் மன்னிக்கின்ற ஒரு நபராக இருப்பது ஆரோக்கியமானதாகும்.

**பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள்**

நாம் கோபமாக இருக்கும்போது பிசாசுக்கு சற்றேனும் இடங்கொடுக்கக்கூடாது என பவுல் கூறுகின்றார். கோபம் என்பது பிசாசு நமக்கு எதிராக உபயோகிக்கக்கூடிய ஒரு வல்லமையான கருவியாகும். நம்முடைய வாழ்க்கையை பிசாசின் கட்டுப்பாட்டிலிருந்து முற்றிலும் விடுதலையானதா என்று நாம் இடைவிடாமல் கவனிக்கவேண்டும். அத்தோடு நாம் நம்முடைய எஜமானரின் திட்டத்தில் தங்கியிருக்கவும்வேண்டும். நாம் பாவம் செய்வதை தவிர்த்து, விரைவில் மன்னித்து, பிசாசுக்கு நம்முடைய வாழ்க்கையில் சற்றேனுமொரு இடத்தை கொடுக்க மறுத்தால், அப்பொழுது நாம் கோபத்தை பயனுள்ள விதமாக கையாளமுடியும்.

**கோபத்தை கையாளுவதற்கான ஏனைய நடைமுறைசார்ந்த வழிகள்**

நீங்கள் வெகு காலங்கள் கிறிஸ்தவர்களாக இருப்பீர்களென்றால் முட்டாள்தனமான அல்லது அவசியமற்ற வகையிலான பிரச்சினைக்குள் பிரவேசிக்கும் சந்தர்ப்பங்கள் குறைவாக காணப்படும். உங்கள் மனப்பான்மை மற்றும் நடத்தை இயேசுவைப்போலாகுவதே இதற்குக் காரணமாகும். ஆகிலும் இன்னும் ஒருவரும் அந்த கருத்துவேறுபாடுகளிலிருந்து விடுதலையாகவில்லை. ஒருவர் பிரச்சினைகளை தேடிக்கொள்ளுவதில்லை என்றாலும் பிரச்சினைகள் அவர்களை நோக்கி வருகின்றது. ஆகிலும் எல்லா பிரச்சினைகளும் தீமை அல்ல என்பதே நற்செய்தியாகும். மெய்யாகவே, சில பிரச்சினைகள் மற்றைய பிரச்சினைகளைத் தீர்க்க வழியாக உள்ளது.

எவ்வாறாயினும், கோபத்தை எப்படி கையாளுவதென்பதை அறிந்திருத்தல் வேண்டும். விசேடமாக மற்றவர்களுடனான கருத்து வேறுபாடுகளுக்கு முகங்கொடுக்கும்போது இது அவசியமாகின்றது. கோபமானது வளர்ந்து கட்டுப்படுத்த முடியாத நிலைக்குட்பட்டுவிடும் என்பதால் கோபத்தை அடக்கிக்கொள்ளுவதும் அதை புதைத்துவிடுவதும் ஆபத்தான ஒன்றாகிவிடுகின்றது. கோபத்தை சரியாக வெளிப்படுத்த கற்றுக்கொள்ளுதலானது நன்மைகளைக் கொண்டு வருகின்றது. மெய்யாகவே, மற்ற நபரின் உரிமையையும் பெறுமதியையும் குறித்து அன்புடனும் விழிப்புணர்வுடனும் கோபம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படுமாயின் ஒரு உறவில் மாற்றத்திற்கும் வளர்ச்சிக்குமான உடன்பாடான வழியாக கோபம் அமையும்.கோபத்தை கையாளக்கூடிய ஆறு முறைகள் பின்வருமாறு.

**உங்களுடைய உணர்வுகளைக் குறித்துப்பேசுங்கள்**

மற்றவர்களுடைய தவறைப் பற்றி பேசுவதைப் பார்க்கிலும் உங்களுடைய உணர்வுகளைக் குறித்து பேசுவது நல்லது. மனிதர்கள் தாங்கள் எதிர்க்கப்படும்போது வன்முறையாக

செயற்படுவார்கள் அல்லது கோபப்படுவார்கள். எதிர்மாறாக பிரதிபலிப்புக்களுக்கு விலகியிருங்கள்.

**ஒரு சமயத்தில் ஒரு கருத்து வேறுபாட்டை மாத்திரம் சார்ந்திருங்கள்**

பழைய மனகசப்புகளைக் குறித்து பேசுவதைப் பார்க்கிலும் பிரச்சினையை தீர்த்துக்கொள்ளுவது மிகவும் நல்லது. பிரச்சினைகள் வரும்போது நாம் அவற்றை கையாளுகையில் இயற்கையாய் வருகின்ற கோபத்தை அடக்கிக்கொள்வது நன்று.

**மற்றவர் பதிலளிக்க இடமளியுங்கள்**

விவாதங்களின்போது அவ்விடம்விட்டு வெளியேறுபவர்கள் தீய சண்டையாளர்கள்! நீங்கள் உங்கள் துணையுடன் அல்லது நண்பருடன் கோபமாயிருக்கும்போது அதை வெளிப்படுத்துவதற்கு உங்களுக்கு உரிமையுண்டு. மாறாக, நீங்கள் மற்ற நபருக்கும் செவிகொடுக்கவேண்டும். இது ஒரு தீர்வையோ அல்லது உடன்பாட்டையோ கொண்டுவரும்.

**உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதை இலக்காக்கிக்கொள்ளுங்கள். கீழ்ப்படுத்துவதை அல்ல**

நமக்கு அன்பானவர்களிடத்தில் நம்முடைய கோபத்தை வெளிக்காட்டுவது நமது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கேயன்றி, அவர்களை சரணடையச் செய்வதற்காக அல்ல. இரண்டுபேர் தங்களுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்காக ஈடுபடுகையில் அநேகந் தரம் அது அச்சூழ்நிலையை தெளிவாக்குகின்றது. அவர்களுடைய கோபம் வெளியேறிய பின்னர் மீண்டும் இருவரும் அன்புசெய்யத் தொடங்குவர்.

**மிக அன்போடுகூடிய சமநிலையான விமர்சனம் (நல்லது கெட்டது குறித்துக் கூறல்)**

மிகுந்த அன்பினால் காரியங்களை வெளிப்படுத்துவதன் மூலம் சமநிலையைப் பேணுவீர்களானால் கோபத்தினால் உண்டாகின்ற அநேக தெரிவிப்புக்களை தவிர்த்துக்கொள்ளமுடியும். அன்பே மிகப்பெரிய நற்பண்பாகும்.

**தேவனுக்கு முன்பாக உங்கள் கோபத்தை அறிக்கையிடுங்கள்**

நீங்கள் எந்தக் காரணத்திற்காக கோபம் கொண்டிருந்தாலும் சரி, கோபத்தை தேவனுக்கு முன்பாக அறிக்கை செய்யுங்கள். “நான் எவ்வளவு கோபமாக இருக்கிறேன் என்பதை தேவன் அறிய இடமளிக்கமாட்டேன். அவர் அதை விரும்பமாட்டார்!” என நீங்கள் சிலவேளை நினைக்கலாம். தேவன் ஏற்கனவே உங்கள் கோபத்தை அறிந்துள்ளார். என்றபோதிலும் நீங்கள் அவரிடம் அவற்றை அறிக்கை செய்வதையே அவர் விரும்புகின்றார். சத்துருக்களின் மீது தனது எண்ணத்தை சங்கீதக்காரன் இவ்வாறு வெளிப்படுத்துகிறார். “தேவனே, அவர்கள் வாயிலுள்ள பற்களைத் தகர்த்துப்போடும்; கர்த்தாவே, பாலசிங்கங்களின் கடவாய்ப் பற்களை நொறுக்கிப்போடும். கடந்தோடுகிற தண்ணீரைப்போல் அவர்கள் கவிழ்ந்துப்போகட்டும்; அவன் தன் அம்புகளைத் தொடுக்கும்போது அவைகள் சின்னபின்னமாய்ப் போகக்கடவது. கரைந்துபோகிற நத்தையைப்போல் ஒழிந்துபோவார்களாக; ஸ்திரியின் முதிராப் பிண்டத்தைப்போல் சூரியனைக் காணாதிருப்பார்களாக” (சங்கீதம் 58:6-8). அவை கடுஞ்சொற்களாக இருந்தாலும்கூட, உண்மையுள்ள புண்பட்ட இருதயம் தேவனிடத்தில் தன் உள்ளத்தை வெளிப்படுத்துவதைக் காணலாம். தன் எதிரிகளை பழிவாங்குவதற்கு பதிலாக

சங்கீதக்காரன் தன்னுடைய கோபத்தை தேவனிடம் வெளிப்படுத்துகிறார். சங்கீதக்காரனைப்போல நாமும் நமது உணர்வுகளோடேகூட தேவனிடத்தில் வரக்கடவோம். தேவன் கோபத்தினாலும் கசப்பினாலும் நிறைந்த இருதயத்தை மாற்ற வல்லவராயிருக்கிறார். அவருடைய வல்லமையால் நாம் நமது எதிரிகளை நேசிக்க கற்றுக்கொள்ளுவோம்.

## அன்பின் கட்டளை

### *நோக்கம் 3:*

*நாம் கோபமாக இருக்கும்போதுஅன்பின் கட்டளை எவ்வாறு செயற்படுகின்றதென்பதைக் குறித்து கலந்துரையாடுதல்.*

யோவான் 13:34-35 இல் இயேசு இவ்வாறு கூறுகின்றார் "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான்உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்." யோவான் 15:12 இல் அவர் மீண்டுமாக அந்தக் கட்டளையை கூறுகின்றார் "நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது." நாம் கோபமாக இருக்கும்போதும் நாம் மற்றவர்களை நேசிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். இயேசுவின் சீஷர்களென நம்மை காண்பிக்கக்கூடிய மிகவும் பயனுள்ள வழி இதுவாகும்.

நம்முடைய ஆணித்தரமான கோபத்தை விடவும் நம்முடைய அன்பு வலிமையாயிருத்தல் வேண்டும். எத்தனை கோபத்துடன் காணப்படினும் நாம் மனிதர்களை அன்புசெய்ய வேண்டும். விசேடமாக கிறிஸ்துவுக்குள் நம்முடைய சகோதர சகோதரிகளை அன்புசெய்யவேண்டும். கோபப்படுகிறதற்கு தாமதித்தலே நமக்குளிலிருக்கும் தேவனுடைய அன்பின் குணாதிசயமாகும். நாம் மெய்யாகவே மனிதர்களை நேசிப்போமானால், நாம் அவர்களிடத்தில் பொறுமையாயுமிருப்போம்.

கொலோசெயர் 3:14 இவ்வாறு கூறுகின்றது, "இவை எல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்." அன்பு ஒற்றுமையை உருவாக்குகின்றது. கோபம் பிரிவினையை உண்டாக்குகின்றது. தேவனுடைய பிள்ளைகளாக நாம் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழும்படியாகவே அழைக்கப்பட்டிருக்கிறோம். நம் ஒருவரை விட்டு ஒருவரைப் பிரிக்கக் காரணமாயிருக்கும் கோபத்திற்கு அங்கு இடமில்லை. நாம் கட்டாயமாக அன்புசெலுத்தவும் ஒன்றாக வேலைசெய்யவும் மன்னிக்கவும் வேண்டும். அத்தோடு மற்றவர்களுடைய குறைபாடுகளுக்கும் இடமளிக்கவேண்டும்.

ஒருவரும் பரிபூரணமானவர்கள் அல்ல. நீங்களும்கூட. உங்கள் தவறுகளை மற்றவர்கள் பொருட்படுத்தாது அதை மன்னிக்க உங்களுக்கு வேண்டியதாயிருக்கும்போது, நீங்களும் மற்றவர்களுடைய தவறுகளை பொருட்படுத்தாதிருக்க வேண்டும்.1 யோவான் 3:14-16 இல் மற்ற தேவ பிள்ளைகளை நேசிக்க தவறும் கிறிஸ்தவர்களுக்கான வலிமையான வார்த்தைகளைக் கொண்டுள்ளது.

நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்; சகோதரனிடத்தில் அன்புகூராதவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான். தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள். அவர் தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக்கூட கடனாளிகளாயிருக்கிறோம்.

கொலை செய்வது பாவமாக இருப்பதுபோலவே பகைமையும் பாவமாகும். நீங்கள் மற்ற நபரைப் பகைத்து தேவனை நேசிக்க முடியாது. நீங்கள் வெறுக்கின்ற ஒருவருக்காக உங்கள் ஜீவனைக் கொடுப்பது இயலாத ஒரு விடயமாகும். அதனால் தேவனுடைய மக்கள் மத்தியில் உண்மை அன்பை உருவாக்குவதற்காக எல்லாக் கோபத்தையும் விட்டுவிடுவோம்.

இந்த அன்பின் நியாயப்பிரமாணமானது கிறிஸ்தவர்களுக்கான பிரதானமான வழிமுறையாகும். ரோமர் 13:8 இவ்வாறு கூறுகின்றது, “ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றாலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்.” கிறிஸ்தவர்கள் பின்பற்றவேண்டிய புதிய பிரமாணம் இதுவே.

தேவன் விரும்புகிறபடி நாம் ஒருவரையொருவர் மெய்யாக நேசித்தால், கோபம் ஒரு பிரச்சினையாக இராது. 1 பேதுரு 4:8 நமக்கு இதை ஞாபகப்படுத்துகிறது, “எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும்.” அன்பு நம்மை மன்னிப்பிற்கு நேராக வழிநடத்துகின்றது. நாம் ஒருவரையொருவர் சரியாக நேசித்தால், மற்றவர்களைவிரைவாக மன்னிப்பதில் எவ்வித பிரச்சினையும் நமக்கு இராது. தேவன் மன்னிப்பு கொடுத்தலை இன்றியமையாததொன்றாகக் காண்கின்றார்.

யாக்கோபு 1:19 “ஆகையால் என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குப் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்.” நாம் கேட்கிறதற்குத் தீவிரமாயும் பேசுகிறதற்கு பொறுமையாயும் இருந்தால் கோபம்கொள்ளுவதற்காக காரணங்கள் குறைவாக காணப்படும். அநேகமாக மற்ற நபருக்கு செவிகொடுக்கத் தவறுவதாலேயே கோபம் உண்டாகின்றது. நாம் எப்பொழுதும் மற்ற நபருடைய கோணத்திலிருந்து பார்ப்பதற்கு முயற்சிக்க வேண்டும். ஆகவே பேசுவதைப் பார்க்கிலும் அதிகமாக செவிகொடுத்தல்வேண்டும்.

# தேவனுடைய நீதியுள்ள கோபம்

## *நோக்கம் 4:*

*தேவனுடைய நீதியுள்ள கோபத்தின் தோற்றத்தை விபரித்தல்.*

*சில மனிதர்கள் தேவனுடைய குணாதிசயமான அன்பை குறித்து மட்டுமே சிந்தித்துக்கொண்டிருக்கின்றனர். ஆனாலும், வேதாகமம் தேவனுடைய நீதியான கோபத்தையும் வெளிப்படுத்துகின்றது. தேவனுடைய கோபத்தின் குணாதிசயங்கள் சிலவற்றை நாம் பார்ப்போம்.*

### தேவன் கோபப்படுகிறதற்குத் தாமதிக்கின்றார்

முதலாவதாக, தேவன் விரைவாக கோபம் கொள்ளுவதில்லை என்று வேதாகமம் நமக்கு கூறுகின்றது. தேவன் தம்முடைய கோபத்தை வெளிப்படுத்துகையில், அது நியாயமானதும் வரையறைக்குட்பட்டதுமாகும்; அவர் எப்பொழுதும் கட்டுப்பாட்டை மீறுவதில்லை. அத்தோடு, தேவனுடைய கோபமானது அன்பும் கிருபையும் சேர்ந்ததாகவே இருக்கின்றது. சங்கீதம் 86:15 இல், ஆனாலும்ஆண்டவரே, நீர் மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுமுள்ள தேவன்." சங்கீதம் 103:8-9 தேவனுடைய கோபத்தின் தரத்தைக் குறித்துச் சொல்லுகின்றது: "கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். அவர் எப்பொழுதும்; கடிந்துகொள்ளார் என்றென்றைக்கும் கோபம் கொண்டிரார்." மேலும் "கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர்." என்று சங்கீதம் 145:8 கூறுகின்றது.

கோபப்படுகிறதற்கு தாமதமாவதைக் குறித்து கற்றுக்கொள்ளுவது நம்மை ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் நேராக நடத்துகின்றது. அது நமக்கு எப்படி பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளலாம் அல்லது எப்படி கோபத்தை வெளிப்படுத்தலாம் என்பதற்கான நேரத்தையும் சுதந்திரத்தையும் தருகின்றது. கீழே கொடுக்கப்பட்டுள்ள வேதாகமப் பதங்கள் நாம் கோபப்படுகிறதற்கு தாமதமாகும்படி நம்மை உற்சாகப்படுத்துகின்றது:

- "பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன். (நீதிமொழிகள் 16:32)
- உன் மனதில் சீக்கிரமாய்க் கோபம் கொள்ளாதே; மூடரின் நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும்." (பிரசங்கி 7:9)
- ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள். மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே." (யாக்கோபு 1:19-20)
- "மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தைமாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்." (நீதிமொழிகள் 15:1)

- “கோபக்காரன் சண்டையை எழுப்புகிறான்; நீடியசாந்தமுள்ளவனோ சண்டையை அமர்த்துகிறான். (நீதிமொழிகள் 15:18)

**தேவன் பாவத்தைக் குறித்தும் கலகம் செய்வதைக் குறித்தும் கோபப்படுகிறார்**

யாத்திராகமம் 32:9 இல், நாம்பின்வருவனவற்றை வாசிக்கின்றோம்: “பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த ஜனங்களைப் பார்த்தேன்; இவர்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள். ஆகையால் என் கோபம் இவர்கள் மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப்போடவும் நீ என்னை விட்டுவிடு.” மனிதர்களின் அவபக்தி தேவனுடைய கோபத்தின் வெளிப்பாடாகும்.

ரோமர் 1:18 கூறுகின்றது, “சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கின்ற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்திற்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.” எளிமையாக கூறுவோமாகில் தேவன் பாவத்தின் மீது கோபம் கொள்ளுகின்றார். நாம் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும். ஏனெனில், சிலுவையின்மீது பாவத்திற்கு எதிரான தேவகோபாக்கினையால் இயேசு பாடுபட்டார். நாம் பெற வேண்டிய தண்டனையை அவர் பெற்றுக்கொண்டார்.

**தேவனுடைய கோபமானது வரையரையுள்ளதும்மீண்டும் கட்டியெழுப்பக்கூடியதும்**

சங்கீதம் 78:38 சொல்லுகிறது, “அவரோ அவர்களை அழிக்காமல், இரக்கமுள்ளவராய் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்தார்; அவர்தமது உக்கிரம் முழுவதையும் எழுப்பாமல், அநேகந்தரம் தமது கோபத்தை விலக்கிவிட்டார்.” ஏசாயா எழுதுகின்றார், “அக்காலத்திலே நீ சொல்லுவது: கர்த்தாவே, நான் உம்மைத் துதிப்பேன்; நீர் என்மேல் கோபமாயிருந்தீர்; ஆனாலும் உம்முடைய கோபம் நீங்கிற்று; நீர் என்னைத் தேற்றுகிறீர் (ஏசாயா 12:1). தேவன் தம்முடைய கோபத்தை வெளிப்படுத்தும்போதும் அது அளவுக்குட்பட்டது அல்லது எல்லைக்குட்பட்டதாகும். அவர் யாருடன் கோபப்பட்டுள்ளாரோ அவர்களை மீண்டும் கட்டியெழுப்புவதும் தேற்றுவதுமே அவருடைய விருப்பமாகும். பாவம் தேவனை கோபப்படுத்தும் என்றாலும் ஒரு பாவி மனந்திரும்பும்போது தேவன் உடனடியாக மன்னித்து பாவியை தேற்றுகிறார். தேவனுடைய கோபம் பாவியை மனந்திருப்புவதற்கென்றே வடிவமைக்கப்பட்டுள்ளது.

## முடிவுரை

கோபத்தை மேற்கொள்வதற்காகஉங்களுக்கு உதவக்கூடிய சில நடைமுறையான சிந்தனைகள் இதோ.

- கோபத்தை ஒத்துக்கொள்ளுங்கள். நீங்கள் கோபமாயிருக்கின்றீர்கள் என்று ஏற்றுக்கொள்ளுங்கள்.
- உங்கள் எண்ணங்களை கட்டுப்படுத்திக்கொள்ளுங்கள். ஒருவருடையஎண்ணங்கள் அவருடைய உணர்வுகளுடன் இடைப்படுகிறதான பிரதான காரணிகளாகும். பிலிப்பியர் 4:8 பவுலின் வார்த்தைகளை நினைவுகூறுங்கள். "கடைசியாக சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்."
- கோபத்திற்கான காரணங்களைக் கண்டுபிடியுங்கள். எது உங்களை கோபப்பட வைத்தது என்பதை கண்டுபிடியுங்கள்.
- உங்கள் முட்டாள்தனமான நம்பிக்கைகளுக்கு சவாலிடுங்கள். நம்முடைய நம்பிக்கை முறைகளும் நாம் சிந்திக்கின்ற விதங்களும் வேறுபட்டவையாகும். கருத்துக்கள் மனிதர்களை மற்றும் சூழ்நிலைகளை நியாயந்தீர்க்கவும் மதிப்பீடு செய்யவும் நமக்கு உதவிசெய்கின்றது.
- எல்லாக் காரியங்களும் உங்களை வருத்தப்படுத்தும்படி நீங்கள் இடமளிக்கவேண்டாம். சாதாரண தோல்விகள் மற்றும் உங்களை தொல்லைப்படுத்துகின்ற காரியங்களைக் குறித்து சிரிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.
- உறவுகளுக்கான இலக்குகளின் மீது கரிசனைகொள்ளுங்கள். உறவுகளில் ஒருவரும் ஒட்டுமொத்தமாக அப்பாவியாகவும் அல்லது குற்றவாளியாகவுமிருப்பதில்லை.
- மனதில் சமாதானத்தை வளர்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் கோபமாக இருக்கும்போது உங்களுக்கும் மற்றவர்களுக்கும்பெரிய பாதிப்பை ஏற்படுத்துவீர்கள். உங்களால் செய்யமுடியாததை தேவன் செய்யும்படி விட்டுவிடுங்கள்.

## மனனம் செய்வதற்கு ஆலோசிக்கப்ட்ட வசனங்கள்

சங்கீதம் 37:8

சங்கீதம் 78:38

நீதிமொழிகள் 15:1

நீதிமொழிகள் 16:32

நீதிமொழிகள் 27:5-6

கலாத்தியர் 5:22-23

எபேசியர் 4:26

எபிரெயர் 12:14-15

# பாடம் 2

## மன்னிப்பு

ஒரு வாக்குவாதத்திற்கு பின்பு ஒரு இளம் வாலிபப் பெண் தன் தாயைப் பார்த்து "நான் உங்களை வெறுக்கின்றேன், நான் உங்களை ஒருபோதும் மன்னிக்கமாட்டேன்" என சத்தமிட்டாள். அத்தாயானவள் வேறு ஒரு நகரத்திற்கு புறப்பட்டுபோகும்படி தீர்மானித்துக்கொண்டாள். அவ்வாறானால் அவள் தன்னுடைய பாடசாலை, அயலகத்தார், நண்பர்கள் மற்றும் பழக்கப்பட்ட சூழ்நிலை என்பவற்றை மாற்றிக்கொள்ள தீர்மானித்தாள். தீர்க்கப்படாத கோபம் தாயையும் மகளையும் பற்றிக்கொண்டது.

"அவன் என்னை கற்பழித்து என் வாழ்க்கையை அழித்துவிட்டான். நான் அவனை ஒருபோதும் மன்னிக்கவேமாட்டேன்!" நீதிமன்ற அறைக்குள் நீதிபதிகள் வரிசைக்கு முன்பாக அந்த மோசமான இரவைக் குறித்தும் அதனுடைய அவலட்சமான நிகழ்வைக் குறித்தும் அந்தப் பெண் சாட்சிகொடுத்தாள். அவள் இன்னும் பாதுகாப்பின்மையையும் கடும் வேதனையும் கொண்டிருந்தாள். ஆண்களைக் குறித்த நம்பிக்கையற்ற உணர்வு ரீதியான வேதனையும் நீடித்தது.

"நான் குடிவெறி கொண்டு கோபத்தில் இருந்தபோது ஒரு மனிதனைக் கொன்றேன். நான் என்னை எப்படி மன்னிப்பேன்? நான் மரிக்கவேண்டும்."

தன்னுடைய செயலின் பிரதிபலனாக, கணவனும் மூன்று பிள்ளைகளுடைய தகப்பனுமான இன்னொரு மனிதனுடைய இறப்பிற்கு காரணமான தன்னுடைய செயல்களைக் குறித்து தன்னைத்தானே குற்றப்படுத்திக்கொண்டிருந்தவனாக காணப்பட்ட ஒரு மனிதன் சிறைச்சாலை அறையில் இருந்தவண்ணமாக, அவைகளைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தான். குற்றவாளியினுடைய சொந்த மனைவியும் பிள்ளைகளும் அவனுடன் தொடர்புகொள்ள விரும்பாதிருந்தனர்.

இவர்களுக்கும் உலகத்திலிருக்கும் இன்னும் அநேக ஆயிரக்கணக்கான மக்களுக்கும் இடையேயுள்ள பொதுவான காரியம் என்ன? அவர்கள் ஆழமாக புண்படுத்தப்பட்டுள்ளனர் அல்லது மற்றவர்களை புண்படுத்தியுள்ளனர். அவர்கள் இழப்பு, கோபம், பயம், கசப்பு, வெட்கம் மற்றும் துக்கம் ஆகிய வலிமையான உணர்வுகளை உணர்கின்றார்கள். நீங்களும் கூட, வேதனையான அனுபவங்களை அனுபவித்திருக்கலாம். அத்தோடு மன்னிப்பு பெறவும் அல்லது ஒருவருக்கு மன்னிப்பு கொடுக்கவும் வேண்டியதாயிருக்கலாம். ஒவ்வொரு நாளும் நம்மை புண்படுத்துபவர்களுக்கும் நாம் புண்படுத்துபவர்களுக்கும் எவ்வாறு பிரதியுத்தரம் அளிக்க வேண்டும் என்பதை தெரிவுசெய்ய வேண்டியவர்களாயிருக்கின்றோம்.

மன்னிப்பு என்ற விடயம் தேவனுடன் ஆரம்பமாகின்றது. அது நம்முடைய கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படையுமாகும். இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்கூடாக, தேவன் நமக்கு தம்முடைய பூரண மன்னிப்பை அளித்துள்ளார் – நாம் என்ன செய்திருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல. மன்னிப்பளித்தல் என்பது அநேகருக்கு இலகுவான காரியமன்று.

உதாரணமாக, மன்னிப்பு கொடுக்காததினிமித்தம் கோபத்தால் நண்பர்கள் பிரிந்துள்ளனர், திருமணங்கள் விவாகரத்தில் முடிந்துள்ளது, பிள்ளைகள் பெற்றோரை விட்டு பிரிந்துள்ளனர், சகோதரர்களின் சண்டை வாக்குவாதங்களை ஏற்படுத்துகின்றது. இப்படிப்பட்ட குறைபாடுகள் சபைகளிலும்கூட காணப்படுகின்றது. மனிதர்கள் மன்னிப்பதற்கு மறுக்கின்றபடியால் இன்னும் கோபத்தை, கசப்பை மற்றும் சந்தோஷமின்மையை உணர்கின்றனர். மன்னிக்காமை என்பது காலங்கள் கடந்தும் மனிதர்களின் உறவுமுறைகளை சீர் குலைத்துள்ளது. அநேக நேரங்களில், பலவருடங்களின் பின் பிரச்சனைக்கான காரணம் என்னவென்பதென்பதும் மறந்துபோயிருக்கும். ஆனாலும் தாங்கள் புண்படுத்தப்பட்டுள்ளனர் என்பதை அறிந்திருக்கின்றபடியினால் மன்னியாமல் இருக்கின்றார்கள். இப்படியானால், வருடக்கணக்காக உறவுகிடையில் காணப்படுகின்ற வளர்ச்சி மற்றும் சந்தோஷத்திற்கு என்னவாகும். அவைகள் பாழாய்ப்போய்விடும்.

அப்பொழுது, பேதுரு அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும்? ஏழு தரம் மட்டுமோ என்று கேட்டான்." (மத்தேயு 18:21). அக்காலத்தில் காணப்பட்ட பொதுவான படிப்பினை என்னவெனில் குற்றஞ்செய்தவனுக்கு ஒரு நாளில் மூன்று தடவைக்கு மேல் மன்னிப்பு கொடுக்கலாம் என்பதாலேயே ஏழு தடவைகள் என்பதை பேதுரு மிக சாதாரணமான ஒன்றாக நினைத்திருக்கலாம். அதற்கு இயேசு: ஏழுதரம் மாத்திரம் அல்ல, ஏழெழுபதுதரம்மட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்" (வசனம். 22). இயேசு வரையரை இல்லாமல் வேண்டியபோதெல்லாம் மன்னிப்பு கொடுக்கலாம் என்கின்ற கருத்தை முன்வைக்கின்றார்.

டிக் டொபின்ஸ் என்ற கிறிஸ்தவ ஆலோசகர் ஒருவர் இவ்வாறு கூறுகின்றார், "மன்னிப்பானது குற்றப்படுத்தப்பட்டவரை குற்றஉணர்விலிருந்தும் வெட்கத்திலிருந்தும் விடுதலையாக்குவதோடு அது உங்களையும் [மன்னிப்பு கொடுப்பவரையும்] கோபத்திலிருந்து விடுதலையாக்கும்." அச்செயல் விருப்பம் தொடர்பான ஓர் வியக்கத்தக்க செயலாகும். மன்னிப்பு கொடுத்தல் தவறு செய்தவரை முன்னோக்கிச் செல்லவும் தேவனுடைய ஆசீர்வாதத்தை அனுபவிக்கவும் வழிவகுக்கும். கசப்பையும் வேதனையையும் வளர்ப்பதற்கு பதிலாக மன்னித்தலை தெரிந்துகொள்வீர்களாக.

## பாடத்தின் முக்கிய அம்சங்கள்

தேவனுடைய மன்னிக்கும் சுபாவம்

மன்னிப்பைத் தேடுதல்

மற்றவர்களை மன்னித்தல்

தன்னை மன்னித்தல்

உங்களுடைய பொறுப்பு

## பாடத்தின் நோக்கங்கள்

நீங்கள் இந்தப் பாடத்தை நிறைவு செய்யும்போது உங்களால் இவற்றை செய்யகூடியதாகவிருக்கும்:

1. *தேவனுடைய மன்னிக்கும் சுபாவத்தை விபரித்தல்.*
2. *மன்னிப்பை எவ்வாறு தேடமுடியுமென்பதை விளக்குதல்.*
3. *மற்றவர்களை மன்னிப்பதன் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ளுதல்.*
4. *தன்னை மன்னிப்பதன் முக்கியத்துவத்தைக் குறித்து கலந்துரையாடல்.*
5. *நீங்கள் தவறிழைத்தவர்களிடம் உங்களுடைய பொறுப்பை விபரித்தல்.*

## தேவனுடைய மன்னிக்கும் சுபாவம்

### *நோக்கம் 1:*

*தேவனுடைய மன்னிக்கும் சுபாவத்தை விபரித்தல்.*

#### விபசாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பெண்

ஒருநாள் இயேசு கற்பித்துக்கொண்டிருக்கும்போது, சில சமயத் தலைவர்கள் விபசாரத்தில் பிடிபட்ட ஒரு பெண்ணை அவர் முன் கொண்டு வந்தார்கள். அவர்கள் அப்பெண்ணை இயேசுவிடம் கொண்டு வந்து அவளுக்கு என்ன செய்யலாம் எனக் கேட்டார்கள். விபசார குற்றத்தில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை அளிக்கப்படவேண்டும் என மோசே கூறியதை இயேசுவுக்கு ஞாபகப்படுத்தினார்கள். அவர் சொல்லுகின்ற ஏதாயினும் ஒரு காரியத்தை அவருக்கு எதிராக பயன்படுத்தி அவரை சிக்க வைக்கவேண்டுமென்பதே அவர்களுடைய எண்ணமாக இருந்தது. இயேசு சாதாரணமாக தரையில் அமர்ந்து புழுதியில் எழுதினார். சற்று நேரத்தின் பின்னர், அவர் நிமிர்ந்து கூறியதாவது, "உங்களில் பாவமில்லாதவன் முதலாவது கல்லெறியக்கடவன்" (யோவான் 8:2-11).[1]

சிலவேளை இயேசு சமயத் தலைவர்கள் தேவனுக்கு விரோதமாகவும் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாகவும் செய்த பாவங்களை தரையில் எழுதியிருக்கலாம். அவர் தம்முடைய கருத்தை கூறி முடித்த பின்னர் தொடர்ந்தும் தரையில் எழுதத்

[1] இவ் அதிகாரமாகிய யோவான் 7:53-8:11 இதுமுந்தைய கையெழுத்துப்பிரதியில் காணப்படவில்லை. எவ்வாறாயினும், கிட்டத்தட்ட புதிய ஏற்பாட்டின் அனைத்து மொழிபெயர்ப்புகளும் அதன் பின்னர் வந்த கையெழுத்துப்பிரதிகளில் இது மேலதிகமாக சேர்க்கப்பட்டது, இது கிறிஸ்துவின் போதனை மற்றும் குணாதிசயம் என்பற்றுடன் உடன்பட்டதால் பெரிதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தொடங்கினார். பின்பு, “அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்பட்டு, பெரியோர் முதல் சிறியோர் வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள். இயேசு தனித்திருந்தார். அந்த ஸ்திரீ நடுவே நின்றாள்” (வசனம். 9).

அவளை குற்றப்படுத்தியவர்கள் போன பின்பு, அந்தப் பெண் மாத்திரம் இயேசுவுக்கு முன்பாக நின்றாள். அவர் அவளிடத்தில், “ஸ்திரீயே, உன்மேல் குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா என்றார். அதற்கு அவள்: இல்லை ஆண்டவரே, என்றாள். இயேசு அவளை நோக்கி: நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனி பாவஞ்செய்யாதே என்றார் (வசனங்கள். 10-11). அந்த பாவம் அவளை குற்றப்படுத்தி மனவேதனைப்படுத்தியிருக்கலாம். இயேசு விருப்பத்துடனேயே மன்னிப்பைப் பெற்றுக்கொடுத்தார். அந்த யூத மதத் தலைவர்களைப்போல் அவர் குற்றப்படுத்தவில்லை. அவர் கிருபையின் வாசலைத் திறந்து அந்த பெண்ணுக்கு ஒரு புதிய ஆரம்பத்திற்கான சந்தர்ப்பத்தை வழங்கினார். சங்கீதக்காரன் இவ்வாறு பறைசாற்றுகிறான், “ஆண்டவரே, நீர் நல்லவரும், மன்னிக்கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர்மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர்” (சங்கீதம் 86:5).

## இயேசுவின் பாதங்களை எண்ணெயினால் அபிஷேகித்த ஒழுக்கம் தவறிய பெண்

ஒரு நாள் ஒரு பெண் இயேசு ஒரு பரிசேயனுடைய வீட்டிற்கு விருந்தினராக சென்றிருந்தபோது அங்கே அவள் துணிச்சலோடு உள்ளே நுழைந்தாள். அவள் ஒழுக்கமற்ற வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்தபடியால் இயேசுவுக்கு பின்னே நின்று அழுதுகொண்டிருந்தாள். ஏனென்றால் அவள் விபசாரம் செய்திருக்கக்கூடும். சிலவேளைகளில் அவள் இயேசு செய்த முதல் சம்பவத்தை கேள்விப்பட்டிருக்கக்கூடும். அத்தோடு ஒரு புதிய வாழ்க்கையும் வாழ ஆசைப்பட்டிருக்கலாம். எவ்வாறாயினும், இயேசு அவளுடைய இருதயத்தைத் தொட்டபடியினால் அவள் இயேசுவுக்கு நன்றியை தெரிவிக்க வேண்டியதாயிருந்தது (லூக்கா 7:36-37).

அவள் இயேசுவுக்கு பின்பாக நின்றாள், அவளின் கண்ணீரின் சில துளிகள் அவருடைய பாதத்தில் விழுந்தது. அவள் அவற்றை தன்னுடைய தலைமயிரினால் துடைத்துவிடும்படி குனிந்தாள். அந்நாட்களில், ஒழுக்கமற்ற பெண்கள் மாத்திரமே தங்களுடைய தலைமயிரை விரித்துவிட அனுமதிக்கப்பட்டனர்; ஒழுக்கமுள்ள பெண்கள் பொதுவாக தங்கள் தலையில் முக்காடிட்டுக் கொள்வர். இயேசுவினுடைய பாதத்தை துடைத்தபின், அவள் அவருடைய பாதங்களின்மேல் நறுமணத் தைலத்தை ஊற்றினாள். “அவரை அழைத்த பரிசேயன் அதைக் கண்டபோது, இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும் இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பார்; இவள் பாவியாயிருக்கிறாளே என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்” (லூக்கா 7:39). உண்மை என்னவெனில் நிச்சயமாக இயேசுவுக்கு அவள் யார் என்பது தெரியும், இருந்தபோதும் அக்காரியம் தொடரும்படி அவர் அதை அனுமதித்தார். இந்த ஒழுக்கம் தவறிய பெண் தனக்குசெய்த இக்காரியத்தை, ஒழுக்கத்தில் உயர்ந்த மனிதன் செய்யவில்லை என்பதை இயேசு சுட்டிக்காட்டினார்.

இயேசு சீமோன் என்னும் பெயர் கொண்ட அந்த உயர்ந்த மனிதனுடன் ஒரு உவமையை பகிர்ந்துகொண்டார். அப்பொழுது அவர்: “ஒருவனிடத்தில் இரண்டு பேர் கடன்பட்டிருந்தார்கள்; ஒருவன் ஐந்நூறு வெள்ளிக் காசும் மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்கவேண்டியதாயிருந்தது. கொடுக்க அவர்களுக்கு நிர்வாகம் இல்லாதபோது,

இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான். இப்படியிருக்க, அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான்? அதைச் சொல் என்றார்" (வசனங்கள். 41-44). அதனுடைய விடை மிகவும் நிச்சயமானது-அதிகமாய் கடன்பட்டு மன்னிக்கப்பட்டவனே அவனிடத்தில் அதிக அன்பாகவும் நன்றியுடனும் இருப்பான். இயேசு அவரின் கூற்றை தொடர்ந்தார் சீமோன் தன் கால்களைக் கழுவும்படி தண்ணீர் கொடுத்தார், முத்தஞ்செய்து வரவேற்கவுமில்லை, அவருடைய தலைக்கு அபிஷேக எண்ணெய் இடவும் இல்லை. ஆனாலும், இந்தப் பெண்ணோ தன்னுடைய கண்ணீரால் இயேசுவினுடைய பாதங்களைக் கழுவி தலைமயிரால் அதை துடைத்தாள்; இடைவிடாது பாதங்களை முத்தஞ்செய்தாள்; நறுமணதைலத்தால் அவைகளை அபிஷேகித்தாள். இயேசு கூறினார் அவளுடைய பாவங்கள், அநேகமாயிருந்தது அவைகள் மன்னிக்கப்பட்டது அதனால் அவள் அதிகமாக அன்பு செய்கின்றாள். பாவ பாரத்திலிருந்து தன்னை விடுதலையாக்கியதற்கு இந்த நன்றிக்கடன் போதாதென்று அவள் காண்பித்துள்ளாள். சீமோன் எப்படியாயினும், தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் குறித்து நன்கு அறிந்திருந்தாலும் அவருடைய சுபாவ அன்பாகிய நிபந்தனையற்ற அன்பை அறிந்துகொள்ளுவதில் தோற்றப்போனவனாகக் காணப்பட்டான்.

மன்னிப்பதே தேவனுடைய சுபாவம். பாவி தன்னுடைய பாவங்களில் தீய வழிகளில் தொடர்ந்தும் இருப்பதைக் காண அவர் விரும்பவில்லை. நம்மையும் அவர் மன்னிக்க சித்தங்கொண்டார் என்பதில் நாம் உறுதியாயிருக்கவேண்டும். நம்முடைய பாவத்தின் வல்லமையை விட அவருடைய மன்னிப்பிற்கு அதிக வல்லமையுண்டு. இன்றும் கூட, "தயவாக என்னை மன்னியும்!" என்று கதறுகின்ற யாவருக்கும் அவர் பதில் உரைக்கும்படி மிகவும் தேவையோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்.

## மன்னிப்பைத் தேடுதல்

## *நோக்கம் 2:*

*மன்னிப்பை எவ்வாறு தேடமுடியுமென்பதை விளக்குதல்.*

"நான் என்ன செய்தேன் என்பதை நீங்கள் அறியீர்கள். தேவன் ஒருபோதும் என்னை மன்னிக்கமாட்டார்!" என்று அநேகர் சொல்லுவர்." இவ் வார்த்தைகள் தேவனுடைய சுபாவம் மற்றும் அவர் செய்யக்கூடியவைகளைக் குறித்து கேள்வியெழுப்பும். பாவியை இரட்சிக்கவே இயேசு இப்பூமிக்கு வந்தார் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" (லூக்கா 19:10).

உலகம் முழுவதும் காணப்படும் சமயங்கள் தங்கள்பக்தர்களை மன்னிப்பை பெற்றுக்கொள்ளச் செய்ய சில மிதமிஞ்சிய செயல்களைச் செய்ய வைப்பதுண்டு. சுத்தமற்ற தண்ணீரில் கழுவுதல், சில அனுமதிக்கப்பட்ட ஜெபங்களை நாள்தோறும் மீண்டும் மீண்டும் ஒப்பித்தல், மீண்டும் மீண்டும் செய்யப்படுகின்ற பாவ அறிக்கைகள், சிலர் கைகளாலும் முழங்கால்களினாலும் சில மைல்தூரங்கள் பயணங்களை மேற்கொள்ளல். இவற்றை செய்வதினால் அவர்களுடைய தெய்வம் அல்லது தெய்வங்கள் அதைக் கண்டு கவரந்திழுக்கப்பட்டு மன்னிப்பார்கள் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர். எப்படியாயினும், அதில் எவ்வித உறுதியம் இல்லை. இதன் விளைவாகதங்களுடைய சுய தாழ்மைக்காகவும் மனந்திரும்புதலுக்காகவும் தினந்தோறும், மாதந்தோறும் மற்றும் வருடம்தோறும் அவற்றை மீண்டும் மீண்டும் செய்கின்றனர்.

கிறிஸ்தவர்களுக்கு உள்ள வித்தியாசம் என்ன? நாம் எருசலேமிற்கு சென்று அங்குள்ள அழுகையின் சுவரில் இருந்து மன்றாட வேண்டுமா? நாம் குறித்த சில இடங்களுக்கு புனித யாத்திரைகளை மேற்கொள்ள வேண்டுமா? நம்மை நாமே அடித்துக்கொள்ள வேண்டுமா?அசுத்தமான நீரில் மூழ்க வேண்டுமா அல்லது குறித்த அளவிலான சில விசேடமான ஜெபங்களை செய்யவேண்டுமா? இல்லை!

ஊதாரி மகனின் உவமையை லூக்கா 15 ஆம் அதிகாரத்தில் வாசிக்கவும். அது சொத்தில் பங்கு கேட்ட ஒரு வாலிபனுடைய கதை, தன் தகப்பன் வீட்டை விட்டு தூர தேசத்திற்குச் சென்று தன்னுடைய பணம் முழுவதையும் செலவழித்தான். தன்னுடைய உலக ஆசைகளை நிறைவேற்றியவனாக ஒரு வனாந்திர வாழ்க்கையை வாழ்ந்தான். காலப்போக்கில் அந்த புத்திரன் ஏழ்மையினால் ஒரு பன்றிப் பண்ணையிலே வேலையொன்றை தேடிக்கொண்டான். அங்கு அவன் பன்றிகள் உண்ணும் உணவை வாஞ்சித்தான். இறுதியில், அவன் தன் வீட்டிற்கு திரும்பிப்போவது நலம் என்று நினைத்தான். தன்னுடைய பாவங்களை தன் தகப்பனிடத்தில் அறிக்கைச் செய்து, தன்னுடைய தகப்பனுடைய வயலில் வேலைசெய்யும்படி எதிர்பார்த்தான். (லூக்கா 15:18).

அந்த இளம் வாலிபன் மிகையான பாவங்கள் செய்தான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. தன் தகப்பனிடத்தில் அவமரியாதையுடன் நடந்துகொண்டதோடு தகப்பன் தனக்குக் கொடுத்த சொத்தை பராமரிக்கும் விடயத்திலும் அவன் தவறிவிட்டான்.தன் சொந்த விருப்பத்தின்படியே தன்னுடைய சொத்தை அனுபவிக்கக்கூடிய சுதந்திரம் இருந்தாலும்கூடதன்னுடையசொந்த எதிர்காலத்திற்காகவும் அதாவது தன்னுடைய பிள்ளைகளினதும் பேரப்பிள்ளைகளினதும் எதிர்காலத்திற்காக சேமித்து வைக்கப்பட்டிருந்த சொத்தை அவன் வீணாக்கினான். அவன் அந்நிமிடத்திற்காக மாத்திரம் வாழ்ந்து அத்தனையையும் தொலைத்தான். எந்த யூதர்களும் கற்பனையால் செய்ய இயலாதஅவமரியாதைக்குரிய வேலையாகிய பன்றிகளுக்கு உணவளிக்கும் வேலையை செய்ய விரும்பினான். அதிர்ஷ்டவசமாக, தான் பயனற்றவனாய் எங்கே இருக்கிறன் என்பதை உணர்ந்துகொண்டான். அவனிடம் காணப்பட்ட ஒரே வாய்ப்பு மனந்திரும்புவதும் வீடுதிரும்புவதுமாகும்.

அதன் பின்னர் அற்புதமொன்று நிகழ்ந்தது: “அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்” (லூக்கா 15:20). குமாரன் தகப்பனை நோக்கி: தகப்பனே, பரத்திற்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுகிறதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான்” (லூக்கா 15:21). ஒருவேலைக்காரனிலும் குறைவான இடத்தைப்பெற அவன் விரும்பினான், சந்தோஷமான தகப்பன் ஒரு விருந்தை ஆயத்தம்பண்ணி, குமாரனை மீண்டும் கட்டியெழுப்பினார்.

நீங்கள் பாவத்தில் வாழ்கின்றீர்களா? தேவன் உங்களை மன்னித்து மீண்டும் உங்களை கட்டியெழுப்ப முடியுமா என்ற ஆச்சர்யத்துடன் காணப்படுகின்றீர்களா? ஒருவேளை நீங்கள் கிறிஸ்துவிடம் உங்கள் இருதயத்தை கொடுக்காதவராகவோ அல்லது பாவத்தில் விழுந்த ஒரு விசுவாசியாகக்கூட இருக்கலாம். உங்களுக்கு ஒர் எதிர்பார்ப்பு உண்டு! 1 யோவான் 1:9 இவ்வாறு குறிப்பிடுகின்றது, “நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர்

உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." தன்னை-குறைப்படுத்தல், முடிவில்லாத பாவ அறிக்கைகள், சரீர வேதனை, மற்றும் சுய தாழ்மை ஆகியவைகள் பாவத்திற்கு மன்னிப்பை கொண்டு வராது. ஏன் இன்னும் விடுதலைக்காகவும் மன்னிப்புகாகவும் காத்துக்கொண்டிருக்கின்றீர்கள். இப்பொழுதே கேட்டு விடுதலையை பெற்றுக்கொள்ளுங்கள்! "தேவரீர் ஒருவருக்கு விரோதமாக நான் பாவஞ்செய்து" (சங்கீதம் 51:4) என்று அவரிடம் அறிக்கை செய்யுங்கள். அவர்சீக்கிரமே உங்களை அவருடைய அன்பின் கைகளால் கட்டியணைத்துக்கொண்டு உங்களை மன்னிப்பார். "தகப்பனே, என்னை மன்னியும்"என்ற சிறு ஜெபத்தை இப்பொழுதே செய்யுங்கள்! இதுவே ஆரம்பிப்பதற்கான மிகப்பெரிய இடம். இப்பொழுதே முயற்சி செய்யுங்கள்.

## மற்றவர்களை மன்னித்தல்

## *நோக்கம் 3:*

*மற்றவர்களை மன்னிப்பதன் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ளுதல்.*

அமெரிக்காவின் நகரங்களில் ஒன்றான ஜோர்ஜியாவை கண்டுபிடித்த ஓர் ஆங்கில ஆளுனரான ஆளுனர் ஜேம்ஸ் எட்வர்ட் ஓகல்ட்த்ரோப் என்பவர், புகழ் பெற்ற பிரசங்கியாரான ஜோன் வெஸ்லி என்பவருடன் பேசிக்கொண்டிருந்தபோது அவ் ஆளுனர் இவ்வண்ணமாக கூறினார். "நான் ஒருபோதும் மன்னிக்கமாட்டேன்!" அப்பொழுது வெஸ்லி அவர்கள், "அப்படியானால், மதிப்பிற்குரியவரே, நீங்கள் ஒருபோதும் பாவம் செய்யமாட்டீர்களென்பதை நான் நம்புகின்றேன்," என்று பதிலளித்தார். கிறிஸ்தவர்கள் ஓகல்ட்த்ரோப்பின் இக்கூற்றை கூறமுடியாது. நாம் தேவனுடைய மன்னிப்பைப் பெற்றிருக்குமபோது, மற்றவர்களிடத்திலும் அதேபோன்று நாம் மன்னிப்பையும் அன்பையும் காண்பிக்க வேண்டியவர்களாயிருக்கின்றோம். அவர்கள் அதைப் பெறுவதற்கு எத்தனை தகுதியற்றவர்களும், பெறுமதியற்றவர்களுமாக இருப்பினும் அது ஒரு விடயமல்ல. நாம் மற்றவர்களை மன்னிக்கும்போது, கிறிஸ்துவின் மீது நம்முடைய விசுவாசம் உண்மையுள்ளதும் நம்முடைய சொந்த இருதயம் மாற்றப்பட்டுள்ளது என்பதையும் நாம் நிரூபிக்கின்றோம்.

ஆதி அப்போஸ்தலர்களில் ஒருவனான ஸ்தேவான், தான் செய்த அற்புதங்கள் மற்றும் அடையாளங்களினிமித்தம் (அப்போஸ்தலர் 6:8-11) பகைமையுணர்ச்சியுள்ள யூதர்களால் கைதுசெய்யப்பட்டான். பாதுகாப்பிற்காக, அவன் தேவனுடைய அற்புதங்களையும் அவருடைய உண்மையையும் இஸ்ரவேலருடைய கலகத்தைக் குறித்தும்விபரித்தான். அந்த சத்திய வார்த்தைகளினால் குற்றம் உணர்த்தப்பட்ட யூதர்கள் நகரத்திற்கு புறம்பே இழுத்துச்சென்று அவனைக் கல்லெறிந்தார்கள். அவன் சாகுமுன்பு, "ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தை சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்" (அப்போஸ்தலர் 7:60). அந்த கொலைபாதகர்களை மன்னியும் என்று ஸ்தேவான் கேட்டபொழுது, தன்னுடைய இருதயம் கோபத்தினின்றும் கசப்பினின்றும் விடுதலையாக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே அவனுக்கு வேண்டியதாயிருந்தது. இயேசு சிலுவையில் அறையப்படும்போது அவர் செய்த ஜெபத்தை அவன் பின்பற்றினான், "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று என்று அறியாதிருக்கிறார்களே என்றான்" (லூக்கா 23:34).

உங்களால் இதை கற்பனை செய்ய முடிகின்றதா? இங்கே தேவகுமாரனாகிய இயேசு மற்றும் ஸ்தேவான் ஆகிய இரண்டு மனிதர்கள் உள்ளனர். இவர்கள் இருவரும் சத்தியத்தை

பிரசங்கித்தார்கள், அவர்கள் சுகப்படுத்தலிலும் மற்றைய அற்புதங்களிலும் பங்கு வகித்தார்கள்.ஆண்கள் மற்றும் பெண்களுடைய இரட்சிப்பைத் தேடினார்கள், தேவனுடைய சித்தத்தையும் செய்தார்கள். இருப்பினும்தங்களுடைய வாழ்வை மிகக் கொடூரமான முறையில் இழந்தனர். இருவரும் அநியாயமாக குற்றம்சாட்டப்பட்டு,போராடி, தாழ்த்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர். ஆனாலும் இவர்கள் தங்களுக்கு குற்றம் இழைத்தவர்களை கருணையோடுகூட பார்த்து அவர்களை மன்னித்தார்கள். உங்களுக்கு தவறிழைத்த ஒருவரை அல்லது மற்றவர்களை நினைத்துப் பார்க்க உங்களால் முடிகின்றதா? இயேசுவும் ஸ்தேவானும் சகித்துக்கொண்டவற்றோடுஅந்த பழிச்செயலை ஒப்பிட்டுப் பாருங்கள். உங்கள் மன்னிப்பு இயேசுவுடைய மற்றும் ஸ்தேவானுடையவற்றோடு எவ்வாறு உடன்படுகின்றது?

நாம் மற்றவர்களை மன்னிக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கின்றார். “மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்” (மத்தேயு 6:15). தமது வார்த்தைக்கூடாக அதை மிகவும் தெளிவுபடுத்தி குறிப்பிட்டுள்ளார். வேறு வார்த்தைகளினால் கூறினால், உங்களை புண்படுத்தியவர்களை நீங்கள் தொடர்ந்தும் மன்னிக்க மறுப்பீர்களானால், முடிவில் நீங்கள் தேவனுடைய இராஜ்யத்தில் ஆபத்தில் நிற்கவேண்டி வரும். யாரையாவது நீங்கள் மன்னிக்கவேண்டுமா? பரிசுத்த ஆவியானவர் உங்கள் மனதில் கொண்டுவருபவர்களை நீங்கள் மன்னிப்பதற்காக இப்பொழுது இந்நேரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். இன்றே அவர்களை அழையுங்கள் அல்லது அவர்களுக்கு எழுதுங்கள்.

## தன்னை மன்னித்தல்

### *நோக்கம் 4:*

*தன்னை மன்னிப்பதன் முக்கியத்துவத்தைக் குறித்து கலந்துரையாடல்.*

ஒரு சிறு பையன் தன்னுடைய சிறு இளைய சகோதரியுடன் விளையாடிக்கொண்டிருந்தான். ஒரு பெரிய கதிரையைச் சுற்றி அவன் அவளை துரத்தினான், இருவரும் சிரித்தனர். திடீரென அந்த சிறுமி விளையாடுவதை நிறுத்தினாள். அந்த சிறுவன் தன்னுடைய கர்ப்பிணித் தாயண்டைக்கு விரைந்து ஓடினான் அவன் அழுதுகொண்டே, “அம்மா, தங்கை இனி ஒருபோதும் என்னுடன் விளையாடமாட்டாள் என்றான்.” உடனே தாய் பிள்ளை இருக்கும் இடத்திற்கு விரைந்தோடி பிள்ளையைதூக்கியெடுத்தாள். அப்பொழுது அவள் தன்னுடைய கடைசி மூச்சைவிட்டாள். பின்னர், அந்த சிறுமியின் விரல் அருகில் இருந்த விளக்கின் திறக்கப்பட்ட நிலையிலிருந்த வயரை தொட்டதினாலே அவளுக்கு இவ்வாறு நடக்க நேரிட்டதென்பதை அறிந்துகொண்டனர். நிலத்தில் அவளுடைய சரீரம் வெப்பமடைந்திருந்தது. அவளுடைய சின்ன சரீரத்திற்குள் அதிகளவு மின் கடத்தப்பட்டதால் அவள் மரணமடைந்தாள்.

யாருடைய தவறினால் இச்சிறுமி மரித்துப்போனாள்? அது அந்த சிறு பையனின் தவறா அல்லது தாயின் தவறா அல்லது அந்த சிறுமியின் தவறா?

தேவனுடைய தவறு என்ன? கவலைக்கிடமாக, அந்த சிறுமியின் மரணத்திற்கு தானும் தேவனும் பொறுப்பாளிகளென்று எண்ணி அநேக வருடங்களைக் கடத்தினாள். “நான்

இன்னும் கவனமெடுத்து அவர்களை மிக அருகில் கவனித்திருக்கவேண்டும்? நான் எப்படி அந்த விளக்கையும் அதனுடைய வயரையும் குறித்து அறியாதிருந்தேன்? தேவன் ஏன் இப்படிப்பட்ட காரியம் நிகழும்படி அனுமதித்தார்?" என்று தொடர்ச்சியாக தன்னையே பல கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தாள்.

சிலநேரங்களில், நம்மையே நாம் மன்னிப்பது தான் செய்வதற்கு மிகவும் கஷ்டமான விடயமாகும். நாம் இன்னும் சற்று அதைக்குறித்து அறிந்திருக்கவேண்டும், இன்னும் கவனமாக அவதானித்திருக்கலாம் அல்லது கவனமாக வித்தியாசமாக செய்திருக்கலாம் என நாம் நினைக்கின்றோம். கடுந்துயரத்தில், வேதனையில், கவலையில் முடிந்த தவறுகள் அல்லது சம்பவங்கள் குறித்து நாம் நம்மை அல்லது தேவனை திட்டுகின்றோம். மற்றவர்களை மன்னிப்பதுபோலவே, உங்களை மன்னிப்பதும் உங்கள் சுய விருப்பமே.

தேவன் உங்களை மன்னிப்பதாக வாக்குப்பண்ணியுள்ளார். ஒருமுறை நீங்கள் தேவனுடைய இரக்கத்தைப் பெற்றிருப்பீர்களெனில், நீங்கள் உங்களை மன்னிப்பதை தெரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் உங்களுக்கே பரிவிரக்கம் காண்பித்து புலம்பிக்கொண்டிருக்கத் தேவையில்லை. அவருக்கு இன்னும் உங்கள் வாழ்க்கையைக் குறித்து நோக்கமும் திட்டமும் உண்டு. அதனால், அவருடைய மன்னிப்பை ஏற்றுக்கொள்ளுங்கள் உங்களையே நீங்கள் தண்டிப்பதை நிறுத்திவிடுங்கள்.

உங்களை ஈடுபடுத்திக்கொண்டு ஒரு வேதனையான அல்லது பேரிடரான அனுபவமொன்று நிகழும்பொழுது, நீங்கள் தனியாக இல்லையென்பதை நினைவிற்கொள்ளுங்கள். மற்றவர்களும் இதற்கொத்த கடுந்துயரங்களுடன் போராடியுள்ளனர். விழுந்துபோன இவ்வுலகத்தில் வாழும் நமக்கு இவையும் ஓர் பகுதியாக உள்ளது. கடந்த காலத்தில் நடந்தவற்றை மாற்றவோ அல்லது அந்த வேதனையான நிகழ்வின் விளைவுகளை குறைக்கவோ முடியாது. அப்படிப்பட்ட சம்பவங்களில்உங்களை நீங்களேமன்னித்தலானது மிகமுக்கியமானதாகும். மாற்ற முடியாதவற்றை குறித்து கசப்புணர்வை வைத்துக்கொள்ளவதைப் பார்க்கிலும் இப்படிச் செய்வது வாழ்க்கையை முன்நோக்கிக் கொண்டு செல்ல மேன்மேலும் உதவிசெய்யும். தேவன் உங்களுக்கென வைத்திருக்கும் எதிர்காலத்தை அழித்துவிடாதீர்கள்.

தீமைக்கும் பேராசைக்கும் தன்னை அடிமைப்படுத்திக்கொண்ட யூதாஸ் என்பவன் சமயத் தலைவர்களிடம் குறித்த ஒரு தொகைப் பணத்திற்காக இயேசுவைக் காட்டிக்கொடுத்தான். பின்னர், அவன் அது தான் செய்திருக்கக்கூடாத விடயம் என்று அறிந்து, தன்னை தூக்கிலிட்டுக்கொண்டான். யூதாஸ் தேவனுக்கு முன்பாக தன் சொந்த செயல்களுக்காக தன்னை மனந்திரும்புதலுக்கு கொண்டுவரவில்லை, அத்துடன் தான் செய்தவற்றிற்காக தன்னை மன்னிக்கவும் இல்லை. அவனுடைய தோல்வி அவனை அழித்தது. இன்றும், காட்டிக்கொடுப்பவர்களுக்காக *யூதாஸ்* என்னும் பெயர் உபயோகிக்கப்படுகின்றது.

அப்போஸ்தலன் பேதுருவும் மீண்டும் மீண்டும் இயேசுவை மறுதலித்ததன் மூலம் பாவம் செய்தான். ஆகிலும் முடிவில் அவன் ஆதி சபையின் மிகப்பெரிய தலைவரானான். வித்தியாசம் என்ன? யூதாஸ் மிகவும் மனமுடைந்து தன்னை தூக்கிலிட்டபோதும், பேதுரு அவன் செய்த இரக்கமற்ற காரியத்தைக் குறித்து மனங்கசந்து அழுதான். ஒருவன் தன்னைத் தான் மன்னிக்கவில்லை, மற்றவன் இயேசுவுக்குள் மன்னிப்பைத் தேடிக்கொண்டான். பேதுரு இயேசுவின் அன்பிற்கு இடங்கொடுத்து அவன் மீண்டும் அவருடன் சரியான உறவுக்குள் வரும்படி இடங்கொடுத்தான். யூதாஸ் தோல்வியினால் மரித்தான், பேதுரு தேவனுக்கு

மகிமையைக் கொண்டுவரும்படி வாழ்ந்தான். நீங்கள் எதைத் தெரிந்தெடுப்பீர்கள்? நான் உங்களையே நீங்கள் மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளுகின்றேன்! உங்கள் வாழ்க்கை தேவனுக்கு பெறுமதிமிக்கதும் அவருடைய பார்வையில் அது விலையேறப்பெற்றதுமாகும். அவர் உங்களைக் கொண்டு பெரிய காரியங்களைச் செய்யட்டும்.

## உங்களுடைய பொறுப்பு

### *நோக்கம் 5:*

*நீங்கள் தவறிழைத்தவர்களிடம் உங்களுடைய பொறுப்பை விபரித்தல்.*

உங்களுடைய தோல்விகளை, பாவங்களை, குறைகளை ஒப்புக்கொள்ளல் ஆகியவை மிகவும் கடிமான காரியங்களில் ஒன்றாகும். ஒருவர் புண்படும்போது அல்லது மற்றவர்க்கு தவறிழைக்கும்போது, குற்றம் செய்தவர் தான் செய்தவற்றிற்கு மன்னிப்பு கேட்கலாம். அப்படியில்லாவிடின் அந்த பிழையை வேறேங்காவது மாற்றிவிடலாம்.

மன்னிப்பு கேட்பதென்பது தாழ்மைக்குரிய அனுபவம் என்றாலும் இது அடிக்கடி தேவைப்படுகின்றது. நாம் ஒருவருக்கு தவறு செய்யும்போது, நம்முடைய செயல்களுக்கு மன்னிப்பு கேட்பது மாத்திரம் போதாது, தேவைப்பட்டால் நாம் அதற்கான நஷ்ட ஈட்டையும் செய்யவேண்டும். இந்த நஷ்ட ஈடு சரியானதும் நீதியானதும் மாத்திரம் அல்ல, மன்னிப்பை கேட்டதன் மூலம் உண்மைத்தன்மையை எடுத்துக்காட்டுகின்றது. லூக்கா 19 இல் சகேயுவைக் குறித்து பார்க்கின்றோம், அவன் வரிவசூலிப்பவன் அவன் அநியாயமாய் பணத்தை சம்பாதித்தவன். அவன் உருவத்தில் குள்ளனாக இருந்தான். ஒருநாள், எரிகோ வழியாக இயேசு நடந்துவந்து கொண்டிருந்தார், இயேசுவைப் பார்க்கும்படி அவன் மிகச் சிறப்பாக முயற்சி செய்தான். இவ் வரிசூலிப்பவன் இயேசுவினுடைய அற்புதங்கள், பேச்சு மற்றும் படிப்பினைகள் போன்ற பல வியக்கத்தக்கவைகளைக் கேள்விப்பட்டிருந்தான். நசரேத்து ஊரின் புகழ்பெற்ற தீர்க்கதரிசியை காண்பதற்கு அவனுக்கு கிடைத்த வாய்ப்பு இது. அவரை சற்று நன்றாக பார்ப்பதற்காக சகேயு ஓடிச் சென்று ஒரு மரத்தின்மேல் ஏறினான். எதிர்பாராதவிதமாக, இயேசு குறித்த மரத்திற்கடியில் நின்று அவனோடு பேசினதுடன் சகேயுவுடன் விருந்து உண்ண அவருடைய விருப்பத்தைத் தெரிவித்தார். இயேசுவின் கவனத்தைக் குறித்து களிப்புடன், சகேயு பிறகு இவ்வாறு பதிலளித்தான்,

> “சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாக திரும்ப செலுத்துகிறேன் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்கு குமாரனாயிருக்கிறானே. இழந்துபோனதை தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்.”(லூக்கா 19:8-10).

கவனியுங்கள் சகேயு நஷ்ட ஈட்டை வழங்க நினைத்த அத்திட்டத்திற்கு இயேசு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஒரு உடன்பாடான இருதயத்திற்கான சாட்சியாக சகேயுவின் செயல்கள் அமைகின்றன.

இக்கதையிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய முக்கிய பாடம் என்னவெனில், மனந்திரும்புதலினால் ஒரு நபருடைய இருதயம் மாறுகின்றபோது, அவன் அல்லது அவள் கடந்த காலத்தில் செய்த பிழையை சரிப்படுத்துகின்றான். அவர் மன்னிப்பு கொடுக்கும் *முன்பு* நஷ்டஈடு வழங்கப்படவேண்டும் என்று அதை அர்த்தப்படுத்தவில்லை; மாறாக, இந்த நஷ்ட ஈடு ஒரு உண்மையான மாற்றத்தை செய்துகாண்பிக்கின்றது. சூழ்நிலைகளுக்கு ஏற்ப நஷ்ட ஈடு செய்தலானது எப்போதும் அவ்வளவு இலகுவான காரியமல்ல. மெய்யாகவே, சில விடயங்களில் நஷ்ட ஈட்டை செலுத்தலானது சாத்தியமல்லாமலுமிருக்கலாம். சில நேரங்களில் நஷ்ட ஈடு செய்பவரை தவறிழைக்கப்பட்ட நபர் மன்னிப்பு கொடுப்பதற்கு ஆயத்தமாக இல்லாவிட்டாலும் அவ்வாறு செய்வதற்கு முயற்சிசெய்வது சரியே.

## முடிவுரை

கிறிஸ்துவைப் போலாக வேண்டுமென்பதே ஒவ்வொரு விசுவாசியினுடைய இலக்காகும். நமக்கு கிறிஸ்துவின் சிந்தையும் சுபாவமும் இருக்கவேண்டும். நாம் அவருடைய வார்த்தையை பிரசங்கித்து துதி பாடல்களைப் பாடவேண்டும். நம்முடைய நித்திய காலத்தை அவருடன் கழிப்பதே எம்முடைய வாஞ்சையாக இருக்கவேண்டும். அதேபோல நம்முடைய குடும்பம், நண்பர்கள் மற்றும் மற்றவர்கள் அவரை அறிந்துகொள்ளவும் வேண்டும்.

கிறிஸ்தவ வாழ்க்கையில் மன்னிப்பு என்பது ஓர் இன்றியமையாத பகுதியாகும். இயேசு நமக்கு இப்படி ஜெபிக்கும்படி கற்றுக்கொடுத்துள்ளார், “எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்” (மத்தேயு 6:12). நாம் மன்னிப்பு பெறவும் மன்னிப்பு கொடுக்கவும் கற்றுக்கொண்டால், ஆசீர்வாதங்களின் கதவுகள் விரிவாகத் திறக்கும். நாம் தேவனை ஆழமான நிலையில் அனுபவிப்போம்.

## மனனம் செய்வதற்கு ஆலோசிக்கப்பட்ட வசனங்கள்

சங்கீதம் 86:5

மத்தேயு 6:9-13

கொலோசெயர் 2:13

1 யோவான் 1:9

சங்கீதம் 103:12

லூக்கா 23:34

# பாடம் 3

## சிறந்த உறவுகளைக் கட்டியெழுப்புதல்

எம்முடைய சமுதாயத்திற்குள் எதுவுமே நல்லதல்ல என்பதையே எம்மில் அநேகர் புரிந்துகொண்டுள்ள விடயமாகும். பகைமையும், கோபமும் உலகம் முழுவதும் காணப்படுகின்றது. குற்றம் தொடர்பான அறிக்கைகள் எமது பத்திரிகைகளையும் தொலைக்காட்சிகளையும் நிரப்புகின்றன. பயம், பதட்டம் மற்றும் மனஅழுத்தங்களும் மலிந்து காணப்படுகின்றது. திருமணம், பிள்ளைகள், போதைப்பொருள் மற்றும் மது தொடர்பான வன்கொடுமைகள் தினமும் மில்லியன்கணக்கானோரை அழித்து வருகின்றது.

நாம் பாதிப்பிற்குள்ளான ஒரு சமூகத்திற்குள் வாழுகின்றோம். பாவமும் அதின் சகல விளைவுகளுமே! அந்த பாதிப்பாகும். சமுதாயமானது தான் எவ்வாறு வாழ்வதென்பதையும், முன்னேறிச் செல்லவதென்பதையும் இன்னும் அறியாதிருக்கின்றது. இதைக் கவனியுங்கள்: கல்வியில் சகல துறைகளிலும் கற்றுக்கொள்ளுவதற்காக மனிதர்கள் ஆயிரக்கணக்கான மணித்தியாலங்களைச் செலவிடுகின்றார்கள். சிலரால் பலமொழிகளை பேசமுடிகின்றது, மற்றவர்கள் அறிவின் ஆற்றலுள்ள ஊற்றாகக் காணப்படுகின்றார்கள். இருப்பினும் வீட்டிலும் வேலைத்தளங்களிலும் தரமான உறவுகளைக் கட்டியெழுப்புவதில் குறைவையும் தோல்வியையும் உண்ர்கின்றனர். கல்வியும் செல்வமுமே நாம் வெற்றி பெறுவதற்குத் தேவையானவை என்ற சிந்தனை காரணமாக மக்கள் வஞ்சிக்கப்பட்டுவிடுகின்றனர். இதன் இறுதி விளைவாக சிறந்த, தரமான மனித உறவுகளை கட்டியெழுப்ப இயலாத நிலைமை ஏற்படுகின்றது.

இந்நிலைமையானது கிறிஸ்தவரல்லாதவருக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. மறுபடிபிறந்த விசுவாசிகளும்கூட உறவுகளைக் கட்டியெழுப்புவது தொடர்பிலான சிரமங்களை மேற்கொள்ளுகின்றனர். போதகர்களோ அல்லது சிறந்த ஆவிக்குரிய தலைவர்களோ பொது இடத்தில் எல்லாவற்றிலும் பூரணமுள்ளவர்களாக காணப்பட்டார்கள் எனினும் அவர்களுடைய குடும்ப வாழ்க்கையில் பிரச்சினைகளைக் குறித்து நம்மில் அநேகர் கேள்விப்பட்டிருக்கின்றோம். உறவுகளை கட்டியெழுப்பும் பகுதியில் உயர்வடைவதே கிறிஸ்துவினுடைய வெற்றியுள்ள சீடனாவதற்கான முக்கியமான திறவுகோல்களில் ஒன்றாகும். உண்மையாகவே, நாம் அனுபவிக்கும் ஒவ்வொரு வெற்றிகளும் தோல்விகளும் சில உறவுகளுடன் தொடர்புபட்டுள்ளது. நாம் தொடர்ந்தும் எமது உறவுத் திறமைகளை

வளர்த்துக்கொள்ள வேண்டும். அதை நாம் செய்யாவிட்டால், நாமும் எம்மைச் சுற்றி இருப்பவர்களும் கஷ்டப்பட நேரிடும். எம்மால் உறவுகளைப் புரிந்துகொள்ள முடியாததன் காரணமாகவும் எமது உறவுத்திறமைகளை வளர்த்துக்கொள்ள இயலாததன் காரணத்தினாலும் ஏற்படும் தீமையான தாக்கத்திற்கு பலியாகும் முக்கியமான மூன்று உறவுமுறைகள் பின்வருமாறு: 1) தேவனோடுள்ள எமது உறவு 2) குடும்ப உறுப்பினர்களோடுள்ள எமது உறவு 3) மற்றவர்களோடுள்ள எமது உறவு.

முற்கால இஸ்ரவேல் தேசத்தாரை எச்சரிப்பதற்கும் அவர்களை தைரியப்படுத்துவதற்கும் ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாக தேவன் பேசினார். பின்வரும் வேதவசனத்திற்கூடாக தீங்கான உணர்வுகளையும் ஆரோக்கியமற்ற உணர்ச்சிகளையும் தம்முடைய மக்கள் விட்டுவிட உதவிசெய்வது தேவனுடைய வாஞ்சையாக இருந்தது. காயப்பட்ட மக்கள் தங்களைக் குறித்தும் மற்றவர்களைக் குறித்தும் எவ்வாறு உணர்வார்கள் என்பதற்கான உருவப்படமாக இஸ்ரவேல் மக்கள் காணப்படுகின்றனர்.

> பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை. நாணாதே, நீ இலட்சையடைவதில்லை; உன் வாலிபத்தின் வெட்கத்தை நீ மறந்து, உன் விதவையிருப்பின் நிந்தையை இனி நினையாதிருப்பாய். உன் சிருஷ்டிகரே உன் நாயகர்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம், இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் மீட்பர், அவர் சர்வபூமியின் தேவன் என்னப்படுவார். கைவிடப்பட்டு மனம்நொந்தவளான ஸ்திரியைப்போலவும், இளம்பிராயத்தில் விவாகஞ்செய்து தள்ளப்பட்ட மனைவியைப்போலவும் இருக்கிற உன்னைக் கர்த்தர் அழைத்தார் என்று உன் தேவன் சொல்லுகிறார். (ஏசாயா 54:4-6)

வெட்கம், தாழ்த்தப்படுதல், அவமானம், நிந்தை, ஆவியில் ஆழ்ந்த துக்கம், மற்றும் ஒதுக்கப்படல் போன்ற நிலைமைகளாவன நாம், தேவனிடமிருந்தும் எம்மிடமிருந்தும் மற்றும் மற்றவர்களிடமிருந்தும் மறைந்திருப்பதற்கு காரணமாய் அமைகின்றது. தேவன் எம்மை உறவு கொண்டு வாழவே சிருஷ்டித்துள்ளார் என்பதை நாம் விளங்கிக்கொள்ளவேண்டியது முக்கியமாகும். வாழ்க்கை என்பது தேவனுடைய அன்பைப் பெற்றுக்கொள்வதற்கும் அந்த அன்பை திருப்பிக் கொடுப்பதற்குமே ஆகும்.

## பாடத்தின் முக்கிய அம்சங்கள்

பொதுவான உணர்ச்சித் தேவைகள்

உடைக்கப்படுதலின் விளைவுகள்

நண்பத்துவத்தினை பெலப்படுத்தல்

திருமண உறவு

## பாடத்தின் நோக்கங்கள்

1. *நாம் அனைவரும் கொண்டிருக்கும் நான்கு அடிப்படை உணர்ச்சித் தேவைகளை இனம்காணுதல்.*
2. *உடைக்கப்படுதல் எம்முடைய வாழ்க்கையில் எவ்வாறான பாதிப்புகளை ஏற்படுத்துமென்பதை விளக்குதல்.*
3. *எமது நட்புறவை பெலப்படுத்தும் படிகளை விபரித்தல்.*
4. *ஒருவர் தன்னுடைய துணையுடனான உறவை மகிழ்ச்சிகரமாக அனுபவிக்கக்கூடியபடிகளை பட்டியற்படுத்துதல்.*

### பொதுவான உணர்ச்சித் தேவைகள்

### *நோக்கம் 1:*

*நாம் அனைவரும் கொண்டிருக்கும் நான்கு அடிப்படை உணர்ச்சித் தேவைகளை இனம்காணுதல்.*

தேவன் மதிப்பற்றவற்றை உருவாக்குபவரல்ல. சில வேளைகளில் இந்த வேதவாக்கியத்தை நீங்கள் கேள்விப்பட்டிருக்கக்கூடும் எரேமியா 29:11 கூறுகிறது, “நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்கு கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கின்ற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகின்றார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.”

முதலில் நான் இதை வாசித்தபோது இதில் ஒரு தவறு இருக்கவேண்டும் எனவும் நிச்சயமாக தேவனின் திட்டங்கள் என் வாழ்வில் நன்மையானவையாக இராது எனவும் நான் நினைத்தேன். எவ்வாறாயினும், என்னுடைய வாழ்க்கைக்கான தேவனுடைய திட்டங்களும்

நோக்கங்களும் என்னை சபிப்பதற்கல்ல எப்பொழுதும் என்னை ஆசீர்வதிப்பதற்கே, அது உதவியேயன்றி காயப்படுத்துவதற்கல்ல, என்னிடத்திலிருந்து எதையும் கொள்ளையடிப்பதற்கல்ல என்னை செழிப்புறச்செய்வதற்கே என்பதை நான் கண்டுபிடித்தேன். சங்கீதம் 139:14-17 கூறுகிறது,

> "நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன், உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் கருவை உம் கண்கள் கண்டது. என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது. தேவனே, உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனைஅருமையானவைகள். அவைகளின் தொகை எவ்வளவு அதிகம்!"

தேவன் மதிப்பற்ற எதையும் உருவாக்காத அதேவேளை, அநேக மனிதர்கள் தங்களை தாங்களே குறைத்து மதிப்பிடுகின்றனர். ஆதாமும் ஏவாளும் பாவஞ்செய்த பின்னர், அவர்கள் மிகப்பெரும் பயத்தை, பாதுகாப்பின்மையை, குற்ற உணர்வை உணர்ந்தனர். "நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன்" என்று ஆதாம் கூறினான் (ஆதியாகமம் 3:10).அதன் பின்னர், முதல் தம்பதிகளான இவர்கள் தங்கள் வெட்கத்தை மூடுவதற்காக அத்தியிலைகளப் பயன்படுத்தினர். எவ்வாறாயினும், அவர்களைத் தேடி (ஆதியாகமம் 3:9), மனிதவர்கத்தை இன்னுமொரு முறை ஆசீர்வதிக்கும்படிக்கும் தம்முடைய சிருஷ்டிப்பை தம்முடனான சரியான உறவுக்குள் மீண்டும் கட்டியெழுப்பும்படிக்கும் தேவன் ஒரு திட்டத்தை ஆரம்பித்தார்.

தேவன் மனிதர்களை நான்கு அடிப்படை உணர்ச்சித் தேவைகள் உள்ளவர்களாயிருக்கும்படி வடிவமைத்தார்:

1. *நிபந்தனையற்ற அன்பு:* இவ்விதமான அன்பு திரும்பி எதையும் எதிர்பார்க்காதபடிக்கு வெளிப்படுத்தப்படும் அன்பு ஆகும். இவ் அன்பு எல்லாவற்றையும் கொடுக்குமே தவிர எடுத்துக்கொள்ளாது. இவ் அன்பு வார்த்தைகளில், எண்ணங்களில் மற்றும் செயல்களில் வெளிப்படுகின்றது. இவ்வித அன்பையே தேவன் எமக்காக வைத்துவைத்திருக்கின்றார், அவ் அன்பே மற்றவர்களிடமிருந்தும் எமக்கு வேண்டியதாயிருக்கின்றது.

2. *பாதுகாப்பு:* நாம் அன்பைபெற்றுக்கொள்ளுவதை சாத்தியமாக்குவதற்கு அடிப்படையாக அமைகின்றது. இது பாதுகாப்பையும் காக்கப்படுதலையும் குறித்த உணர்வாகும்.

3. *புகழ்:* மற்றவர்களிடமிருந்து கிடைக்கும் புகழானது பெறுமதியான உணர்வினையும், உறுதிப்படுத்தலையும் பெற்றுத்தருகின்றது, இவ்வித உணர்வு நீங்கள் பாராட்டப்படுகின்றீகள் என்றும் நீங்கள் தேவையானவர்கள் என்கின்றதான உணர்வுமாகும்.

4. *நோக்கம்:* நோக்கம் நாம் வாழ்வதற்கு ஒரு காரணமாக அமைகின்றது. அது எமக்கு நம்பிக்கையையும் எதிர்காலத்தையும் தருகின்றது.

கவனியுங்கள், உலகம் இவ்விதமான அடிப்படை தேவைகளுக்கான போலியான அறிக்கைகளை அளிக்கின்றது. உதாரணமாக, அன்பிற்கு பதிலாக இச்சைக்கான ஆசை காணப்படுகின்றது. பாதுகாப்பிற்கு பதிலாக சொத்துக்களும். புகழுக்கு பதிலாக பதவியும். நோக்கத்திற்கு பதிலாக அதிகாரமும் காணப்படுகின்றது.

தேவனுடனான மற்றும் மற்ற மனிதர்களுடனான ஆரோக்கியமான உறவின் மூலமாக வரும் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள நாம் அனைவரும் வாஞ்சிக்கின்றோம். ஒரு நபர் எப்பொழுது அன்பையும் ஏற்றுக்கொள்ளுதலையும் பெற்றுக்கொள்ளவில்லையோ அல்லது அந்த அன்பும் ஏற்றுக்கொள்ளப்படுதலும் திரும்பப்பெற்றுக்கொள்ளப்படுகின்றதோ அதனுடைய விளைவு புறக்கணிப்பாக இருக்கும். நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக இருப்பதனால் நீங்கள் மற்றவர்களால் புண்படுத்தப்படமாட்டீர்கள் என்பது அதன் அர்த்தமல்ல. இந்த புறக்கணிப்பானது சரியாக கையாளப்படாதவிடத்து ஒரு மனிதன் அனுபவிக்கக்கூடிய மிக ஆழமான காயங்களில் ஒன்றாக இது மாறப்போகின்றது. இது வரவிருக்கும் ஆண்டுகளில் அவனை அல்லது அவளை வழிநடத்தப்போகும் வாழ்க்கையின் பாதையுமாய் அமையப்போகின்றது.

யாக்கோபு ஏசாவை ஏமாற்றி அவனது ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டபின், ஏசா தன் தகப்பனாகிய ஈசாக்கை நோக்கி அழுகிறான், “என் தகப்பனே என்னையும் ஆசீர்வதியும்!” என்றான். (ஆதியாகமம் 27:34). ஆனால் அது மிகவும் தாமதமாகும். யாக்கோபு சேஷ்ட புத்திரபாகத்திற்கான ஆசீர்வாதத்தை எடுத்தாயிற்று, அது அவனது மூத்த சகோதரனுக்குரியதாயிருந்தது. தான் உடைக்கப்பட்டதால், ஏசா தன் சகோதரனை கொலை செய்வதற்கு முடிவுசெய்தான்.

இந்த  நாட்களிலும் அநேகர் தள்ளப்பட்டதின் காரணமாக ஏற்பட்ட வேதனையினால் இருதயங்களில் கதறுகிறார்கள். நீதிமொழிகள் புத்தகமானது உடைந்த மற்றும்

நொருக்கப்பட்ட இருதயம் குறித்து விபரிக்கின்றது: “மனுஷனுடைய ஆவி அவன் பலவீனத்தைத்தாங்கும்; முறிந்த ஆவி யாரால் தாங்கக்கூடும்?” (நீதிமொழிகள் 18:14). “மன மகிழ்ச்சி நல்ல ஔஷதம்; முறிந்த ஆவியோ எலும்புகளை உலரப்பண்ணும்” (நீதிமொழிகள் 17:22). உடைக்கப்படுதலையும் கிறிஸ்தவ அனுபவங்களுடனான அதனுடைய உறவையும் நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

## உடைக்கப்படுதலின் விளைவுகள்

### *நோக்கம் 2:*

*உடைக்கப்படுதல் எம்முடைய வாழ்க்கையில் எவ்வாறான பாதிப்புகளை ஏற்படுத்துமென்பதை விளக்குதல்.*

---

நாம் அனைவரும் உடைக்கப்படும் அனுபவத்தோடு போராடியுள்ளோம், இப்பொழுதும் போராடிக்கொண்டிருக்கின்றோம், அல்லது வரும் காலத்திலும் போராடுவோம். நாம் தேவனை சார்ந்திருப்பதாலோ அல்லது அவருக்கு கீழ்ப்படிந்திருப்பதாலோ தங்களுக்கு மிகக் குறைந்தளவு பிரச்சினைகளும் சவால்களுமே ஏற்படுகின்றது என்பது அநேக கிறிஸ்தவர்களிடம் காணப்படும் ஒரு பொய்யான கருத்தாகும். ஆனால் ஒருமுறை இக்கருத்து பொய் என்று உணர்ந்து கொள்கையில், மனிதர்கள் தங்கள் வாழ்க்கையிலுள்ள போராட்டங்களையும், கஷ்டங்களயும் மற்றவர்களோடு பகிர்ந்துகொள்வதற்கு இலகுவாக முன்வருவார்கள்.

ஒருநபர் இவ்வாறு கூறியது என் ஞாபகத்தில் இருக்கின்றது, “நான் இன்னும் திறந்த மனதுடன் இருக்க விரும்புகிறேன். ஆனால் அது கடினமானது. நான் சற்றே எனது வாழ்வில் உணர்வு ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் கடினமான காலத்தை அனுபவித்தேன். ஏனென்று எனக்கு தெரியவில்லை, ஆனாலும் இவைகளை எனது சக ஊழியர்களிடத்தில் பகிர்ந்து கொள்ளுவதைப் பார்க்கிலும் சபைக் குடும்பத்தில் பகிர்ந்துகொள்ளுவது கடினமானது. சபையிலுள்ள மக்கள் என்னை ஒதுக்கி வைத்துவிடுவார்கள் என நான் நினைக்கின்றேன். எனது பாரங்களை இன்னொருவர் மீது மனப்பூர்வமாக வைப்பது சரிதானா என்று நினைக்கிறேன் அதைக் குறித்து நான் வியக்கின்றேன்.” நம்மில் அநேகர் ஒருதடவை அல்லது அநேக தடவைகள் இவ்வாறு உணர்ந்திருப்போம் என்று நான் ஊகிக்கின்றேன். உண்மையுள்ள விசுவாசிகளான குழுவொன்றில் இப்படிப்பட்ட வாழ்வை மாற்றும் ஐக்கியம் உள்ளதென்பதை தயவுசெய்து நினைவிற்கொள்க. நீங்கள் உடைக்கப்படுதலுக்கு தனியாக முகங்கொடுக்கத் தேவையில்லை. உண்மையுள்ள கிறிஸ்தவ ஐக்கியத்திற்கு வாழ்க்கைகளை

மாற்றுவதற்கு வல்லமை உண்டென்பதை வேதாகமம் நமக்குப் போதிக்கின்றது. அங்கு முகமூடிகள் கழற்றப்படும்; இருதயங்கள் திறக்கப்படும்; வாழ்க்கைகள் பகிர்ந்துகொள்ளப்படும், கணக்கொப்புவித்தல் ஆரம்பிக்கப்படும்; மற்றும் மென்மை வழிந்தோடும். கிறிஸ்தவர்கள் மற்றவர்களது பாரத்தை சுமப்பதற்கு கற்றுக்கொள்ளவேண்டும். உண்மையாய் நேசிக்கும் சபையினை கண்டறிந்து அதனுடன் சேர்வதே அதற்குத் தீர்வாக அமையும்.

அதிகமான கிறிஸ்தவர்கள் மிகவும் அமைதியாக வேதனையை அனுபவிக்கின்றனர் என்பது ஆச்சரியமான விடயமாகும். அவ்விதமான வேதனை குறித்து மற்றவர்களுக்கு அறிவிப்பது நல்லதா அல்லது அனுமதிக்கப்பட்டதா என்பதைக் குறித்து அவர்கள் யோசிப்பதாக தெரியவில்லை. என்ன நடக்கின்றது? கணவன் மனைவிக்கும் இடையேயான திருமண உறவின் பிரச்சினைகளின் நிமித்தமாக போராடும் அநேக குடும்பத்தினர் சபைகளுக்கு வருடக்கணக்கில் வந்தமர்ந்த சபை வாங்குகளிலிருந்து மாயமாய் மறைந்து போகின்றனர். தங்களை திறந்து பேசாததின் நிமித்தமும், ஆலோசனைக்கு, ஜெபத்திற்கு, மற்றும் உதவிபெற்றுக்கொள்ளுவதற்கும் பதிலாக அவர்கள் சபைக் குடும்பத்தை விட்டு விலகுகின்றனர். அவர்கள் சுதந்திரமாக தங்களைக் குறித்து பேசாததினிமித்தம் அவர்கள் வாழ்க்கையில் பிரச்சினைகள் தீர்க்கப்படாமலே உள்ளது. கிறிஸ்தவர்களாக இருப்பவர்கள் எவ்வித பிரச்சினைக்கும் உள்ளாகமாட்டார்கள் என்ற பொய்யான கருத்தை இவர்கள் எடுத்துக்கொண்டதின் நிமித்தம் அவ்விதபிரச்சினைக்குரிய பகுதியை சபையாரோடு பகிர்ந்துகொள்ளுவதையும் விரும்பாதிருக்கின்றனர்.

நான் ஒரு சபையில் வளர்ந்துவந்தவனாக காணப்பட்டபடியால் இதனை நன்கு அறிந்துகொண்டேன். ஆராதனை முடிந்ததும் “அப்படியானால், பில், பாடசாலையில் காரியங்கள் எவ்வாறு நடைபெறுகின்றது என்று மக்கள் சிலவேளைகளில் கேட்பார்கள். அவர்கள் எதிர்பார்த்த பதில் இதுதான் என்று நான் நினைத்த பதிலை அவர்களுக்குக் கூறுவேன், “நன்று, காரியங்கள் மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றதென்று நான் கூறுவேன்.” எனது நண்பர்கள் அனைவரும் பிழையானதைச் செய்யும்போது நான் சரியானதைச் செய்ய போராடுகின்றேன் என்பதையோ அல்லது நான் ஆவிக்குரிய ரீதியில் மரித்துள்ளேன் என்பதையோ அவர்களிடம் கூறவேண்டுமென்று எனக்கு தோன்றவில்லை. ஒரு நல்ல கிறிஸ்தவனாக விசேடமாக ஒரு போதகருடைய பிள்ளையாக நிஜ வாழக்கையில் அவ்வகையான கஷ்டங்கள் இருக்குமென்பதை சாதாரணமாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதே நான் அவ்வாறு கூறக் காரணமாகும்.

இதோ ஒரு உண்மை – எல்லோருமே உடைக்கப்படுதலை எதிர்கொள்கின்றனர். அது ஏன் என்பதற்கான நான்கு காரணங்களை நான் இங்கு பகிர்ந்துகொள்ளுகின்றேன்.

1. முதலாவது, நம்மிடத்தில் பாவ சுபாவம் உண்டு. ஒரு குறிப்பிட்ட பாவத்தோடு மாத்திரமே தங்களுடைய மிகப்பெரிதான போராட்டம் உள்ளதென்று சில மனிதர்கள் நினைக்கின்றனர். “என்னால் இந்த பாவத்தை வென்றுவிட முடிந்தாலோ அல்லது

இந்த தீய பழக்கத்தை மேற்கொள்ள முடிந்தாலோபோதும், அதன் பின்னர் என்னுடைய ஆட்டத்தில் உச்சத்திலிருப்பவன் நானே" என்று அவர்கள் கூறுவார்கள். நம்முடைய பிரச்சினையானது சாதாரணமாக ஒரு தீய பழக்கமோ அல்லது ஒரு பாவம் மாத்திரம் அல்ல ஆனாலும் தீயவை சூழ்ந்திருத்தலும் நம்முடைய வாழ்க்கைகளில் பாவ சுபாவம் காணப்படுதலுமே பிரச்சினை என்று வேதாகமம் நமக்கு கற்றுக்கொடுக்கின்றது. மனிதர்களான நம்முடைய இயற்கைபோக்கே பாவம் செய்தல், கலகம் செய்தல், கீழ்ப்படியாமை, மற்றும் தேவனை விட்டுவிலகுதல் ஆகியவை ஆகும். மிகப்பெரிய அளவில் வேதனையையும் உடைதலையும் இவை உருவாக்குகின்றது.

2. இரண்டாவது, அடிப்படையில் மனித சுபாவம் நல்லது அல்ல என்ற நவீன சிந்தனையாளர்களின் எண்ணங்களுக்கு எதிராக உள்ளது. அப்போஸ்தலன் பவுல் எழுதுகையில், "அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில் நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்" (ரோமர் 7:18). இது மிகவும் கவனத்திற்கொள்ளவேண்டியதொரு கூற்றாகும். இதன் அர்த்தமென்னவெனில், சில நேரங்களில் நீங்களும் நானும் நம்முடைய நடத்தை மற்றும் மனோபாவத்தினால் ஏமாற்றமடைந்த நிலைக்குட்படப்போகின்றதோடு மற்றவர்களுடைய தோல்வி காரணமாக விரக்திக்கு முகங்கொடுக்கப்போகின்றோம்.

3. மூன்றாவது, சரியானதை செய்வதற்கு தீர்மானிக்கும்போது நாம் சாதாரணமாக அதனுடன் உடன்படுவதில்லை. ரோமர் 7:15 இல் அப்போஸ்தலனின் வார்த்தைகளைக் கவனியுங்கள். "நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை, நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன்." இவ்வாறு நீங்கள் எப்போதாவது உணர்ந்துள்ளீர்களா? பவுல் தொடர்ந்தும் 19ம் வசனத்தில் "நான் விரும்புகிற நன்மையை செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன்." பவுல் வெளிப்படையாக ஏற்றுக்கொள்வதாவது நாம் உடைந்து போனவர்களாக காணப்படுகின்றபடியினால், நாம் சரியானதைச் செய்ய தீர்மானித்தாலும் தொடர்ந்தும் சரியானதை செய்யத்தக்க வல்லமை எமக்கில்லை.

4. நான்காவது, நாம் கிறிஸ்தவர்களாக இருப்பதினால் தேவன் எல்லாவித சோதனைகளையும் எம்மிடமிருந்து அகற்றி விடுகின்றார் என்று தவறாக நினைக்கின்றோம். பவுல் ரோமர் 7:21ஐ எழுதுகையில் "ஆனபடியால் நன்மை செய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமையுண்டென்கிற ஒரு பிரமாணத்தைக் காண்கின்றேன்." நாம் கிறிஸ்தவர்களாக தேவனை பிரியப்படுத்த வாஞ்சிக்கும்போது முறிவடைதல் மிகவும் ஆழமாக பாய்ந்தோடுகின்றது, சோதனையானது நாம் தவறிழைக்கும்படியாக நமக்கு முன்பாக ஊசலாடுகின்றது.

சில வேத ஆராய்ச்சியாளர்கள் பவுல் தான் கிறிஸ்தவனாகுவதற்கு முன்னிருந்த வாழ்க்கையைக் குறித்து விபரிக்கின்றார் என்று நினைக்கின்றனர், அதே வேளையில் மற்றவர்கள் அவர் முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவனாக தன்னுடைய வாழ்க்கையைக் குறித்து விபரிக்கின்றார் என்று நம்புகின்றனர்.இரண்டு சம்பங்களிலும், உடைதல் என்பது சாதாரண ஒரு மனித நிலையாகும். நம்முடைய முறைகள் எதுவானாலும் நாம் நிச்சியமாக பரிபூரணமானவர்களல்ல. நாம்பவுலைப்போலகதறுகிறோம். “நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?” (ரோமர் 7:24) பவுல் தனது கேள்விக்கான விடையை அதற்கடுத்த வசனத்தில் குறிப்பிடுகின்றார். “நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனை ஸ்தோத்திரிக்கின்றேன்!” (வச.25).

எவ்வாறாயினும் நாமனைவரும் உடைக்கப்பட்ட மனிதர்களாயிருந்தாலும் நமக்காக பாடுபட்டு நம்முடைய பாவங்களுக்காக மரித்தவர் நம்மிடம் கிட்டிச்சேர்ந்து நம்மை நேசிக்கின்றார். பாவம் ஒருபோதும் அழகானதல்ல, ஆனால் உடைந்துபோன மனிதர்கள் இயேசுவுக்கு அழகானவர்கள். அவர் எங்கள் பாவத்தையும் தாண்டி எங்கள் தேவைகளை நோக்கிப்பார்க்கின்றார். உடைக்கப்பட்ட மக்கள் உண்மையுள்ள வேதாகம சமூகத்தில் பங்குபெற தகுதியுடையவர்களாயிருக்கின்றனர்.

அநேகமாக, நாம் உடைக்கப்பட்டுள்ளோம் என்பதை ஏற்றுக்கொள்ளுவது கடினமாக உள்ளது. ஏனென்றால், அவ்வாறான ஏற்றுக்கொள்ளுதலானது நம்மை பலவீனராகக் காண்பித்துவிடும் என்பதால். நாம் ஆவிக்குரியவர்களல்ல என்பதை மற்றவர்கள் அனுமானித்து விடுவார்களோ எனப் பயந்து விடுகின்றோம். எம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்ற உறுதியும் மற்றவர்களுடைய பார்வைக்கு மறைவாக எம்முடைய காயங்களை மூடிவைத்தலும் இவை எமது சிந்தனையை ஆக்கிரமித்துக்கொள்கின்றது. நாம் மற்றவர்களுடன் எமது போராட்டங்களை பகிர்ந்துகொள்ளும்போது அதிகமானவற்றை இழந்துவிட நேரிடும் என நினைக்கின்றோம். நாம் மற்றவர்களின் பார்வையில் ஏற்றுக்கொள்ளப்படுதலை இழப்பதற்கு பயப்படுகின்றோம்; மற்றும் ஊழிய நிலையை இழப்பது; அல்லது உதவிகள், அன்பு, குணாதிசயம், புகழ், தகுதி, செல்வாக்கு, நம்பிக்கை ஆகியவற்றை இழப்பதைக் குறித்து பயப்படுகின்றோம்.

இன்னும் மோசமாக நம்மில் அநேகர், கிறிஸ்தவர்களல்லாதவர்கள் எம்முடைய போராட்டங்களை இன்னும் நன்றாக விளங்கிக்கொள்ளுவார்கள் என நினைக்கின்றார்கள். ஆனால் எமது போராட்டங்களைக் குறித்து கிறிஸ்தவர்களல்லாதவருடன் பகிர்ந்துகொள்ளுவது சிறப்பான ஒன்றாகக்காணப்படாது. ஏனென்றால் அதற்கு அவர்களுடைய விசுவாசத்தினை அதைரியப்படுத்தக்கூடிய ஆற்றலுள்ளது. சமுதாயத்தைக் கட்டியெழுப்பவும் ஒருவருக்கொருவர் விசுவாசத்தில் உதவிசெய்வதற்குமே தேவன் விசுவாசிகள் மத்தியில் ஐக்கியத்தை ஏற்படுத்தினார். சகோதர விசுவாசிகளோடு சிறப்பான விதத்தில் பகிர்ந்திட முடியாத பயத்தை பிசாசு உண்டாக்கி வெற்றியை

சம்பாதித்துக்கொள்ளுகின்றான். சிலவேளைகளில் எதிரியானவன் நாம் முகங்கொடுத்துக்கொண்டிருக்கும் பிரச்சினையை பகிர்ந்துகொள்ளுவது மிகவும் வெட்கத்திற்குரியது எனவும் நாம் பரிசுத்தமாயிடினும் நட்பையும் மரியாதையையும் இழந்துவிடுவோம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளும்படி செய்கின்றான். அவன் எம்மை தனியாக நிற்கும்படிசெய்து மீண்டும் மீண்டும் அதே காரியத்தால் எம்மை சோதிக்கின்றான். அப்பொழுது நாம் பாவத்திற்கு இடங்கொடுக்கும்போது நாம் இன்னும் மோசமான நிலைக்குள்ளாகிவிடுகின்றோம்.

இங்கே சில சம்பவங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. நீங்கள் அறிந்த பலர் கருவைக் கலைத்து அதனால் குற்றமனச்சாட்சிக்குள் அகப்பட்டவர்களாய் இருப்பினும் அதைப்பற்றி கதைப்பதற்கு வெட்கப்படுகின்றனர். ஒரு சிலர் கோபத்தில் மற்றும் கடும்கோபமுள்ளவர்களாய் இருக்கின்றனர். சபைகளில் உங்களுக்கு அருகில் இருப்பவர்கள் பாலியல் சம்பந்தப்பட்ட காட்சிகளை பார்ப்பதில் சிக்குண்டு அதைச் சொல்லுவதில் தயக்கம் காண்பிக்கலாம். ஒவ்வொரு கிழமையும் சபை செயற்பாடுகளிலிருந்து வீடு திரும்பும்போது அவர்களுடைய ஆழமான காயங்கள், போராட்டங்கள், தீர்க்கப்படாத அல்லது சொல்லப்படாத பிரச்சினைகளுடன் வீடு திரும்புகின்றனர். ஏனென்றால் தொடர்ந்தும் அவர்கள் பாவத்தின், வெட்கத்தின் மற்றும் வேதனையின் சங்கிலியால் கட்டப்பட்டுள்ளனர்.

உடைக்கப்பட்ட மக்கள் மத்தியில் அற்புதம் செய்ய தேவனுக்கு வேண்டியதாகவுள்ளது. மற்றும் அவர் அநேகமாக விசுவாச சமூகமான சபையில் தம்முடைய சுகத்தை கொண்டுவரும்படி செயற்படுகின்றார். சபையானது மனிதர்களுடைய திட்டமல்ல அது தேவனின் திட்டமாகும். உண்மையுள்ள கிறிஸ்தவத்தில், நாம் சுதந்திரமாக நமது மன உடைவை ஒப்புக்கொள்ள முடியும். வாழ்க்கையின் சவால்கள் மற்றும் நம்மை காயப்படுத்திய அனுபவங்களையும் நாம் அறிக்கையிடலாம். தயக்கமின்றி இயேசுவிடம் நாம் சேரமுடியும்.

போதியளவு பாதுகாப்பானதும் நம் ஒவ்வொருவருக்கும் நம்முடைய உடைக்கப்பட்ட நிலையை வெளிப்படுத்தக்கூடிய ஒரு சூழலை உருவாக்குவதே விசுவாச சமூகத்தினருடைய முக்கிய இலக்காகும். உங்களது சபையில் அக்கறையுள்ள மக்களைத் தேடி அவர்களுடன் உறவுகளை கட்டியெழுப்புங்கள் என்று நான் உங்களை தைரியப்படுத்துகின்றேன். உங்களுக்கு அன்புகாட்டும் சபை இல்லாவிட்டால், அப்படிப்பட்ட சபையை தேட ஆரம்பிப்பதற்கான நல்ல தருணம் இதுவே. தேவனுடைய வார்த்தை உண்மையாக பிரசங்கிக்கப்படும், தேவனுக்கான ஆராதனை உயிரோட்டமும் உண்மையாதுமாய் அமைந்ததும், மக்கள் ஒருவருக்கொருவர் அன்புகூருபவர்களும் உதவிசெய்கின்றவர்களுமாயும் மற்றும் அங்கத்தினர்களுக்குள் தேவவல்லமையின் அடையாளம் காணப்படும் சபையை கண்டுபிடியுங்கள்.

## நண்பத்துவத்தினை பெலப்படுத்தல்

### *நோக்கம் 3:*

*எமது நட்புறவை பெலப்படுத்தும்படிகளை விபரித்தல்.*

மற்றவர்களோடு உறவை கட்டியெழுப்பும் வாஞ்சையுள்ள சமூகப்பிராணிகளாக தேவன் எம்மைப் படைத்துள்ளார். எம்மை தன்னந்தனி ஜீவன்களாய் படைத்திருக்கலாம் எனினும், அவர் அப்படிச் செய்யவில்லை. நமது நட்புறவையும் குடும்பத்தையும் நிலைப்படுத்த, மற்றவர்களுடன் தொடர்புபடும் அவசியமும் நான் யார் என்ற அடிப்படையிலேயே தங்கியுள்ளது. ஆகிலும் நம்முடைய உறவுகளைக் கட்டியெழுப்ப முயற்சிக்கும்போது அதற்காக நாம் போராடும் நேரங்களும் உண்டு. தனிமைப்படுத்தப்படல், தீர்க்கப்படாத சண்டைகள் அல்லது சாதாரணமான புரிந்துகொள்ளாமைகள் இவற்றால் கூட சில நேரங்களில் நம்முடைய உறவுகள் உடைந்துபோகின்து. நம்முடைய உலகமானது கணவன் மற்றும் மனைவி, பெற்றோர் மற்றும் பிள்ளைகள், முதலாளிகள் மற்றும் தொழிலாளிகள், நண்பர்கள், அயலவர்கள், மற்றும் குடும்பங்கள் இவை போன்ற உடைக்கப்பட்ட உறவுகளால் குப்பைக் கூழமாகியுள்ளது.

நாம் விழுந்துபோன உலகத்தில் வாழ்கின்றமையே உறவுகள் உடைக்கப்படுவதற்கு அடிப்படை காரணமாகும். ஒன்று நாம் ஏதாவது தவறிழைக்கின்றோம் அல்லது மற்றவர் தவறிழைக்கின்றனர். நாம் பாவம் செய்கின்றோம், மற்றவர்களும் பாவம் செய்கின்றனர். நாம் அனைவரும் தவறு செய்கின்றோம். நாம் மற்றவர்களை புண்படுத்துகிறதுடன் தெரிந்தோ அல்லது தெரியாமலோ நாமும் புண்படுத்தப்படுகின்றோம். ஆனாலும் உறவுகளை மீண்டும் சீர்மைக்கமுடியும்.

உறவுகளை மீளமைப்பதின் படிகளில் மன்னிப்பு, நேர்மை, மென்மை மற்றும் தாழ்மை ஆகியவை உள்ளடங்கும். தாழ்மையானது மேன்மையான உறவுகளுக்கான அடிப்படை திறவுகோலாகும். வேதாகமம் தாழ்மையை அணிந்துகொள்ளும்படி நமக்கு ஆலோசனை தருகின்றது. (1 பேதுரு 5:5ஐ பார்க்க). நாம் தாழ்மையை கற்றுக்கொள்ளாத வரைக்கும் நம்மால் சிறந்த உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளமுடியாது.

தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கின்றார் தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கின்றார் என்று வேதாகமம் நமக்கு கூறுகின்றது. கீழே கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களைக் கவனமாக வாசியுங்கள்.

- “ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள். அவையாவன: மேட்டிமையானகண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங் கை.” (நீதிமொழிகள் 6:16-17)
- “அழிவுக்கு முன்னானது அகந்தை. விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை.” (நீதிமொழிகள் 16:18)

- “அகந்தையினால் மாத்திரம் வாதுபிறக்கும். ஆலோசனையைக் கேட்கிறவர்களிடத்திலோ ஞானம் உண்டு.” (நீதிமொழிகள் 13:10)
- “அகந்தை வந்தால் இலட்சையும் வரும். தாழ்ந்த சிந்தையுள்ளவர்களிடத்தில் ஞானம் உண்டு.” (நீதிமொழிகள் 11:2)
- “தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம்.” (நீதிமொழிகள் 22:4)

அப்படியானால் தாழ்மை என்றால் என்ன? தாழ்மையானது தாலந்துகளை அல்லது திறமைகளை மறுத்துவிடாது; அப்படிச் செய்கின்றவர்கள் பொய்யான தாழ்மையை கடைபிடிக்கின்றனர். கிறிஸ்தவ, கோணத்திலிருந்து நோக்குமிடத்து தாழ்மையானது, மற்றவர்களை நேசிப்பதையும் உள்ளடக்கியுள்ளது. தேவனில் அன்புகூறுவதும் நாம் நம்மை நேசிப்பது போல பிறனையும் நேசிக்கவேண்டும் என்பதே இயேசு எமக்களித்த இரண்டு மிகப்பெரிய கட்டளைகளாகும். நாம் தேவனையும் அயலவரையும் நேசிக்கும்படிக்கு நமது நேரத்தை செலவழிப்போமானால், கோபிப்பதற்கு நமக்கு நேரம் இருக்காது.

உறவுகளுக்குள் உண்மையுள்ள தாழ்மையே வெற்றிக்கான திறவுகோலாகும். அது நம்முடைய உறவுகளில் எவ்வாறு அதனை வெளிப்படுத்துகின்றதென்பதையும் வளர்க்கின்றதென்பதையும் நாம் நிச்சயமாக கண்டுபிடிக்கவேண்டும். தாழ்மையின் மீது கட்டியெழுப்பக்கூடியதாக நமக்கு உதவிசெய்யும் சில இன்றியமையாத சத்தியங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

முதலாவதாக, பெருமையின் வேரை நீக்கிப்போடுவதற்கு தேவனுடைய உதவியைக்கேட்க வேண்டும். நம்மில் சிலருக்கு இது அவ்வளவு இலகுவாயிராது. தேவனோடு நமக்குள்ள முழுமையான உறவு அவருடைய உதவி நமக்கு தேவை என ஏற்றுக்கொள்ளுதலிளிருந்து ஆரம்பிக்கின்றது. “தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்” என்று யாக்கோபு எழுதினார் (யாக்கோபு 4:6).

இரண்டாவதாக, நாம் மற்றவர்களை முழுமனதுடன் கனப்படுத்த வேண்டியவர்களாயிருக்கின்றோம். ரோமர் 12:10 கூறுகிறது, “சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள், கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்.” பிலிப்பியர் 2:3 கூறுகிறது, “ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்.”

மூன்றாவதாக, நாம் நம்முடைய பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். கலாத்தியர் 6:5 கூறுகிறது, “அவனவன் தன்தன் பாரத்தை சுமப்பானே.” எமது சிந்தனைக்கான, வார்த்தைக்கான, மனோபாவத்திற்கான மற்றும் நடத்தைக்கான பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ளாவிடால் எம்மால் பலமுள்ள, ஆரோக்கியமான உறவுகளை கட்டியெழுப்ப முடியாது. உறவுகளை கட்டியெழுப்பும் விடயத்தில் எப்பொழுதும் மற்றவர்களே அனைத்து வேலைகளையும் செய்யும்படி நாம் எதிர்பார்க்க முடியாது. நாம் மற்றவர்களைக் காயப்படுத்தும்போது நம்முடையபெருமையைவிட்டுவிட்டுஅவர்களிடம்மன்னிப்புக் கேட்பதற்கு துரிதப்படவேண்டும். நம்முடைய வாழ்க்கைகளில் தாழ்மை வளர்கையில் சீக்கிரமாக நம்முடைய தவறுகளை நாம் ஒப்புக்கொள்வதை காண்பதோடுநம்முடைய உறவுகளுக்குள் அழிவை ஏற்படுத்துகின்ற சேதங்களை நிறுத்தவும் முடிகின்றது. நீங்கள் உடைக்கப்பட்ட உறவை கையாள நேரிடும்போது தாழ்மையானது அத்தடையை உடைக்கும். “நான் தவறிழைத்தேன்” அல்லது “என்னை மன்னியுங்கள்” அல்லது “எனக்கு மன்னிப்புத் தாருங்கள்” என்று உங்களால் கூற முடியாவிட்டால், ஒருபோதும் நீண்டு நிலைக்கும், அற்புதமான உறவுமுறையை ஏற்படுத்திக்கொள்ள உங்களால் முடியாதுபோகும்.

நான்காவதாக, மற்றவர்களும் மனிதர்களாக இருப்பதற்கு நாம் அனுமதிக்க வேண்டும். மனிதர்கள் தவறுசெய்யக் கூடியவர்கள். சிலவேளைகளில் நாம் மனிதர்களால் முடியாத காரியங்களை அவர்களிடத்திலிருந்து எதிர்பார்க்கின்றோம். அநேக நேரங்களில் நாம் மற்றவர்களை அவர்களுடைய செயல்களைக் கொண்டு நியாயந்தீர்க்கையில் நம்மை நமது எண்ணங்களின்படி நியாயந்தீர்க்கின்றோம். எப்பொழுதும் நம்முடைய உயர் தரங்களை சந்திக்கமுடியாத மனிதர்களுக்கும்கூட நாம் இடங்கொடுக்க வேண்டும். பவுலுடைய அறிவுரையை வாசியுங்கள்: “ஒருவருக்கொருவர் தயவாயும், மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்” (எபேசியர் 4:32). “மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடியபொறுமையும் உடையவர்களாய். அன்பினால் ஒரவரையொருவர் தாங்கி” (எபேசியர் 4:2). ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்துஉங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.” (கொலோசெயர் 3:13).

# திருமண உறவு

## *நோக்கம் 4:*

*ஒருவர் தன்னுடைய துணையுடனான உறவை மகிழ்ச்சிகரமாக அனுபவிக்கக்கூடிய படிகளை பட்டியற்படுத்துதல்.*

---

திருமண உறவானது மிகவும் பரிபூரணமானதாயிருப்பினும் ஒரு சவாலானதுமான உறவாகும். அத்தால் மிகப்பெரிய சந்தோஷத்தை அல்லது மிகப்பெரிய துயரத்தை கொண்டுவரமுடியும். இப் பாடத்தை வாசிக்கும் அனைவரும் திருமணம் முடித்தவர்களல்ல என்பதை நான் அறிவேன். இன்று இல்லாவிடினும், என்றாவது நீங்கள் திருமணம் முடிப்பீர்கள். ஆகவே இந்த பாடத்தை நினைவில் வைத்திருப்பது நல்லது.

எல்லாத் திருமணமங்களும் ஒரு நிலையில் சண்டை மற்றும் வேதனையை அனுபவித்திருக்கும். திருமணமானது மலைகளையும் பள்ளத்தாக்குகளையும் உயர்வுகளையும் மற்றும் தாழ்வுகளைக் கொண்ட பயணமாகும். பிள்ளைகள் குழந்தைகளாயிருந்து வளர்ந்த நிலைக்கு வருகின்றதை காண்பிக்கும் வளர்ச்சிப்படிநிலைகளைப் போன்றே திருமணத்திலும் அதற்கொத்த விதமான வளர்ச்சிப்படிநிலைகள் காணப்படுகின்றன. ஒருநாள் எனது மனைவி ரொஹோண்டா ஒரு ஜெபத்தை செய்தாள் அது இவ்வாறாகக் காணப்பட்டது: “பிதாவே, தேவனே, எனது கணவனை புரிந்துகொள்ளத்தக்க ஞானத்தை தரும்படி ஜெபிக்கின்றேன், மன்னிக்கத்தக்க அன்பை, அவருடைய மனநிலைகளை பொறுத்துக்கொள்ளகூடிய பொறுமையையும் வேண்டிக்கொள்ளுகின்றேன். ஆனாலும் தகப்பனே, இன்று எனக்கு பெலனைத் தராதிருப்பீராக, ஏனெனில் எனக்கு நீர் பெலனைத் தந்தால் நான் அவர் சாகும்படி அடித்துவிடுவேன். ஆமேன்.”

திருமணத்தை வலிமைமிக்கதொன்றானதாகக் கட்டியெழுப்புவதற்கும் ஆழமான திருப்திகரமான நிலையை அடைவதற்காக தம்பதியினர் கடந்துசெல்லவேண்டிய ஐந்து விதமான படிநிலைகளைக் குறித்து மனோதத்துவ நிபுணர்கள் அடையாளங் காண்பிக்கின்றனர். (Minirth et al., Passage of Marriage).

1. முதற் படிநிலையானது “இளங்காதல்” ஆனது திருமணத்தின் முதல் இருவருட காலப்பகுதியாகும். இதன் போது தம்பதிகள் தங்கள் திருமணத்தின் உயர்ந்த குறிக்கோள்களின் திட்டங்களை மேற்கொண்டு ஒரு அலகாக செயற்பட ஆரம்பிக்கவேண்டும்.

2. இரண்டாம் படிநிலையானது மூன்று முதல் பத்து வருடங்களை உள்ளடக்கிய காலப்பகுதியாகும். இக்காலம் “மெய் அன்பு” அதிகமாக ஏற்பட வேண்டிய காலமாகும். அங்கணமே மிகவும் ஆபத்தான படிநிலைகளில் இப்படியும் ஒன்றாகும். அநேக

திருமணங்கள் இக்காலப்பகுதியில் நிலைத்திருப்பதில்லை. இதைக் குறித்து நான் சற்றுநேரத்தில் இன்னும் அதிகமாக விளக்குகிறேன்.

3. மூன்றாம் படிநிலையானது பதினொன்று முதல் இருபத்தைந்து வருடங்களை உள்ளடக்கிய காலப்பகுதியாகும். இது “சௌகரியமான அன்புப்” பகுதி என்று அழைக்கப்படும். இந்த காலப்பகுதி ஒரு ஓட்ஸ் சாப்பாட்டிற்கு ஒப்பிடப்படுகின்றது– பரபரப்பூட்டுகின்ற ஒன்றல்ல, ஆனாலும், சௌகரியமானது, வெதுவெதுப்பானதும் திருப்திகரமானதுமாகும். டென்வர் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் நீண்ட கால திருமணங்களை பார்க்கும்போது முதல் பத்து வருடங்களில் திருப்தியில் குறைவுற்று அதன் பின்னர் மீண்டும் சாதாரண நிலைக்கு திரும்புதாக கண்டுபிடித்துள்ளனர். இறுதியில், அந்த திருப்திகரத்தின் நிலை இளம் காதலின் காலப்பகுதியையும் மிஞ்சிச்செல்கின்றது.

4. நான்காவது படியானது “புதுப்பிக்கும் அன்பு” ஆகும். மற்றும் இது இருபத்தாறிலிருந்து முப்பத்தைந்து வருட திருமண காலப்பகுதியை உள்ளடக்குகின்றது. இது கூடு வெறுமையாதல் மற்றும் வயதாகும் பெற்றோர்களாக தவிர்க்கவியலாத இழப்புக்களை ஏற்றுக்கொள்ளச் செய்யும் காலமாகும். எப்படியாயினும், இது ஒருவரையொருவர் மீண்டும் அர்பணிப்புச்செய்யும், மீண்டும் கண்டுபிடிக்கும் காலப்பகுதியாகும்.

5. ஐந்தாவதுபடியானது “அசாதாரணஅன்பு” காலப்பகுதியாகும். இது முப்பத்தாறிலிருந்து திருமண வாழ்வின் இறுதிகாலப்பகுதி வரை உள்ளடக்குகின்றது. இத்தனை வருடங்கள் திருமண வாழ்க்கையை கடந்து வந்தவர்களின் கருத்துப்படி, மெய்யாகவே இது திருமண வாழ்வின் உன்னத பகுதியாகும். “அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்” (மத்தேயு 19:5) என்று இயேசு கூறிய ஒருவர் என்ற நிலையை சாதிப்பதற்கான நேரம் இதுவாகும்.

இரண்டாம் படியான *மெய் அன்பை* மேலும் விருத்திசெய்கையில் அநேக திருமணங்கள் உடைந்துபோகின்றது. இரண்டாம் படியில் காணப்படக்கூடிய மிகப்பெரிய வித்தியாசங்கள், அழுத்தங்கள், மற்றும் தற்காலிக பிரிவுகளான இந்த குழப்பமான அலைகளின் நடுவே எவ்வாறு பயணிப்பதென்பதை கற்றுக்கொள்ளுவது ஒரு சவாலான விடயமாகும். திருமணத்தின் இரண்டாம் படியில் நாம் எவ்வாறு பிழைத்திருக்க முடியும்?

முதலாவதாக, ஆணும் பெண்ணும் ஒருவரிலொருவர் பரஸ்பரமாக சார்ந்திருக்கும்படியாகவே படைக்கப்பட்டுள்ளனர் (ஆதியாகமம் 2:20-23ஐ பார்க்கவும்). நாம் ஒரே மாதிரியாக காணப்பட்டாலும் வித்தியாசமானவர்கள். அநேகமாக எமது வித்தியாசங்கள் ஒருவரையொருவர் கவரவேண்டும். ஒரேமாதிரியான வித்தியாசங்கள் கவர்ப்பட்டாலும் அவை பிரச்சினைளுக்கு ஏதுவாகவும் அமையலாம். மேலும் நாம் கவனமாயிராவிட்டால் நமது

வித்தியாசங்கள் கூட நம்மை பிரித்துவிடும். ஆதாமும் ஏவாளும் பாவஞ்செய்தபின்னர் அவர்கள் தங்களுடைய மிகவும் தெளிவான வித்தியாசங்களுடன் காணப்பட்ட சரீரத்தின் பகுதிகளை மூடிய விதம் அவர்கள் ஒருவரைவிட மற்றவர் வித்தியாசமுள்ளவர் என்பதைக் காண்பிக்கின்றதல்லவா?அவர்கள் தங்கள் நிர்வாணத்தைக் குறித்து வெட்கப்பட்டார்கள்.

போராட்டங்கள் மற்றும் வித்தியாசங்களின் உச்சகட்டநிலையில், நாம் நம்மை வெளிப்படுத்துதற்கு பயப்படுகின்றோம். ஆகவே, நாம் அமைதி, கோபம், குற்றச்சாட்டு, செயற்பாடுகள்போன்ற இன்னும் இதுபோல பலவகையான சுவர்களின் பின்னால் மறைந்துகொள்ளுகின்றோம். ஆதாம் விழுந்ததற்கு பின் செய்ததுபோல நாமும் எமது சொந்த தோல்விகளுக்கு எமது துணையை குற்றஞ்சாட்டுகின்றோம். அதன்பின்னர் முன்பு நம்மை கவர்ந்துகொண்ட எமது துணையின் வித்தியாசங்கள் இப்பொழுது எமக்கு தொல்லையாக மாறிவிட ஆரம்பித்து நம்மை பிரித்துவிடுகின்றது.

திருமணமானது பூரணமற்ற இருவரை சேர்க்கின்றது என்பது உண்மையெனினும், தேவைகள் உடைய இரு நபர்களாயிருப்பதனால், ஆணுக்கும் பெண்ணுக்கும் சில குறிப்பிடப்பட்ட வித்தியாசங்கள் உண்டென்பதை புரிந்துகொள்வது அவசியமாகின்றது. உதாரணமாக, மனோதத்துவ ரீதியாக ஆணும் பெண்ணும் வித்தியாசம் உடையவர்களாவர். அதாவது, கர்ப்பத்திலிருக்கும் ஆண் குழந்தைகளை விட அதிகமாக பெண் குழந்தைகளின் மூளையின் இடதுபக்கப் பகுதி விருத்திசெய்யப்படுவதாக கருவில் உள்ள குழந்தைகளைக் குறித்த ஆய்வொன்றில் அறியப்பட்டது. இடப்பக்க மூளைசொற்கள் சார்ந்த செயற் திறனை பிறப்பிக்கும் இடமாகும்.

நாம் பாலினத்தாலும் வேறுபட்டவர்கள். ஒரு ஆணுடைய பாலியல் உறுப்பில் உணர்வு ஏற்படலும் நிறுத்தப்படலும் மிகவும் துரிதமாய் நடைபெறும் என்பதுடன் ஒரு பெண்ணின் பாலியல் உறுப்பு அதற்கு எதிரானதாகும். அது அதிக நேரத்தை எடுக்கின்றது. ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள இதைவிட பெரிதான வித்தியாசங்களை உங்களால் சிந்தித்துப் பார்க்கமுடிகின்றதா?

எமது துணையுடன் சிறந்த உறவைக்கட்டியெழுப்ப உதவும் ஐந்து வித காரணிகள் கீழே தரப்பட்டுள்ளது. முதலாவது, மற்றவரோடுள்ள உறவிற்கு முழுமையான முக்கியத்துவத்தை துணைகள் கொடுக்கவேண்டும். எபேசியர் 5:25 கூறுகிறது, “புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்” வெளிப்படுத்தல் 2:4-5 இயேசு ஒரு சபைக்கு அறிவித்ததாவது “நீ ஆதியில்கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால் நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக” என்றார். இயேசுவானவர் இச்சபையிலுள்ள தமது சீடர்கள் மனந்திரும்பி தாம் முன்னர் செய்த காரியங்களைச் செய்யவேண்டுமென விரும்புகின்றார். அப்போது முன்னர் இயேசுவோடு காணப்பட்ட

அவர்களது அன்பு மீண்டும் கட்டியெழுப்பப்படும். இயேசு இங்கு திருமணத்தை காண்பிக்கவில்லை. ஆனாலும், திருமணமான தம்பதிகள் தங்கள் அன்பை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டுமெனில் இந்த நியதிகளை கைக்கொள்ளலாம்.

ஆண்கள் தங்கள் துணைவியோடு கொண்டுள்ள உறவிற்கு தங்கள் முதன்மை பட்டியலில் முதலிடத்தைக் கொடுக்கவேண்டும். ஒரு கணவன் தன்னுடைய மனைவிக்கு உடைகள் வாங்கும்படி செல்ல நேரிட்டபோது இவ்வாறு கூறினார், "நான் இந்த உடைக்காககடைக்குச் செல்லப்போவதில்லை. நான் இந்த உடையை வேட்டையாடப்போகின்றேன்! அதை பின்தொடர்வேன், சுடுவேன், பொதிசெய்வேன், அதை வாகனத்திற்குள் தூக்கி எறிவேன், மீண்டும் வீட்டிற்குச் செல்வேன்." ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் சுபாவம் உடையவர்கள். காதலிக்கும் காலத்தில் அல்லது விவாகம்பண்ணவிருக்கும் காலப்பகுதியில் அந்த பெண் *வெல்லப்பட்டுவிட்டாள்,* அத்துடன் சகலதும் முடிவிற்கு வந்துவிட்டது என அந்த ஆண் நினைத்து தன்னுடைய முதன்மை பட்டியலில் தன்னுடைய மனைவி முதலிடத்திலுள்ளாள் என்பதை காண்பிக்க வேண்டியதைக் குறித்து கவனம்செலுத்தமாட்டார்.

இதனை வாசித்துக்கொண்டிருக்கும் திருமணம் முடித்த ஆண்களே உங்கள் முதன்மை பட்டியலில் உங்கள் மனைவி எவ்விடத்தில் உள்ளதாக கூறியுள்ளாள்? அவள் உங்களது வேலையோடு போட்டியிட நேரிடுகின்றதா? அவள் உங்கள் கவனத்தைக் கவரும் பொருட்டு தொலைக்காட்சியோடு போராட வேண்டியிருக்கின்றதா? அவள் உங்களுடைய நாளை விட்டும் உங்கள் கனவுகளை விட்டும் தூரப்போனவளாக உணர்கின்றாளா? உங்கள் மனைவியுடைய அன்பைபெற்றுக்கொள்ளும் பொருட்டு நீங்கள் செய்த விடயங்களை இப்போது அவளுடைய அன்பை தக்க வைத்துக்கொள்ளும்படியாக செய்ய நேரிடும். நீங்கள் உங்கள் மனைவியுடைய உறவில் தோல்வியடைய நேரிடுகையில், மீண்டுமாக உங்களுடைய முதன்மை பட்டியலில் அவளை வைப்பதாக உணர வையுங்கள். அதை நிரூபிக்கும் பொருட்டு நீங்கள் முதலில் செய்த காரியங்களை இப்போதும் செய்யுங்கள்.

இரண்டாவதாக, தேவையற்ற புத்திமதிகளைக் கொடுக்காமல் புரிந்துகொள்ளும்படிக்கு செவிகொடுங்கள். யாக்கோபு 1:19 கூறுகிறது, "ஆகையால் என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்கு தாமதமாயும் இருக்கக்கடவீர்கள்." நீதிமொழிகள் 18:13 "காரியத்தைக் கேட்குமுன் உத்தரம் சொல்லுகிறவனுக்கு. அது புத்தியீனமும் வெட்கமுமாயிருக்கும்."

பெண்களுக்கு ஆலோசனை வழங்கும் சந்தர்ப்பங்களில் தங்கள் கணவர் தங்களுக்கு செவிகொடுப்பதுமில்லை தங்களை விளங்கிக்கொள்வதுமில்லை என்ற பொதுவான குற்றச்சாட்டையே நான் கேட்டுள்ளேன். மாறாக, அவர்களுடைய கணவன்மார்கள் திகைக்கச்செய்யும் வண்ணம் "ஆனால் நான் செவிகொடுக்கின்றேன்" என்று கூறுவார்கள்.

இங்கு நடப்பது என்ன? பொதுவாக, ஒரு மனைவி தன்னுடைய பிரச்சினையை கூறும்போது அவள் அதை எவ்வாறு உணர்கின்றாள் என்பதை வெளிப்படுத்த விரும்புகின்றாள். கணவனோ விரைவாக அப்பிரச்சினையை ஆராய்ந்து தீர்த்துவிட விரும்புகின்றார். இங்கே ஆண்களுக்கான பயனுள்ள ஒரு ஆலோசனை: கணவனாக இருப்பவர் மனைவியின் எந்தவொரு பிரச்சினைக்கும் அவள் குறிப்பிட்டு கேட்டுக்கொள்ளாதவிடத்து விரைவாக தீர்வினை பெற்றுக்கொடுப்பதைத் தவிர்த்துக்கொள்ளவும். அதற்குப்பதிலாக, கணவனானவர் மனைவிக்கு செவிகொடுக்கவேண்டும். அவர் அந்த பிரச்சினையை தீர்க்கத் தேவையில்லை. மாறாக, அவளுடைய உணர்வுகளை அவன் புரிந்துகொள்கிறான் என்பதை அவள் அறியச்செய்யதலே போதுமானது. மனைவி தன்னுடைய சிறந்த நண்பனான தன்னுடைய கணவர் தான் முகங்கொடுக்கும் பிரச்சினையை அவர் புரிந்துகொள்ள வேண்டுமென விரும்புகிறாள்.

மூன்றாவது, துணையின் பெரும் ரசிகர்களாக இருங்கள். எபேசியர் 4:29 கூறுகிறது, "கெட்டவார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம், பக்திவிருத்திக்கு ஏதுவான நல்லவார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்கு பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்." ஒருவேளை உங்கள் நண்பர்கள் நீங்கள் கூறுபவற்றை மட்டும் கொண்டு உங்கள் துணையை அறிந்திருப்பார்களானால் அவர்கள் என்ன நினைப்பார்கள்? துரதிர்ஷ்டவசமாக, அநேக தம்பதிகள் தங்கள் துணையை பாராட்டுவதற்குப் பதிலாக குற்றஞ்சாட்டுகிறார்கள். உங்கள் துணையிடமுள்ள சிறந்த பண்புகளை நீங்கள் மனப்பூர்வமாக பாராட்டவேண்டும். துணைவர்கள் தங்களுடைய இயலாமையில் செய்த சிறு செயலையும் பாராட்ட முயற்சிசெய்யுங்கள். அன்பை வெளிக்காட்டவும், பெற்றுக்கொள்ளவும், ஏற்றுக்கொள்ளவும் தேவன் ஏற்படுத்திய முறையாக இருப்பது பாராட்டுதலாகும்.

அடுத்த பக்கம், எதிர்மாறான விடயங்கள் உறவுகளுக்குள் ஆழமான காயங்களை ஏற்படுத்துவதோடு அவைகள் உறவுக்கு கொடியதாகவுமிருக்கக்கூடும். அற்பமாக அல்லது தாழ்த்திப் பேசுதல் போன்ற காரியங்கள் விவாகரத்துகளுக்கான காரணமாக அமைகின்றன எனதிருமணங்கள் சம்பந்தமான நிபுணர்கள் எதிர்கூவியுள்ளனர். காரணம், பாதகமான அறிக்கைகள் நேரான கருத்துக்களை விட மிகப்பெரிதான விளைவை ஏற்படுத்தக்கூடியவை என்பதாலாகும். நீங்கள் இருநூறுபேருள்ள கூட்டத்தில் பேசுகிறீர்கள் என நினைத்துக் கொள்ளுங்கள். அது நிறைவுற்றதும், நீங்கள் 199 நன்மையான கருத்துக்களையும் ஒரு தீமையான கருத்தையும் பெறுகின்றீர்கள். நீங்கள் எதில் அதிகமாக தங்கியிருக்க விரும்புவீர்கள்? அதுபோலவே, உங்கள் துணைகளுக்கும் உங்களது ஒருபாதகமான கருத்தை மூடி மறைப்பதற்கு சாதகமான நன்மையான வார்த்தைகள் அதிகம் தேவைப்படும்.

ஆகவே உங்கள் துணையை பாராட்டிய, தைரியப்படுத்திய விதங்களை மீண்டும் நினைவிற்கு கொண்டு வாருங்கள், அதன் பின்னர் அக்காரியங்களை மீண்டும் செய்யுங்கள்.

அவன் அல்லது அவளை நீங்கள் எவ்வளவு பெறுமதிமிக்கவராக எண்ணுகிறீர்கள் என்பதை வெளிப்படுத்துங்கள். உங்களது பாராட்டுதல்கள் எந்நேரத்தில் உங்கள் துணைக்கு அதிகமாக தேவைப்படுகின்றது என்பதைக் குறித்து உணர்வுள்ளவராயிருங்கள். உங்கள் நண்பர்களோடு ஒன்றுகூடியிருக்கும் நேரங்களில் உங்கள் துணையைக் குறித்து இழிவாக பேசாதிருங்கள். மாறாக, அவன் அல்லது அவளைக் குறித்து பொது இடங்களில் பெருமைபாராட்டுங்கள்.

நான்காவதாக, உங்கள் துணையை மாற்றிவிட முடியுமென வெறுமனே எண்ணாதிருங்கள். அநேக ஆண்கள் அல்லது பெண்கள் திருமணம் செய்ய எத்தனிக்கும் போது அவர்கள் துணையிடமுள்ள விசித்திரமான அல்லது தனித்தன்மை அல்லது வித்தியாசமான குணாதிசயங்களை, சினமூட்டும் நடவடிக்கைகளை என்றாவது ஒருநாள் மாற்றிவிடலாம் என நினைக்கின்றார்கள். அவைகள் எப்பொழுதாவது வெற்றியளிக்கும், அநேக நேரங்களில் அவைகள் வெற்றியளிப்பது கடினம்.

ஆகவே உங்கள் கணவனின் அல்லது மனைவியின் குறைநிறைகளை மாற்றுவதற்கு முயற்சி செய்வதை விட்டுவிட்டு அவரை அல்லது அவளை புரிந்துகொள்ள முயற்சிசெய்யுங்கள். உங்கள் துணையை நேசிப்பது உங்களது வேலையாகும்; அவரை அல்லது அவளை மாற்றுவது தேவனுடைய வேலையாகும். ஒவ்வொரு மனிதரும் தனித்துவமானவர்கள். உங்கள் துணையை மிகச்சிறப்பாக்கும் காரியங்களில் நிபுணத்துவமுள்ளவராகுங்கள். திருமணத்தில் வெற்றி தங்கியிருப்பது சரியான ஒருவரை கண்டுபிடிப்பதில் அல்ல, சரியான ஒருவராய் இருப்பதிலாகும். பிலிப்பியர் 2:4 இல் அப்போஸ்தலனான பவுல் “அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக” என்று ஆலோசிக்கின்றார்.

ஐந்தாவதாக, உங்களுடைய தேவைகளை யெல்லாம் உங்கள் துணை சந்திக்கவேண்டும் என எதிர்பார்காதீர்கள். அவ்விதமாய் உங்கள் தேவைகள் அனைத்தையும் முழுமையாக சந்திக்ககூடிய ஒருவர் இயேசு மாத்திரமே. வேறு யாரேனும் ஒருவர் மீது அந்த பாரத்தை வைப்பது நியாயமற்றது. தேவனை ஊக்கத்துடன் தேடுங்கள்; அவரே முதன்மையானவர். தேவனுடைய திட்டப்படி உங்கள் துணைக்கு செய்வீர்களானால், அவன் அல்லது அவளுக்கு உங்கள் ஆவிக்குரிய தாகம் ஒருபோதும் பயமுறுத்துவதாக அமையாது. மேலதிகமாக, நீங்கள் ஆழமாக தேவனை நேசிக்கும்போது, உங்கள் துணையின் மீதுள்ள அன்பு நல்லதாக மாறும்.

## முடிவுரை

எமது வாழ்வில் ஏற்படும் ஓவ்வொரு வெற்றிகளும் தோல்விகளும் எமது உறவு முறையை அடிப்படையாகக்கொண்டு அமைந்துள்ளது. தவறான ஒரு நபருடனான உறவு உங்களை அழித்துவிடக்கூடும். ஒரு கூட்டத்தில் பேச்சாளர் ஒருவர் இவ்வாறு கூறினார் "தேவன் உங்களை ஆசீர்வதிக்க நினைத்தால், அவர் ஒரு நபரை உங்கள் வாழ்வில் ஏற்படுத்துவார். சாத்தான் உங்களை அழிக்க நினைத்தால், அவன் ஒரு நபரை உங்கள் வாழ்வில் ஏற்படுத்துவான்." எமது உறவுகள் தொடர்பான ஆழமான அறிவை பெற்றுக்கொள்ளும்படியாக நாம் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்துகொள்ளவேண்டும். ஆகவே, மனிதர்கள் கொண்டுள்ள அடிப்படை உணர்வுத் தேவைகளை அறிந்துகொள்ளுங்கள். உடைவு உங்கள் வாழக்கையில் பாதிப்பை ஏற்படுத்திய இடத்தை கண்டுபிடியுங்கள் அத்துடன் உங்கள் நம்பிக்கைக்காகவும் சுகத்திற்காகவும் கிறிஸ்துவை நோக்கிப்பாருங்கள். உங்கள் சகல நண்பத்துவத்தினையும் பலமுள்ளதாக்கவும் விருத்திசெய்யும் பொருட்டு தொடருங்கள். உங்களுக்கு நெருக்கமானவர்களாகிய உங்கள் கணவன் அல்லது மனைவி, பிள்ளைகள் மற்றும் பெற்றோர்களிடத்தில் உங்கள் கூர்ந்த கவனத்தை செலுத்துங்கள்.

## குறிப்புப் பட்டியல்

Minirth, Frank & Mary Alice, Brian & Deborah Newman, and Robert & Susan Hemfelt. "Passages ofMarriage: Five Growth Stages." Marriage Missons.http://www.marriagemissions.com/marriage_matters/passages.php (accessed May 2, 2006).

# பாடம் 4

## விடாமுயற்சி

எதாயினும் ஒரு வேலையில் வெற்றிபெறுவதற்கு விடமுயற்சியானது இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது. வியாபாரம், விளையாட்டு, அரசியல், கல்வி மற்றும் விஞ்ஞானம் ஆகியவற்றில் வெற்றிபெறுதலானது ஒருவரது திறமையிலோ அல்லது அறிவாற்றலிலோ தங்கயிருக்கவேண்டிய அவசியமில்லை. மாறாக, வெற்றிபெறுதலானது, அநேகமாக விடாமுயற்சியின் பிரதிபலனாகும். சகலமும் தங்களுக்கு எதிராக செயற்படினும் வெற்றிபெற்ற மனிதர்கள் அவ்வளவு எளிதாக கைவிட்டுவிடமாட்டார்கள்.

கிறிஸ்தவ வாழ்க்கையிலும் இந்த விடாமுயற்சி என்னும் கொள்கையானது மிகவும் இன்றியமையாததொன்றாகும். சூழ்நிலைகளை பொருட்படுத்தாது தேவனுக்காக வாழ்வதையே நோக்காகக் கொண்டிருக்கும் ஒரு மனநிலை ஒரு கிறிஸ்தவனுக்கு நிச்சயமாக வேண்டும். வேதாகமத்திலும் சபை சரித்திரத்திலும் காணப்படும் விசேஷித்த மனிதர்கள் விடாமுயற்சியுள்ளவர்களாவர்; அநேகமான தேவனுடைய புருஷர்களும் ஸ்திரீகளும் கடினமான வேலைகளுக்கும் பல கஷ்டங்களுக்கும் முகங்கொடுத்தபோதும் அவர்கள் விடாமுயற்சியுடன் இருந்தபடியாலே தேவன் அவர்களுக்கு வெற்றியை கொண்டுவந்தார்.

இன்றும்கூட, சகல கிறிஸ்தவர்களும் விடாமுயற்சியுடன் இருக்கவேண்டுமென தேவன் வாஞ்சிக்கின்றார். நாம் தோல்வியுற்று கைவிட்டுவிடுவதற்காக மாத்திரம் தேவன் நம்மை அவருடைய இராஜ்யத்திற்குள் கொண்டுவரவில்லை. தேவன் ஒவ்வொரு விசுவாசிக்கும் ஒரு திட்டத்தை வைத்திருக்கின்றார், அத்திட்டம் நிறைவேறுகிறதை காணும்படி அவர் வாஞ்சிக்கின்றார். பிலிப்பியர் 1:5 இல் பவுல் இவ்வாறு எழுதுகின்றார், “உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள்பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி.” எவ்வாறாயினும், “நற்கிரியை” நிறைவேறுகிறதற்கு, விடாமுயற்சி அவசியமாயிருக்கின்றது.

### பாடத்தின் முக்கிய அம்சங்கள்

விடாமுயற்சிக்கான வரைவிலக்கணம்

விடாமுயற்சியின் முக்கியத்துவம்

விடாமுயற்சிக்கான உந்துவிசை

விடாமுயற்சிக்கான தடைகள்

விடாமுயற்சியுடன் இருப்பது எப்படி

விடாமுயற்சிக்கான வெகுமதிகள்

## பாடத்தின் நோக்கங்கள்

1. *விடாமுயற்சியை விபரித்தல்.*

2. *விடாமுயற்சியின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுதல்.*

3. *விடாமுயற்சிக்கு உந்துவிசையாகவுள்ள காரணியை விபரித்தல்.*

4. *விடாமுயற்சியை தடைசெய்யும் காரணத்தை குறிப்பிடுதல்.*

5. *விடாமுயற்சி செய்வதற்காக எமக்கு உதவிசெய்யும் தேவனுடைய வளங்களை இனம்காணல்.*

6. *விடாமுயற்சியுடன் காணப்பட்டவர்களுக்கான வெகுமதிகளை பெயரிடுதல்.*

### விடாமுயற்சிக்கான வரைவிலக்கணம்

### *நோக்கம் 1:*

*விடாமுயற்சியை விபரித்தல்.*

*விடாமுயற்சி* என்ற வார்த்தையின் அர்த்தம் உறுதியாய் நிற்றல் அதாவதுகுறித்த ஒரு நோக்கத்திற்காக குறித்த ஒரு வேலையில் அல்லது நம்பிக்கையில் தடைகள் எதிர்ப்புகள் என்பற்றை தாண்டியும் அதில் உறுதியாயிருத்தலாகும். அது வேதனை, ஏமாற்றம், மற்றும் ஆறுதலற்ற நிலைமையிலும் கைவிடாமல், விட்டுக்கொடுக்காமல் பொறுமையுடன் தாங்கும் திறமையாகும். எல்லாமே நமக்கு எதிராக இருந்தாலும் உறுதியாகவும் உண்மையாகவும் இருத்தலே இந்த விடாமுயற்சியின் கருத்தாக அமைகின்றது. விடாமுயற்சிக்கு பொறுமை அவசியமாயிருக்கின்றது.

வேதாகமத்தில் விடாமுயற்சி என்பதற்கு பயன்படுத்தப்படும் கிரேக்க வார்த்தையானது தாங்குதல் அல்லது சுமையின் கீழ் தாங்கிக்கொண்டிருத்தல் என்ற அர்த்தத்த்தைத் தருகின்றது. அதாவது நாம் விடாமுயற்சி செய்யும்போதும் இதை தான் செய்கிறோம். நாம் எப்பக்கத்தில் நெருக்கப்பட்டாலும் உறுதியாகவும் உண்மையாகவும் நிற்றலை குறிக்கின்றது. வேதாகம மொழிபெயர்ப்புகளுக்கமைய இந்த கிரேக்க வார்த்தையானது பொறுமை, துன்பத்தைத் தாங்கும் ஆற்றல், உறுதியாய்த் தரித்தல் மற்றும் விடாமுயற்சி என்பவையாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

# விடாமுயற்சியின் முக்கியத்துவம்

## *நோக்கம் 2:*

*விடாமுயற்சியின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுதல்.*

நாம் கிறிஸ்துவை பின்பற்றுவதற்கு தீர்மானித்தபோது நம்முடைய வாழ்க்கை ஒரு புதிய அர்த்தத்தைப் பெறுகின்றது. நாம் புதிய சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அனுபவிப்பதோடு கிறிஸ்து மூலமாக தேவனுடன் ஒரு புதிய உறவையும் ஏற்படுத்த ஆரம்பிக்கின்றோம்.நாம் கிறிஸ்தவர்களாயிருக்கின்ற காரணத்தினால் வாழ்க்கை இலகுவாயிருக்கவேண்டுமென்கின்ற அவசியமில்லை. நாம் கிறிஸ்துவைப் பின்பற்றத் தீர்மானித்ததனால் வாழ்க்கை இன்னும் கடினமாகிவிடும். உதாரணமாக, நாம் முன்னொருபோதும் அனுபவித்திராத கஷ்டங்களுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுக்கவேண்டி ஏற்படலாம்.

எனினும், அப்படிப்பட்ட நேரங்கள் வரும்போது நாம் ஆச்சரியமடைய வேண்டியதில்லை. யோவான் 16:33 இல் இயேசு இவ்வாறு கூறினார், “உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு.” மேலதிகமாக, பவுலும் பர்னபாவும் லீஸ்திரா, இக்கோனியா மற்றும் அந்தியோக்கியா சபைகளுக்கு மீண்டும் ஒருமுறை விஜயம் செய்திருந்தபோது அந்த சபைகளுக்கான அவர்களுடைய பிரதான செய்தியாக அமைந்து  என்னவெனில், “நாம் அநேக பாடுகளின் வழியாகவே தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியும்” என்பதே (அப்போஸ்தலர் 14:22). பேதுரு தன்னுடைய முதலாவது நிருபத்தில் இவ்வாறு எழுதிகின்றார், “பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்” (1 பேதுரு 4:12). நாம் பாவம்-சாபம் நிறைந்த உலகத்தில் வாழ்கின்றபடியால் கடினமான நேரங்களுக்கு முகங்கொடுப்பதைக் குறித்து வேதாகமம் மிகத் தெளிவாக உள்ளது. அப்படிபட்ட நேரங்களில் கிறிஸ்தவர்கள் விடாமுயற்சியுடன் இருப்பது இன்றியமையாததொன்றாகும்.

வெவ்வேறான சூழ்நிலைகள் கிறிஸ்தவர்களை விடாமுயற்சியுடன் இருக்கும்படி வேண்டுகின்றது. கிறிஸ்தவர்களாக இச்சூழ்நிலைகள் நம்மை கட்டியெழுப்பவோ அல்லது உடைக்கவோ முடியும். இந்நேரமானது விடாமுயற்சியுடன் இருப்பவர்களை தங்களுடைய விசுவாசத்தில் பலப்பட்டு வளர்வதற்கான காரணமாகிவிடுகின்ற அதேவேளையில் விடாமுயற்சி செய்யாதவர்கள் விசுவாசத்தில் இடறுவதற்கு அல்லது மரணத்திற்கேதுவான காரணமாயும் அமைந்துவிடுகின்றது. நாம் எவ்வெப்போது விடாமுயற்சியுடன் இருக்கவேண்டுமென்பதற்கான உதாரணங்கள் பின்வருமாறு.

### கடினமான வேலைகளில் விடாமுயற்சி

தேவன் சில கிறிஸ்தவர்களை கடினமான இடங்களுக்கு போதகர்களாகவோ அல்லது திருத்தூதுப்பணியாளர்களாகவோ அழைக்கின்றார். சிலநேரங்களில் இந்த ஊழியக்காரர்கள் அதைரியப்பட்டு கைவிட்டுவிடவேண்டும் என்ற நிலைக்கு ஆளாகலாம். எனினும், அப்படிப்பட்ட சில  சூழ்நிலைகளில் விடாமுயற்சி அவசியமாயிருக்கின்றது. உலகெங்கிலும் காணப்படும் அநேக  ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும் வெற்றியுள்ள சபைகளையும்

ஊழியங்களையும் நினைத்துப் பாருங்கள். இந்த ஊழியங்களின் சரித்திரத்தை நன்றாக ஆராய்ந்து பார்ப்பீர்களானால், அவர்கள் அநேக பாடுகளையும் கஷ்டங்களையும் சகித்து வந்துள்ளதை நீங்கள் காணக்கூடியதாகவிருக்கும். சிலவேளைகளில் அவைகள் உபத்திரவம், பொருளாதார நெருக்கடி அல்லது வேறு தடைகளாகக்கூட இருக்கலாம். இருப்பினும், அங்கே இருந்த ஒரு போதகர், ஒரு மிஷனரி அல்லது சபையானது விடாமுயற்சியுடன் தேவனுடைய வாக்குத்தத்தங்களை பிடித்துக்கொண்டு இருந்தமையினால், இன்று நாம் அதனுடைய பிரதிபலன்களை பார்க்கமுடிகின்றது.

தோற்கடிக்கப்பட்ட அந்த நகரத்தின் அலங்கத்தை மீண்டும் கட்டியெழுப்பும்படிக்கு எருசலேமிற்கு போகும்படி தேவன் தன்னை வழிநடத்துவதாக நெகேமியா உணர்ந்தார். அவர் அங்கே வந்ததும் எருசலேமின் அலங்கம் அழிக்கப்பட்டிருப்பதைக் கண்டார். அலங்கத்தை கட்டிமுடிக்கும் வேலையானது தவிர்க்க இயலாததொன்றெனவும் கண்டார். அதனால் நெகேமியா மனிதர்களையும் தேவையான பொருட்களையும் ஒழுங்குப்படுத்திக்கொண்டு அலங்கத்தைக் கட்டும் வேலையை ஆரம்பித்தார். வேலையை ஆரம்பித்த சிறிது நாட்களிலேயே, அவனும், அவனுடைய மனிதர்களும் தங்கள் அயல் எதிரிகளின் எதிர்ப்பிற்கு முகங்கொடுக்க நேரிட்டது.ஆனாலும் நெகேமியா விடாமுயற்சியுடன் பெலனை பெற்றுக்கொள்ளும்படி தேவனிடம் திரும்பினார். நெகேமியாவின் விடாமுயற்சியினாலும் தலைமைத்துவத்தினாலும் எருசலேமின் அலங்கம் 52 நாட்களில் கட்டிமுடிக்கப்பட்டது (நெகேமியா 2-6 வரை பார்க்க). முதலில் முடியதெனத் தோன்றிய காரியம் தற்போது விடாமுயற்சியினால் முடிக்கப்பட்டது.

## பாடுகளின் மத்தியில்விடாமுயற்சி

பவுல் தேவனுடைய வல்லமையான மனிதனாவார். சுவிசேஷத்திற்காக அவர் பொறுமையோடுகூட பாடுகளை தாங்கிக்கொண்டமையே அவர் ஓர் பெரிய உதாரணமாக விளங்கக்காரணமாயிற்று. கொரிந்தியருக்கு எழுதிய பவுலின் நிரூபங்கள் ஒன்றில் பவுல் முகங்கொடுத்த பாடுகளை மேலோட்டமாக நாம் காணலாம்,

> மிகுந்த பொறுமையிலும், உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும், இடுக்கண்களிலும், அடிகளிலும், காவல்களிலும், கலக்கங்களிலும், பிரயாசங்களிலும், கண்விழிப்புக்களிலும், உபவாசங்களிலும், கற்பிலும், அறிவிலும், நீடிய சாந்தத்திலும், தயவிலும், பரிசுத்தஆவியிலும், மாயமற்ற அன்பிலும், சத்தியவசனத்திலும், திவ்விய பலத்திலும்; நீதியாகிய வலதிடதுபக்கத்து ஆயுதங்களைத் தரித்திருக்கிறதிலும், கனத்திலும், கனவீனத்திலும், துர்க்கீர்த்தியிலும், நற்கீர்த்தியிலும், எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தராகவும், அறியப்படாதவர்களென்னப்பட்டாலும் நன்றாய் அறியப்பட்டவர்களாகவும், சாகிறவர்கள் என்னப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும், தண்டிக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் கொல்லப்படாதவர்களாகவும், துக்கப்படுகிறவர்களென்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும் சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம். (2 கொரிந்தியர் 6:4-10)

பவுல் தன் நிலைமையை இவ்வாறு குறிப்பிடுகின்றார் “என் மாம்சத்தில் ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது”. அந்த முள் என்ன என்பதற்கு அநேக அர்த்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. பவுல் பாடுபட்ட அந்த முள்ளானது ஒரு சரீர நோயா அல்லது ஒரு ஆவிக்குரிய போராட்டமா என்பது நமக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கின்றது. அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன்” (2 கொரிந்தியர் 12:7-8). “குட்டுதல்” மற்றும் “வேண்டிக்கொண்டேன்” ஆகிய வார்த்தைகள் பவுல் அதிகமாக பாடுபட்டார் என்பதைக் காண்பிக்கின்றது.அவர் உபத்திரவப்பட்டதாக அல்லது குட்டப்பட்டதாக உணர்ந்ததுடன் மிகவும் தேவையோடுகூட அந்த சூழ்நிலை மாறும்படியாக அவர் கர்த்தரைத் தேடினார். அந்த முள் நீக்கப்படவேயில்லை, ஆனாலும் பவுல் விடாமுயற்சியுடன் காணப்பட்டார்.

சுவிசேஷத்தை அறிவித்ததினிமித்தமும் பவுல் உபத்திரவப்பட்டார். தீமோத்தேயுவுக்கு எழுதிய கடைசி நிரூபத்தில் அவர் இவ்வாறு எழுதுகிறார், “நீயோ என் போதகத்தையும் நடக்கையையும் நோக்கத்தையும் விசுவாசத்தையும் நீடிய சாந்தத்தையும் அன்பையும் பொறுமையையும், அந்தியோக்கியா, இக்கோனியா, லீஸ்திரா என்னும் பட்டணங்களில் எனக்கு உண்டான துன்பங்களையும் பாடுகளையும் நன்றாய் அறிந்திருக்கிறாய்; எவ்வளவோ துன்பங்களைச் சந்தித்தேன்; இவையெல்லாவற்றினின்றும் கர்த்தர் என்னை நீங்கலாக்கி விட்டார்” (2 தீமோத்தேயு 3:10-11). பவுல் தன் வாழ்வின் முடிவை நெருங்கும்போது, அவர் தன்னுடைய உபதேசங்களையும் வாழ்க்கை போக்கையும் மாத்திரம் அல்ல, உபத்திரவத்திற்கு முகங்கொடுத்து அதை பொறுமையாக தாங்கிக்கொண்டார் என்ற உண்மையையும் தீமோத்தேயுவுக்கு கற்றுக்கொடுக்க அவருக்கு வேண்டியதாயிருந்தது.

12 ஆம் வசனத்தில், பவுல் தீமோத்தேயுவிடம் கூறுகின்றார், “அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்கமனதாயிருக்கின்ற யாவரும் துன்பப்படுவார்கள்.”நாம் கர்த்தருக்காக வாழும்போது, நாம் உபத்திரவங்களுக்கு முகங்கொடுப்போம். கிறிஸ்தவர் அல்லாதவர்களால் அசட்டைப்பண்ணப்படுதலும் புறக்கணிக்கப்படுதலும் போன்ற ஒரு சாதாரணமான உபத்திரவமாக இருக்கலாம். அல்லது, இது கைதுபண்ணப்படுதல், அடிக்கப்படுதல், அல்லது விசுவாசத்திற்காக கொலைபண்ணப்படுதல் போன்ற தீவிரமான உபத்திரவங்களாகக்கூட இருக்கலாம். சபை சரித்திரமானது உபத்திரவத்திலும் சிலர் மரணத்தின்பிடியிலும்கூட விடாமுயற்சியுடன் இருந்த மக்களின் உதாரணங்களால் நிரம்பியுள்ளது.

## வாழ்க்கையின் அர்த்தத்தை புரிந்துகொள்ளமுடியாதபோதும் விடாமுயற்சி

மிகக் கடினமான நேரங்களில் ஒன்றான வாழ்க்கையில் நடக்கின்ற நிகழ்வுகளை புரிந்துகொள்ளமுடியாமல் இருக்கும்போதும் அல்லது அர்த்தமற்றதாயிருக்கும்போதும் நாம் விடாமுயற்சியுடன் காணப்படவேண்டும். எல்லாவற்றிலும் கீழ்ப்படிவுடன் நடக்கும்போது எல்லாமே சரியாகிவிடும் என்பதை நம்புகின்றவொரு மனப்பான்மை நம்மிடத்தில் உண்டு. அதன்பின், நாம் எதிர்பார்த்தபடி காரியங்கள் நடக்கவில்லையெனில், நாம் சந்தேகப்பட்டவர்களாய் நம்மையே இவ்வாறான கேள்விகளைக் கேட்போம், “தேவனை நான் அர்ப்பணிப்புடன் சேவித்ததினால் எனக்கு கிடைத்த பலன் இதுதானா? தேவன் என் ஜெபங்களைக் கேட்கவில்லையா? என்னுடைய உண்மைத்தன்மையை தேவன் கவனிக்கவில்லையா? கிறிஸ்தவ வாழ்க்கையில் தொடர்ந்தும் நிலைத்திருப்பது பெறுமதிமிக்கதுதானா?

ஒரு வியாபாரி தசமபாகம் செலுத்துவதில் உண்மையுள்ளவனாகவும் தேவனுடைய காரியங்களுக்கு கொடுப்பதில் உதாரத்துவமுள்ளவனாகவும் இருந்தான். ஆனால் செழிப்புக்குப் பதிலாக தன்னுடைய கட்டுப்பாட்டிற்கும் அப்பாற்பட்ட சம்பவங்களினிமித்தம் வியாபாரத்தில் தோல்வியை அனுபவித்தான். பெற்றோர்கள் பிள்ளைகளை தேவனிடம் அர்ப்பணித்து தேவனுக்கடுத்த காரியங்களில் வளர்க்கின்றார்கள். இறுதியில் பிள்ளைகள் தங்களுக்கும் விசுவாசத்திற்கும் எதிராக கலகம்பண்ணுகிறதைக் காண்கின்றார்கள். உண்மையுள்ள கிறிஸ்தவ கணவன் ஒருவன் தான் மிகவும் அதிகமாக நேசிக்கும் மனைவியின் சுகத்திற்காக மிகவும் உண்மையாக ஜெபம்பண்ணினார். இறுதியில் அவள் அவனிடம் பிள்ளைகளையும் பொறுப்புக்களையும் ஒப்படைத்து அவனை தனியாக விட்டுவிட்டு மரணத்தைத் தழுவிக்கொண்டாள். ஒரு மிஷனரி தம்பதிகள் வெளிநாடொன்றில் ஊழியம் செய்வதற்காக அநேக வருடங்கள் கற்பதிலும் ஆயத்தத்திலும் செலவழித்தனர். ஆகிலும் ஒரு குறுகிய காலத்தில் அங்கே நடந்த ஒரு விபத்தினால் ஊழியம்செய்ய முடியாதபடி ஊனமுற்றவர்களாக அவ் ஊழியத்தை ராஜினாமா செய்துவிட்டுமீண்டும் திரும்பி வந்தனர்.

மிகவும் உண்மையும் விசுவாசமுமுள்ளதேவனுடைய ஜனங்களுக்குக்கூட இம்மாதிரியான காரியங்கள் நடக்கலாம். இந்த உண்மையானது நாம் கேள்விப்பட்ட தேவனுடைய நன்மைக்கும் வல்லமைக்கும் எதிராக காணப்படுகிறது. எவ்வாறாயினும், இப்படிப்பட்ட காரியங்கள் நடக்கும்போது, நாம் விடாமுயற்சியுடன் இருப்பதற்கு கற்றுக்கொள்ளவேண்டும் அத்துடன் தேவனுடைய உண்மை, ஞானம், சர்வவல்லமை மற்றும் அதிகாரத்தை நாம் நம்பவேண்டும்.

## தேவனுடைய நேரத்தில் விடுதலை

வாழ்க்கையின் சம்பவங்களானது புரிந்துகொள்ளமுடியாத புதிராக இருந்தபோதும் விடாமுயற்சியை தக்கவைத்துக்கொண்டதற்கு யோசேப்பு ஒரு நல்ல உதாரணமாகக் காணப்படுகின்றான். யோசேப்பு ஆற்றலுடன் கூடிய ஒரு தேவபக்தியுள்ள வாலிபனாவான். அவன் இளம் வாலிபப் பருவத்திலிருக்கும்போது அவனுடைய சகோதரர்கள் அவன் மீதுகொண்ட பொறாமையினால் அவனை அடிமைத்தனத்திற்கு விற்றுப்போட்டனர். அவன் ஒரு அடிமையாக இருந்தபோது கற்பழிப்பு என்னும் பொய்யான குற்றச்சாட்டிற்காக எகிப்து தேசத்தின் சிறைச்சாலையில் சிறைப்படுத்தப்பட்டான். விடுதலையாகும்படி அவனுக்கு உதவிசெய்வேன் என்று பொருத்தனைபண்ணியவர்களும் அவனை மறந்துபோயினர். எல்லா வழிகளிலும் தேவன் யோசேப்பைக் கைவிட்டார். இருந்தபோதும், யோசேப்பு தேவனுக்காக வாழ்வதை விட்டுவிடாமல் விடாமுயற்சியுடன் தொடர்ந்தான், தேவன் யோசேப்பினுடைய நம்பிக்கையை கனப்படுத்தினார். இறுதியில், யோசேப்பு எகிப்து தேசத்தின் பிரதான அதிகாரியானபோது அவனுடைய வாழ்க்கையில் நடந்த ஒவ்வொரு சம்பவமும் தேவனுடைய ஆளுகையின் கீழ் நடைபெற்றதென்பதைப் புரிந்துகொணடான்.

ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையிலும் நடைபெறும் சம்பவங்களில் தேவனுடைய கட்டுப்பாடு உண்டு. ரோமர் 8:28 கூறுகிறது, “அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலதும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.” நம்முடைய சார்பில் தேவன் கிரியை செய்கிறார் என்பதை நாம் விசுவாசிப்போமேயானால் நம்முடைய வாழ்க்கையில் நடைபெறும் காரியங்களை புரிந்துகொள்ள முடியாவிடினும் நாம் விடாமுயற்சியுடன் காணப்படுவோம்.

## விடாமுயற்சிக்கான அவசியம்

விடாமுற்சி செய்வதற்கான இரண்டு அடிப்படைக் காரணங்கள் உண்டு:அவைகள் ஆவிக்குரிய போராட்டத்தில் வெற்றிபெறுவதற்கும், வளர்ச்சிக்குமாகும்.

## ஆவிக்குரிய போராட்டம்

கிறிஸ்தவர்களாகிய நாம் ஆவிக்குரிய போராட்டத்திலிருக்கின்றபடியினால் விடாமுயற்சியுடன் காணப்படவேண்டும். கிறிஸ்துவுக்குள் வருமுன்பதாக நாம் பிசாசுக்கு வேண்டிய விதத்திலேயே வாழ்ந்து வந்தோம்; ஆவிக்குரிய காரியங்களுக்கு மரித்திருந்தோம். எவ்வாறாயினும், நாம் கிறிஸ்தவர்களானபோது அல்லது தேவனுடைய பிள்ளைகளானபோது நம்முடைய வாழ்க்கை முறையும் வாஞ்சைகளும் மாறியது. நாம் நம்முடைய சொந்த வழிகளில் வாழ்வதற்குப் பதிலாக, இப்போது நாம் தேவனுடைய வழியை வாஞ்சிக்கிறவர்களாயிருக்கின்றோம். இருப்பினும், பிசாசானவன் நம்மை நம்முடைய பழைய வாழ்க்கையான பாவத்திற்குள் மீண்டும் இழுத்துக்கொள்ளப் பார்க்கின்றான். இவ்விதமாகவே ஆவிக்குரிய போராட்டம் நடைபெறுகின்றது.

ஆவிக்குரிய போராட்டத்தில் விடாமுயற்சியுடன் காணப்பட்ட ஒருவருக்கு உதாரணமாக நாம் யோபுவைக் காணலாம். ஒரு நாள் சாத்தான் தேவனுக்கு முன்பாக வந்து நின்றான். தேவன் அவனைப் பார்த்து இவ்வாறு கேட்டார்,“ ‘என் தாசனாகிய யோபின்மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போலப் பூமியில் ஒருவனும் இல்லை என்றார்’ ” (யோபு 1:8). சாத்தான் பிரதியுத்தரமாக தேவன் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைத்திருந்தபடியாலும் அவனை ஆசீர்வதித்ததினாலுமே யோபு தேவனை சேவிக்கின்றான் என்றான். அந்த வேலி நீக்கப்பட்டால் யோபு தேவனை சபிப்பான் என்றும் அவருடன் வாதாடினான். அதனால் யோபு சோதனைக்குட்படுத்தப்பட்டான். சாத்தான் யோபுவுக்கு தொல்லை கொடுக்க ஆரம்பித்தான் யோபு தன் பிள்ளைகளையும் சொத்துக்களையும் இழந்ததுடன் இறுதியில் தன் சரீர ஆரோக்கியத்தையும் இழந்தான். யோபுவை கஷ்டப்படுத்தும்படிக்கும் தேவன் மேல் அவன் கொண்ட விசுவாசத்தை அழிக்கும்படிக்கும் இந்த சகல பாடுகளும் சாத்தானால் வடிவமைக்கப்பட்டவையாகும். ஆகிலும் இவையெல்லாவற்றிலும், யோபு விடாமுயற்சியுடன் காணப்பட்டான்!

வனாந்திரத்தில் 40 நாட்கள் இயேசு கிறிஸ்து சாத்தானால் சோதிக்கப்பட்ட (பார்க்க லூக்கா 4:1-13) சோதனையானது புதிய ஏற்பாட்டில் கவனிக்கத்தக்கதொரு ஆவிக்குரிய போராட்டமாகும். இயேசுவை பாவம் செய்யும்படித் தூண்டி தேவனுடைய மீட்பின் திட்டத்தை அழிப்பதே சாத்தானுடைய வாஞ்சையாக காணப்பட்டது. எனினும், இயேசு உறுதியுடன் இருந்து சாத்தான் மீது வெற்றிகொண்டார். 40 நாட்கள் முடிந்தபோது தான் தோற்றுப்போனதை சாத்தான் உணர்ந்துகொண்டு இயேசுவை விட்டு சில காலம் நீங்கினான்.

அவருடைய ஊழியம் முழுவதிலும், அவர் இன்னும் அநேக ஆவிக்குரிய போராட்டங்களுக்கு முகங்கொடுத்தார். இயேசு சிலுவையில் முகங்கொடுத்த சோதனை அவையெல்லாவற்றினதும் உச்சகட்டமாகும். இயேசு “சிலுவையை சகித்தார்” என எபிரெயர் 12:2 கூறுகிறது. இயேசு சிலுவையில் விடாமுயற்சியுடன் காணப்பட்டு முழு மனுகுலத்திற்கும்

இரட்சிப்பைக் கொண்டு வந்தார். கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் அநேக ஆவிக்குரிய போராட்டங்களுக்கும் சோதனைகளுக்கும் முகங்கொடுக்க நேரிடலாம் ஆனாலும் நாம் விடாமுயற்சியுடன் இருப்போமேயானால் கிறிஸ்து பெற்ற வெற்றியை நாமும் அனுபவிக்கமுடியும்.

**விடாமுயற்சி மூலமாக வளர்ச்சி**

விடாமுயற்சி செய்வதன் அவசியத்திற்கான இரண்டாவது காரணம் என்னவெனில், அது நல்ல குணாதிசயத்தையும் நற்பண்புகளையும் நமது வாழ்க்கையில் வளர்க்கின்றதாயிருக்கின்றது. நாம் கிறிஸ்தவர்களாகும்போது தேவன் நமது வாழ்க்கையில் தூய்மைப்படுத்தும் படிமுறையை ஆரம்பிக்கின்றார். நம்முடைய வாழ்க்கையில் உள்ள சகல அசுத்தங்களையும் அகற்றி அவருடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக நம்மை வடிவமைக்கின்றார். இதனை தேவன் நம்முடைய வாழ்க்கையில் சோதனைகளை அனுபவிக்கும்படி அனுமத்தித்தலினூடாக பூரணப்படுத்துகின்றார்.

ரோமர் 5:3,4 இல்பவுல் இவ்வாறு கூறுகின்றார், "அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்" என்று எழுதினார். விடாமுயற்சியின் நன்மைகளைக் குறித்து யாக்கோபும் இவ்வாறு கூறியுள்ளார்: "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாய் எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது" (யாக்கோபு 1:2-4).

உபத்திரவங்களும் பாடுகளும் எவை முக்கியமானவை என்பதை நமக்குக் காண்பிக்கின்றது. அவைகள் நித்தியமானவைகள் எவை என்பதையும் அநித்தியமானவைகள் எவை என்பதையும் பார்க்கும்படி நம்முடைய கண்களை திறக்கின்றது. நாம் கடந்துபோய்க்கொண்டிருக்கும் கடினமான இடங்கள் நமக்கு பரலோகத்தைக் குறித்த நம்பிக்கையை மென்மேலும் மெய்ப்பிக்கின்றது. ரோமர் 8 இல் பவுல் இதை விபரிக்கிறார். 21-23 ஆம் வசனங்களில் சர்வ சிருஷ்டியும் கட்டுக்களிலிருந்து விடுதலையாகும்படிக்கு ஏகமாய்த் தவித்து பிரசவவேதனைப்படுகின்றது என்பதை அவர் முன்வைக்கின்றார். சிருஷ்டிப்பு மாத்திரம் தவிக்கவில்லை ஆனாலும் நாமும்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்கு காத்திருந்து நமக்குள்ளே தவிக்கின்றோம் எனக் கூறுகின்றது. இந்த நம்பிக்கையை நாம் இரட்சிக்கப்பட்டபோது பெற்றுக்கொண்டதோடு "அது வருகிறதற்கு பொறுமையுடன் காத்திருப்போம்" (ரோமர் 8:25). அதனாலேயே நாம் விடமுயற்சியுடன் காணப்படுகின்றோம்.

நீங்கள் சந்திக்கின்ற நன்றாக முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்கள் கடினமான அனுபவங்களுக்கூடாக கடந்துசென்றவர்களாவர். சிலவேளைகளில் அவர்கள் நீண்ட கால நோய், அன்புக்குரிய ஒருவரின் மரணம், பொருளாதார நெருக்கடி, ஒரு பெரிய வீழ்ச்சி, அல்லது அவர்களுடைய விசுவாசத்தினிமித்தம் சந்திக்க நேரிட்ட உபத்திரவங்கள் இவற்றின் மத்தியிலும் அவர்கள் உண்மையுள்ளவர்களாயும் சகிப்புத்தன்மையுள்ளவர்களாயும் இருந்தனர். மேலும், அவர்களிடத்தில் ஒரு இனிய ஆவி, தேவபக்தியுள்ள குணாதிசயம், மற்றும்

உற்சாகமுள்ள விசுவாசம் இப்போதும் உள்ளது. தேவன் அவர்களுடைய வாழ்க்கையில் கிரியை செய்து உபத்திரவ நேரங்களில் கிறிஸ்துவைப்போன்ற குணாதிசயங்களை அவர்களில் உருவாக்குகிறார் என்பதற்கு இவைகளே சாட்சிகளாகும்.

உபத்திரவங்களையும் பாடுகளையும்நாம் விரும்பாமலிருக்கலாம் என்றாலும், வெற்றிக்காகவும் தேவன் நமக்குள் அவருடைய சிறப்பு பண்புத் தரங்களை வளர்ப்பதற்கும் நாம் நிச்சியமாக விடாமுயற்சியுடன் இருக்கவேண்டும். தேவனுக்கு அவசியமான தனித்துவமான பண்புத் திறனைநமக்குள் வளர்ப்பதற்கு நேரம் தேவைப்படுகின்றது. அதனால், நாம் பொறுமையாயிருந்து தேவன் தம்முடைய வேலையை நமக்குள் பூரணப்படுத்துவதற்கு நாம் இடங்கொடுக்க வேண்டும்.

## விடாமுயற்சிக்கான உந்துவிசை

## *நோக்கம் 3:*

*விடாமுயற்சிக்கு உந்துவிசையாகவுள்ள காரணியை விபரித்தல்.*

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்காக உபத்திரவங்களைப் பொறுமையுடன் தாங்கிக்கொள்ள காரணமாயிருப்பது எது? தேவன் அவர்களைக் கைவிட்டார் என்று தோன்றும்போதும் எது அவர்களை தொடர்ந்தும் தேவனை சேவிக்கச் செய்கிறது? அநேக தடைகள் காணப்பட்டபோதும் கிறிஸ்தவர்கள் வாக்குத்தத்தங்களைப் பிடித்திருக்க காரணமாயிருப்பது எது? கிறிஸ்தவர்கள் விடாமுயற்சியுடன் இருக்க எது அவர்களை தூண்டுகின்றது? ஒருவருக்கு தேவன் மீது உள்ள அன்பே விடாமுயற்சிக்கான மிகப்பெரிய தூண்டுதல் அல்லது உந்துவிசையாகும். நாம் தேவன் மீது கொண்டுள்ள அன்பின் அடிப்படையிலேயே நம்முடைய பொறுமையின் ஆழமும் அதன் உண்மையும் தங்கியுள்ளது. தேவன் மீதுள்ள அன்பு எவ்வளவு ஆழமோ அவ்வளவிற்கு நம்முடைய விடாமுயற்சியும் பெரியதாயிருக்கும்.

### தேவன் நம்மில் முந்தி அன்புகூர்ந்ததாலேயே நாம் தேவனில் அன்புகூருகிறோம்

தேவன் நம் மீது வைத்துள்ள அதிகமான அன்பையும் நம்முடைய இரட்சிப்புக்காக தேவன் செலுத்திய கிரயத்தை நாம் புரிந்துகொண்டு அதை பற்றிக்கொள்ளுவோமெனில், நாம் அதற்கு மாறுத்தரம் காண்பிக்கும் விதமாக அன்பையும் விடாமுயற்சியையும் காண்பிப்போம். சிமிர்னாவின் தலைமைகுருவான பொலிகார்ப் என்பவர்அப்போஸ்தலர் யோவானுக்கு கீழ் ஒரு மாணவனாக இருந்தவராவார். பொலிகார்ப் 60 வருடங்களாக சின்ன ஆசியாவில் வல்லமையாக ஊழியம் செய்தவராவார். கி.பி156 இல் கிறிஸ்தவர்களுக்கு எதிராக உபத்திரவம் தீவிரமடைந்தது. பொலிகார்ப் சபையை உபத்திரவப்படுத்துகிறவர்களின் இலக்கானார். எண்பத்தாறு வயதில் பொலிகார்ப் கைதுசெய்யப்பட்டார். தேவனை மறுதலிக்கும்படிக்கும் சீசருடைய தெய்வீகத்தன்மை மீது ஆணையிடும்படிக்கும் அவரை நெருக்கின ஆளுனருக்கு முன்பாக அவர் கொண்டு செல்லப்பட்டார். பொலிகார்ப் அவ் ஆளுனருக்கு பிரதியுத்தரமாக “எண்பதும் ஆறு வருடங்களாக நான் அவருடைய ஊழியக்காரனாயிருக்கிறேன் அவர் எனக்கு எந்த குற்றமும் புரியவில்லை. என்னை இரட்சித்த இராஜாவுக்கு எதிராக நான் எவ்வாறு தேவதூஷணம் சொல்லுவேன்?” என்றார் (பொலிகார்பின் இரத்தசாட்சி 9:12-9:13). பொலிகார்ப் கிறிஸ்துவின் மீதான விசுவாசத்தை

அறிக்கை செய்வதில் அசையாமல் உறுதியுடன் நின்றார். இதனால் அவர் ஆபத்தான முறையில் எரிக்கப்படும்படி தண்டனை வழங்கப்பட்டார்.

கிறிஸ்துவின் மீதுள்ள அன்பு அவர் எதைக் கேட்டாலும் அதை செய்யும்படி நம்மைத் தூண்டுகின்றது. ஒரு இளம் சீமானுடைய கதை இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வாலிப சீமானுடைய பெயர் நிகோலஸ் லுட்விங் வொன் சின்சென்டோர்ப். இவர் விட்டென்பேர்க் பல்கலைக்கழக பட்டப்படிப்பின் பின் ஐரோப்பாவுக்கு சுற்றுலா செல்லும்படி கப்பல் ஏறினார். அவர் டசுல்டொர்ப் என்ற இடத்திலுள்ள கலை அருங்காட்சியகமொன்றிற்கு சென்றிருந்தபோது அங்கே “மனிதனே கவனி” என்று தலைப்பிடப்பட்ட ஒரு ஓவியத்தைக் அவர் கண்டார். அவ் ஓவியமானது முள்முடி சூட்டப்பட்ட கிறிஸ்துநாதர் பார்வையாளர்களை உற்றுப்பார்ப்பதுபோல காட்சியளித்தது. “உனக்காக நான் இதை செய்தேன்; எனக்காக நீ என்ன செய்தாய்?” என்ற வசனம் படத்திற்குக் கீழே காணப்பட்டது. “நான் அநேக வருடங்களாக இவரை நேசித்தேன் ஆனாலும் நான் நிச்சயமாகவே அவருக்காக எதுவும் செய்வில்லை எனசின்சென்டோர்ப் சிந்தித்தார். இப்பொழுதிலிருந்து அவர் என்ன செய்யும்படி என்னை வழிநடத்துகிறாரோ நான் அப்படியே செய்வேன் என்றார்.” அன்றிலிருந்து அந்த வாலிப சீமான் சின்சென்டோர்ப் ஒரு பெரிய கிறிஸ்தவ தலைவரானார் உலகமெங்கும் பேரெண்ணிக்கையிலான மிஷனரிகளை அனுப்பிய மொரேவிய இயக்கத்தை இவர் ஆரம்பித்தார்.

ஒன்று கொரிந்தியர் 13:7-8 கூறுகிறது “அன்பு சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும், அன்பு ஒருகாலும் ஒழியாது.” நாம் கிறிஸ்துவை நேசித்தால், இந்த அன்பு எப்பேர்ப்பட்ட கஷ்டங்கள் வந்தாலும் அதை ஒரு பொருட்டாக எண்ணாதபடி தொடர்ந்து செல்ல நம்மைத் தூண்டும். அது எவ்வாறான கடினமான காரியமாக இருந்தாலும் சரி அவருக்காக அதை தாங்கிக்கொள்ள நம்மை தூண்டுகின்றது.

## விடாமுயற்சிக்கான தடைகள்

### *நோக்கம் 4:*

*விடாமுயற்சியை தடைசெய்யும் காரணத்தை குறிப்பிடுதல்.*

நாம் பார்த்தபடி, எல்லாக் கிறிஸ்தவர்களும் ஒரு சந்தர்ப்பத்தில் பாடுகளுக்கும், கடுந்துன்பங்களுக்கும், உபத்திரவங்களுக்கும் முகங்கொடுக்கின்றனர். சிலர் விடாமுயற்சியுடன் காணப்படுகின்றனர். சிலர் அவ்வாறு இல்லை. இப்பொழுது நாம் விடாமுயற்சியை தடைசெய்யும் காரணங்களுக்கு நேராக நம்முடைய கவனத்தை செலுத்துவோம்.

#### அறிக்கையிடப்படாத பாவம்

தங்கள் வாழ்க்கையில் இருக்கும் பாவத்தின் நிமித்தம் சில கிறிஸ்தவர்கள் விடாமுயற்சியுடன் காணப்படுவதில்லை என்பது தெளிவான காரணமாகும். இரண்டு எஜமான்களுக்கு நாம் ஊழியம் செய்யமுடியாதென இயேசு கூறினார். ஏனெனில், நாம் ஒருவரை அன்புசெய்து மற்றவரை வெறுப்போம். கிறிஸ்து மீதான அன்பு

நாம்விடாமுயற்சியுடன் காணப்படும்படி நம்மைத் தூண்டுகின்றது. கிறிஸ்துவுக்கு பதிலாக நம்முடைய பற்றானது சரீர மற்றும் இவ்வுலக சந்தோஷங்களின் மீது இருக்குமானால், அது நம்முடைய விடாமுயற்சியை தடைசெய்யும். நாம் விடாமுயற்சியுடன் இருப்பதற்கு நிச்சயமாக பரிசுத்த வாழ்வு வாழ வேண்டும்.

## உலகப்பொருட்கள் மீதான பற்று

பாவத்துடன் நெருங்கிய தொடர்புடைய உலகபொருட்கள் மீதான ஆசையானது விடாமுயற்சிக்கான மற்றுமொரு தடையாக காணப்படுகின்றது. சில மனிதர்கள் பதவிக்காக, சொத்துக்கள் மற்றும் உடமைகளுக்காக அல்லது பொருளாதார தேவைகளுக்காக தேவனுடைய ஊழியத்தை கைவிட்டுவிடுவார்கள். தேமா தொடர்பாக பவுல் தீமோத்தேயுவுக்கு இவ்வாறு எழுதுகிறார்: “ஏனென்றால் தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, என்னை விட்டு பிரிந்து தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான்” (2 தீமோத்தேயு 4:10). ஒரு காலத்தில் தேமா பவுலின் உடன் வேலையாட்களில் ஒருவனாக பட்டியலில் காணப்பட்டான் (பிலேமோன் 24). ஆகிலும் தேமா உலகத்தின்பால் இழுக்கப்பட்டு தேவனுடைய ஊழியத்தைவிட்டு வேறுபிரிந்தான்.

## தீர்க்கப்படாத அதைரியம்

தீர்க்கப்படாத அதைரியம் மற்றுமொரு தடையாகும். காலத்துக்குக் காலம் ஒவ்வொருவரும் அதைரியப்படுவர். இது குறுகிய கால அதைரியமாயிருக்கலாம். சில நிமிடங்கள் அல்லது சில மணித்தியாலங்களுக்கு மாத்திரம் நிலைத்திருக்கலாம்; அல்லது அது இன்னும் தீவிரமாக அநேக நாட்களுக்கு நீடித்திருக்கலாம். எவ்வாறாயினும், அதைரியம் சில நாட்களுக்கும் அப்பால் நீளுமாயின் ஒருவர் இந்த சோர்வைக் குறித்தும் அதை அற்பமாக எண்ணாதபடிக்கும் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டியது அவசியமாகும்.

நாம் தொடர்ந்தும் இந்த அதைரியம் அல்லது நம்பிக்கையை இழந்து மனமுரிவுடன் இருப்பது தேவனுடைய விருப்பம் அல்ல. நாம் ஏற்கனவே பார்த்தபடி, தேவன் நம்மை தூய்மைப்படுத்தும்படிக்கும், வளரக்கும்படிக்கும் உபத்திரவங்களை பயன்படுத்துகின்றார். ஆனாலும் சாத்தான் நம்மை அதைரியப்படுத்தும்படிஉபத்திரவங்களை பயன்படுத்துகிறான். அதைரியம் சாத்தானுடைய ஒரு கருவியாகும். சங்கீதம் 73 இல், தேவனால் அபிஷேகம்பண்ணப்பட்ட மனிதனாகிய ஆசாப், துன்மார்கரின் செழிப்பைக் கண்டு அவர் எவ்வாறு அதைரியமடைந்தார் என்பதை காண்பிக்கின்றார்.தேவனை புறக்கணிப்பவர்களுடைய சௌகரியமான வாழ்வைக் காணும்போது என் அடிகள் சறுக்குதலுக்கும் சற்றே தப்பிற்று எனக் கூறினார். தேவனை சேவிப்பதற்காக தான் எடுத்த முயற்சியானது பயனற்றது என்பதை உணர்ந்ததாக காண்பிக்கின்றான். ஆகிலும் அவர் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து, துன்மார்கரின் முடிவைக் குறித்து அறிந்துகொண்டார். துன்மார்கர் சந்தோஷித்து அனுபவிக்கும் செழிப்பு தற்காலிகமானது என்பதை உணர்ந்துகொண்டார். அவர் தேவனுடைய சமூகத்தில் இருந்ததால்அது அவருடைய சூழ்நிலையை ஒரு புதிய கோணத்தில் பார்க்கும்படி அவருக்கு உதவிசெய்தது.

கஷ்ட நேரங்களில் அதைரியத்தைக் கொண்டுவரும் காரியங்களிலிருந்து மனதை பாதுகாத்துக்கொள்ளவும் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு நேராக மனதை செலுத்தவும்

மிகவும் கஷ்டமாகவும் நெருக்கடியாகவும் இருக்கும். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நமக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி நாம் விடாமுயற்சியுடன் இருக்கும்படி நமக்கு உதவிசெய்கின்றது.

## விடாமுயற்சியுடன் இருப்பது எப்படி

### *நோக்கம் 5:*

*விடாமுயற்சி செய்வதற்காக எமக்கு உதவிசெய்யும் தேவனுடைய வளங்களை இனம்காணல்.*

---

கிறிஸ்தவர்களின் விடாமுயற்சியானது கிறிஸ்தவர்கள்-அல்லாதவர்களின் விடாமுயற்சியைப் பார்க்கிலும் வித்தியாசமானது. கிறிஸ்தவர்-அல்லாதவர்கள் பிரச்சனைகளை முகமுகமாய் சந்திக்கும்போது அவர்கள் தங்கள் தனிப்பட்ட வெகுமதிகள் மற்றும் நோக்கத்திற்காகவே விடாமுயற்சி செய்கின்றனர். ஒவ்வொரு நபருக்கும் அவனுக்கு அல்லது அவளுக்கு அதை எவ்வளவு கையாள முடியுமென்பதற்கு ஒரு வரையரை உண்டு. கிறிஸ்தவர்களாக நமக்கு தனிப்பட்ட நோக்கத்திற்கும் மேலாக ஒன்று உண்டு; நாம் விடாமுயற்சி செய்யும்படி நமக்கு உதவிசெய்யும்படியாக பரலோக வளங்கள் உண்டு.

**<u>விசுவாசத்தை பயிற்சிசெய்தல்</u>**

விடாமுயற்சிக்கு நமக்கு விசுவாசம் அவசியமாயிருக்கின்றது. எபிரெயர் 11:1 கூறுகிறது, "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது." விசுவாசிகளுக்கு விடாமுயற்சி செய்வதற்கு எது உதவிசெய்கின்றது? சந்தர்ப்ப சூழ்நிலைகள் கடினமாக இருப்பினும் அச்சூழ்நிலை மாறுவதற்கான எவ்விதமான வெளிப்பிரகாரமான சாட்சிகள் ஏதும் இல்லாதபோதும் காரியங்கள் மாறும் என தேவன் மீது அவர்களுக்கு விசுவாசம் காணப்படுகின்றது. சாதாரணமாக தேவனின் குணாதிசயத்தின்மீதும் அவருடைய சுபாவத்தின்மீதும் நம்பிக்கை வைப்பதே விசுவாசமாகும். அது தேவன் பரிசுத்தர், நீதியுள்ளவர், அன்புள்ளவர், உண்மையுள்ளவர் மற்றும் அவருடைய வாக்குத்தத்தங்களில் உண்மையுள்ளவர் என்பதை நம்புதல் ஆகும். விசுவாசம் உலகத்தை ஜெயிக்கச் செய்கிறது (1 யோவான் 5:4)

மிகப்பெரிய பாடுகளை தங்களுடைய விசுவாசத்தினால் மேற்கொண்ட அநேக வேதாகம கதாபாத்திரங்களைக் குறித்து எபிரெயர் 11 இல் பட்டியலிடப்பட்டுள்ளது. பேழையை கட்டி முடிக்கும் அந்த 120 வருடங்களளவும் நோவா விடாமுயற்சியுடன் இருக்க விசுவாசம் அவருக்கு உதவிசெய்தது. வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மகனை பெற்றுக்கொள்ளுவதற்கு முன்னிருந்த 25 வருடங்கள் ஆபிரகாமை விடாமுயற்சியுடன் காத்திருக்கச்செய்தது இந்த விசுவாசமாகும். தேவனுடைய ஜனங்களை எகிப்திய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கி வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்குள் அவர்களை விடாமுயற்சியுடன் நடத்திச்செல்லுவதற்கு மோசேக்கு உதவியதும் இந்த விசுவாசமே. அவ் அதிகாரமானது பெயர் குறிப்பிடப்படாத விசுவாசத்தினால் மாபெரும் வெற்றியைக் கண்ட ஜனங்களின் பட்டியலுடன் நிறைவுசெய்யப்பட்டுள்ளது. தேவன் தங்களுக்கு செய்த வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலை காணாத ஏனைய நபர்களும் விடாமுயற்சியுடன் இருப்பதற்கு அதே விசுவாசம்

அவர்களுக்குஉதவிசெய்தது. தேவன் தங்களுக்காக நன்மையானதை வைத்துள்ளார் என்பதை அவர்கள் அறிந்ததன் காரணமாகவேஅவர்கள் விடாமுயற்சியுடன் காணப்பட்டனர்.

## தேவனுடைய வார்த்தை

தேவனுடைய வார்த்தை நம்மை கட்டியெழுப்புவதாகவும் நம்மை தைரியப்படுத்துவதாகவும் இருக்கின்றது. ரோமர் 10:17 கூறுகிறது, "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்." நாம் விடாமுயற்சியுடன் இருக்கவேண்டுமெனில், நாம் தேவனுடைய வார்த்தையைக் கற்றுக்கொள்ளவேண்டும். நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களை அறிந்திருப்பது அவசியமாகும். வனாந்திரத்தில் இயேசு சாத்தானுடைய சோதனைகளை விடாமுற்சியுடன் மேற்கொண்டது தேவனுடைய வார்த்தையின் வல்லமையினாலேயே ஆகும். தேவனுடைய அதே வார்த்தை நாம் வெற்றிபெறுவதற்குநமக்கு உதவிசெய்யகூடியதாயிருக்கிறது.

வேதாகமமானது தேவன் தம்மைக் குறித்து வெளிப்படுத்திய வெளிப்பாடாகும். நாம் வேதாகமத்தை வாசிக்கும்போது, நாம் தேவனுடைய குணாதிசயத்தைக் குறித்தும் அவருடைய சுபாவத்தைக் குறித்தும் ஒரு நல்ல புரிந்துணர்வை பெற்றுக்கொள்கின்றோம். தேவன் நல்லவர் என்பதையும் அவர் தமது வாக்குத்தத்தங்களுக்கு உண்மையுள்ளவர் என்பதையும் தேவனுடைய வார்த்தை காண்பிக்கின்றது. நாம் முகங்கொடுக்கும் காரியம் எதுவாயிருந்தாலும் தேவன் நம்மை காண்கின்றார் என்ற நம்பிக்கை தேவனுடைய வார்த்தையின் மூலம்நாம் கண்டுகொள்ளமுடியும்.

## கிறிஸ்தவ ஐக்கியம்

தேவனுடைய ஜனங்களோடு ஏற்படுத்தும் ஐக்கியமும் நாம் விடாமுயற்சி செய்வதற்கு நமக்கு உதவிசெய்கின்றது. எபிரெயர் 10:25 கூறுகிறது, "சபை கூடிவருதலை சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்." இந்த ஆலோசனையானது பல்வேறு இன்னல்களின் மத்தியில் கடந்து சென்று கொண்டிருந்தவர்களுக்காகவே கொடுக்கப்பட்டிருக்கிறது. 10 ஆம் அதிகாரத்தில் எபிரெயருக்கு எழுதியவர் அவர்கள் சகித்துக்கொண்ட பாடுகளையும் உபத்திரவங்களையும் குறித்து சபையோருக்கு ஞாபகப்படுத்துகிறார். "ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள். நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" (எபிரெயர் 10:35-36) என்று எழுதினார்.

கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளிடமிருந்து நாம் பெலனையும் தைரியப்படுத்தலையும் பெற்றுக்கொள்ளுவது விடாமுயற்சி செய்வதற்கான ஒரு வழியாகும். இது சபையின் செயற்பாடுகளில் ஒன்றாகும். நாம் ஒருவரிடமிருந்து மற்றவர் தைரியத்தைப் பெற்றுக்கொள்ளுகிறோம். மற்றவர்களுடைய வாழ்க்கையில் தேவன் தம்முடைய வல்லமையையும் உண்மையையும் எவ்வாறு காண்பித்தார் என்பதை நாம் கேட்கிறோம், நாம் ஒன்றாக சேர்ந்து ஜெபிக்கிறோம், நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்கிறோம். இவை அனைத்துமே விடாமுயற்சி செய்வதற்கு நமக்கு உதவி செய்கின்றது.

**பரிசுத்த ஆவியின் வல்லமை**

இயேசு சிலுவைக்கு செல்லுவதற்கு சற்று முன்னதாக, அவர்களை திக்கற்றவர்களாக விடமாட்டார் என்றும் அவர்களுக்கு ஒரு தேற்றரவாளனாகிய, பரிசுத்த ஆவியானவரைத் தருவதாக சீஷர்களுக்கு வாக்குப்பண்ணினார். “ஒருவர்கூடவே துணையாக இருக்கிறார்” என்பதே *தேற்றரவாளன்* என்ற வார்த்தையின் மெய்யான அர்த்தம். நமக்கு உதவி செய்யும் திரித்துவத்தின் மூன்றாம் நபரான பரிசுத்த ஆவியானவர் நம்மை பெலனடையச் செய்வதோடு, நாம் கடும்வேதனைகள் மற்றும் உபத்திரவங்களின் மத்தியில் கடந்துசெல்லும்போது நம்மை தேற்றுகிறார். அவரை நாம் சார்ந்திருக்கும்போது நம்மால் விடாமுயற்சி செய்யமுடியும்.

## விடாமுயற்சிக்கான வெகுமதிகள்

### *நோக்கம் 6:*

*விடாமுயற்சியுடன் காணப்படுபவர்களுக்கான வெகுமதிகளை பெயரிடுதல்.*

கொரிந்தியர்களுக்கான தனது நிரூபத்தின் இறுதியில், பவுல் தனது வாசகர்களை விடாமுயற்சியுடன் இருக்கும்படியாக வேண்டிக்கொள்ளுகிறார். “ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக” என்று அவர் எழுதுகிறார் (1 கொரிந்தியர் 15:58). இங்கே தேவனுக்காக நாம் எதைச் செய்தாலும் அது பெறுமதிமிக்கதாகும். நாம் விடாமுயற்சியுடன் காணப்படும் நேரங்களையும் இது உள்ளடக்குகிறது. நாம் செய்கின்ற அனைத்து காரியங்களினதும் ஒரு அறிக்கையை தேவன் வைத்துள்ளார் என்பதுடன் விடாமுயற்சியுடன் இருப்பவர்களுக்கு வெகுமதிகள் உண்டைன்பதைக் குறித்து வேதாகமம் மிகத் தெளிவாக குறிப்பிடுகின்றது.

ஆசியாவிலுள்ள ஏழு சபைகளைக் குறித்த இயேசுவினுடைய மதிப்பீடானது வெளிப்படுத்தின விசேஷம் 2-3 அதிகாரங்களில் உள்ளது. ஒவ்வொரு சபையினதும் கிரியையை இயேசு அறிந்திருந்தார். ஏழு சபைகளில் ஐந்து சபைகளானது எவ்வெவற்றில் குறைவுபட்டிருந்ததென்பதையும் அவர் அறிந்திருந்தார். ஆனாலும் ஜெயம்கொள்ளுகிற அல்லது விடாமுயற்சியுடன் காணப்படுகின்ற ஒவ்வொரு சபைக்கும் வெகுமதி இருப்பதாக வாக்குப்பண்ணியுள்ளார்.

நீங்களும் விடாமுயற்சியுடன் காணப்படுவீர்களானால் கீழ்க்காணும் வெகுமதிகளை எதிர்பார்க்கலாம்.

**தேவனுடைய வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதல்கள்**

எபிரெயரின் எழுத்தாளர் நம்மை இவ்வாறு உற்சாகப்படுத்துகிறார், “நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது” (எபிரெயர் 10:36). விசுவாசத்தில் உறுதியாய்

தரித்திருத்தலே தேவனுடைய வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதல்களைக் காணக்கூடிய ஒரே வழியாகும்.

## ஆசீர்வதிக்கப்பெற்ற தன்மை

விடாமுயற்சி செய்பவர்களுக்கான இன்னொரு ஆசீர்வாதம் என்னவெனில் அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகவே எண்ணப்படுவர். "இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே" என்று யாக்கோபு எழுதுகிறார் (யாக்கோபு 5:11). ஒரு சிறந்த மொழிபெயர்க்கப்பட்ட வேதாகமம் இவ்வாறு குறிப்பிடுகின்றது அதாவது, ஆசீர்வாதம் என்று கருதப்படும்போது அது "சந்தோஷம்," "மெய்யான அதிர்ஷ்டம்" அல்லது "ஆவிக்குரிய ரீதியில் செழிப்பு." வேறு வார்த்தைகளில் கூறினால் நீங்கள் சந்தோஷமாக, அதிர்ஷ்டசாலிகளாக, ஆவிக்குரிய ரீதியில் செழிப்புள்ளவர்களாக இருக்கவேண்டுமெனில், நீங்கள் கட்டாயமாக விடாமுயற்சியை நடைமுறையில் செய்முறைகள் மூலம் நிரூபித்துக் காண்பிக்கவேண்டும்.

## ஒரு வல்லமையான செல்வாக்கு

நாம் விடாமுயற்சி செய்தால், நாம் மற்றவர்களுடைய வாழ்க்கையில் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்துவோம். பவுல் தீமோத்தேயுவுக்கு, "நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக்கொண்டிரு, இவைகளிலே நிலைத்திரு. உன்னைக்குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்" என்று எழுதுகிறார் (1 தீமோத்தேயு 4:15-16). அநேக மக்கள் நம்மை சார்ந்திருக்கிறபடியால் நாம் செய்யும் எல்லாமே ஒரு தாக்கத்தை விளைவிக்கின்றதாயிருக்கின்றது.அது மற்றவர்கள் மீது உடன்பாடான அல்லது எதிர்மாறான இரண்டில் ஒன்றாயிருக்கலாம்.

பவுல் சிறையில் இருந்துகொண்டு பிலிப்பியர் சபைக்கு எழுதும்போது, அவருடைய சிறைவாசம் மற்றவர்களை தைரியப்படுத்தும் என்று எழுதுகின்றார். "சகோதரரில் அநேகர் என் கட்டுகளாலே கர்த்தருக்குள் திடன்கொண்டு பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள்" என்று எழுதுகிறார் (பிலிப்பியர் 1:14). பவுல் உறுதியுடன் நின்றதால் மற்றவர்களும் அப்படிச் செய்யத் துணிந்தனர்.

## கிறிஸ்துவுடன் ஆளுகை செய்தல்

மிகவும் முக்கியமானது, நாம் விடாமுயற்சி செய்தால் கிறிஸ்துவுடன் ஆளுகையும் செய்வோம். இரண்டு தீமோத்தேயு 2:11-12, "இந்த வார்த்தை உண்மையுள்ளது; என்னவெனில், நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்; அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்." பாடுகள் அல்லது இரத்தசாட்சியாக மரிக்கும்போதுகூட விடாமுயற்சியுடன் இருப்பவர்கள் இவையெல்லாவற்றையும் தாண்டி இயேசுவைக் காணும்

அந்த நாளை எதிர்பார்த்துக்கொண்டிருப்பர். நித்தியகாலமாக இயேசுவோடுகூட இருக்கப்போகின்றோம் என்ற எதிர்பார்ப்பும் புரிந்துணர்வும் விடாமுயற்சியுடன் இருப்பதற்கு நம்மை உற்சாகப்படுத்துகின்றது. "உண்மையும் உத்தமமுள்ள ஊழியக்காரனே. உன் எஜமானின் சந்தோஷத்திற்குள் பிரவேசி." என தேவனைக் காணும்போது அவர் சொல்லக்கேட்டக் கிடைத்தலே எல்லாவற்றிற்கும் மேலான வெகுமதியாகும்.

## முடிவுரை

கிறிஸ்தவ வாழ்க்கையில் வெற்றிபெறுவதற்கு விடாமுயற்சி தேவைப்படுகின்றது. பொதுவாக சாத்தானும் வாழ்க்கையும் தேவனை சந்தேகப்படுவதற்கும் அவரை விட்டுவிடுவதற்கும் அநேக சந்தர்ப்பங்களையும் காரணங்களையும் முன்வைக்கின்றன. அத்தருணங்களில், ஒவ்வொரு கிறிஸ்தவனுக்குமான தேவனுடைய இலக்கு வெற்றி என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். அவருடைய சித்தத்தை நாம் செய்வதற்கு தேவன் நமக்கு பரலோக வளங்களை அளித்துள்ளார். விடாமுயற்சி செய்யகின்ற எவருக்கும் வெகுமதியளிக்கப்படும் ஒரு நாளும் உண்டு.

## குறிப்புப் பட்டியல்

"The Martyrom of Polycarp or Letter of the Smyrnaeans." Appostolic Fathers (Lightfoot). Wesley Centre for Applied Theology. Nampa, ID. Accessed July 2, 2007, http://wesley.nnu.edu/bibilical_studies/noncanon/fathers/ante-nic/polycarp/polmart.htm

## மனனம் செய்வதற்கு ஆலோசிக்கப்பட்ட வசனங்கள்

ரோமர் 5:3-4

1 கொரிந்திரயர் 15:58

1 தீமோத்தேயு 6:11-12

2 தீமோத்தேயு 2:11-12

2 தீமோத்தேயு 3:12

எபிரெயர் 10:36

எபிரெயர் 12:1-3

யாக்கோபு 1:2-4

1 பேதுரு 1:5-8

# பாடம் 5

## தேவனுடைய சரிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளல்

கிறிஸ்தவ சமூகத்தினரால் *விசுவாசம்* என்கின்ற வார்த்தையானது பலவித வித்தியாசமான முறைகளினால் அழைக்கப்படுகின்றது. அநேகமாக நாம் ஒருவரை பார்த்து அவருக்கு உறுதியான விசுவாசம் உண்டெனவும் அல்லது அவர் விசுவாசத்திற்குள் வந்திருக்கின்றார் என்றும் கூறுவதுண்டு. இந்த பாடத்தில் விசுவாசம் என்றால் என்ன, ஏன் அது மிகவும் இன்றியமையாதது என்றும் மற்றும் அதை எவ்வாறு பயன்படுத்துவது போன்ற விசுவாசத்தில் அடங்கியுள்ள முக்கியமான பகுதிகளைக் குறித்து ஆராய்ந்து பார்க்கப்போகிறோம். தேவன் மீதுள்ள விசுவாசத்தை புரிந்துகொள்ளுதல் வியக்கத்தக்க காரியங்களுக்குள் வழிநடத்தும்!

தேவன் தேவைக்கேற்றபடிதம்முடைய பிள்ளைகளைத் திருத்துகிறார், ஒழுக்கப்படுத்துகிறார். சரிப்படுத்தலானது சில மனிதர்களுக்கு குழந்தைப்பருவத்தில் மிதமிஞ்சிய தண்டனையின் வேதனையான ஞாபகங்களைக் கொண்டுவருகின்றது. சிலர் திருத்துதல் என்ற விடயத்தோடு போதும் போதாதாய் தொடர்புபடக் காரணம் பெற்றோர்கள் தங்களை மிகவும் குறைவாக திருத்தியபடியினாலாகும். மேலும் சிலர் தங்கள் பெற்றோர்களும் ஏனையவர்களும் தங்களில் நல்ல குணாதிசயத்தை உருவாக்க வேண்டுமென்ற இலக்கோடு ஞானத்துடனும் அன்புடனும் திருத்தினார்கள் என்பதை அறிந்தவர்களாய் நன்றியுள்ள இருதயத்தோடு அவற்றை திரும்பிப் பார்க்கின்றனர்.

கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்ட தருணத்திலிருந்து கிறிஸ்தவர்கள் மன்னிக்கப்பட்டதும் தேவனுடைய பார்வையில் நீதிமான்களாக்கப்பட்டதும் உண்மை. அவர்களுக்கும் தேவனுடைய சரிப்படுத்தல் அவசியமாகின்றது. ஏன்? நாம் கிறிஸ்துவைப்போலாக வேண்டும் என்று கடும் முயற்சிசெய்கிறோம் ஆனாலும், நம்மில் ஒருவரும் பாவமற்ற பரிபூரணத்தை இப்பூமியில் அடையமுடியாது. மேலும், நாம் இரட்சிக்கப்பட்ட பின்பும்கூட தவறிழைப்பது சாத்தியமான ஒன்றே. சில நேரங்களில் நாம் நமது அன்புக்குரியவர்களுக்கும், நண்பர்களுக்கும், உடன்-வேலையாட்களுக்கும், சபைக்கும் மற்றும் நமக்கும் தீங்கிழைக்கக்கூடிய மனோபாவத்தினதும் பழக்கவழக்கத்தினதும் கொள்கைகளை பிடிவாதமாக கடைபிடிக்கிறோம்.

சரிப்படுத்தலுக்கான அவசியத்தைக் குறித்து அநேகமாக, நம்மைவிட மற்றவர்களில் காண்பது மிகவும் இலகுவானதாகும். உதாரணமாக, பொதுவாக பெரியவர்கள் தங்கள் பிள்ளைகள் தவறாக நடக்கும்போது அவர்களை சரிப்படுத்துவது அவசியம் என்பதை கவனிக்கின்றனர். மற்ற பெரியவர்களிடமுள்ள தவறுகளையும் சீக்கிரமே நாம் கவனித்துவிடுகின்றோம். இதுபோலவே, நாம் நம்மிலுள்ள பலவீனங்களையும் குறைகளையும் உணர்வதற்கு முன் மற்றவர்கள் அதை சீக்கிரமே அறிந்துகொள்ளுகின்றனர். அதனால் எல்லோருக்கும் எப்பொழுதாவது சரிப்படுத்தல் அவசியமாகின்றது.

சூசன்னா வெஸ்லி, ஜோன் மற்றும் சார்ல்ஸ் வெஸ்லி என்பவர்களின் தாயாருக்கு மற்றவர்களை சரிப்படுத்தல் தொடர்பாக அநேக அனுபவங்கள் இருந்ததோடு அவள் பத்தொன்பது பிள்ளைகளைப் பெற்று அவர்களை வளர்த்து உருவாக்கினவளாவாள்.

பிள்ளைகளை வளர்த்து உருவாக்குவதைக் குறித்த அவளுடைய விசுவாசத்தை பகிர்ந்துகொள்ளும்படி ஜோன் கேட்டார். சூசன்னாவின் பதில் ஜோன் வெஸ்லியின் நாட்குறிப்பேட்டில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது:

> பிள்ளைகளின் மனதை உருவாக்குவதற்கு முதலாவது காரியமாக செய்யவேண்டியது அவர்களுடைய விருப்பத்தை வென்றுகொண்டு அவர்களை கீழ்ப்படியும் மனநிலைக்குக் கொண்டுவரவேண்டும். புரிந்துணர்வை அறிவித்தலானது காலத்தின் வேலையாகும் மற்றும் பிள்ளைகளுடன் மெதுவாகவும் படிப்படியாகவும் அவர்கள் தாங்கிக்கொள்ளக்கூடிய விதமாக செயற்படவேண்டும். ஆகிலும் விருப்பத்திற்கு கீழ்ப்படியப்பண்ணுதலை ஒரே தரத்தில் செய்யவேண்டும். சீக்கிரமாக செய்தல் மிகவும் நல்லது. (வெஸ்லி 1951,63)

பாடத்தின் இவ் அத்தியாயமானது குறிப்பாக பிள்ளைகளை திருத்துதலைக் குறித்து அல்ல என்றபோதும், இப்பாடத்தின் நோக்கம் வாலிபரை சரிப்படுத்துவதுபோல பெரியவர்களுக்குமானது என்பது உண்மையே. சுய-விருப்பம், மனித சுதந்திரம், மற்றும் தேவனுக்கு கீழ்ப்படிதல் ஆகியவை வயதை கவனத்திற்கொள்ளாது எல்லாராலும் தேடிப்பார்க்கவேண்டியதொன்றாகும். அதனால், தேவன் தம்முடைய ஜனங்களை திருத்தும் இந்த தொடர்ச்சியான செயல்முறைக்கு தம்மை தாமே ஈடுபடுத்திக்கொள்கின்றார். இவ் அத்தியாயத்தில்நாம் எபிரெயர் 12 ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் தெய்வீக ஒழுக்கப்படுத்தல் என்ற கற்பித்தலுக்கு நம்முடைய கவனத்தை ஒருமுகப்படுத்தப்போகிறோம்.

## பாடத்தின் முக்கிய அம்சங்கள்

தேவன் சரிப்படுத்தும் மக்கள்

சரிப்படுத்தலை அறிந்துகொள்ளுதல்

பாவத்தை அறிக்கை செய்தல்

சரிப்படுத்துவதற்கான நோக்கம்

சரிப்படுத்தலை பொறுமையுடன் தாங்கிக்கொள்ளுதல்

சரிப்படுத்துதலுக்கு கீழ்ப்படிதல்

சரிப்படுத்தலின் இலக்குகள்

## பாடத்தின் நோக்கங்கள்

*1. தேவனுடைய சரிப்படுத்தலின் இலக்கு யார் என்பதை இனம்காணல்.*

*2. தேவன் தம்முடைய பிள்ளைகளை சரிப்படுத்தும் வழிகளை இனம்காணல்.*

*3. பாவத்தை அறிக்கை செய்தலின் பங்கை கலந்துரையாடுதல்.*

*4. சரிப்படுத்தலுடன் தேவனுடைய அன்பு என்ன செய்கின்றதென்பதை விளக்குதல்.*

*5. சரிப்படுத்தலுக்கு ஆளாகும்போது பொறுமையுடன் தாங்கிக்கொள்ளும் பகுதிகளை விபரித்தில்.*

*6. சரிப்படுத்துதலுக்கு கீழ்படிவதற்கான முக்கியத்துவத்தை விளக்குதல்.*

*7. தாம் சரிப்படுத்துபவர்களுக்காக தேவன் வைத்துள்ள மூன்று இலக்குகளை இனம்காணல்.*

### தேவன் சரிப்படுத்தும் மக்கள்

### *நோக்கம் 1:*

*தேவனுடைய சரிப்படுத்தலின் இலக்கு யார் என்பதை இனம்காணல்.*

நம்மை சரிப்படுத்தும்போது தேவன் பெற்றோரின் இடத்தை எடுத்துக்கொள்கின்றார். எபிரேயர் 12:5 ஐ கவனியுங்கள், "அன்றியும்: என்மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே." இயேசுகிறிஸ்து மீதுள்ள விசுவாசத்தின் மூலம் மறுபடி பிறந்தவர்களாகிய தம்முடைய மக்களே தேவனுடைய சரிப்படுத்தலின் இலக்காகக் காணப்படுகின்றனர். தேவன் தனிப்பட்ட விதமாக தம்முடைய கவனத்தை உங்கள் மீது ஒருமுகப்படுத்தும்போது நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டிய சில சத்தியங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

- நீங்கள் அதை இலகுவாக எண்ணாதீர்கள்: சரிப்படுத்தலானது மிகவும் தீவிரமாக எண்ணப்படவேண்டியதொன்றாகும். அது ஒரு நபரை நிரந்தரமாக தவறு செய்வதிலிருந்து விலக்குவதற்கு உதவிசெய்யும்.

- உங்கள் மனதை அதைரியப்படுத்தாதீர்கள்: ஒரு கிறிஸ்தவனுக்கான தேவனுடைய சரிப்படுத்தலானது அவருடைய உக்கிரமான கோபத்திலிருந்து உண்டாகாது. சரிப்படுத்தல் என்பது புறக்கணிப்பு அல்ல. சரிப்படுத்தப்படும்போதுகிறிஸ்தவர்கள் அதைரியப்படக்கூடாது.

- கைவிட்டுவிடாதீர்கள்: இயேசுவினுடைய சீஷனாக இருப்பினும் சரிப்படுத்தப்படுதலின்போது கைவிட்டுவிடும்படியான சோதனைகள் வரலாம். அவன் அல்லது அவள் சிடுசிடுப்புடனிருப்பது தேவனுக்கு வேண்டியதல்ல. மனிதனுடைய பரிபூரணமற்ற தன்மைக்கு முன்பதாக தேவனை நம்புவதை உங்கள் இலக்காக்கிக்கொள்ளுங்கள்.

- உங்கள் இரட்சிப்பை சந்தேகிக்காதீர்கள்: தேவனால் சரிப்படுத்தப்படும் ஒரு நபர் சிலவேளை அவன் அல்லது அவள் இன்னும் தான் தேவனின் குடும்பத்தில் ஒரு அங்கத்தினனா என்பதை குறித்து வியப்படையலாம். சாத்தான் தேவனுடைய மக்களைக் குற்றப்படுத்துபவன். அத்துடன் கிறிஸ்தவ வாழ்க்கையில் அழிவு உண்டாக்கக்கூடிய இந்த சந்தர்ப்பத்தை தனக்கு சாதகமாக்கிக்கொள்ளலாம்.

- உங்கள் நம்பிக்கையை இழந்துவிடாதீர்கள்: அநேக மக்கள் தாங்கள் எவ்வளவு நல்லவர்கள் என்பதை நிரூபிக்கப் பார்க்கின்றனர் மற்றும் அநேகமாக தங்களை நீதிமான்கள் என்று எண்ணி சரிப்படுத்தப்படும் நேரங்களில் சோர்வடைகின்றனர். தமக்கு சொத்தமானவர்களான எம்மீதுள்ள கரிசனையினாலேயே தேவன் நம்மை திருத்துகிறார். நாம் இன்னும் பாவ சுபாவத்திலும் பாவம்செய்ய விருப்பமுடையவர்களாயிருக்கிறோம்என்பதையும் அவர் அறிவார். எவ்வாறாயினும், கிறிஸ்தவர்கள் இனிமேலும் பாவ சுபாவத்திற்கு கட்டுப்பட்டவர்கள் அல்ல என்பதே கிறிஸ்தவனுக்கும் கிறிஸ்தவனல்லாதவனுக்கும் இடையே உள்ள மிகவும் முக்கியமான ஒரு வித்தியாசமாகும். நம்மை வடிவமைக்கவும் அவருக்கு மகிமையைக் கொண்டுவரும்படியாக நம்மை ஆயத்தப்படுத்தவுமே இந்த வேதனை மிகுந்த வாழ்க்கைப் பாடங்களை தேவன் பயன்படுத்துகின்றார்.

## சரிப்படுத்தலை அறிந்துகொள்ளுதல்

## *நோக்கம் 2:*

*தேவன் தம்முடைய பிள்ளைகளை சரிப்படுத்தும் வழிகளை இனம்காணல்.*

தேவன் எப்பொழுது நம்முடைய கவனத்தை பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றார் என்பதையும் எப்போது நம்முடைய வாழ்க்கைக்கு தேவையான சரிப்படுத்தலை கொண்டுவரவேண்டும் என்பதையும் நாம் எவ்வாறு அறிந்துகொள்வது? நம்மை ஒழுக்கப்படுத்தும்படி அவர் எவ்வாறான முறைகளைப் பயன்படுத்துகிறார்? நாம் பயன்படுத்தும் சரிப்படுத்தல் மற்றும் ஒழுக்கப்படுத்தல் என்ற பெயர்களானது முற்றிலும் ஒன்றாகவும் ஒரே விதமாகவும் இருக்கின்றதை நீங்கள் இங்கே காண முடியும். தேவன்குறித்த சில முறைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டவரல்ல. அதேவேளை, தேவன் நம்மை திருத்தும் சில வழிகளை வேதாகமம் இங்கே எடுத்துக்காட்டுகிறது.

### கடிந்துகொள்ளுதல்

எபிரெயர் புத்தகத்தின் எழுத்தாளர் நீதிமொழிகளிலிருந்து சிலவற்றை மேற்கோள் காட்டியுள்ளார்: “அன்றியும்: என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே,

அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே" (எபிரேயர் 12:5). கடிந்துகொள்ளுதல் என்பதன் அர்த்தம் "வெளிச்சத்திற்கு கொண்டுவருதல், வெளிப்படை, முன்கொண்டுவருதல் அல்லது ஒருவருக்கு ஒரு விடயத்தைக் குறித்த குற்றத்தை உணர்த்தல், ஒருவரை குறித்த ஒரு விடயம் தொடர்பில் சுட்டிக்காட்டுதல், நிரூபித்தல், திருத்துதல், தண்டித்தல், ஒழுக்கப்படுத்தல்"ஆகியவையாகும் (ஜிங்கிரிச் மற்றும் டான்கர் 1981). மாற்றப்பட அவசியமாயிருக்கும் ஒரு விடயத்தைக் குறித்த எச்சரிக்கையைக் கொண்டுவருதலே கடிந்துகொள்ளுதல் ஆகும். கடிந்துகொள்ளுதலானது வேதாகமத்திலிருந்தும், பரிசுத்த ஆவியானவரிடமிருந்தும்,நண்பன், துணை, பெற்றோர், உடன் பிறந்தோர் அல்லது போதகர் ஆகியவர்களிடமிருந்தும்வரக்கூடும். நீங்கள் ஜெபத்தில் இருக்கும்போது, சபையில் ஒருவரோடு உரையாடிக்கொண்டிருக்கும்போது அல்லது நீங்கள் எதையாகிலும் ஒன்றை செய்துகொண்டிருக்கும்போது அது நடைபெறக்கூடும். கடிந்துகொள்ளுதல் என்பது மிகவும் வழக்கமான சரிப்படுத்தலுக்கான முறையாகும்.அதை கவனத்திற் கொண்டால் தேவனுடைய பக்கத்திலிருந்து தேவையற்ற தீவிரமான சரிப்படுத்தலுக்கான செயற்பாடுகளை தவிர்த்துக்கொள்ள முடியும்.

## நெருக்கத்தையும் மகிழ்ச்சியையும் இழந்துபோதல்

நாம் பாவ நடத்தையில் ஈடுபட்டிருந்தாலோ அல்லது தேவையற்ற மனோபாவத்தை தரித்துவைத்திருந்தாலோ தேவனுடனான நமது உறவு பாதிக்கப்படும். தேவன் பரிசுத்தமானவரும் பாவத்தை வெறுக்கிறவருமாயிருக்கிறார். ஆகவே நாம் பாவம்செய்யும்போது அவர் நம்மை விட்டு தூர விலகியிருப்பதுபோலத் தோன்றும். தாவீது பத்சேபாளுடன் விபசாரம் செய்து, அவளுடைய கணவனை கொலை செய்யும்படி கட்டளையிட்ட பின்னர், ஜெபம்பண்ணுவது அவசியம் என்பதை உணர்ந்ததில் எவ்வித ஆச்சரியமுமில்லை, "நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும், அப்பொழுது நீர் நொறுக்கின எலும்புகள் களிகூறும் … உமது இரட்சண்யத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்" (சங்கீதம்51:8, 12).

## எதிர்பாராத போராட்டங்கள்

நம்முடைய வேகத்தை குறைப்பதற்கும்,நம்முடைய வாழ்க்கையை குறித்து சிந்தித்துப் பார்ப்பதற்கும், மனந்திரும்பச் செய்யவும், நாம் அவரை சார்ந்திருப்பதை புதுப்பிப்பதற்கும் தேவனால் போராட்டங்களை பயன்படுத்த முடியும்.எதிர்பாராத போராட்டங்களாவன: வாய்ப்புக்களுக்கான கதவுகள் அடைக்கப்படல், நோய், உதவி அற்றுப்போகுதல், பொருளாதப் பின்னடைவுகள், எதிர்ப்புக்கள் மற்றும் கலகம் போன்ற தீவிரமான நிலைமைகளில் அனர்த்தங்களும் உள்ளடங்கும். உதாரணமாக, பழைய ஏற்பாட்டு ஜனங்கள் ஆவிக்குரிய நிலையை விட்டு பின்வாங்கி தேவனுடைய கட்டளைகளை மீறியபோது, அந்த ஜனங்கள் மீது ஆளுகை செய்யும்படி தேவன் அவர்களுடைய எதிரிகளுக்கு அனுமதி கொடுத்தார். இவற்றிற்கான உதாரணங்களைப் பார்க்கும்படிக்கு நியாயாதிபதிகள் புத்தகத்தை வாசிக்கவும்.

தேவன் சர்வவல்லமையுள்ளவர்; நம்முடைய எல்லா சூழ்நிலைகளின் மீதும் அவருடைய கட்டுப்பாடு உண்டு. தேவனால் மேலான ஆசீர்வாதங்களைக் கொடுக்கவும் முடியும் அல்லது அவரால் அவற்றை தடுக்கவும் முடியும்.

## பாவத்தை அறிக்கை செய்தல்

### *நோக்கம் 3:*

*பாவத்தை அறிக்கை செய்தலின் பங்கை கலந்துரையாடுதல்.*

தேவன் உங்களை சரிப்படுத்த ஆரம்பித்துவிட்டார் என்று நீங்கள் உணரும்போது, நீங்கள் உங்கள் பாவங்ளை கர்த்தரிடத்தில் அறிக்கைச் செய்தல்வேண்டும். உங்கள் தோல்விகளைக் குறித்து ஆவிக்குரிய முதிர்ச்சியடைந்த நம்பந்தகுந்த விசுவாசியிடம் பேசுவது உங்களுக்கு உதவியாக அமையும் அதேவேளை, உங்கள் பாவங்களை கர்த்தர் முன்பாக அறிக்கை செய்வதும் மிகவும் முக்கியமானதாகும். சாக்குப்போக்குக்களை கூறவும்வேண்டாம். மற்றவர்கள் மீது குற்றம் சுமத்தவும் வேண்டாம். தாமதிக்கவும் வேண்டாம்.

நீங்கள் மெய்யாகவே மனந்திரும்பும்போது தேவன் உங்களை மன்னிப்பதற்கு துரிதப்படுகின்றார். வேதாகமம் கூறுகின்றது, “நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திரிகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்” (1 யோவான் 1:8-9). தேவன் இரக்கமுள்ளவரும், உடனடியாக மன்னிக்கிறவருமாயிருக்கிறார்! சில மக்கள் தங்கள் பாவங்களை அறிக்கை செய்யாது அநேக காலங்களாக காத்திருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

தேவன் உங்களை மன்னித்தாலும், நீங்கள் செய்த பாவ செயல்களின் விளைவுகளால் பாடுபடவேண்டியிருக்கும் என்பதை மறந்துவிடாதீர்கள். உதாரணமாக, நீங்கள் தொடர்ச்சியாக பொய்களைக் கூறி அதனால் கடிந்துகொள்ளப்பட்டு பாவங்களை தேவனிடம் அறிக்கை செய்திருந்தால் தேவன் உங்களை மன்னித்துவிட்டார். எவ்வாறாயினும், உங்கள் பொய்களைக் கேட்டவர்கள் ஒருவேளை உங்களை மன்னிக்காதிருக்கலாம்; குறைந்தபட்சம் உடனடியாக மன்னிக்காதுமிருக்கலாம். உங்கள் நேர்மையற்ற தன்மையானது உங்கள் உறவுகளில், சட்டபூர்வ காரியங்களில்தீவிரமான ஒரு நிலைமாற்றத்தை உண்டாக்லாம்அல்லது பொருளாதாரத்தில் மறை முகமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

## சரிப்படுத்துவதற்கான நோக்கம்

### *நோக்கம் 4:*

*சரிப்படுத்தலுடன் தேவனுடைய அன்பு என்ன செய்கின்றதென்பதை விளக்குதல்.*

எபிரெயர் 12:6 கூறுகின்றது, “கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை சிட்சித்து, தாம் சேர்த்துகொள்ளுகின்ற எந்த மகனையும் தண்டிக்கிறார்.” சில மனிதர்கள், அவர்கள் திருத்தப்படும்போது, தாங்கள் இன்னும் தேவனுக்கு சொந்தமானவர்கள்தானா என்பதைக் குறித்து ஆச்சரியப்படுகின்றனர். தேவன் அவர்களை சரிப்படுத்தலுக்குட்படுத்தும்போது தேவனுடைய நோக்கத்துடன் அவர்கள்

போராடுகின்றார்கள். பின்வரும் இரண்டு விடயங்களும் தேவனுடைய அன்புடனேகூடிய நம்மை சரிப்படுத்துவதற்கான தேவனுடைய அவசியத்தையும் தொடர்புபடுத்துகின்றது.

## தேவன் அன்பினிமித்தம் சரிப்படுத்துகிறார்

தேவன் தம்முடைய பிள்ளைகளை நேசிக்கின்றார். நம்முடைய வெற்றிகளிலும் தோல்விகளிலும் நம்மீதான தேவனுடைய அன்பு பெரிதாகுவதுமில்லை சிறிதாகுவதுமில்லை. நம்மை அவர் சரிப்படுத்தும்போது அவருடைய அன்பு மறைந்துபோவதுமில்லை. தாங்கள் சரிப்படுத்தப்படுகிறார்கள் என்பதை அறிகின்றபோது கிறிஸ்தவர்கள் தேவனுடைய அன்பை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.தேவனுடைய அன்பையும் நன்மையையும் அவருடைய சரிப்படுத்தலுடன் தொடர்புபடுத்தும் இந்த வசனங்களைக் கவனியுங்கள்.

- “இதோ, தேவன் தண்டிகிற மனுஷன் பாக்கியவான்; ஆகையால் சர்வவல்லவருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதிரும்” (யோபு 5:17).
- “சிட்சித்து, உம்முடைய வேதத்தைக்கொண்டு போதிக்கிற மனுஷன் பாக்கியவான்” (சங்கீதம் 94:13).
- “தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல, கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார்” (நீதிமொழிகள் 3:12).
- “நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு” (வெளிப்படுத்தல் 3:19).

## தேவனுடைய சரிப்படுத்துதல் ஒருபோதும் அநியாயமற்றது

மற்றவர்களை விடவும் தங்களுடைய சரிப்படுத்துதலானது மிகவும் மோசமாக காணப்படுகின்றபடியால் தேவன் தங்களிடத்தில் அநியாயமாகசெயற்படுகின்றார் என்று சில கிறிஸ்தவர்கள் நினைக்கின்றனர். ஆகிலும், நம்முடைய வாழ்க்கையில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரும்படிக்கு மிகச்சரியான அளவு சரிப்படுத்தலை தேவன் தருகின்றார். அவர் ஒருபோதும் தம்முடைய பிள்ளைகளுக்கு தவறிழைப்பதில்லை.

உலோகம் எவ்வாறு உற்பத்தியாகின்றது என்பதை நினைத்துப்பாருங்கள். முடிக்கப்பெற்ற ஒரு உற்பத்தியாகும்படிக்கு வேலையாட்கள் அந்த இரும்பை நெருப்பிலிட்டு எடுக்கின்றனர். அதுபோலவே எம்மில் தேவபக்தியுள்ள குணாதிசயத்தை வளர்க்கும்படிக்கு எது நமக்குத் தேவை என்பதை தேவன் அறிந்துள்ளார். நம்மை பரிசுத்தப்படுத்துவதே அவருடைய நோக்கமாயிருப்பதனால் ஒழுக்கப்படுத்தப்படும் மற்றும் பாடுபடும் நாட்களில் நாம் தேவனுக்கு எதிராக கலகம் செய்யக்கூடாது.

அத்துடன் எல்லா பாடுகளும், பாவம் அல்லது தெய்வீக ஒழுங்குபடுத்தலுக்கான நிச்சயமான அடையாளம் என்று நாம் ஊகிக்கித்துவிடுகின்றோம். அநேகமாக அது அப்படி அல்ல. வேதனையும் துன்மார்க்கமும் காணப்படுகிறதானவிழுந்துபோன உலகத்தில் நாம் வாழ்கின்றோம். இந்த உலகத்தில் காணப்படுகின்ற தீமையின் பாதிப்புகளுக்கு கிறிஸ்தவர்கள் தப்பித்துக்கொள்ள முடியாது. அரிதாக நல்ல மனிதர்களுக்கும்கூட கெட்டது நடக்கலாம்.பாவத்திற்கான பிரதிபலனாக இல்லாதபோதும் ஒரு விசுவாசி தொடர்ந்தும் பாடுகளின் மத்தியில் கடந்துசெல்லலாம். விழுந்துபோன உலகத்தில் நாம் வாழ்வதே இதற்குக்

காரணமாகும். எனவே, பாடுகளும் இவ்வுலகில் ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது. இருப்பினும், இவ்வகையான பாடுகளையும்கூட தேவன் நம்மை சரிசெய்வதற்காக பயன்படுத்துகிறார்.

பழைய ஏற்பாட்டிலுள்ள யோசேப்பு, தேவனால் நேசிக்கப்பட்ட நீதிமானான மனிதனுக்கு உதாரணமாக காணப்பட்டான்; இருப்பினும் அவன் வேதனை மற்றும் நியாயமற்ற பாடுகளுடன் போராடினான். அவன் பதினேழு வயதாயிருக்கையில் பொறாமையுள்ள அவனுடைய சகோதரர்கள் அவனைஅடிமைத்தனத்திற்கு விற்றுப்போட்டபோது யோசேப்பு தன் தகப்பனால் காண்பிக்கப்பட்ட மகிழ்ச்சிகரமான அளவிடமுடியாத தயவை அனுபவிப்பதை விட்டுவிட்டு எகிப்தின் மதிப்பற்ற அடிமைத்தனத்தின் பாடுகளை அனுபவிக்கும்படிக்குச் சென்றான். அவன் கால்களை விலங்குபோட்டு ஒடுக்கினார்கள்; அவன் பிராணன் இரும்பில் அடைக்கப்பட்டிருந்தது (சங்கீதம் 105:18). யோசேப்பின் சகோதரர்கள் துன்மார்க்கராயிருந்தபோதும், யோசேப்பு இந்த சோதனையை அனுபவிக்கும்படி தேவன் இடமளித்தார். யோசேப்பு தன்னுடைய வேதனையில் தேவனை தேடியது மாத்திரமன்றிதேவன் தன்னுடைய குணாதிசயத்தை மெருகூட்டி வடிவமைக்கும் வரை அவன் போராட்டங்களை பொறுமையுடன் தாங்கிக்கொண்டான். யோசேப்பு பூரணமான நேர்மையுள்ள மற்றும் நல்ல தைரியமுள்ள தலைவனாக வளர்ச்சியடைந்தான்.

இயேசுவும்கூட பாவமறியாதவராக இருந்தும்கூட மிகவும் அதிகமாக பாடுபட்டார். இயேசுவை நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாக்கும்படிக்கு அதை அவருடைய பாடுகளுக்கூடாக பூரணப்படுத்த அல்லது நிறைவேற்ற தேவன் நியாயமற்ற பாடுகளை பயன்படுத்தினார் (எபிரெயர் 2:10 ஐபார்க்கவும்). இப்பொழுதும், இயேசு பாவமற்றவராயிருந்தும் தனிப்பட்ட விதமாக மனிதனுடைய தீமைகளையும் பாடுகளையும் முழுமையாக அனுபவித்ததனால் அவரால் நம்முடன் தொடர்புகொள்ள முடிகின்றது. நாம் வேதனைகளை தாங்கிக்கொள்ளும்போது அவர் நமக்காக மிகவும் மனதுருகுகின்றார். எத்தனை அருமையான ஒரு இரட்சகர் நமக்கு உண்டு! பாவமற்ற தேவனுடைய குமாரன் இவ்வுலகில் இவ்வாறு பாடுபட்டாரெனில், அவரை பின்பற்றுபவர்கள் பாடுபடும்போதுகூட அது குறித்து ஆச்சரியப்படவேண்டாம்.

## சரிப்படுத்தலை பொறுமையுடன் தாங்கிக்கொள்ளல்

### *நோக்கம் 5:*

*சரிப்படுத்தலுக்கு ஆளாகும்போதுபொறுமையுடன் தாங்கிக்கொள்ளும் பகுதிகளை விபரித்தல்.*

---

எபிரெயர் 12:7-8 நமக்கு இவ்வாறு கற்பிக்கின்றது, “நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் (மற்றும் சரிப்படுத்தலுகுட்படும் அனைவரும்) நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்கள்.” சரிப்படுத்தலின் நன்மையைப் பெற்றுக்கொள்ளுவதற்கு உங்களுடைய பகுதியிலிருந்து சரியான மாறுத்தரம் அவசியமாகின்றது. தேவன் நமது வாழ்க்கையில் செய்யும் விடயங்களை நாம் ஏற்றுக்கொண்டு சரிப்படுத்தலை சகிக்கவேண்டும். சரிப்படுத்தலை மறுத்தலானது கடினமான சூழ்நிலையின் தீவிரத் தன்மையை அதிகரிப்பதற்கு

அல்லது காலத்தை அதிகரிப்பதற்கு மாத்திரம் விடுக்கப்படும் அழைப்பாகும். மெய்யாகவே, திரும்பத்திரும்ப கற்றுக்கொடுக்கப்படுகிறதான பாடமானது மெய்யாகவே தேவனால் அனுமத்திக்கப்பட்ட சரிப்படுத்தலை விடக் கடினமாகும். இங்கே நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய சில சகித்தலின் கோணங்கள்.

- தாழ்மை: கர்த்தருடையபலத்தகைக்குள் நாம் அடங்கியிருத்தல் வேண்டும் (1 பேதுரு 5:6 ஐப் பார்க்கவும்). தேவனுடன் விவாதித்தல் மற்றும் சரிப்படுத்தலுக்கான நமது அவசியத்தை மறுத்தலானது போராட்டத்தை நீக்கிவிடாது. நமது பாவங்களைக் குறித்து அறிக்கைசெய்தலானது அதிக நன்மை பயக்கும்.

- ஜெபம்: நாம் சரிப்படுத்தப்படும் காலத்தில் ஜெபத்துடன் இருக்கவேண்டும். ஒவ்வொரு நபருடைய வாழ்க்கையிலும் தேவன் எதை நிறைவேற்றவேண்டும் என்பதை அறிந்திருக்கிறார். தேவன் கற்றுக்கொடுக்க முயற்சிக்கும் பாடத்தைக்கு குறித்து நமக்கு தெளிப்படுத்தவேண்டும் என்று நாம் ஜெபிக்கவேண்டும்.

- பொறுமை: மனிதர்கள் சீக்கிரமாக மாறிவிடுவதில்லை.தேவன்நமக்கு கற்றுக்கொடுப்பதற்கு அவசியமாயிருக்கும் காரியத்தை புரிந்துகொள்வதில் நாம் மெதுவாக இருக்கலாம். அவருடைய சரிப்படுத்தல் ஒரு வாரம் அல்லது சிலவேளைகளில் ஒரு மாதத்திற்கும் நீடிக்கலாம்.

- விசுவாசம்: நம்முடைய வாழ்க்கையின் மிகவும் உயர்ந்த இலக்கான பரிசுத்தத்தைக் குறித்து தேவன் மிகவும் கருத்துடன் கரிசனையாயிருக்கிறார். தேவன் சகலவற்றையும் நமது நன்மைக்காக நடப்பிக்கின்றார் என்பதை அவர் உறுதிப்படுத்துகின்றார் (ரோமர் 8:28 ஐப் பார்க்கவும்). சரிப்படுத்தப்படும் நேரத்தில் நமது விசுவாசத்தை தூக்கியெறியும்படியான எந்தவொரு சாக்குப்போக்கிற்கும் இடமில்லை. அவர் மீதான உங்கள் நம்பிக்கையை நாள்தோறும் வெளிப்படுத்துங்கள்; நீங்கள் சொல்லுகிற விடயங்களை விசுவாசிக்கும்படியாக பேசுங்கள்; கிரியை செய்யுங்கள்.

## சரிப்படுத்துதலுக்குக் கீழ்ப்படிதல்

### *நோக்கம் 6:*

*சரிப்படுத்துதலுக்கு கீழ்படிவதற்கான முக்கியத்துவத்தை விளக்கப்படுத்தல்.*

தேவனுக்கு கீழ்ப்படிதல் என்பது நமது விருப்பத்தின் தெரிவாகும். எபிரெயர் 12:9 கூறுகின்றது, "அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைத்திருக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா!" கீழ்ப்படிதல் என்பது இன்னொருவருடைய அதிகாரத்திற்கு சரணடைதலாகும். உதாரணமாக, தங்கள் பிள்ளைகள் ஊக்கமாக தங்களுடைய கடிந்துகொள்ளுதலுக்கும் ஒழுக்கப்படுத்தலுக்கும் கீழ்ப்படிகிறதில்லையென்பதை பெற்றோர்கள் சில சமயங்களில் கண்டுகொள்ளுகின்றனர். மகன் அல்லது மகள் மனமின்றி வெளிப்புறமாக கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்தாலும் இருதயம் இன்னும் கலகமுள்ளதாக

இருக்குமானால் அங்கே மெய்யான மாற்றம் நடைபெறவில்லை. தங்கள் பெற்றோரின் அதிகாரத்தையும் அவர்களுடைய வேண்டுகோள்களையும் ஏற்றுக்கொண்டு நடக்கும்போது மாத்திரமே ஒரு பிள்ளையினுடைய வாழ்க்கையில் உடன்பாடன மாற்றம் நிகழ்கின்றது. சரிப்படுத்தும் காலத்தில் அன்புள்ள பெற்றோரும் கடுமையானவர்களாக காணப்பட்டாலும் அதன்பின்னர் அவர்கள் அதிகமான பாசத்தையும் இரக்கத்தையும் காண்பிப்பார்கள். முதிர்ச்சியடையும் ஒரு பிள்ளை பெற்றொருடைய உண்மையான சரிப்படுத்துதலை பாராட்டும்.

தேவனுடையவழிகள் சிறப்பானவை என்பதால் அவர் நம்முடைய மேலான கனத்தையும் கீழ்ப்படிவையும் பெறுகிறதற்கு முற்றிலும் தகுதியானவராயிருக்கின்றார். மனிதர்கள் தேவனோடுகூட முழுவதுமாக பொருந்தமுடியாதவர்களாய் உள்ளனர் என்பது ஒரு பொதுவான விதியாகும். ஏசாயா 55:9 இல் கர்த்தர் கூறுவதைக் கவனியுங்கள், "பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கின்றது." இரண்டு காரியங்கள் இந்த வசனங்களில் ஒருமித்துள்ளது அது, தேவனுடைய வழிகளும் அவருடைய நினைவுகளும். தேவன் அறிந்துள்ளதும் அவர் சிந்திக்கின்றதுமான சகல விடயங்களையும் நாம் கற்பனை செய்ய ஆரம்பித்துவிட முடியாது. அவருடைய நினைவுகள் நம்முடையவைகளை விஞ்சுகின்றதாயிருக்கின்றது. அத்துடன், தேவனுடைய பரிசுத்தமும் பூரணமானதுமான வழிகள், மனிதனுடைய பாவம் மற்றும் பூரணமற்ற வழிகளுக்கு முற்றிலும் வேறுபடுகின்றது. மனிதனுடைய வழிகள் தேவனுடைய வழிகளிலிருந்து தூரமாயிருக்கின்ற காரணத்தினாலேயே நம்முடைய துன்பமான, பிரச்சினையான இவ் உலகமானது ஒழுக்கக்கேடுகளினாலும் வன்முறைகளினாலும் நிறைந்துள்ளது.

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் அவன் அல்லது அவள் தேவனுக்கு கீழ்ப்படிவதை தெரிந்தெடுக்கவேண்டிய ஒரு நிலைக்குட்படுவார்கள். இது இரட்சிப்பின் கிரியையின் ஒரு சாதாரண பகுதியாகும். எவ்வாறாயினும், கிறிஸ்தவ வாழ்க்கையில் கீழ்ப்படியும்போது பல நெருக்கடியான நிலைமைகள் ஏற்படுகின்றது.தேவனுக்கு கீழ்ப்படிதலானது ஆரம்பத்தில் சௌகரியமாக காணப்படாது, அத்துடன்அது ஜனங்களிடத்திலிருந்து கைதட்டல்களையும் கொண்டுவராமலுமிருக்கலாம் என்றாலும் மாற்றத்திற்கு கீழ்ப்படிவு அவசியமாகின்றது.

தேவனிடத்திலிருந்து வரும் சரிப்படுத்தலானது வாழ்க்கையின் ஒவ்வொரு படிநிலையிலும் தொடர்கின்றது. வயது முதிர்வது என்பது சரிப்படுத்தலிலிருந்து விடுதலை பெறுவது அல்ல. அங்கனமே அங்கீகரிக்கப்பட்ட பிரபலமான தேவ ஊழியமானது தெய்வீக பாதுகாப்பிலிருந்து பெற்றுக்கொள்ளும் விடுதலையுமல்ல. யார் பாவம் செய்திருந்தாலும் அது அவருக்கு ஒரு பொருட்டு அல்ல, அவர் பாவத்தோடுகூட இடைப்படுகின்றார். ஒருவரேனும் ஒருபோதும் தான் பரிபூரணமடைந்துள்ளார் என எண்ணலாகாது. அவ்வாறில்லையெனில், தேவனை சேவிக்கும் காலம் வரைக்கும் நாம் இன்னும் அதிகமாகநம்முடைய பலவீனத்தை புரிந்துகொள்வோம்.

மேலதிகமாக நாம் தேவனுடைய ஒழுங்குபடுத்தல் படிமுறையில் சபையினுடைய பங்கு என்னவென்பதைக் குறித்து கவனித்துப் பார்ப்போம். சபையானது வடிவமைக்கப்பட்டு உண்டாயிருக்கும்படி அதுதேவனால் ஏற்படுத்தப்பட்டதாகும். இயேசுவே சபைக்குத் தலையாக இருக்கின்றார்; அவர் அதற்காக இரத்தம் சிந்தி மரித்தார்; வேதாகமம் சபையை கிறிஸ்துவின் சரீரமாகவும் அவரின் மணவாட்டியாகவும் விபரிக்கின்றது. அவர் சபையை நேசிக்கின்றார், அவர் சபையுடன் இன்றியமையாதவிதமாக தொடர்புபட்டுள்ளார், சபையினூடாக கிரியை செய்கின்றார்.

விசுவாசிகள் ஒன்றாக சேர்ந்து தேவனை ஆராதிக்கவும், வளரவும் மற்றும் வரங்களை வளர்க்கவும் ஒரு குடும்பமாக இருப்பதுமே சபையினுடைய பங்காகவிருக்கின்றது. ஏனெனில், சபை அங்கத்தினர் ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாக உள்ளனர். சபைக்கென ஆவிக்குரிய தலைவர்கள் உண்டு அவர்கள் வழிநடத்துவதற்காகவும் போதிப்பதற்காகவும் மற்றும் சரிப்படுத்துவதற்காகவும் உள்ளனர். அப்போஸ்தலர் பவுல் எழுதுகின்றார், “சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்” (கலாத்தியர் 6:1). பாவத்தில் விழுந்த ஒரு விசுவாசி சபைத் தலைவர்களிடத்தில் அதை ஒப்புக்கொள்ளும்போது எதிர்மாறான ஒரு மாறுத்தரம் கிடைக்குமென பயப்படத்தேவையில்லை. அத்தலைவர்கள் அவன் அல்லது அவளுடைய தவறான செயற்பாடுகளையும் மனோபாவங்களையும் மேற்கொள்வதற்காக செயற்படுவர். அது இரகசிய பாவத்தை வெளியரங்கத்திற்கு கொண்டுவருவதற்கான விடுதலையைத்தரும். அப்பொழுது மாத்திரமே பாவத்துடன் இடைப்பட முடியும்.

பிரசித்திபெற்ற தேவ ஊழியத்தில் மகிழ்ச்சியுடன் ஈடுபட்ட ஒரு கிறிஸ்தவன் பாவத்தில் விழும்போது, அவர் மனந்திரும்பும்வரையும் மீண்டுமாக நம்பிக்கையை கட்டியெழுப்பும்வரையும் சபைத் தலைவர்கள் அவரை ஊழியத்திலிருந்து விலக்கியிருக்கும்படி கூறவேண்டும்.அந்த விசுவாசி ஒழுக்கப்படுத்தலுக்கு கீழ்ப்படியவேண்டும் அத்துடன் சபையிலுள்ள ஒருவரும் அவன் அல்லது அவளை தண்டிக்கவில்லை என்பதையும் நினைவிற்கொள்ளவேண்டும். விழுந்துபோன விசுவாசிகளுக்கு உதவிசெய்யும்படிக்கும் மீண்டும் கட்டியெழுப்பும்படிக்கும் கிறிஸ்து தன் சரீரத்தில் உள்ள தலைவர்களை உபயோகிக்கின்றார்.

## சரிப்படுத்தலின் இலக்குகள்

### *நோக்கம் 7:*

*தாம் சரிப்படுத்துபவர்களுக்காக தேவன் வைத்திருக்கும் மூன்று இலக்குகளை இனம்காணல்.*

தேவன் தாம் சரிப்படுத்துபவர்களின் நன்மையைக் கருத்திற்கொண்டே அவர் சரிப்படுத்துகிறார். எவ்வழியிலும் நம்முடைய வாழ்க்கைக்கு சரிசெய்ய இயலாத சேதத்தை செய்ய அவருக்கு வேண்டியதில்லை. துரதிஷ்டவசமாக, சரிப்படுத்தல் அரிதாகவும் எப்பொழுதாவது ஒருவேளை மாத்திரமே சௌகரியமாகத் தோன்றுகின்றது. சிலவேளைகளில் தேவனால் உண்டாகும் சரிப்படுத்தலுக்கு சாத்தானை குறைகூறுபவர்களும் உண்டு. ஆகிலும் இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் சரிப்படுத்தப்படும் காலத்தில் தங்கள் உணர்வுகளை சார்ந்திருத்தல்கூடாது. சரிப்படுத்தப்படுதலுக்குரிய பிரதிபலன்கள் காலத்தோடு நிரூபிக்கப்படும். தேவன் தம்முடைய பிள்ளைகளை சரிப்படுத்தும்போது அவர் மனதில் கொண்டுள்ள மூன்று இலக்குகளைக் குறித்து நம்முடைய கவனத்தைச் செலுத்துவோம்.

## பரிசுத்தம்

"அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சகாலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்" (எபிரெயர் 12:10). பரிசுத்தம் என்றால் என்ன? செய்யக்கூடாத காரியங்களின் பட்டியல் என சிலர் நினைக்கின்றனர். நிச்சயமாக கிறிஸ்தவர்கள் உலகரீதியிலான செயற்பாடுகளை தவிர்க்கவேண்டும் என்றாலும், ஒரு மனிதன் எதை செய்யக்கூடாது என்பதைக் கொண்ட விடயம் மாத்திரம் அல்ல ஆகிலும் ஒரு நபர் தன்னுடைய தினசரி வாழ்க்கையில் எவ்வாறு இயேசுவை தன்னுடைய குணாதிசயங்களில் பிரதிபலிக்கின்றார் என்பதே பரிசுத்தம் ஆகும்.

புதிய ஏற்பாட்டை வாசிக்கும்போது இயேசு பாவமற்றவராக காணப்பட்டார் என்பதை நாம் அறிவோம். உண்மையாகவே, இவ்வுலகத்தில் வாழ்ந்தபோது பாவத்தினால் கறைபடாதவாறு வாழ்ந்த ஒரேயொரு நபர் அவர் மாத்திரமே. அவர் பாவத்திலிருந்து விலகி தேவனுக்காக வேறுபிரிந்து வாழ்ந்தார். நம்முடைய வாழ்க்கையில் பிரதிபலிக்க வேண்டிய பரிசுத்தத்தின் மெய்பொருள் இதுவே.

## நீதி

"எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்" (எபிரெயர் 12:11). ஒரு விதத்தில் நம்முடைய நீதியும் நன்மையும் இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தின் பிரதிபலனாகவே உண்டாகின்றது. தேவனோடுள்ள சகல அனுபவங்களும் ஆரம்பிப்பதும் முடிவடைவதும் இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள தனிப்பட்ட விசுவாசத்தின் மூலமாகும். எது சரியானதோ அதை அவரன்றி செய்யமுடியாது. "எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை" (ரோமர் 3:20).நாம் இரட்சிக்கப்பட்டபோது பிதாவாகிய தேவன் கிறிஸ்துவின் நீதியை நமக்குள் ஏற்படுத்துகிறார். அவருடைய குமாரனாகிய இயேசுவின் நீதியை நாம் கொண்டிருப்பதாக தேவன் நினைப்பதே அதன் அர்த்தம். அப்போஸ்தலர் பவுல் எழுதுவதை கவனியுங்கள்: "அந்தப்படி, நீங்கள் அவராலே [தேவன்] கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மைப்பாராட்டத்தக்கதாக, அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்" (1 கொரிந்தியர் 1:30).

எவ்வாறாயினும், நம்முடைய பூமிக்குரிய வாழ்க்கையில் நாம் தெய்வீக சரிப்படுத்தலில் சரியானதைச் செய்யும்படி பயிற்றுவிக்கப்படுகின்றோம். நாம் தேவனுடன் நடக்கும்போது பாவத்தின் மூட்டாள்தனத்தையும்கீழ்ப்படிதலின் சந்தோஷத்தையும் கற்றுக்கொள்ளுவோம். நாம் நீதியை பின்பற்றுவதற்கு தேவனால் உற்சாகப்படுத்தப்படுகின்றோம்.

## சமாதானம்

கிறிஸ்தவ வாழ்க்கையில் அநேக காரியங்கள் சமாதானத்தை பிறப்பிக்கும். அவற்றில் ஒன்று தேவனுடைய மன்னிப்பு. ஒரு கிறிஸ்தவனால் மாத்திரமே குற்றமற்ற மனச்சாட்சியின் அற்புதமான அனுபவத்தை அறிந்துகொள்ள முடியும். தேவனுடைய பிரசன்னமும் நம்முடைய

வாழ்க்கையில் சமாதானத்தை பிறப்பிக்கும். அவர் பிரச்சனைகளின் மத்தியிலும் நம்முடைய இருதயங்களை அமைதலாக வைத்துக்கொள்ளுவார். பரலோகத்தைக் குறித்த நம்முடைய எதிர்பார்ப்பும் கிறிஸ்துவின் வருகையைக் குறித்த எதிர்பார்ப்பும் சமாதானத்தை உருவாக்கும். எபிரெயர் 12:11 உம் தெய்வீக சரிப்படுத்தல் நீண்ட நாள் சமாதானதைக் கொண்டுவரும் என தெரிவிக்கின்றது.

## முடிவுரை

ஒரு ஜேர்மனிய உவமையொன்று இவ்வாறு கூறுகின்றது. பெரன் என்னும் ஓர் மனிதன் அவனுடைய அரண்மனையின் தூண்களிலிருந்து ரயின் நதிக்கு கம்பிகளை இழுத்து காற்றின் உதவியுடன் இசைக்கப்பெறுகிறதான அயோலியன் என்னப்பட்ட பெரிய (காற்று) யாழ் ஒன்றை உருவாக்கும்படிக்கு முயற்சித்தான். முதலில் அந்த முயற்சியானது வெற்றியளிக்காததுபோலக் காணப்பட்டது. அதிககாலம் செல்லுமுன்னதாக ஒரு பெரிய புயலின் காற்றானது கம்பிகள் அதிர்வதற்குக் காரணமாயிற்று, காற்று அதை நிரப்பினபடியால் அது இனிமையான அழகிய இசையை இசைத்தது. அதுபோலவே, தேவனிடத்திலிருந்து சரிப்படுத்தலைக் கற்றுக்கொள்ளும் கிறிஸ்தவர்கள் அவன் அல்லது அவளுடைய இசை அந்த அயோலியன் யாழைப்போன்று இசை கொடுக்கும்.

கடைசியாக தெய்வீக ஒழுக்கப்படுத்தலை மனதில் வைத்துக்கொள்வதற்கான சில கருத்துக்கள் இதோ:

- உங்கள் வாழ்க்கையில் சரிப்படுத்தலின்போது இயேசு கிறிஸ்துவை நம்புவதையே தெரிந்துகொள்ளுங்கள்.
- உங்கள் வாழ்க்கையை குறித்து அதிகாரமுள்ளவர்களிடம் கணக்கு ஒப்புவியுங்கள்.
- ஆலோசனைக்காக தெய்வீக வளங்களிடம் அறிவுரைகளை நாடுங்கள்.
- நீங்கள் எங்கே தவறினீர்கள் என்பதை ஏற்றுக்கொள்ளுவதற்கு ஆயத்தமாக இருங்கள்.
- உங்கள் போராட்டங்களில், தவறுகளில், பாவத்தில் கற்றுக்கொள்ளும்படி தேவனுடைய உதவியை நாடுங்கள்.
- இயேசு உங்கள் உதவியாளனாக அவருடனேகூட மாற்றமடைவதை நோக்கமாகக் கொள்ளுங்கள்.

## குறிப்புப் பட்டியல்

Gingrich, F. Wilbur, and Frederick W. Dankar. 1981. *An index to the revised Bauer-Arndt-Gingrich Greek Lexion.* 2nd ed. Edited by John R. Alsop. Grand Rapids: Zondervan.

Wesley, John. 1951. *The Journal of John Wesley*. Grand Rapids: Moody.

## மனனம் செய்வதற்கு ஆலோசிக்கப்ட்ட வசனங்கள்

யோபு 5:17

சங்கீதம் 68:28

சங்கீதம் 94:12

நீதிமொழிகள் 3:12

ஏசாயா 40:31

எபிரெயர் 12:10-11

வெளிப்படுத்தல் 3:19

# பாடம் 6

## தோல்வியை எவ்வாறு கையாளுவது

நான் என்னுடைய சிறுவயதில் அயலகத்திலிருந்த என் சக ஆண் பிள்ளைகளுடன் திறந்தவெளி விளையாட்டுக்களை விளையாடியது எனக்கு நினைவில் இருக்கின்றது. எல்லா சட்டங்களையும் விஞ்சிய சட்டங்கள் எமக்கிருந்தது; அது “மீண்டும் செய்யும் விதி” என்று அழைக்கப்பட்டது. யாதேனும் ஒரு விளையாட்டு நாம் எதிர்பார்த்த விதத்தில் வெற்றிகரமாக அமையாத போது நாங்கள் அதைப் பயன்படுத்தினோம். இன்றும் நான் கொல்ப் விளையாட்டு விளையாடும்போதும் அதற்கு ஒத்த விடயம் நிகழும். சிலவேளை என்னுடைய சக கொல்ப் விளையாட்டு பங்காளன் “நான் ஒரு முலிகனை பயன்படுத்தலாமா என்று கேட்பான்?” விளையாடுபவருக்கு மீண்டும் ஒரு தடவை பந்தை அடிப்பதற்கு வாய்ப்பை அளிப்பதே அந்த ஒரு முலிகன் ஆகும்.

நம்மில் அநேகர் மீண்டும் செய்தல் அல்லது ஒரு முலிகனை வாஞ்சிக்கின்றோம். இதை வாசிக்கும் நீங்களும்கூட உங்களை நீங்களே குறைவாக மதிப்பிட்டு அல்லது உங்கள் தோல்விகளுக்கு மற்றவர்களை குற்றம்சாட்டிக்கொண்டிருக்கலாம். சிலவேளைகளில் உங்களுடைய மனக் காயங்களாவன எப்போபோதும் வீட்டிலிராத ஒரு பெற்றோர், உங்களில் அக்கறை கொள்ளாத ஒரு ஆசிரியர், உங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமற்ற உங்கள் துணை, உங்களை பிடித்துக்கொண்ட போதைப்பொருள் விற்பனையாளன், வரையரையின்றி குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் உங்கள் நண்பன் ஆகிய இவற்றிலிருந்து உருவாகியிருக்கலாம். இந்த பட்டியலில் நீண்டு கொண்டும் போகலாம். ஆகிலும் இந்த கடந்தகால மற்றும் நிகழ்கால சம்பவங்களை பொருட்படுத்தாது, தேவன் உங்களுக்கு இரண்டாம் வாய்ப்பை அளிக்கின்றார். மீண்டும் ஆரம்பித்தல் என்பது கடந்தகாலத்தை அழித்து விடுதல் அல்ல, ஆனாலும் அது உங்களுடைய கடந்த காலத்துடன் இடைப்பட்டு முன்னோக்கிச் செல்வதை வேண்டுகின்றது. மீண்டும் ஆரம்பித்தலானது ஒருவனுடைய வாழ்க்கையை புதுப்பித்தல் ஆகும்.

### பாடத்தின் முக்கிய அம்சங்கள்

தோல்வியை விபரித்தல்

தோல்விக்கான பொதுவான காரணங்கள்

ஓர் புதிய ஆரம்பம்

பிரதானமான கொள்கைகள்

## பாடத்தின் நோக்கங்கள்

1. *தோல்வி எது என்பதும் தோல்வி அல்லாதது எது என்பதும் குறித்து விளக்குதல்.*

2. *தோல்விக்கான ஐந்து பொதுவான காரணங்களை இனம்காணல்.*

3. *எவ்வாறு ஓர் புதிய ஆரம்பத்தை உருவாக்க முடியும் என்பதை விபரித்தல்.*

4. *தேவனுக்கு ஊழியம் செய்யும்போது நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய பிரதானமான கொள்கைகளைக் குறிப்பிடுதல்.*

## தோல்வியை விபரித்தல்

### *நோக்கம் 1:*

*தோல்வி எது என்பதும் தோல்வி அல்லாதது எது என்பதும் குறித்து விளக்குதல்.*

ஒரு எழுத்தாளர் கீழே காண்பிக்கப்பட்டுள்ளவற்றை அவதானித்தார்.

நகைத்தால் முட்டாளாக தோன்றும் அபாயம் உண்டு.
அழுவதால் எளிதில் உணர்ச்சிவசப்படுவதாக தோன்றும் அபாயம் உண்டு.
அன்பு செய்தால் பதிலுக்கு அன்பு செய்யப்படாத அபாயம் உண்டு.
வாழ்ந்தால் சாவின் அபாயம் உண்டு.
எதிர்பார்த்தல் ஏமாற்றத்தை கொண்டு வரும் அபாயம் உண்டு.
முழுவதுமாக முயற்சி செய்தலில் தோல்விக்கான அபாயம் உண்டு.

ஆனாலும்நாம் நிச்சயமாக அபாயகரமான நிலையை சந்திக்கவேண்டும் ஏனென்றால், வாழ்க்கையின் மிகப்பெரிதான அபாயகரமான நிலையை துணிகரமாக சந்திக்காவிடின், வாழ்க்கையில் ஒன்றுமில்லை. அபாயகரமான நிலையை துணிவுடன் எதிர்கொள்ளாதவன் எதையும் சாதிப்பதில்லை, அவனிடத்தில் ஒன்றுமில்லை, அவன் ஒன்றுமேயில்லை. ("மினிஸ்ட்ரி இன் டெய்லி லைப்").

தோல்வி என்பது முற்றுமுழுதாக நாம் செய்யும் பிரதான தவறைக்கொண்டு மாத்திரம் தீர்மானிக்கப்படுகின்றதல்ல. மாறாக தோல்வி என்பது நாம் செய்யும் பிழைகளுக்கு எவ்வளவு நன்றாக அல்லது எவ்வளவு அற்பமாக மாறுத்தரம் அளிக்கின்றோம் என்பதைக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது. நாம் சில உதாரணங்களை பார்ப்போம். ஒரு இள வாலிப அல்லது திருமணமாகாத பெற்றோராகுவது என்பது ஒருவரை "தோல்வியடையச் செய்து விடாது." அந்த பெற்றோர் பிள்ளையை நேசித்து அப்பிள்ளையை ஒரு பக்தியுள்ள குடும்பத்தில் வளர்ப்பதன் மூலம் சரியானதைச் செய்ய அவர்களுக்கு இன்னுமொரு வாய்ப்பு உண்டு. போதைப் பொருள் பாவனைக்கு அல்லது குடிப்பழக்கத்திற்கு அடிமையாதல் என்பது ஒருவரை இயல்பாகவே "தோற்றவனாக" வகைப்படுத்திவிடாது. அந்த நபருக்கு உதவியைப் பெற்றுக்கொள்ள அல்லது சிகிச்சைப் பெற்றுக்கொள்ள இப்போதும் இன்னுமொரு வாய்ப்பு

உண்டு. ஒரு விவாகரத்துகூட ஒருவரை "தள்ளப்பட்டவர்" என்றாக்கிவிடாது. விவாகரத்தானவர் தனிநபராகவே பூரணமானதும் கனிகொடுக்கக்கூடியதுமான வாழ்க்கையை வாழ்வதற்கான வாய்ப்பு இன்னும் உண்டு.

## தோல்வியை எவ்வாறு கையாளுவதென்பதை அறிந்துகொள்ளல்

வெற்றி பெற்ற நபர்கள் தோல்வியை எவ்வாறு கையாளுவதென்பதை அறிந்துள்ளனர். வாழ்க்கையில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் நபர்கள் மிகப்பெரிய தவறுகள் மற்றும் ஏமாற்றங்கள் என்பவற்றோடு செயற்படுவது எப்படி என்பதை அறிந்துள்ளனர். எடுத்துக் காட்டாக, அல்பர்ட் ஐன்ஸ்டைனுக்கு தன்னுடைய சிறு வயதில் கணிதம் பாடம் மிகவும் கடினமாக காணப்பட்டது. ஆகிலும் முடிவில் அவர் பிரசித்தி பெற்ற சமன்பாடாகிய $e=mc^2$ எனும் சமன்பாட்டை கண்டுபிடித்தார். புவி ஈர்ப்பு சக்தியின் கோட்பாட்டைக் குறித்து தெளிவாக பேசுவதற்கு முன் ஐசக் நியூட்டன்தனது தலைமீது ஆப்பிள் பழத்தின் பலத்த அடியை உணர்ந்தார். மைக்கல் ஜோர்டன் கல்லூரி மற்றும் தேசிய கூடைப்பந்தாட்ட சங்கத்தின் (NBA) பிரபல்யமான நட்சத்திரமாகுவதற்கு முன் பாடசலை கூடைப்பந்தாட்டத்தில் தோல்வியுற்றவராவார். இவர்கள் யாவரும் தங்களுடைய தோல்வியை பின் தள்ளிவிட்டு பெரிய சாதனைகளை நிலைநாட்டினார்கள் நம்முடைய தோல்விகளுக்கும் வேதனைகளுக்கும் நாம் காண்பிக்கும் பிரதியுத்தரத்தின்படியே நம்முடைய விதி தீர்மானிக்கப்படுகின்றது என்பதை அவர்கள் நிரூபித்துள்ளார்கள்.

## பழைய நிலையை அடைவதற்கான போராட்டங்கள்

தோல்வியிலிருந்து பழைய நிலையை அடைவதற்காக ஏன் நாம் கடினமான காலத்திற்குட்பட வேண்டியுள்ளது? ஏன் நாம் போராடுகிறோம் என்பதற்கும் நம்முடைய தவறுகளிலிருந்து நாம் ஏன் மீளாமலிருக்கின்றோம் என்பதற்கும் இங்குவேதாகம ரீதியான மூன்று காரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளது:

- பாவத்தின்முறைமை. நம்முடைய பாவ சுபாவமானது நமக்குள் கிரியை செய்யும் ஒரு வல்லமையான சக்தியாகும். அதை நாம் இயற்கை ஆற்றலுக்கு அப்பாற்பட்ட தெய்வீக வல்லமையின் உதவியின்றி தாக்கமுடியாது. ஓர் பழைய சாக்குப்போக்கு என்னவெனில், "என்னால் அதை நிறுத்த முடியாது என்று நினைக்கின்றேன்!" என்பதாகும்.

- நம்முடைய பாவத்தை கடிந்துகொள்ளுதல். நாம் செய்யக்கூடாத என்று அறிந்த யாதேனும் ஒன்றை செய்த பின்னர் நமக்கு மிகவும் பயங்கரமான உணர்வு ஏற்படும். ஒரு பழைய கூற்று என்னவெனில் "நான் செய்த காரியம் மிகவும் கெட்டதாகும். நான் எப்பொழுது மீண்டும் ஆரம்பிப்பது?" இதுபோன்ற நேரங்களில் நாம் தேவனுடைய மன்னிப்பையும் பரிசுத்தப்படுத்தலையும் அனுபவிக்க வேண்டும்.

- நம்முடைய பாவத்தின் பிரதிபலன். நம்முடைய முட்டாள்தனமான, கவனக்குறைவால் நடந்த பெருந்தவறுகள் மற்றும் பிழைகளானது மற்றவர்களுடைய வாழ்க்கையில் மிகப்பெரிதான மனவேதனையை உண்டாக்கக்கூடும். அதேபோலஉடைந்துபோன உறவுகளை மீண்டும் கட்டியெழுப்பமுடியும் என்பதையும் நம்முடைய வாழ்க்கையில்

காணப்படும் காயங்களையும் மற்றும் நாம் தவறிழைத்தவர்களுடைய வாழ்க்கையில் காணப்படும் காயங்களையும் தேவனால் குணப்படுத்த முடியும் என்பதையும் நாம் நம்ப வேண்டும்.

நீங்கள் சொல்லிய அல்லது செய்த காரியங்களினால் தேவன் உங்களை தள்ளி வைத்துள்ளார் எனத் தோன்றுகின்றதா? தேவன் இப்பொழுதும் உங்களை நேசிக்கின்றார். அத்துடன் நீங்கள் அவரை சேவித்து அவருக்கு கீழ்ப்படிவது இன்னும் தேவனுக்கு அவசியமாயிருக்கின்றது. நீங்கள் ஆராதிக்கும் தேவன் இரண்டாம் வாய்ப்பை அதாவது மீண்டும் செய்தல் என்பதானஒரு முலிகனை அளிக்கும் தேவனாவார். புலம்பல் 3:22-23 என்ன கூறுகின்றதென்பதைக் கவனியுங்கள், “நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது.”

## பேதுருவின் நிலைமை

யாரேனும் ஒருவருக்கு என்றாவது இரண்டாம் வாய்ப்பு தேவைப்பட்டதென்றால், அது பேதுருவுக்கேயாகும். இயேசு கைது செய்யப்பட்ட இராத்திரி இயேசுவின் மிக அருகாமையில் இருந்த அவருடைய நண்பன் அவரை மூன்று தடவை மறுதலித்தார். இயேசுவை ஒருபோதும் விட்டுவிலகுவதில்லை என்று பேதுரு பொருத்தனைபண்ணியிருந்தார். ஆகிலும், தம்மீது அழுத்தம் அதிகமானபோது அவர் இயேசுவை ஒருபோதும் அறியாதவர் போல நடித்தார். அவர் தைரியமாக இருக்கவேண்டிய நேரத்தில் பலவீனமாக காணப்பட்டார். அவர் பொருத்தனைகளை நிறைவேற்றாத மனிதனாவார். ஆகிலும் கதையின் முடிவு இதுதானா? இல்லை. இயேசுவுக்கு இன்னுமாக பேதுருவைக் குறித்து திட்டங்கள் இருந்ததுடன் அவனை மீண்டும் கட்டியெழுப்பினார். இயேசு பரலோகிற்கு சென்ற பின்னர் இயேசுவே தேவனுடைய குமாரன் என்று பேதுரு தைரியமாக பறைசாற்றினான். அவன் தன்னுடைய விசுவாசத்தினிமித்தம் சிறைக்குச் சென்றான், அதன் பின்னர் அவர் மரித்தான். அவனுடைய வாழ்க்கையில் தேவனுடைய அபிஷேகம் மிகவும் வல்லமையாக காணப்பட்டது எப்படியென்றால் ஜனங்கள் பிணியாளிகளை எருசலேமிற்கு கொண்டு வந்தார்கள் அதில் சிலர் மீது பேதுருவுடைய நிழல் விழுந்தபோது அவர்கள் சொஸ்தமானார்கள் (அப்போஸ்தலர் 5:15 ஐப் பார்க்கவும்).

தேவன் தம்முடைய ஜனங்களுக்கு ஏசாயா 43:18 இல் இவ்வாறு கூறுகின்றார், “முந்தினவைகளை நினைக்கவேண்டாம், பூர்வமானவைகளைச் சிந்திக்கவேண்டாம்.” இது நம் எல்லாருக்கும் உரிய மிகப்பெரிய புத்திமதியாகும். இது கடந்தகாலத்தில் தங்கியிருப்பதை நிறுத்தும் காலம். கடந்த காலத்தில் தங்கியிருப்பதை நிறுத்தும் வரையில் எதிர்காலத்தில் எந்தநன்மையும் நடக்க முடியாது. தோல்வியே முடிவாக இருக்கத் தேவையில்லை. இந்த கோணத்தை தழுவிக்கொள்ளுங்கள்: நாம் ஒருபோதும் கீழான நிலையில் இருப்பதில்லை; ஒன்று நாம் மேலே எழும்புவோம் அல்லது அதற்கும் மேலே எழும்புவோம்.

# தோல்விக்கான பொதுவான காரணங்கள்

## *நோக்கம் 2:*

*தோல்விக்கான ஐந்து பொதுவான காரணங்களை இனம்காணல்.*

தோல்விக்கான அநேக காரணங்கள் இருக்கும் அதேவேளை, இங்கே பொதுவான ஐந்து காரியங்கள் கொடுக்கப்பட்டுள்ளது:

**வரும் நாட்களை திட்டமிடாமை**

தேவன் திட்டமிடுபவர். அவர் காரியங்களை தன்னுடைய முடிவற்ற முன்னறியும் திறத்தினாலும், ஞானத்திலும் காரியங்களை அசையும் அடிப்படையில்அமைத்துள்ளார். நாமும் வரும் காலங்களை திட்டமிடல் வேண்டும். மழை வருஷிப்பதற்கு அநேக காலங்களுக்கு முன்னரே நோவா பேழையைக் கட்ட ஆரம்பித்துவிட்டான் என்பதை நினைவிற்கொள்ளுங்கள். ஒரு பழைய பழமொழி இவ்வாறு கூறுகின்றது நீங்கள் திட்டமிடுவதில் தோற்றுவிட்டால் பின்னர் நீங்கள் தோல்வியடைவதற்காகவே திட்டமிடுகின்றீர்கள், இது உண்மையும்கூட. நீதிமொழிகள் 27:12 உம் நமக்கு அதே உண்மையை ஞாபகப்படுத்துகின்றது, "விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்துகொள்ளுகிறான்." உங்களுக்கும் எனக்கும் நம்முடைய வாழ்க்கையைக் குறித்து திட்டம் இல்லாவிடின், வேறு ஒருவர் அதைச் செய்வார். நமக்கு தீர்மானம் எடுப்பதற்கு முடியாவிட்டால் வேறு ஒருவர் நமக்காக தீர்மானம் எடுப்பார்.

**மிதமிஞ்சிய நம்பிக்கை**

திமிங்கலத்தின் பாடத்தைக் கற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் மேலே வந்து ஊதுவதற்கு ஆரம்பிப்பீர்கள், அப்போது நீங்கள் மாட்டிக்கொள்வீர்கள்! நீதிமொழிகள் 16:18, "அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை." பவுலும் இதை வலியுறுத்தி இவ்வாறு எழுதுகிறார், "இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்" (1 கொரிந்தியர் 10:12).

சிலவேளைகளில் நாம் "நோக்கத்தை அடைந்தாயிற்று" என்பதுபோல கிரியை செய்வோம் ஆகிலும் எமது உள்ளத்தின் ஆழத்தில் நாம் இன்னும் அதற்கு தூரமாயுள்ளோம் என்பதை நாம் அறிவோம். நாம் முட்டாளகக் காணப்படுவோமோ அல்லது அவமானப்படுவோமோ என்ற பயமும் நம்முடைய பிரச்சினையின் ஓர் பகுதியாகும். சிக்காகோ பத்திரிகையில் காணப்பட்ட ஒரு கட்டுரையில் அமெரிக்காவின் மருந்துக்கடைகளில் ப்ரிப்பரேஷன் H என்னப்படுகின்ற ஹேமர்ஹய்ட்ஸ் என்னும் நோய்க்கு பூசும் ஒரு வகை கிரீமானது அதிகமாக களவாடப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. உண்மையாக, அநேகர் தமக்கு அந்த சரீர பிரச்சினை இருப்பதாக ஏற்றுக்கொள்ள வெட்கப்பட்டனர்.அதனால் பணம் செலுத்தும் வரிசையில் நின்று அவமானத்திற்கு முகங்கொடுப்பதைப் பார்க்கிலும் களவெடுப்பதையே விரும்பினர்.

**பயம்**

தோற்றுவிடுவமோ என்றVபயம்கூட தோல்வியை ஏற்படுத்தலாம். நாம் தோற்கும்போது மற்றவர்கள் நம்மைக் குறித்து என்ன நினைப்பார்கள் என்பதைக் குறித்து கவலைப்படும்போது, சவாலான ஒரு விடயத்தை செய்வதற்கும் நாம் முயற்சிக்கமாட்டோம். நீதிமொழிகள் 29:25 “மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்.” புதிய காரியங்களை செய்வதற்கு என்னை உற்சாகப்படுத்தும் ஒரு வழி என்னவெனில், வாரத்திற்கு ஒரு தவறை மாத்திரமே செய்ய அனுமதி உண்டு. ஆகிலும், ஒரே தவறை மீண்டும் மீண்டும் செய்தல் கூடாது என்று என்னிடத்தில் நானே சொல்லிக்கொள்வேன். நான் இதைக் குறித்து இன்னும் அதிகமாக இந்த பாடத்தின் இறுதியில் கலந்துரையாடுவேன்.

**விரைவில் கைவிட்டுவிடல்**

அநேகவேளைகளில் வெற்றி அருகாமையில் இருக்கும்போது நாம் மிகவும் விரைவில் கைவிட்டுவிடுகின்றோம். தீர்க்கதரிசியான தானியேல் ஒரு சந்தர்ப்பத்தில் அவனது ஜெபத்திற்கு பதிலின்றி பல நாட்கள் தொடர்ந்து ஜெபித்துக்கொண்டிருந்ததாக சொல்லப்படுகின்றது. அதன் பின்னர் ஒரு நாள் அவன் கண்ட தரிசனத்தில் ஒரு வல்லமையான தூதன் தோன்றி அவனிடம் இவ்வாறு கூறினார் “அப்பொழுது அவன் என்னை நோக்கி: தானியேலே, பயப்படாதே; நீ அறிவை அடைக்கிறதற்கும், உன்னை உன்னுடைய தேவனுக்கு முன்பாக சிறுமைப்படுத்துகிறதற்கும் உன் மனதைச் செலுத்தின முதல் நாள் துவக்கி உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது; உன் வார்த்தைகளினிமித்தம் நான் வந்தேன்” (தானியேல் 10:12). தேவன் தானியேலுடைய ஜெபத்தை கேட்ட வேளையிலே உடனடியாக ஒரு தூதனை அனுப்பினார். அந்த தூதன் ஒரு ஆவிக்குரிய போராட்டத்தின் காரணமாக இருபத்தொரு நாட்கள் தாமதமானான். தானியேல் பத்தாவது நாளிலோ, பதினைந்தாவது நாளிலோ அல்லது இருபதாவது நாளிலோ அந்த ஜெபத்தை நிறுத்தியிருந்தால் என்னவாயிருந்திருக்கும் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

**தேவனுடைய புத்திமதியை கவனியாதிருத்தல்**

வேதாகமமானது மனிதர்களுக்கான உரிமையாளரின் கையேடாகும். அது வேலை, வீடு, பணம், உறவுகள், மற்றும் ஆரோக்கியத்திற்கான நடைமுறை பாடங்கள் மற்றும் வழிமுறைகளைக் கொண்டுள்ளது. உலகத்தின் தலைசிறந்த புத்திமதிகள் அதில் உண்டு. நாம் உறுதியுடன், பிடிவாதமாக தேவனுடைய வழிநடத்தலை பின்பற்றத் தவறிவிட்டால் நாம் எதிர்மாறான விளைவுகளால் பாடுபடவேண்டியிருக்கும். நீதிமொழிகள் 14:12 “மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்.” வெற்றி பெறுவதற்காக நாம் கடினமாக முயற்சி செய்யமுடியும். ஆகிலும், நாம் காரியங்களை தேவனுடைய வழிகளில் நடப்பிக்காவிடின் நம்முடைய சொந்த முயற்சிகள் பயனற்றதாகிவிடும். யாக்கோபு எழுதியதை நினைவுபடுத்துங்கள், “உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூர்ணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்” (யாக்கோபு 1:5).

## ஓர் புதிய ஆரம்பம்

### *நோக்கம் 3:*

*எவ்வாறு ஓர் புதிய ஆரம்பத்தை உருவாக்க முடியும் என்பதை விபரித்தல்.*

---

கீழே தரப்பட்டுள்ள போரிட்டா நெல்சன்என்பவரால் எழுத்தப்பட்ட ஐந்து குறுகிய பாகங்களை உடைய சுயசரிதையை வாசியுங்கள்.

I

நான் வீதியில் நடந்தேன்.
வீதியோர நடைபாதையில் இருந்த ஆழமான குழிக்குள்
நான் விழுந்துவிட்டேன்.
நான் தொலைந்துபோனேன் … நான் உதவியற்றுள்ளேன்.
இது என்னுடைய தவறல்லவே.
இதிலிருந்து நான் மீண்டு வரும் வழியை கண்டுபிடிப்பது எனக்கு சதாகாலமாயிற்று.

II

நான் அதே வீதியில் நடந்துசென்றேன்.
வீதியோர நடைபாதையில் ஆழமான குழியொன்று இருந்தது.
நான் அதை பார்க்காததுபோன்று பாசாங்கு செய்தேன்.
நான் மறுபடியும் விழுந்தேன்.
என்னால் நம்பமுடியவில்லை நான் அதே இடத்தில் இருக்கின்றேன்
ஆனாலும், அது என்னுடைய தவறல்ல.
இதிலிருந்து நான் எழும்புவதற்கு எனக்கு இன்னும் காலங்கள் ஆகின்றது.

III

நான் அதே வீதியில் நடந்தேன்.
வீதியோர நடைபாதையில் ஆழமான குழியொன்று இருந்தது.
நான் பார்த்தேன் அது அங்கேயே இருந்தது.
நான் திரும்பவும் விழுகின்றேன் … இது பழக்கமாகியது.
என் கண்கள் திறந்தது
நான் எங்கே இருக்கிறேன் என்பதை நான் அறிவேன்.
இது என் தவறு.
நான் உடனடியாக எழுந்தேன்.

IV

நான் அதே வீதியில் நடந்தேன்.
வீதியோர நடைபாதையில் ஆழமான குழியொன்று இருந்தது.
நான் அதை சுற்றி நடந்தேன்.

V

நான் வேறொரு வீதியில் நடந்தேன்.

வெற்றியுள்ள மனிதர்கள் தோல்வியை எவ்வாறு அனுபவ பாடமாக மாற்றிக்கொள்வதென்பதை அறிவார்கள். உங்கள் வாழ்க்கையில் முகங்கொடுத்த தோல்விகள் எதுவாக இருந்தாலும் மீண்டும் ஆரம்பிப்பதற்கான மூன்று படிகள் கீழே தரப்பட்டுள்ளன.

## படி 1–சாக்குபோக்குகளை சொல்வதை நிறுத்திக்கொள்ளுங்கள்

நாம் ஏற்கனவே கற்றுக்கொண்டதுபோல அதிகமான தோல்விகள், எல்லாத் தோல்விகளும் அல்ல. அவையெல்லாம் அற்பமான தெரிந்தெடுத்தலின் காரணத்தினாலாகும். அநேகமாக இந்த ஒவ்வொரு பிரச்சினைகளும் இந்த நான்கில் ஒன்றை பின்தொடரும்:

1. சென்ற காலத்தில் நாம் செய்த ஏதேனும் ஒரு காரியம்.
2. நாம் இப்பொழுது செய்துகொண்டிருக்கும் ஏதேனும் ஒரு காரியம்.
3. நாம் செய்வதற்கு அனுமதிக்கும் ஏதேனும் ஒரு காரியம்.
4. நாம் செய்யத் தவறிய ஏதேனும் ஒரு காரியம்.

நாம் தோல்வியிலிருந்து நம்மை கட்டியெழுப்பும் செயல்முறையை ஆரம்பிக்கும்போது நாம் உருவாக்கிய பிரச்சினைகளின் பொறுப்பை நாம் நேர்மையாக ஏற்றுக்கொள்ளுவோம். நாம் தோல்விக்கான சாக்குபோக்குகளை சொல்லுவதையும் மற்றவர்களை குறைகூறுவதையும் நிறுத்துவோம். நாம் நம்மை சூழ்நிலைக் கைதியாக பார்ப்பதை நிறுத்திவிடுவோம். நீதிமொழிகள் 28:13, “தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.”

## படி 2– உங்கள் அனுபவங்களை மதிப்பீடுசெய்தல்

அப்போஸ்தலர் பவுல் கலாத்தியர் 3:4 இல் இவ்வாறு கேட்கின்றார் “இத்தனை பாடுகளையும் வீணாய்ப்பட்டீர்களோ? அவைகள் வீணாய்ப்போயிற்றே.” இந்நிலைமையில், கலாத்தியர்கள் அந்நிய மதத்திலிருந்து கிறிஸ்துவின் மீதானவிசுவாசத்திற்கு மாறுவதற்கு செலுத்திய கிரயத்தை குறித்து பவுல் குறிப்பிடுகின்றார். துக்கத்திற்கிடமாக, பிழையான போதனை மற்றும் சட்டத்தை அளவுக்கு மீறி அனுசரித்தல் போன்றவற்றால் நெறிதவறி நடக்கக்கூடிய அழிவின் எல்லையில் அவர்கள் காணப்பட்டனர். கிறிஸ்தவர்களாகும்படி அவர்கள் செலுத்திய கிரயத்தையும்,தடம் புரளச் செய்வதற்கு எதையுமே அனுமதிக்கக்கூடாத அவசியத்தையும்,தங்களுடைய கடந்த காலத்தைக் குறித்து விழிப்புள்ளவர்களாக இருப்பார்கள் எனவும் பவுல் எதிர்பார்த்தார்.

நம்முடைய கடந்தகால தவறுகள் அநேகமாக உணர்வு ரீதியான, சரீர ரீதியான, பொருளாதார ரீதியான, உறவு ரீதியான மேலும் பல கஷ்டங்களை உருவாக்கியிருக்கலாம். நம்முடைய வாழ்வில் நடந்த எல்லாக் காரியங்களையும் நினைவில் வைத்திருத்தல் மாத்திரம் போதாது; நாம் நம்முடைய அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்ளவும்வேண்டும். நாம் மீண்டும் மீண்டும் ஒரே கண்ணியில் விழுவதையும் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். ஜோன் மெக்ஸ்வெல், "அனுபவங்கள் சிறந்த ஆசான்கள் அல்ல; மதிப்பீடு செய்யப்பட்ட அனுபவங்களே நமக்குக் கற்றுக்கொடுக்கின்றது" என்பதை அவர் கூர்ந்து கவனித்தார். ஆகவே தோல்வியிலிருந்து நாம் கற்றுக்கொள்வோமாயின் மெய்யாகவே தோல்விகள் நமது நண்பர்களாகிவிடுகின்றன.

அப்படியானால், நாம் எவ்வாறு நம்முடைய தவறுகளிலிருந்து கற்றுக்கொள்வது? நாம் நம்மிடத்தில் சரளமான மூன்று கேள்விகளைக் கேட்க வேண்டும். முதலாவது கேள்வியானது "நான் என்னத்தைக் கற்றுக்கொண்டேன்?"குறிப்பிட்ட காலப்பகுதிக்குரிய பாடங்களில் அண்மையில் நிகழ்ந்த தோல்வியிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்டவற்றை சுருக்கமாக எழுதுவற்கு அது உங்களுக்கு உதவி செய்யும். நீங்கள் மீண்டும் தவறக்கூடிய சூழ்நிலையில் இருப்பீர்களாயின் எதை செய்ய வேண்டும் எதை செய்யக்கூடாது என்பதை பட்டியலிடுங்கள். நீங்கள் தெரிவு செய்த குறிப்பிட்டத் தெரிவுகளால் ஏற்பட்ட விளைவுகளைக் குறிப்பிடுங்கள். அதை அடிக்கடி திரும்பிப் பார்க்கும்படி இந்த அறிக்கையை வைத்துக்கொள்ளுங்கள்.

இரண்டாவது கேள்வியானது "என்னிடத்தில் என்ன சொத்துக்கள் உண்டு?" உங்களிடத்தில் இருக்கிறவற்றைக் குறித்து நினையுங்கள். இன்னும் உங்களுக்கு நல்ல ஆரோக்கியம் உள்ளதா? நீங்கள் விடுதலையை சந்தோஷமாக அனுபவிக்கின்றீர்களா? நீங்கள் தெளிந்த புத்தியுடன் உள்ளீர்களா? உங்களை விசாரிக்கின்ற உங்களை ஆபத்தான வழியில், முட்டாள்தனமான வழிகளில் நடத்தாத ஞானமான வழியில் நடத்துகின்ற நண்பர்கள் உங்களுக்கு உண்டா? உங்களுக்கு கர்த்தர் இருக்கின்றாரா? உங்களுக்கு அன்புள்ள சபைக் குடும்பம் ஒன்றுண்டா? மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும் திறமைகள், தாலந்துகள் மற்றும் இயலுமைகள்உங்களுக்கு உண்டா? இந்த பட்டியல் நீங்கள் நினைப்பதைப் பார்க்கிலும் நீளும். நீங்கள் முற்றிலும் உங்கள் வாழ்க்கையை கெடுத்துக்கொண்டீர்களென எண்ணுவீர்களானால், மெய்யாகவே அது தவறு.நீங்கள் மீண்டும் ஆரம்பித்து உங்களிடத்திலிருக்கின்ற சொத்துக்களின்மீது கட்டியெழுப்பமுடியும்.

மூன்றாவது கேள்வியானது "யார் எனக்கு உதவி செய்வார்?" ஒரு புதிய ஆரம்பத்தை முன்னெடுக்கும்போது – நல்ல நண்பர்கள், கணக்கொப்புவிக்கக்கூடிய பங்காளர்கள், ஆவிக்குரிய தலைவர்கள், உதவிசெய்யும் குழு இவர்கள் போன்ற மனிதர்கள் உங்கள் அருகில்அவசியம். அவர்கள் உங்களுக்கு தைரியத்தை, உதவியை, ஜெபத்தை, வழிநடத்தலை அளிப்பார்கள். உதாரணமாக, உங்கள் சபையில் ஒரு போதகரிடம் பேசுவதைக் குறித்து கவனிம் செலுத்துங்கள்; போதகர்களை அணுகுவதற்கு பயப்படாதீர்கள்; அவர்கள் உங்களுக்காகவே அங்கிருக்கிறார்கள்! நீங்கள் யாரை அணுகினாலும் நீங்கள் மறுபடியும் ஆரம்பிக்க வேண்டும் என்பதில் நேர்மையாய் இருங்கள். நம்பத்தகுந்த ஒருவரிடம் நீங்கள் பேசுவது வெட்கம் என்கின்ற உணர்விலிருந்து உங்களை விலக்கும். எவ்வாறாயினும், உங்கள் பிரச்சினைகள் மற்றும் கடந்தகால தோல்விகளை தேவபக்தியற்ற அல்லது உங்களுக்கு உதவி செய்ய முடியாதவர்களிடம் கலந்துரையாடுவதைக் குறித்து கவனமாயிருங்கள்.

## படி 3-விசுவாசத்தில் கிரியை செய்யுங்கள்

உங்கள் வாழ்க்கையின் எந்தப் பகுதியை மாற்றுவதற்காயினும் அதற்கு விசுவாசம் தேவைப்படுகின்றது-தேவனுடைய வாக்குத்தத்தங்களில் உடன்பாடாக உறுதியான நம்பிக்கையுடன் இருத்தலானது உடன்பாடாக செயலாற்றுவதற்கு நம்மை நிர்பந்திக்கின்றது. இயேசு "உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார்" (மத்தேயு 9:29). இயேசுவின் கூற்றுக்கள் சரளமானவை எனினும் அவைகள் வல்லமையானவைகள்; தேவன் மீதுள்ள நமது நம்பிக்கையைப் பொருத்தே வாழ்க்கையில் காரியங்களைப் பெற்றுக்கொள்ளுவோம் என்பதே அதன் அர்த்தம்.

## அப்போஸ்தலர் 3:1-5 வரை வாசியுங்கள்.

ஒரு நாள் பேதுருவும் யோவானும் ஜெபவேளையாகிய பகல் மூன்றாம் மணிவேளையில் தேவாலயத்திற்குச் சென்றார்கள். பிறவியிலேயே சப்பாணியாயிருந்த ஒரு மனிதனை அலங்கார வாசல் என்னும் வாசலண்டைக்கு தூக்கிக்கொண்டு வந்தார்கள். ஒவ்வொருநாளும் அந்த வாசல்வழியாய் பிரவேசிப்பவர்களிடத்தில் பிச்சை எடுக்கும்படி அவனை அங்கு வைப்பார்கள். பேதுருவும் யோவானும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கும்போது, அவன் அவர்களிடத்தில் பணம் கேட்டான். பேதுருவும் யோவானும் அவனை உற்று நோக்கினார்கள். பின்னர் பேதுரு "எங்களைப் பார்!" என்றான் அந்த மனிதன் அவர்களிடத்தில் ஏதாயினும் பெறுக்கொள்ளும்படி எதிர்பார்த்து அவர்களுக்கு நேராக தன் கவனத்தைச் செலுத்தினான்.

இந்த சப்பாணியான மனிதன் உதவியை எதிர்பார்த்து ஏதோ ஒன்றை அவர்களிடம் கேட்டான். ஆகிலும் அவன் கேட்டதைப் பார்க்கிலும் அதிகமானதைப் பெற்றுக்கொண்டான். தேவன் அவனை முழுமையாகக் குணமாக்கினார். எபேசியர் 3:20 இல் பவுல் தேவனைக் குறித்து இவ்வாறு விபரிக்கின்றார் "நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராயிருக்கிற அவருக்கு."

அப்படியானால் ஒருவன் விசுவாசத்தில் கிரியை செய்ய ஆரம்பிப்பது எப்படி? முதலாவதாக, நீங்கள் எதிர்மாறான ஒருவராக இருத்தல்கூடாது. இந்த சோர்வை, அதைரியத்தை, மனவேதனையான எண்ணங்களை மீண்டும் சிந்திப்பதே நீங்கள் சோர்வுற்றவர்களாய், அதைரியப்பட்டவர்களாய் மனவேதனையில் இருக்கக் காரணம். நீங்கள் நினைக்கும் விதமே அநேகமாகநீங்கள் உணரும் விதத்தை தீர்மானிக்கின்றது. நீங்கள் உணரும் விதமே எப்பொழுதும் நீங்கள் கிரியை செய்யும் விதத்தை தீர்மானிக்கின்றது. ஆகவே, உங்கள் கிரியைகளை நீங்கள் மாற்றவேண்டுமெனில், நீங்கள் நினைக்கும் விதத்தை மாற்றுங்கள்.

இரண்டாவதாக, கிறிஸ்து எமக்கு வெற்றி தருகிறார் என்பதை நினைவிற்கொள்ளுங்கள். அவருடைய அன்பை விட்டு நம்மை எதுவுமே பிரிக்கமுடியாது. பரிசுத்த ஆவியினால் நிரப்பியிருப்பதனால் நாம் சாத்தானை வெற்றிகரமாக துரத்தமுடியும். தேவன் நமக்கு ஞானம், அன்பு, சந்தோஷம் மற்றும் ஆவிக்குரிய வல்லமையை அளித்திருக்கின்றபடியால் எந்தப் பிரச்சினையையும் மேற்கொள்ள நம்மால் முடியும்.

மூன்றாவதாக, தேவனுடைய வாக்குத்தத்தங்களைக் கற்றுக்கொண்டு அவற்றை உறுதியான நம்பிக்கையுடன் அறிக்கையிடுங்கள்! நிச்சயமாக நீங்கள் அவற்றை கற்றுக்கொள்வதற்காக வேதாகமத்தை வாசிக்கவேண்டும். சமாதானம், சுகம், நல்ல பொருளாதார நிலைமை, திருமணம், வழிநடத்தல் இன்னும் பல இவைபோன்ற வேத வசனங்கள் உள்ளடங்கிய அறிக்கையொன்றை உங்களிடத்தில் வைத்துக்கொள்ளும்படி நான் உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன்.

நான்காவதாக, ஒவ்வொரு நாளும் தேவனைச் சார்ந்திருப்பதற்குத் தீர்மானமொன்றை எடுங்கள். உங்களுடைய சில தவறுகள் மற்றும் தோல்விகளாவன தேவனைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாக உங்களுடைய திறமைகளில் சார்த்திருத்தலின் நேரடி விளைவு என்பதை இப்பொழுதுநீங்கள் அறிந்துகொண்டிருக்கக்கூடும். சில மனிதர்கள் தங்களுக்கு தேவன் தேவையென்பதை கற்றுக்கொள்வது போல் தெரியவில்லை. தாங்கள் சறுக்கி விழுந்த பின்னர் "நான் இன்னும் கடுமையாக முயற்சித்திருக்கவேண்டும் என நான் ஊகிக்கின்றேன்! என்று கூறுவார்கள் இதுவும் அரிதாகவே நடைபெறும்." செய்தவற்றையே மீண்டும் மீண்டும் செய்து வித்தியாசமான விளைவுகளை எதிர்பாத்தலே பைத்தியம் என்று விபரிக்கப்படுகின்றது. உண்மையென்னவென்றால் நாம் செய்தவற்றையே தொடர்ந்து செய்தால் நாம் தொடர்ந்து அதே மாதிரியான விளைவையே பெற்றுக்கொள்ளுவோம். ஆகவேநீங்கள் சரியான வழியில் நடத்தப்படுவதற்கு தேவனுடைய உதவியைச்சார்ந்திருங்கள்.

## பிரதானமான கொள்கைகள்

### *நோக்கம் 4:*

*தேவனுக்கு ஊழியம் செய்யும்போது நினைவிற்கொள்ள வேண்டிய பிரதானமான கொள்கைகளைக் குறிப்பிடுதல்.*

நீங்கள் ஒரு அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவனாக ஆவியில் முதிர்ச்சியடையும் ஒருவராக இருப்பீர்களென்றால், நீங்கள் அநேக தவறுகளை மீண்டும் மீண்டும் செய்யமாட்டீர்கள். எவ்வாறாயினும், எந்தவொரு மனிதனோ அல்லது மனுஷியோ எதிர்கால தோல்விக்கான பெறுப்பிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள முடியாது.

கிறிஸ்தவர்கள் வெற்றியை மாத்திரம் அனுபவிக்கவேண்டும் அப்படி இல்லையென்றால் உங்கள் வாழ்க்கையில் ஏதேனுமொரு பாவம் அல்லது விசுவாசக் குறைவு காணப்படுகின்றதென யாரோ ஒருவர் கூறியிருக்கலாம். உண்மையென்னவென்றால் சகல காரியங்களும் தேவனுடைய ஆளுகையின் கீழ் இருப்பதால் வாழ்க்கை முழுவதும் அதிசயங்களால் நிரம்பிக் காணப்படுகின்றது. நீங்கள் முயற்சிக்கும் காரியம் எதுவானாலும் தேவனுக்காக செய்கின்ற காரியங்கள்கூட எபொழுதும் பெரிதான பிரதிபலனைக் கொண்டு வரமாட்டாது. உங்கள் முயற்சிகளின் பிரதிபலன்களைக் கண்டு அநேக வேளைகளில் நீங்கள் அதைரியப்படுகின்ற சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். அதனால், தளுவிக்கொள்வதற்கு இங்கே சில முக்கியமான கொள்கைகள்.

## தோல்வியைக் கண்டு அஞ்சாதீர்கள்

தோல்வியைக் கண்டு அஞ்சாதீர்கள்-இதுவே முதலாவது கொள்கையாகும். துக்கத்திற்கிடமாக, சில மனிதர்கள் தேவனுக்காக பெரிய காரியங்களை செய்வதற்கோ அல்லது புதிய காரியங்களை செய்வதற்கோ முயற்சிக்காதிருக்கக் காரணம் தோற்றுவிடுவமோ என்கின்ற பயமாகும். சிலவேளைகளில் அவர்கள் அதற்கு முன் அநேக தடவைகள் ஏமாற்றமடைந்திருக்கலாம் அல்லது மற்றவர்களால் கேலி செய்யப்பட்டிருக்கலாம். ஆனாலும் அநேக காரியங்கள்முடியாது என எண்ணுவதற்கு காரணம் நாம் ஒருபோதும் அக்காரியங்களை செய்வதற்கு முயற்சிக்காததேயாகும்.

தோல்விக்கான பயத்தின் அடிப்படைக் காரணமாக அமைவது பிழையான புரிந்துணர்வாகும்; தோல்வி நம்முடைய பாதுகாப்பையும் முக்கியத்துவத்தையும் அச்சுறுத்துவதாக நாம் உணர்கின்றோம். ஆனாலும் தோல்வியின் பயத்தை நாம் மேற்கொள்ளும்படி தேவன் நமக்கு ஒரு வழியை ஏற்படுத்தியிருக்கின்றார். அப்போஸ்தலர் பவுல் இவ்வாறு எழுதுகிறார், "நாம் அவருக்குள்ளே தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார்" (2 கொரிந்தியர் 5:21). நாம் கிறிஸ்து இயேசுவை நம்பும்போது அவருடைய பரிபூரணத்திற்கு நம்முடைய தோல்விகளை நாம் விற்றுப்போடுகின்றோம். சோதனையை மேற்கொள்ள அவருடைய பெலனை நமக்கு தருவதாக தேவன் நமக்கு வாக்களித்துள்ளார். எவ்வாறாயினும், நாம் பாவம் செய்யும்போது அதை ஒழித்துவிட அல்லது பாவத்துடன் இடைப்பட தாமதித்தல்கூடாது. அதற்குப் பதிலாக நாம் விரைவாக தேவனிடத்திற்கு ஓடிச்சென்று மன்னிப்பை பெறவேண்டும் (1 யோவான் 1:9).

தேவனுக்கு ஊழியம் செய்வதில் அல்லது தங்கள் வாழ்க்கையில் வெற்றியை பெற்றுக்கொள்வதற்கு முயற்சி செய்வதில் தோற்றுவிடுவோம் என்ற பயத்தை உணர்கின்றவர்கள் இதனை நன்கு நினைவிற்கொள்ளுங்கள் அதாவது, கிறிஸ்தவ வாழ்க்கையின் முக்கிய நோக்கம் சாதனைகளை திட்டமிடுவது அல்லது குறிப்பிட்ட சில இலக்குகளை அடைவது மாத்திரம் அல்ல; மாறாக அது தேவனோடுகூட உண்மையான சிறந்த உறவை பேணுவதும் அவருக்கு கீழ்ப்படிவதும் ஆகும். வெற்றி பெறுவதில் தவறு இல்லை. என்றாலும், நாம் எவ்வளவு செய்கின்றோம் என்பதில் அல்ல தேவனுடைய கண்களில் நமது பெறுமதி தங்கியுள்ளது. நாம் தேவனுக்கும் மற்றவர்களுக்கும் எதையும் செய்முறைகள் மூலம் நிரூபித்துக் காண்பிக்கத் தேவையில்லை.

## தோல்வி என்பது ஒரு நிகழ்வே தவிர ஒரு நபர் அல்ல

உங்களுடைய தோல்வி உங்களை தோல்வியாளனாக்கிவிடாது. முன்நோக்கிச் செல்லும்போது ஒவ்வொரு தனிநபரும் தவறுகள் இழைக்கத்தான் போகின்றனர். அமைதியாக இருப்பதும் சவாலானதும் துணிகரமானதுமான காரியங்களை செய்யாமலிருப்பதுமே அதற்கான மாற்று வழியாக காணப்படுகின்றது. ஒரு விதத்தில் தோல்வி என்பது வளர்ச்சிக்காக செலுத்தப்படும் கிரயமாகும்.சராசரியான வியாபாரிகள் தங்கள் தொழிலை வெற்றிகரமாக தாபிப்பதற்கு முன் அவன் அல்லது அவள் இரண்டு அல்லது மூன்று தடவைகள் தோல்வியை சந்திக்கின்றார்கள் என்று சில ஆய்வுகள் காண்பிக்கின்றது. நான் ஒரு பண்ணையிலிருக்கும்

போது விவசாயி ஒருவர் இவ்வாறு கூறியது என் நினைவில் உள்ளது, "தோல்வி நல்லது; அது எல்லாவற்றையும் செழிப்பாக்குகின்றது."

**வெற்றிபெறுவதற்காக தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்புங்கள்**

நீங்கள் தனிமையாக இல்லை. உங்கள் வாழ்க்கைக்கான தம்முடைய நோக்கங்களை நீங்கள் நிறைவேற்றுவது தேவனுக்கு வேண்டியதாகவுள்ளது. அப்போஸ்தலர் இந்த வாக்குத்தத்தத்தைக் இவ்வாறு பெருமை பாராட்டுகிறார்: "உங்களில் நற்கிரியைகளை தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி" (பிலிப்பியர் 1:6). நீங்கள் தோல்வியடையும்போது நீங்கள் இருக்குமிடத்திலிருந்து தேவன் அதை மீண்டும் ஆரம்பிக்க வல்லவராயிருக்கிறார் என்பதைக் கண்டுகொள்வீர்கள். உங்களுடைய தோல்விகள் எதுவாயிருந்தாலும் சரி இயேசு உங்கள் நண்பனாகவும் உங்கள் துணையாகவும் நிற்கும்படி வாஞ்சிக்கின்றார். உங்களுக்காக மரித்த இரட்சகர் உங்களை இன்னும் நேசிக்கின்றார்.

## குறிப்புப் பட்டியல்

"Ministry in daily life." 2004. InterVarsity Christian Fellowship. http://www.ivmdl.org/quotables (accessed July 11, 2007)

# பாடம் 7

## ஆவியானவரின் வரங்கள்

ஆவிக்குரிய வரங்களை செயற்படுத்துதலானது ஆவியில் நிரம்பிய மற்றும் ஆவியில் நடாத்தப்படுகின்ற வாழ்க்கையில் காணப்படும் ஓர் மிகப்பெரிய சந்தோஷமாகும். பெந்தெகொஸ்தே நாளன்று ஆதி சீஷர்கள் ஆவியில் நிரம்புதல் என்றால் என்ன என்பதின் அர்த்தத்தை கண்டுகொண்டார்கள் (அப்போஸ்தலர் 2:1-4). அவர்கள் தேவனுடைய திட்டவட்டமான வழிகாட்டலுக்கு கீழ்ப்படிந்தபோது வார்த்தையானது பரிசுத்த ஆவியானவருடன் தொடர்புபட்டுள்ளதென்பதை விளங்கிக்கொண்டதுடன் தேவனுடைய மகிமை அவர்களில் வெளிப்பட்டது என்பதையும் அவர்கள் தெளிவாய் அறிந்துகொண்டார்கள். தேவனுடைய நற்செய்தியை பகிரும்படிக்கு சென்றதுடன் தேவனுடைய பிரசன்னத்தின் சாட்சியையும் விட்டுவந்தனர். அந்த சாட்சியானது அநேகமாக ஆவிக்குரிய வரங்களின் செயற்பாட்டின் பிரதிபலனாகும். ஆவியின் ஞானஸ்நானமானது அதைப் பெற்றுக்கொள்பவர்களுக்கு ஆவிக்குரிய வரங்களின் முழு வகைகளையும் அணுகத்தக்கதொன்றானது. பெந்தெகொஸ்தே நாளுக்கு பின்னர், முன் நாட்களைவிட வரங்களின் உயர்ந்த சம்பவங்கள் உபயோகத்தில் காணப்பட்டது.

அவ்வாறே இன்றும் ஆவிக்குரிய வரங்களின் முழு வகைகளையும் அனுபவிப்பதற்கு நாம் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றிருத்தல் வேண்டும். நாம் அனைவரும் நற்செய்தியை பகிர்ந்துகொள்ளும்படிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம்; தேவன் இப்பொழுதும் நற்செய்தியின் சாட்சியை மனிதர்களின் வாழ்க்கையில் வைக்கின்றார்.

அதிர்ஷ்டவசமாக ஆதி சபையின் அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்ளும் வரப்பிரசாதம் எமக்கு கிடைத்திருக்கின்றது. அப்போஸ்தலர் புத்தகமானது செயற்பாட்டிலிருந்த ஆவியானவருடைய சிற்சில வரங்களைக் குறித்து எமக்குக் காண்பித்திருக்க, 1 கொரிந்தியர் அவைகளைக் குறித்த பரந்த படிப்பினையைத் எமக்குத் தருகின்றது. நாம் கற்றுக்கொள்கின்ற அநேக படிப்பினைகள் புதிய ஏற்பாட்டிலுள்ள இவ்விரண்டு புத்தகங்களிலிருந்து வருகின்றவையாகும். ஆகவே, அப்புத்தகங்களை நன்றாக அறிந்துகொள்ளுங்கள் என்று நான் பலமாக பரிந்துரைசெய்கின்றேன். தேவன் தம்முடைய பிரசன்னத்தையும் வல்லமையையும் உங்கள் மூலமாக வெளிப்படுத்த அவசியமாயிருப்பதை உறுதிபடுத்திக்கொள்ளுங்கள். இதை அறிந்தவராய் பவுல் எம்மிடம் மனப்பூர்வமாய் வேண்டிக்கொள்வது என்னவெனில், “அன்பை நாடுங்கள்; ஞானவரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்” (1 கொரிந்தியர் 14:1). இதனை செய்வதற்கான எளிமையான வழி என்னவெனில் அந்த வாஞ்சையானது தேவனுடைய வார்த்தையில் உங்கள் அறிவு வளரவும் பரிசுத்தஆவியானவரின் வழிநடத்தலுக்கு மிகவும் உணர்வுள்ளவராக இருப்பதினூடாகவும் நிறைவேறவேண்டுமென்றும் ஜெபியுங்கள்.

## பாடத்தின் முக்கிய அம்சங்கள்

ஆவிக்குரிய வரங்கள் எவை?

கட்டளைக்கான அவசியம்

செயல் பிறழ்ச்சியும் ஆவிக்குரிய வரங்களும்

## பாடத்தின் நோக்கங்கள்

1. *ஆவிக்குரிய வரங்கள் என்றால் என்ன என்பதை விளக்குதல்.*

2. *ஆவிக்குரிய வரங்களை பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்களை குறிப்பிடுதல்.*

3. *ஆவிக்குரிய வரங்களை பயன்படுத்தும்போது செயல் பிறழ்ச்சியை அடையாளம் கண்டுகொள்ளல்.*

### ஆவிக்குரிய வரங்கள் எவை?

### *நோக்கம் 1:*

*ஆவிக்குரிய வரங்கள் என்றால் என்ன என்பதை விளக்குதல்.*

ஒழுங்குமுறையாவோ அல்லது ஒழுங்குமுறையற்றோ ஆவிக்குரிய வரங்களை விளக்கப்படுத்தும் திறமையானது, அவைகள் என்ன என்பதை கற்றுக்கொள்ளுவனூடாகவும் அவற்றை நேரடியாக அனுபவிப்பதனூடாகவும் ஆரம்பிக்கின்றது. இவ்வரங்கள் ஒருபோதும் சாதாரணமான கற்கைக்கு மாத்திரமல்ல, மாறாக ஒரு செயற்றிறனுள்ள பங்குகொள்ளுதலுக்காகவுமாகும். அறிவுடனும் ஈடுபாட்டுடனும் ஒரு நபர் ஆவிக்குரிய வரங்களை குறித்து மென்மேலும் அதிகமாக அறிந்துகொள்ளும்போது மற்றவர்களும் பரிசுத்தஆவியானவருடன் இடைப்படும்படி உதவிசெய்தற்கு அவன் அல்லது அவள் மென்மேலும் திறமையுள்ளவர்களாவார்கள்.

முதலாம் கொரிந்தியர் 12:7-11 பரிசுத்த ஆவியானவரின் வித்தியாசமான ஒன்பது வரங்கள் அல்லது வெளிப்பாடுகளை பட்டியற்படுத்துகின்றது. அவையாவன ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம், விசுவாசம், குணமாக்கும் வரங்கள், அற்புதங்களைச் செய்யும் சக்தி, தீர்க்கதரிசனம் உரைத்தல், ஆவிகளைப் பகுத்தறிதல், பற்பல பாஷைகளைப் பேசுதல், பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதல் ஆகியவையாகும். ஒவ்வொரு வரமும் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வெளிப்பாட்டின் வழியாக வருகின்றதோடு,

கிறிஸ்துவினுடைய சரீரத்திற்கு பக்திவிருத்தியை உண்டாக்கவும் மற்றும்/அல்லது ஏதாயினுமொரு நல்வழியில் அவிசுவாசிகளுக்கு தாக்கத்தை விளைவிப்பதையும் நோக்காகக்கொண்டுள்ளது (1 கொரிந்தியர் 12:7). கீழ்வரும் இவ்விபரங்கள் ஆவிக்குரிய வரங்களைக் குறித்து உங்களுக்கு அறிமுகப்படுத்துகின்றதோடு அவை மூன்று வகைக்குள் அடங்குகின்றது: விளக்கமளிக்கும் வரங்கள், செய்முறை மூலம் நிரூபித்துக்காட்டும் வரங்கள், தெரியப்படுத்தும் வரங்கள்.

## விளக்கமளிக்கும் வரங்கள்

இவ்வரங்கள் ஒரு தனிநபர் அல்லது ஒரு குழு மக்களிடத்தில் பரிசுத்தஆவியனானவரின் பிரசன்னத்தின் சில நோக்கங்களை குறித்து விளக்குகின்றது. ஆவியானவரின் இவ்வாய்மொழி மூலமான வெளிப்பாடானது நீங்கள் நிச்சயமாக நன்கு பரிச்சயமாக்கிக்கொள்ளவேண்டிய ஒரு எளிமையான படிமுறைகளை பின்பற்றுகின்றது. முதலாவதாக, ஆவியானவர் அந்த வரத்தை யார் மூலமாக பகிர வேண்டுமென்பதை தீர்மானிக்கின்றார் (1 கொரிந்தியர் 12:11). இரண்டாவதாக, அவர் அவ்வரத்தை அந்நபருக்குக் கொடுக்கின்றார் (1 கொரிந்தியர் 12:7). இச் சந்தர்ப்பத்தில், அங்கு கூடியிருக்கின்றவர்களுக்கு தேவனுடைய பிரசன்னத்தின் ஒரு சில நோக்கங்களை விளக்கப்படுத்துவதே இந்த வரமாகும். மூன்றாவதாக, ஆவியானவரிடத்திலிருந்து வந்ததென்பதை விசுவாசிக்கின்ற நபர்அவன் அல்லது அவள் அதைப் பகிர்ந்துகொள்வார்கள் (அப்போஸ்தலர் 21:4, 10-11). நான்காவதாக, அங்கே கூடியிருக்கின்றவர்கள் அந்நபர் கூறியதை மதிப்பீடுசெய்வார்கள் (கொரிந்தியர் 14:29). இச்செயல்முறையின்  மிகவும் முக்கியமான பகுதி இதுவாகும் எப்போதும் உண்மையாகவே தேவனுக்காக பேசுகிறோம் என்று உரிமை பாராட்டுகின்ற ஒவ்வொருவரும் அப்படி அல்ல என்பதுடன் தேவனுடைய நாமத்தினால் பேசும் ஒவ்வொரு செய்தியும் தேவனிடத்திலிருந்து வந்ததும் அல்ல (மத்தேயு7:22-23 ஐப் பார்க்கவும்). அந்த வார்த்தையானது ஆவியானவரிடத்திலிருந்து வந்ததென்று ஏற்றுக்கொள்ளப்படுமாயின் அது பெற்றுக்கொள்ளப்படவேண்டும். அந்த வார்த்தையானது ஆவியானவரிடத்திலிருந்து வரவில்லையென்று ஏற்றுக்கொள்ளப்படுமாயின் அது அகற்றப்படவேண்டும் (1 தெசலோனிக்கேயர் 5:19-22). நான் இதை பின்னர் விளக்கப்படுத்துகிறேன்.

## அறிவை உணர்த்தும் வசனம்

அறிவை உணர்த்தும் வசனமானது ஒற்றை “வசனமாக” இருக்கவேண்டிய அவசியமில்லை. அநேகமாக இது ஆவியானவரிடத்திலிருந்து வந்த “செய்தி” என்றே பொருள்படும். ஆனாலும் இது கல்வி கற்றுக்கொள்கின்றதினூடாக வருகின்ற செய்தி அல்ல. இது தேவனிடத்திலிருந்து இயல்பாக பெற்றுக்கொள்ளப்படும் வெளிப்பாடாகும். அதனாலேயே அறிவை உணர்த்தும் வசனமானது கொடுக்கப்பட்ட ஏதாயினுமொரு சூழ்நிலையில் தேவனுடைய பிரசன்னத்தைக் குறித்து சாட்சி கொடுக்கும் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வந்த அறிவின் பங்களிப்பாகும்.

ஒரு மனிதனின் இருதயத்தில் இந்த அறிவின் மூலம் தேவன் தம்முடைய பிரசன்னம் அல்லது அவர் இருக்கின்றார் என்ற மறுக்கமுடியாத அடையாளத்தை வைப்பதே தேவனுடைய விருப்பமாகும். அப்போஸ்தலர் 27 ஆம் அதிகாரம் அறிவை உணர்த்தும் வசனத்திற்கான ஓர் நல்ல உதாரணமாகும். சம்பவிக்கப்போகின்ற காரியத்தைக் குறித்து பவுல் நூற்றுக்கு அதிபதியை எச்சரித்தபோதும் அந்த நூற்றுக்கு அதிபதி அவனுக்கு செவிகொடுக்கக்கூடாது

என்று தீர்மானித்துக்கொண்டான் (வசனங்கள் 9-11). பலத்தகாற்றுக்குப் பின்பு (வச. 13-20) பவுல், தேவன் இருக்கின்றார் என்றும் தேவனை நம்பமுடியும் என்றும் கப்பலிலிருந்தவர்களுக்கு மீண்டும் உறுதியளிக்கின்றார் (வச. 21-44). அனைவரும் பாதுகாப்பாக கரையிறங்கிய பின்னர், பவுல் சொன்ன விடயம் உண்மை என்பது தெளிவானது. எபிரெயர் 11:6 இவ்வாறு கூறுகின்றது, "ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் (தேவன்) உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்." தேவன் தாம் இருக்கிறார் என்பதையும் அவருடைய பிரசன்னத்தையும் மனிதர்கள் நம்பும்படி அவர்களுக்கு உதவிசெய்வதற்கு இந்த அறிவை உணர்த்தும் வசனம் வழியாக அமைகின்றது.

## ஞானத்தைப் போதிக்கும் வசனம்

அறிவை உணர்த்தும் வசனத்தைப்போலவே, ஞானத்தைப் போதிக்கும் வசனமும் அநேகமாக ஒரு "செய்தியாகும்" அது வெறுமனே ஒரு ஒற்றை வசனம் அல்ல. இவை இரண்டிற்கும் இடையில் உள்ள வித்தியாசங்களானது அவற்றின் நோக்கத்திலேயே தங்கயுள்ளது. ஞானத்தைப் போதிக்கும் வசனமானது ஒரு கடினமான பிரச்சினையை தீர்ப்பதற்கு ஆவியானவரிடமிருந்து ஏவப்படுகின்ற வழிநடத்தலாகும். அப்போஸ்தலர் 4:1-27 இல் அதற்கான உதாரணம் காணப்படுகின்றது. பிச்சைக்காரனாகிய சப்பாணியை குணப்படுத்தலின்போது தங்களுடைய பங்கைக் குறித்ததான விபரத்தைக் குறித்து பேதுருவும் யோவானும் கூறுவதைக் காணலாம். 8-12 மற்றும் 18-22 வசனங்களில் பேதுருவும் யோவானும் பேசின ஞானத்தைக் குறித்ததான சம்பவம் சிறப்பாக எடுத்துக்காண்பித்துள்ளது. அதிகாரிகளும் மூப்பர்களும் வியந்தனர் (வச. 13) அதன் விளைவாக அவர்கள் அந்த சீஷர்கள் வெளியேறுவதற்கு இடமளித்தனர்.

ஞானத்தை போதிக்கும் வசனத்தைக் குறித்ததான இன்னுமொரு உதாரணம் அப்போஸ்தலர் 6 ஆம் அதிகாரத்தில் உள்ளது. சீஷர்கள் சபைக்குள் காணப்பட்ட ஒரு பிரச்சினைக்கு முகங்கொடுத்தனர். அதாவது இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டை எப்படித் தீர்ப்பது (வச. 1) அப்போஸ்தலர்கள் கூடி சந்தித்தனர் (வச. 2) தேவனைத் தேடினர். தேவன் அவர்களுடைய தேடுதலுக்கு பலனளித்தார். 3-7 வசனங்களில் திட்டம் பதியப்பட்டுள்ளது, அது எவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்டதென்பதைக் கூறுங்கள். அதற்கான தீர்வு தேவனிடத்திலிருந்து வந்ததென்பதை தெளிவுபடுத்திக்கொள்ளுங்கள்.

## தீர்க்கதரிசனம் உரைத்தல்

வேதாகமத்தில் தீர்க்கதரிசனம் உரைத்தலைக்குறித்து அதிகமாக சொல்லப்பட்டிருக்கின்றபடியினால் இந்த பாடத்தில் அதற்கு நியாயத்தை செய்வது கடினமாகும். புதிய ஏற்பாட்டில் 1 கொரிந்தியர் 14 ஆம் அதிகாரத்தில் தீர்க்கதரிசனம் உரைத்தலைக் குறித்த ஒரு விசாலமான படிப்பினை தரப்பட்டுள்ளது. ஆவிக்குரிய வரமான தீர்க்கதரிசனம் உரைத்தல் என்பது பரிசுத்தஆவியானவரின் சரியான நேரத்தின் வெளிப்பாடான அறிவிக்கப்பட்ட அல்லது முன்னுரைக்கப்பட்ட தேவனுடைய வார்த்தை அல்லது தேவனுடைய சித்தத்தை உறுதிப்படுத்தும் தேவனுடைய சிந்தையாகும்.

அப்போஸ்தலர் 2:12-41 தீர்க்கதரிசனம் உரைக்கும் வரத்தைக்குறித்த மிகத் தெளிவான விளக்கமான விபரத்தைத் தருகின்றது. அது பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டவுடனேயே அங்கு நடந்த சம்பவத்தின் விபரமாகும். குழப்பமடைந்திருந்த ஜனங்களுக்கு பேதுரு தேவனுடைய தீர்க்கதரிசனத்தை உரைக்கும்ஒரு கருவியானான் (வச. 14). இந்த தீர்க்கதரிசனம் (வசனங்கள் 17-36) பரிசுத்த ஆவியினால் மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டதாகும். பேதுரு இதை முன்கூட்டியே பயிற்சித்தான் என்று நாம் எவ்வழியிலும் சிந்திக்கமுடியாது. அது இயல்பாக நடைபெற்றது. அதற்கு பின் என்ன நடக்குமென்பதைக் குறித்து பேதுரு அறிந்திருப்பதற்கும் வாய்ப்பில்லை. ஆனாலும், தேவன் அதைச் செய்தார். அந்த தீர்க்கதரிசன வார்த்தைகள் ஆயிரக்கணக்கான ஜனங்களின் இருதயங்களை “குத்தியது” அவர்களை மனந்திரும்பச் செய்தது (37-41 வசனங்கள்).

அப்போஸ்தலர் 9:1-18 இல் தீர்க்கதரிசனம் உரைக்கும் வரம் மீண்டும் கிரியை செய்கின்றது. இச்சம்பவத்தில் அது ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு பேசவில்லை. எனினும், ஒரு மனிதனிடத்தில்பேசியது. கிறிஸ்துவானவர் சவுலினிடத்தில் பேசும்போது அவன் கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தும்படி பயணித்துக்கொண்டிருந்தான் (வசனங்கள் 3-9). சவுல் கண்பார்வையற்றவனாக அடுத்தது என்ன நடக்குமோவென்று வியந்துகொண்டிருக்கும்போது, தேவன் அனனியா என்னும் ஒரு சீஷனிடத்தில் சவுலை வழிநடத்தும்படி பேசினார். அனனியா மூலம் சவுலுக்கான தேவனுடைய செய்தியின் உள்ளடக்கமானது ஒரு தனிப்பட்டதீர்க்கதரிசன வார்த்தையாகும்.அனனியாவும் அதை தைரியமாக வெளிப்படுத்தினான் (வசனங்கள் 10-18).

## அந்நியபாஷை மூலம் செய்தி

1 கொரிந்தியர் 12-14 இல், பவுல் அந்நியபாஷைகளையும் அதனுடைய வியாக்கியானத்தையும் குறித்து ஒரு மிகப்பெரிய விடயத்தின் கருத்தைத் தியானிக்கின்றார். அந்நியபாஷை பேசுதல் என்பது தேவனிடத்திலிருந்து வருகின்ற ஒரு செய்தியை பரிசுத்த ஆவியானவர் அறியாத பாஷைகளினால் பேசும்படி செய்வதே இதற்கான வரைவிலக்கணமாகும். இது நாம் ஒருபோதும் கற்றிறாத வித்தியாசமான மொழியை பேசுவதும் அந்த மொழி தேவனுடைய வார்த்தையாக இருப்பதும் மெய்யாகவே வியப்புக்குரிய விடயமாகும். இருப்பினும், ஆவியானவர் தம்மை வெளிப்படுத்துகின்ற வழிகளில் இதுவும் ஒன்றாகும்.

2000 ஆம் ஆண்டில், மடகஸ்காரில் நடைபெற்ற போதகர்களுக்கான கருத்தரங்கில் நான் உரையாற்றிக்கொண்டிருக்கும்போது, ஒரு மலாகசி பெண் ஒருவர் அந்நிய பாஷையில் செய்தியொன்றை கொடுத்தார். அவள் பேசிய அந்நிய பாஷையானது ஆங்கிலமாகும். அது என்னுடைய தாய்மொழி. சாதாரணமாக, அவள் ஆங்கிலம் பேசுகிற ஒருவர் அல்ல! அவள் அதை புரிந்துகொள்ளவில்லை என்றாலும் நான் அதை புரிந்துகொண்டேன். அதன் பின்பதாக மலாகசி மொழியில் அதற்கான வியாக்கியானம் வழங்கப்பட்டது. அந்நிய பாஷையில் பேசப்பட்ட செய்தி இங்கு சரியாக வியாக்கியானம்பண்ணப்பட்டதா என்று நான் ஒரு மிஷனரியிடம் கேட்டேன் அவர் ஆம் என்று கூறினார். தேவனுடைய கிரியையை உற்று நோக்கும்போது அது மிகவும் வியக்கத்தக்கதாயிருக்கின்றது.

**பாஷைகளின் வியாக்கியானம்**

இந்த வரமானது அந்நியபாஷை பேசுகின்றதோடுகூட ஒன்றாக கிரியை செய்கின்றது. வியாக்கியானம் என்றால் சபைக்கு பக்திவிருத்தி உண்டாக்குவதற்காக அந்நியபாஷைகளினால் கொடுக்கப்பட்ட செய்தியை விளங்கின்கொள்வதற்கு ஆவியானவரால் கொடுக்கப்படுகின்ற புரிந்துணர்வாகும். விசுவாசிகள் கூடியிருக்கும்போது அங்கு அவர்கள் மத்தியில் அந்நியபாஷையில் ஒரு செய்தி வருமாயின், கிறிஸ்துவின் சபை பக்திவிருத்தியடையும்படிக்கு அதற்கான வியாக்கியானமும் கொடுக்கப்படவேண்டுமென பவுல் வலியுறுத்துகிறார். (1 கொரிந்தியர் 14:5, 9-18, 26-28).

**செய்முறை மூலம் நிரூபித்துக்காட்டும் வரங்கள்**

இவ்வரங்கள்  ஆவியானவருடைய வல்லமையின் குணாதிசயங்களை செயல்மூலம் நிரூபிக்கின்றது அல்லது காண்பிக்கின்றது.நீண்ட காலம் நீடித்திருக்கின்ற, முற்றிய, நாட்பட்ட மற்றும் பயங்கரமான நிலைமைகளை மாற்றத்தக்கதும் மனித கட்டுப்பாட்டிற்கும் அப்பாற்பட்ட சூழ்நிலைகளையும் மாற்றத்தக்க அவருடைய திறமையை கண்களால் பார்க்கக்கூடிய வெளிப்பாடாகும்.

**குணமாக்கும் வரம்**

ஆவியானவருடைய இந்த வெளிப்பாடானது சரீரப்பிரகாரமான நோய்கள், அங்கவீனங்கள், சரியாக செயற்பாடாமை போன்றவற்றிற்கு மருத்துவம், இயற்கை அல்லது ஏனைய முறையான சுகப்படுத்தல்களுக்கு அப்பால் சுகத்தை அளிக்கின்றது. ஆதி சபையில் ஒரு சரீரப்பிரகாரமான நிலைமையை மாற்றிய ஆவியானருடைய வல்லமையைக் குறித்து அப்போஸ்தலர் 3 அதிகாரம் முதலாவது அறிக்கையை அளிக்கின்றது. விளக்கப்படுத்தும் வரங்களைப்போல, இவ்வரத்தை யார் மூலமாக பகிர வேண்டுமென்பதை ஆவியானவர் தீர்மானிக்கின்றார் (வச. 4). இரண்டாவதாக, அவர் அவ்வரத்தை அந்நபருக்கு கொடுக்கின்றார் (வச. 6). அதன்பின்னர், அவன் அல்லது அவள் ஆவியானவரிடமிருந்தே வந்தது என்பதை விசுவாசித்து அந்நபர் அதை பகிர்ந்துகொள்கின்றார் (வசனங்கள். 6-7). அப்போஸ்தலர் 9:12-18 உம்கூடஅதற்கு ஒத்த விதத்தில் அவ்வரம் செயற்படுவதை காண்பிக்கின்றது. ஆவியானவரிடமிருந்து குணப்படுத்துவதற்கான ஆற்றல் தேவனிடத்திலிருந்து வருகின்றது. அனனியா மற்றும் சவுலுடைய சம்பவத்தைப்போல குறிப்பிட்டு ஒரு மனிதனுக்கு தான் என்ன செய்ய வேண்டும் என்பதை கூறுவதற்காக வருகின்றது. பேதுருவும் சப்பாணியான மனிதனுடைய சம்பவத்தைப்போல நாம் முன்பு எவ்வளவு கவனமின்மையாய் இருந்தோம் என்பதைப் பார்க்கும்படிக்கு நம்முடைய வேகத்தை குறைப்பதற்காக தேவனால் வரக்கூடும். அல்லது ஜெபத்தின் வடிவில் வரலாம் (அப்போஸ்தலர் 28:7-10). ஆவியானவர் சுகத்தை விடுவிக்கும் முறை எதுவானாலும், நாம் ஊழியம் செய்யும்போது அவர் போதுமானவராயிருக்கின்றார் என்ற நம்முடைய விழிப்புணர்வை வளர்ப்பதற்காகவேஅவர் அவ்வாறு செய்கின்றார். ஆவிக்குரிய வரங்கள் ஆவியில்-நிரம்பியிருக்கும் விசுவாசியினிடத்திலிருந்து ஊற்றெடுக்கும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் (யோவான் 7:37-39).

## அற்புதங்களைச் செய்யும் சக்தி

அற்புதங்களைச் செய்யும் சக்தியானது ஆவிக்குரிய வரங்களில் செய்முறைகள் மூலம் நிரூபித்துக்காட்டும் வரமாகும். அற்புதங்களைச் செய்யும் சக்தியானது மற்றவர்களுக்கு நன்மை பயக்கும் முகமாக பரிசுத்தஆவியானவரிடமிருந்து அற்புதமான செயல்களை செய்யத்தக்கதாக உண்டாகும் திறமையாகும். அவைகள் தனித்தன்மை வாய்ந்தவை, அசாதாரணமானவை, அநேகமாக விளக்கப்படுத்தமுடியாதவை, சிலவேளைகளில் பிழையாக புரிந்துகொள்ளப்படுபவை. அப்போஸ்தலர்கள் 5:15-16 இல் பேதுரு கடந்துபோகும்போது அவனுடைய நிழலாகிலும்படுமென்று, வியாதியஸ்தரை வீதிகளில் படுக்கவைத்தார்கள் என்று கூறுகின்றது. அப்போஸ்தலர் 9:36-42 இல் அங்கே பேதுரு தொற்காளை உயிருடன் எழுப்பிய சம்பவம் காணப்படுகின்றது. அப்போஸ்தலர் 19:11-12 பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தார் என்று கூறப்பட்டுள்ளது. இது தனித்தன்மை வாய்ந்த திறமையுள்ள ஊழியக்காரன் மூலமான தெய்வீக இடைப்படுதலல்ல. தேவனுடைய அற்புதமான வல்லமையால் மாற்றப்பட்ட மக்களுடைய வாழ்க்கைகள் குறித்து பழைய ஏற்பாட்டிலும் சுவிசேஷ புத்தகங்களிலும் நிரம்பி காணப்படுகின்றது. (2 இராஜாக்கள் 2:4-6; மாற்கு 1-8). தேவன் எவ்வாறு இந்த அற்புதங்களைச் செய்கிறார் என்பதே தனிச்சிறப்பான அம்சமாகும். அற்புதங்களைச் செய்யும் போது கடந்துவரும் தீர்மானித்தல், கொடுத்தல் மற்றும் பகிர்ந்துகொள்ளுதல் ஆகிய படிமுறைகள் ஏற்கனவே விபரிக்கப்பட்டுள்ளது, அற்புதம் விளைவை ஏற்படுத்தும் வழியானது அடிக்கடி நிகழ்கின்ற ஒரு அமைப்பாகக் காணப்படவில்லை. அதனால், அற்புதங்கள் செய்பவருக்கு தீவிரமான விசுவாசமும் ஆவியானவர் வழிநடத்துவதைக் கேட்கும்படிக்கு மிக நுணுக்கமான செவிப்புலமையும் அவசியமாகின்றது.

## தெரியப்படுத்தும் வரங்கள்

தெரியப்படுத்தும் வரங்களாவன ஆவியானவரின் வழிகாட்டல்களை அடிப்படையான மட்டத்தில் தெரியப்படுத்தல் ஆகும். இவ் வரங்கள் காணப்படாதபோதும் இவை மெய்யான ஆவியானவருடைய ஆவிக்குரிய வெளிப்பாடாகும். 1 கொரிந்தியர் 2:6-16 கிறிஸ்துவின் சிந்தையைக் கொண்ட மனிதன் மற்றும் தேவனுக்கிடையேயான தொடர்பை விபரிக்கின்றது. இத்தொடர்பானது அடிப்படையாக அறிவாற்றல் சார்ந்த்து அல்ல; அது ஆவிக்குரியது. இதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள் “ஆவிக்குரியது” முட்டாள்தனம் என்று பொருள்படாது. ஏதாயினுமொன்றை இயற்கை நிலையிலிருந்து மனிதர்கள் எவ்வளவு அதிகமாக பெற்றுக்கொள்ளும் ஆற்றலுள்ளவர்கள் என்பதிலும் அதிகமானது என்று பொருள்படுகின்றது. மறுபடி பிறந்த கிறிஸ்தவர்களான நமக்குள் ஆவியானவர் வாசம்பண்ணுவதால் தேவனிடமிருந்து ஆவிக்குரிய தொடர்பாடலையும் செய்திகளையும் பெறக்கூடியவர்களாயிருக்கின்றோம்.

## விசுவாசம்

விசுவாசம் என்பது1 கொரிந்தியர் 12:9 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மக்கள், முகங்கொடுப்பதற்கும் விடாமுயற்சியுடன் காணப்படவும் அல்லது ஏதேனும் ஒரு சூழ்நிலையை மேற்கொள்ள உதவி செய்வதற்காக பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வரும் கலவையின்

உறுதியாகும். ஒரு நபர் இதை அப்படியே அறிந்துகொள்ளுவதில்லை என்றாலும், இந்த கலவையானது ஆவியானவரின் கிரியையை உள்ளார்ந்த சாட்சியாக தகுதிப்படுத்துகின்றது.

இதற்கு உதாரணமாக, அப்போஸ்தலர் 3 அதிகாரத்தை வாசிக்கும்போது அப்போஸ்தலனாகிய பேதுரு ஒரு பிச்சைக்காரனாகிய சப்பாணியை குணமாக்குகின்றார். இச்சம்பவத்தில், பேதுரு ஜெபிக்கவோ, உபவாசிக்கவோ அல்லது தேவனுக்காக காத்திருக்கவோ தேவையற்றிருந்தது. முற்றுமுழுதும் தேவனால் கொடுக்கப்பட்ட கலவை விசுவாசத்தினால் அவன் எளிமையாக அந்த சப்பாணி எழுந்து நடக்கும்படி கட்டளைக் கொடுத்தான். தேவன் அம்மனிதனை குணமாக்கினார்.சில தருணங்களுக்குப் பிறகு அந்த மனிதன் நடந்தான், குதித்தான், ஜெபஆலய வாசல்களில் தேவனை துதித்துக்கொண்டு சென்றான். இங்கே நாம் விசுவாசத்தின் வரமும் குணமாக்கும் வரமும் ஒன்றாக செயற்படுவதை காணலாம்.

### ஆவிகளைப் பகுத்தறிதல்

அசுத்த ஆவிகளிடமிருந்து அல்லது மனித வஞ்சனைகளிலிருந்து சபையைப் பாதுகாக்கும் பொருட்டு ஒரு நபருடைய வார்த்தை அல்லது செயல்களை நடுநிலையாகவும் மிகச்சரியாகவும் கணிப்பிடுவதற்காக பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வருகின்ற வெளிப்பாடே இந்த ஆவிகளைப் பகுத்தறிதலாகும். உதாரணமாக, இவ் வரமானது சபைக்கு பெயரளவான "ஒரு தீர்க்கதரிசன வார்த்தை" அல்லது அந்நிய பாஷையில் வந்த செய்திக்கு வெளிப்படையாகக் கூறப்படுகின்ற மொழிபெயர்ப்பானது பரிசுத்த ஆவியானவரின் செயற்பாட்டினால் உண்டானது அல்ல என்பதை தீர்மானிக்க உதவுகின்றது.

## கட்டளைக்கான அவசியம்

## *நோக்கம் 2:*

*ஆவிக்குரிய வரங்களை பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்களை குறிப்பிடுதல்.*

### காரியங்களை மரியாதைக்குரிய விதமாக செய்தல்

ஆராதனைகளில் ஆவிக்குரிய வரங்களை ஒழுங்குமுறையாக செயற்படுத்தும் ஒழுங்குமுறையை உற்சாகப்படுத்தும் அவசியத்தைக் குறித்து கலந்துரையாடுவது இன்றியமையாத்தொன்றாகும். ஆவிக்குரிய வரங்களைக் குறித்த படிப்பினையின் இறுதியில் பவுல் இவ்வாறு கூறுகின்றார் "சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது" (1 கொரிந்தியர் 14:40). ஆகவே, ஆராதனையின்போதுஒரு வரத்தை பகிர்ந்துகொள்ளும்படி ஆவியானவர் வழிநடத்துகிறார் என்று ஒரு நபர் உணர்கையில் அந்நபர் அதனை நேர்த்தியாக செயற்படுத்த அறியாமலிருப்பதனால் அதை முற்றுமுழுதாக பொருத்தமற்ற விதத்தில் அந்நபர் செய்யக்கூடும். அதற்காக சில மாதிரிகளை உருவாக்குவதற்கான பொறுப்பு ஒவ்வொரு சபைக்கும் உண்டு. அப்பொழுது மக்கள் அதன்படி எவ்வாறு செயலாற்றுவது என்பதை அறிந்துகொள்வார்கள். முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களை உருவாக்க நினைக்கும் போதகர் ஒருவர் ஆவிக்குரிய வரங்களைக் குறித்த அவர்களுடைய வாஞ்சையை உற்சாகப்படுத்துவது

மாத்திரம் போதாது, அத்துடன் அவ்வரங்களை செயற்படுத்தக்கூடிய சீஷர்களாக்குங்கள். அதன்பின்னர் கிரமமாகவும் சுதந்திரமாகவும் வரங்கள் வெளிப்படுத்தப்படும். பின்வருவன ஆவிக்குரிய வரங்களை கிரமமாக முன்னளிப்புச் செய்யும்படி உங்களுக்கு உதவிசெய்யும் ஐந்து எளிமையான கோட்பாடுகளாகும்.

1. பொதுவான சபை ஆராதனையின்போது “மந்தைகளுக்கான” பொறுப்பை உடையவர் “மேய்ப்பன்” என்பதை அறிந்துகொள்ளவேண்டும் (அப்போஸ்தலர் 20:28-30). சிலர், தாங்கள் உணர்த்தப்படுகின்றார்கள் என்று தங்களுக்கு தோன்றுகின்ற போதெல்லாம் மிகவும் சாதாரணமாக வரத்தை வெளிப்படுத்துவார்கள். சில சபைகளில் இது ஏற்றுக்கொள்ளப்பட்ட முறை என்றாலும், அது எவரேனும் எந்நேரத்திலும் எதையும் சொல்லமுடியும் என்கின்ற சூழ்நிலையை உருவாக்குகின்றபடியினால், அது பரிந்துரை செய்யப்பட்ட முறை அல்ல. ஆராதனை நேரத்திலோ அல்லது கூட்டங்களிலோ அதை பேசுவதற்கான பொருத்தமான தறுவாயை பெற்றுக்கொடுத்தலே மிகவும் ஞானமான செயலாகும். பிரசித்தமாக அந்த வரத்தை முன்வைக்க முன்பு தேவனுடைய வழிநடத்தல் என்று நீங்கள் நம்புவதை உங்கள் போதகரிடம் அறிவிக்கவேண்டும். சிறு குழு கூட்டங்களில், வரத்தை செயற்படுத்த முயற்சிக்கும் முன்பு அல்லது அதை பகிர்ந்துகொள்ளும் முன்பு அதற்கான பொருத்தமானதருணம் அல்லது தறுவாய்க்காக காத்திருப்பதலே ஞானமுள்ள செயலாகும்.

2. கூடுமான எல்லாச் சந்தர்ப்பத்திலும் தலைவரால் அது ஏற்றுக்கொள்ளப்படும் வரை காத்திருங்கள். அவ்வாறு செய்வது நற்பண்புள்ளதும் அங்கேயிருக்கின்ற ஒவ்வொருவரையும் மரியாதையுடன் தொடர்புகொள்ளுவதுமாகும் (அப்போஸ்தலர் 13:14-15).

3. பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கூடாக கிரியைசெய்ய ஆயத்தமாய் இருக்கின்றார் என்பதை நீங்கள் உணரும்போது, அத் தூண்டுதல் எத்தனை பலமானதாக இருப்பினும் அதற்கமைவாக கிரியை செய்வது அல்லது அறிவித்தலானது உங்கள் சரீரத்தின் அல்லது நாவின் கட்டுப்பாட்டை இழத்தல் என்று ஊகித்துவிடாதீர்கள் (1 கொரிந்தியர் 14:32 ஐப் பார்க்கவும்). தெய்வீக பொம்மலாட்டக்காரரின் தூண்டுதலுக்கு எதிர்செயலைக் காண்பிக்கும் எடுப்பார் கைபாவையோ அல்லது கயிற்றின் உதவியுடன் இயங்கும் சூத்திரப்பாவையாகவோ ஆகாதீர்கள். நீங்கள் இன்னும் உங்கள் சரீரத்தின் மற்றும் மனதின் கட்டுப்பாட்டில் இருக்கின்றீர்கள். ஆகவே இயற்கைக்கு மாறாக அல்லது விசித்திரமாக செயற்படுவது அவசியமற்றது.

4. நீங்கள் எவ்வாறு உணருகின்றீர்களோ அவ்வாறே ஏற்றுக்கொண்டு உங்கள் வரத்தை பகிர்ந்துகொள்ளத் துணிவுகொள்ளுங்கள். நீங்கள் சொல்பவற்றை கவனமாக மதிப்பீடு செய்யும்படி மற்றவர்கள் வழிநடத்தப்படுவர் (1 கொரிந்தியர் 14:29). பகுத்தறிதலும் ஒரு ஆவிக்குரிய வரமாகும் (1 கொரிந்தியர் 12:10).கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் பாதுகாப்பிற்கென்றே தேவன் அதைத் தந்துள்ளார்.

5. தேவன் உங்களுக்கூடாக பேசுகிறார் என்பதை மற்றவர்களுக்கு செய்முறைகள் மூலம் நிரூபித்துக்காண்பிப்பதற்கு முயற்சிக்காதீர்கள். அவர்களே அதை தீர்மானிக்கட்டும் (1 தெசலோனிக்கேயர் 5:19-21). சில மக்கள், தங்களுக்கூடாக தேவன் பேசுகிறார் என்பது

தொடர்பில் தங்களையும் மற்றவர்களையும் ஏற்றுகொள்ளச் செய்வதில் பேரார்வமுடன் காணப்படுகின்றார்கள். அவர்கள் "தேவன் இப்படியாகக் கூறுகின்றார்" என்ற இந்த பொதுவான கூற்றையும் உபயோகிப்பர். சில வேளைகளில் இது பொருத்தமானதாகும். ஆகிலும் இது கட்டுப்படுத்துமொரு கருவியாகக்கூட இருக்கலாம். உங்கள் வரத்தை எவ்வாறு தெளிவாக வெளிப்படுத்துகின்றீர்கள் என்பதில் கவனமெடுத்துக்கொள்ளுங்கள். ஆவிக்குரிய வரங்களை தொடர்ந்தும் செயற்படுத்துபவர்கள் தேவனுடைய நாமத்தினால் பேசுவது ஒரு பயபக்திக்குரிய பொறுப்பென்பதை அறிந்துகொள்ளுங்கள். நாம் அவருடைய நாமத்தை வீணிலே வழங்கக்கூடாது. ஆகவே, நீங்கள் பின்வருவனவற்றில் ஒன்றைக்கொண்டு மற்றவர்களை அழைக்கும்படி நான் உங்களிடம் பரிந்துரை செய்கின்றேன்:

- "நான் இதை பகிர்ந்துகொள்ளுவது தேவனுக்கு அவசியமாயிருக்கின்றது என்பதை நான் நம்புகின்றேன்..."
- "தயவு செய்து நான் கூறுவதை குறித்து கவனமாக ஆராய்ந்துபாருங்கள்."
- "தேவன் கூறுவதாக நான் உணர்கின்றேன்."

இந்த அடிப்படை ஒழுங்குமுறையைப் பின்பற்றுதலானது தேவபக்தியுள்ள விசுவாசிகள் தாங்கள் பெற்றுக்கொண்டவரத்தை வளர்ப்பதற்குஉதவிசெய்யும். அத்துடன் அது செயல் பிறழ்ச்சியின் மட்டங்களை அளவிடுவதற்கான வழியையும் பெற்றுத்தருகின்றது.

## செயல்பிறழ்ச்சியும் ஆவிக்குரிய வரங்களும்

### *நோக்கம் 3:*

*ஆவிக்குரிய வரங்களை பயன்படுத்தும்போது செயல் பிறழ்ச்சியை அடையாளம் கண்டுகொள்ளல்.*

---

**செயல்பிறழ்ச்சியின் அடையாளங்கள்**

ஆவிக்குரிய வரங்களின் நோக்கமானது மக்களின் நல்வாழ்வு கருதி அவர்களுக்கு ஊழியம் செய்வதென்றால், தேவபக்தியுள்ள ஆவிக்குரிய பக்திவிருத்திக்கும் சபை ஒற்றுமைக்கும் எதிராக செயற்படுவதே செயல்பிறழ்ச்சியாகும். சரீரமாகிய சபையின் ஒற்றுமைக்கும் பக்திவிருத்திக்கும் எதிராக அதற்குள்ளிருந்து வரும் மூன்று விதமான அச்சுறுத்தல்கள் குறித்து புதிய ஏற்பாடு வெளிப்படுத்துகின்றது. நாம் ஒவ்வொரு அச்சுறுத்தல்களையும் அடையாளம் கண்டு அதை எவ்வாறு கையாளுவதென்பதை பார்க்கப்போகின்றோம்.

முதலாவது நபரானவர்வரத்தைப் பெற்றவர் என்றாலும் ஆவிக்குரிய வரங்களுடன் இருக்கும் பொறுப்பைக் குறித்து அறியாத ஒருவராயிருக்கின்றார் (1 கொரிந்தியர் 12:1). இந்த நபர் கொரிந்தியர்களைப்போல, தேவனை நேசிப்பதோடு அவன் அல்லது அவள் தங்கள் விசுவாசத்திலும் உண்மையுள்ளவர்கள்என்றாலும் அவர்கள் கிறிஸ்துவுக்குள் முதிர்ச்சியடையவில்லை. (1 கொரிந்தியர் 3:1-3). அவன் அல்லது அவள் மற்றவர்களை

புண்படுத்தும் வருந்தத்தக்க தவறுகளை செய்பவர்களும் வரங்களை வெளிப்படுத்தும்போது அன்பில் குறைவுள்ளவர்களாயுமிருக்கின்றனர் (1 கொரிந்தியர் 13:4-5). 1 கொரிந்தியரில் பெரும்பாலாக கிறிஸ்துவுடன் தொடர்புபட்டிருப்பதன் முக்கியத்துவத்திற்கு மீண்டும் வழிநடத்தப்படுவது தொடர்பிலான பல்வேறுபட்ட பிரச்சினைகளைக்குறித்து சிறப்பாக காண்பித்துள்ளது. இவ்வாறு செய்தால் விசுவாசிகள் வளர்வர்.

இரண்டாவதாக, நமக்கு பிரச்சினையாக இருக்கின்றதொன்று, அது தன்னுடைய செல்வாக்கைக் குறித்து மிகவும் தீவிரமாயிருக்கின்றதுடன் விசேஷமாக தேவனால் நியமிக்கப்பட்ட அதிகாரத்திற்கு கீழ்ப்படிவதற்குப் போராடுபர்கள் (எபிரெயர் 13:7, 17). வெளிப்படுத்தல் 2:20-23 யெசபேல் என்கின்ற ஒரு பெண்ணைக் குறித்துப்பேசுகின்றது, யெசபேல் தன்னை ஒரு தீர்க்கதரிசியாக காண்பித்தாள். அவள் தனக்கென ஒரு பதவிப்பெயரையும் சூட்டிக்கொண்டாள் மற்றும் அவள் தேவனுடைய சத்தத்திற்கு செவிடும், விசுவாசிகள் மத்தியில் செல்வாகுச் செலுத்தினவளுமாவாள். அவள் செய்யும் எக்காரியத்திற்கும் எந்தவொரு சபைக்கும் கணக்கு ஒப்புவிக்க அவளுக்கு அவசியமற்றிருந்தது. இது பேரழிவை ஏற்படுத்துமொரு காரியமாகும். இன்றும், இதே போன்ற குணாதிசயத்தை வெளிகாட்டுபவர்கள் தேவனுக்கு மாத்திரமே தாங்கள் கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உரிமை கோருபவர்கள் ஆவிக்குரியவர்களைப் போலக் காணப்பட்டாலும் தங்களுடைய பதவி குறித்து அல்லது நடவடிக்கைகளைக் குறித்து கேள்வி கேட்கும் எவருக்கும் கீழ்ப்படியமாட்டார்கள்.

மூன்றாவதாக சபையின் ஒற்றுமைக்கும் பக்திவிருத்திக்கும் அழிவைக் கொண்டுவரும் செயற்பாடு. மத்தேயு 7:15-23, கள்ளத் தீர்க்கதரிசிகள் ஆட்டுத்தோலை போர்த்திக்கொண்டு வரும் ஓநாய்கள் என்று இயேசு கூறினார். வஞ்சிக்கும் கலைத்திறமை படைத்தவர்களே இந்தக் கள்ளத் தீர்க்கதரிசிகள்; அவன் அல்லது அவள் தங்கள் தனிப்பட்ட, பொருளாதார தேவைகளுக்காக ஜனங்களை தவறாக வழிநடத்துபவர்களாவர் (அப்போஸ்தலர் 20:30; 2 பேதுரு 2:1-3). கள்ளத்தீர்க்கதரிசிகள் முதிர்ச்சியடையாத பலவீனமான அல்லது சீஷத்துவத்திற்கு தங்களை கீழ்ப்படுத்தாத விசுவாசிகளைக் கொண்டு இலாபங்களைப் பெற்றுக்கொள்வதற்கு விசேஷித்த திறமைபடைத்தவர்களாவர் (எபிரெயர் 5:11-14).

ஆகவே சரீரமாகிய சபைக்குள் இப்படிப்பட்ட செயல் பிறழ்ச்சிகள் வருவதை தைரியமாய் அணுகுவது எப்படி? அந்த அச்சுறுத்தலுக்கு முகங்கொடுக்க எளிமையானதும் அதிகார்வபூர்வமானதும் வழிநடத்தலை தேவனுடைய வார்த்தை தருகின்றது. கொரிந்தியர்கள்,தாங்கள் முதிர்ச்சியடையாதமுந்தைய நிலைகளிலிருந்தே திருத்தப்படவேண்டும் என பவுல் குறிப்பிடுகின்றார். முதலாம் கொரிந்தியர் 13:11 ஆனது பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் கைப்பற்றுகின்றது. முதலாவதாக “நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போலப் பேசினேன், குழந்தையைப்போலச் சிந்தித்தேன், குழந்தையைப்போல யோசித்தேன்.” இன்றும், முதிர்ச்சியடையாத நபர்கள் கிறிஸ்துவுக்குள் வளரும்படி இன்னும் கற்றுக்கொள்ள வேண்டியதாகவுள்ளது, இல்லாவிடின் அவர்கள் தங்கள் ஊழியத்திற்குள் மற்றவர்களுக்கு செய்யும் ஊழியத்தை விடுத்து தனக்குத்தானே ஊழியம் செய்யும் அபாயத்தை அடைவர். இந்த மட்டத்தில் மக்கள் திருத்தத்தைப் பெற்றுக்கொள்வார்களாயின் அவர்களால் மாற முடியும் (2 தீமோத்தேயு 3:16). இல்லாவிடின், முடிவில் அவர்கள் யெசபேலாக அல்லது கள்ளத்தீர்க்கதரிசியாகும் அபாயத்தை அடைவர்.

நிஜமான யெசபேல் ஆகாப் ராஜாவின் துன்மார்க்கமான மனைவியாவாள் (1 இராஜாக்கள் 21:5); தேவனுக்கும் பயபக்தியுள்ள தலைமைத்துவங்களுக்கும் கீழ்படிவதை அவள் புறக்கணித்தாள். யெசபேல்கள் (ஆண் அல்லது பெண்) தேவனுக்கு முன்பாக கீழ்ப்படிவைக் காண்பித்தாலும், ஆவிக்குரிய ரீதியிலோ ஆணவத்துடன் காணப்படுவர். இயேசுவும் பலுவும் இவர்கள் இருவரும் யெசபேலுடைய பிரசன்னத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டாமென எச்சரிக்கின்றனர். யெசபேல்களைப் போன்றவர்கள் போதகர்களால் மற்றும் தலைவர்களால் திருத்தப்படவேண்டும் (மத்தேயு 18:15-17). தேவனுக்கேற்ற திருத்துதலை யெசபேல்களைப் போன்றவர்கள் மறுத்தால், அவன் அல்லது அவள் தன்னைத் தானே வஞ்சித்துக்கொள்ளுவதையும், பொய்களைக் கொண்டு சத்தியத்தை மூடும் செயலையும் தொடர்வர். அதனால், யெசபேல்களை ஊழியம் செய்ய அனுமதிக்கப்படக்கூடாது.

கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் இடங்கொடுக்கக்கூடாது. அவன் அல்லது அவள் விலக்கப்படவேண்டும் (1 கொரிந்தியர் 5:12-13; கலாத்தியர் 1:6-9). கள்ளத்தீர்க்கதரிசிகள் “ஆடுகளைப் போலக்” காணப்படுகின்றதோடு ஆடுகளின் பழக்கவழக்கங்களையும் மொழியையும் அறிந்துள்ளனர். இதுவே அவர்கள் வஞ்சிக்கும் வழிமுறையுமாகும். அவர்கள் தங்கள் முகத்தை கடினப்படுத்துவதால் கள்ளத்தீர்க்கதரிசியை எதிர்த்து நிற்பதென்பது அச்சுறுத்தலாக அமையலாம் (நீதிமொழிகள் 21:29). ஆகிலும் ஞனமுள்ள ஆலோசனையுடன்கூடிய தேவபக்தியுள்ளபகுத்தறிதலானது வெற்றிபெறும். ஒருமுறை ஒரு கள்ளத்தீர்க்கதரிசி வெளிப்பட்டால், அநேகமாக அவன் அல்லது அவள் வெளியேறிவிடுவர்.

## முடிவுரை

ஆவிக்குரிய வரங்களின் சரியான அர்த்தம் என்னவென்றால்,நாம் மற்றவர்களுக்கும் மற்றவர் எங்களுக்கும் கொண்டுவருகின்ற பரிசுத்தஆவியானவரிடமிருந்து வரும் வரங்களாகும். வரங்களைக் பெற்றுக்கொடுப்பதனூடாக தேவன் தம்முடைய இருதயத்தை வெளிப்படுத்துகின்றார் என்பதை அறிந்துகொள்ளுதலானது “வரங்களை பேரார்வத்துடன் வாஞ்சியுங்கள்” என்று நமக்கு கூறப்பட்டது ஏன்என்பதை விளக்குகின்றது.துரதிஷ்டவசமாக, சிலர் தேவனுடைய வரங்களை நிராகரிக்கின்றனர். சிலர் அவைகள் இருக்கின்றது என்பதை விசுவாசிக்க மறுக்கின்றனர். ஆகிலும் நீங்கள் இது உங்களை குழப்புவதற்கு இடங்கொடுக்காதீர்கள். மற்றவர்களுக்கு ஊழியம் செய்யும்படிக்கு தேவன் உங்களுக்கு அருளும் வரங்களுக்கு எல்லையே இல்லை. உங்களுக்கூடாக வெளிப்படுத்தப்படும் அநேகமான வரங்களில் அவர் உங்களுக்குள் தனிசிறப்பானதொரு குணாதிசயத்தை வளர்த்திடுவார். நீங்கள் சிறப்படையவேண்டுமென்றே தேவன் விரும்புகின்றார். அதனால் வரங்களை முன்னளிப்புச்செய்யும் செயற்பாட்டிற்கு உங்களை பழக்கப்படுத்திக்கொள்ளுவததென்பது பக்திவிருத்திக்காகவும் ஒற்றுமைக்காகவும் மாத்திரம் தைரியப்படுத்துவதற்காக அல்ல அதற்கு இரண்டாந்தரமானநோக்கமும் உண்டு. சபையானது தங்களுடைய செயற்பாட்டு முறைகளான வாய்மொழிமற்றும் எழுத்து முறை மூலமாக தொடர்புகொள்ளும்போது யெசபேல் மற்றும் கள்ளத்தீர்க்கதரிசிகள் தங்களுடைய உறுதியிலிருந்து அதைரியப்படுவர். ஆவிக்குரிய வரங்கள் குறித்து உங்களுக்கு காணப்படும் ஆர்வத்தையும் அவற்றை உபயோகிக்கும் விதத்தை கற்றுக்கொள்ளும்படிக்கும்தேவன் உங்களை மிகவும் அதிகமாக ஆசீர்வதிப்பாராக!

## மனனம் செய்வதற்கு ஆலோசிக்கப்ட்ட வசனங்கள்

யோவான் 15:16

அப்போஸ்தலர் 9:17-18

1 கொரிந்தியர் 1:7-8

1 கொரிந்தியர் 12:1,7,11

1 கொரிந்தியர் 13:11

1 கொரிந்தியர் 14:40

2 தீமோத்தேயு1:7

# பாடம் 8

## உங்கள் பணம்

வேதாகமமானது தேவனுடைய ஜனங்களின் வாழ்க்கையில் உடைமைகளும் அவற்றின் இடத்தையும் மையமாகக்கொண்ட ஏராளமான வேதவசனங்களால் நிரம்பியுள்ளது. பூமியையும் அதன் வளங்களையும் மனுகுலத்தின் பராமரிப்பு மற்றும் நிர்வாகத்தின் கீழ் வைக்கவேண்டுமென்பதே ஆதிமுதலாய் தேவனுடைய வாஞ்சையாயிருந்தது என்பது தெளிவு. முதல் மனிதர்களுக்கான தேவனுடைய கட்டளையை கவனியுங்கள்: "நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகின்ற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி தேவன் அவர்களை [ஆதாம் மற்றும் ஏவாள்] ஆசீர்வதித்தார்" (ஆதியாகமம் 1:28).

கவலைக்கிடமாக, மனிதர்கள் தங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட இந்த சிறப்புமிக்க பணியையும் வரப்பிரசாதத்தையும் தவறாக பயன்படுத்தியும் தொடர்ந்தும் அவ்வாறே செய்துவருகிறதன் பிரதிபலனாகவுமே அநேகமான அழிவுகள் நிகழ்கின்றது. சரீரப்பிரகாரமான காரியங்கள் தொடர்பான பகுதியில் ஜனங்கள் அதிகமாக ஈட்டிக்கொள்வதற்காக தேவையற்ற கடன்களைப் பெறுகின்றனர். செல்வமானது மதியற்ற விதத்தில் வீணாக்கப்படுகின்றது. ஒரு சிலர் மட்டுமே பணத்தின்மீது முன்னுரிமைகளை ஏற்படுத்திருந்ததினால் சிறதளவாவது சேமிக்கப்பட்டுள்ளது. அதன் பிரதிபலனாக, மக்கள் சுயநலவாதிகளாகின்றனர்; பயத்தினாலும் கவலையினாலும் மனிதர்களின் இருதயம் பாரப்பட்டுள்ளது; குடும்ப உறவுகள் உடைந்துபோகின்றது; எல்லாவற்றிற்கும் மேலாக தேவனுடைய இராஜ்யம் பாதிக்கப்படுகின்றது. விசுவாசிகள் தங்கள் பணம் குறித்து பொறுப்புடன் கிரியை செய்யத் தவறும்போது, அவிசுவாசிகள் கிறிஸ்தவத்தை மாய்மாலத்துடன் ஒப்பிடுவதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்படுகின்றது.

ஜனங்கள் தங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கு கொடுக்கும்போது, அவர்களுடைய வாழ்க்கை முறை மாற்றமடைய வேண்டும். சில மாற்றங்கள் உடனடியாக நிகழும் அதேவேளை மற்றவை படிப்படியாய் நிகழும். எவ்வாறாயினும், தேவன் தம்முடைய வார்த்தையில் கூறப்பட்டிருப்பதற்கு ஏற்றபடி நம்முடைய நடத்தையும் நாம் சிந்திக்கும் விதமும் உறுதிப்பட்டிருக்கவேண்டும்: "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்தற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" (ரோமர் 12:2).

புதிய கிறிஸ்தவர்கள் தங்களுடைய செல்வத்தையும் உடைமைகளையும் குறித்து நினைப்பதும் அதைக் கையாளும் விதமும் நெடுங்காலமாய் தாங்கள் ஏற்படுத்தியிருந்த

நடத்தை முறையையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. இம் முறைகள் பொருத்தமானதும் அல்லது பொருத்தமற்றதுமாகக்கூட இருக்கலாம். நாம் இரட்சிக்கப்பட முன்பு நம்முடைய வாழ்க்கையானது திறமைகள், அறிவுக்கூர்மை மற்றும் வெற்றிபெறுவதற்கான கெட்டித்தனமான திட்டங்களை மையமாகக் கொண்டிருந்திருக்கலாம். சரீரப்பிரகாரமான காரியங்களை நாம் சரியாக கையாளாது பேராசையுடன், சுயநலத்துடன் மற்றும் திருப்திபடுத்தும் வாஞ்சையுடன் அவற்றை செயற்படுத்தி கையாண்டுமிருக்கலாம்.

மனித சுபாவமானது மாற்றத்தை ஏற்க மறுப்பதோடு இலகுவில் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படியாது. எவ்வாறாயினும், கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக, தேவனுடைய உதவியை நாம் நம்பிருக்கவேண்டும். கர்த்தராகிய தேவனிடத்தில் நாம் நம்மைக் கீழ்ப்படுத்தும்போது, நாம் இனியும் சுயநலமாக வாழமாட்டோம். தேவனுக்கு பிரியமானதைச் செய்யும்படிக்கு இபொழுது நாம் விடுதலையாக்கப்பட்டுள்ளோம். நம்முடைய பணத்தையும் உடைமைகளையும் நாம் எவ்வாறு கையாளவேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை வேதாகமம் அநேக வசனங்களுக்கூடாக நமக்கு காண்பிக்கின்றது.

## பாடத்தின் முக்கிய அம்சங்கள்

பணத்தை நிர்வகிப்பதில் தெய்வீக கோட்பாடு

உக்கிராணத்துவத்தின் இன்றியமையாத பகுதிகள்

விசுவாசம், அர்ப்பணித்தல் மற்றும் காத்திருத்தல்

ஆராதனையும் உக்கிராணத்துவமும்

## பாடத்தின் நோக்கங்கள்

1. *தெய்வீகக் கோட்பாடுகளின் மீது அடிப்படையாகவுள்ள பணம் மற்றும் உடைமைகளைக் குறித்த கிறிஸ்தவ கண்ணோட்டத்தை இனம்காணுதல்.*

2. *உக்கிராணத்துவத்தின் இரு பிரதான பகுதிகளைக் குறித்து கலந்துரையாடல்.*

3. *விசுவாசம், அர்ப்பணித்தல்மற்றும் காத்திருத்தலானது எவ்வாறு தேவனுடைய திட்டத்தில் ஒரு பகுதியாகின்றதென்பதை விபரித்தல்.*

4. *ஒரு நல்ல பொருளாதார உக்கிராணத்துவத்தில் தொடர்ச்சியாகவும் உண்மையாகவும் தேவனை ஆராதித்தலானது ஏன் முக்கியமாகின்றது என்பதை விளக்குதல்.*

# பணத்தை நிர்வகிப்பதில் தெய்வீக கோட்பாடு

## *நோக்கம் 1:*

*தெய்வீக கோட்பாடுகளின் மீது அடிப்படையாகவுள்ள பணம் மற்றும் உடைமைகளைக் குறித்த கிறிஸ்தவ கண்ணோட்டத்தை இனம்காணுதல்.*

### தேவனுடைய ஈகை பண்பு

ஆதியிலிருந்து தேவன் தம்மை ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறவராக வெளிப்படுத்தியிருக்கின்றார். அனைத்து கோள்களிலும், தேவன் நம்முடைய பூமியை தெரிந்துகொண்டு தம்முடைய வல்லமையினால் அதை நாம் வாழ்வதற்கேற்ற ஒரு சூழலாக மாற்றினார். சிருஷ்டிப்பில் தேவனுடைய மகிமை வியக்கத்தக்கதாக காணப்படுகின்றது என்பதை பவுல் இவ்வாறு எழுதுகின்றார் "எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்" (ரோமர் 1:20). இயேசுவும் பரலோகத்திலிருக்கும் தம்முடைய பிதா "தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்" (மத்தேயு 5:45) என்று கற்றுக்கொடுத்தார். ஒவ்வொரு நபரும் அவன் அல்லது அவள் தங்களுடைய வாழ்வைக் குறித்து கொடை வள்ளலாகிய தேவனுக்கு மிகவும் கடன்பட்டுள்ளனர்.

### ஆசீர்வாதமாயிருப்பதன் கோட்பாடு

தேவன் தம்முடைய தெய்வீக உதவியையும் ஆசீர்வாதத்தையும் நீங்கள் மகிழ்வுடன் அனுபவிக்க வேண்டுமென விரும்புகின்றார். எவ்வாறாயினும், விசுவாசிகளாகிய நாம் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெறுபவர்களாக மாத்திரம் அல்ல, நாம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருப்பதற்காகவும் அழைக்கப்பட்டிருக்கின்றோம். இயேசு தம்முடைய சீஷர்களுக்கு இவ்வாறு கட்டளையிட்டார், "இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்" (மத்தேயு 10:8). கொடுப்பதில் காணப்படும் சந்தோஷமே ஒரு விசுவாசியில் காணப்படும் ஆவிக்குரிய முதிர்ச்சியின் மிகப்பிரதானமான அடையாளமாகும். ஏனென்றால், கொடுப்பதினால் மற்றவர்களை ஆசீர்வதிப்பது என்பது உலகம் சிந்திக்கும் விதத்திற்கு மிகவும் வித்தியாசமானதாகும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவன் கொடுப்பதுபோல கொடுப்பதற்கு பரிசுத்த ஆவியினால் வல்லமைபெற வேண்டும். இன்று நீங்கள் ஆவியானவருடைய வல்லமையினால் ஒரு புதிய நிரப்புதலைப் பெற்றுக்கொள்ளவேண்டும் எனஜெபித்தீர்களா?

### தெய்வீக உரிமைத்துவத்தின் கோட்பாடு

நாம் அனுபவிக்கும்படிக்கு நம்மிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் வளங்களை சரியாக பயன்படுத்துவதற்காகதெய்வீக உரிமைத்துவத்தைக் குறித்த வேதாகம கோட்பாட்டை நாம் புரிந்துகொள்ளுவது அவசியமாகின்றது. இக் கோட்பாடானது நம்மிடத்திலிருக்கும் அனைத்து

காரியங்களுக்கும் மெய்யான சொந்தக்காரர் தேவன் என்று நமக்கு கற்றுக்கொடுக்கின்றது. அவருடைய உரிமைத்துவத்தைக் குறித்துக் கூறும் பின்வரும் வசனங்களை நன்கு கவனியுங்கள்:

- “பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதின் குடிகளும் கர்த்தருடையது” (சங்கீதம் 24:1).
- “வானங்கள் உம்முடையது, பூமியும் உம்முடையது, பூலோகத்தையும் அதிலுள்ள யாவையும் நீரே அஸ்திபாரப்படுத்தினீர்” (சங்கீதம் 89:11).
- வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்” (ஆகாய் 2:8).

முற்காலங்களில் ஒரு உக்கிராணக்காரன் என்றால் மற்றவர்களுக்குரிய உடைமைகளை பொறுப்புடன் நிர்வாகம்பண்ணுகிறவனாக நம்பப்பட்டவனாவான். கிறிஸ்தவர்களாக நாமும் தேவனுக்குரிய உடைமைகளுக்கு உக்கிராணக்காரர்களாயிருக்கிறோம்; அவர் நம்மை நம்பி நேரத்தை, செல்வத்தை, வருமானத்தை, தாலந்துகளை, திறமைகளை மற்றும் மனிதர்களையும்கூட கொடுத்துள்ளார். மெய்யாகவே எதுவுமே நமக்கு சொந்தமல்ல. இவ்வாழ்க்கை முடிந்ததுமே நாம் நமக்கு உண்டான சகலவற்றையும் விட்டுப்போய்விடுவோம். அதனால், நம்முடைய வரையரைகள் என்னவென்பதை நாம் அறிந்துகொள்ளுவதும் பூமிக்கும் அதற்கு அப்பாற்பட்ட சகல காரியங்களுக்கும் உரிமையுடையவர் தேவன் என்பதை ஏற்றுக்கொள்ளுவதும் மிகவும் இன்றியமையாததாகும்.

## தேவனுடைய நன்மையைக் குறித்த கோட்பாடு

தேவனுடைய சிருஷ்டிப்பு எத்தனை அற்புதமானதென்பதை விபரிப்பதற்கு *நல்லது* என்கின்ற வார்த்தையானது குறைந்தது ஏழு தடவைகளாவது ஆதியாகமத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது (ஆதியாகமம் 1:4, 10, 12, 18, 21, 25, 31). தேவனுடைய நன்மையைக் குறித்த கோட்பாடானது தேவன் எவ்வளவு நல்லவர், தயை உள்ளவர் மற்றும் தம்முடைய பிள்ளைகளுக்கு நன்மையானவைகளை கொடுக்கக்கூடியவர் என்பதை அறியச்செய்கின்றது.

அதிகமான போராட்டத்தையும் வலியையும் தாங்கிக்கொண்டமையே சிலருக்கு இந்த வேதாகம கோட்பாட்டை ஏற்பதற்கு கடினமாயிருக்கின்றது. அவர்களுடைய வேதனையானது கடும்நோய், நெருக்கமான ஒருவரது மரணம், பொருளாதார நெருக்கடிகள், ஏமாற்றங்கள், குடும்ப பிரச்சினைகள், அநீதி, தவறான தீர்மானங்கள் அல்லது வேறு பல விடயங்களாயிருக்கலாம். எவ்வாறாயினும், நாம் விழுந்துபோன உலகில் வாழ்கின்றோம் என்ற யதார்த்தமானது தேவனுடைய அன்பையும் நன்மையையும் மந்தமாக்கிவிடவில்லை. சங்கீதக்காரன் தேவனுடைய நன்மைகளை விபரிக்கும் விதத்தை கவனியுங்கள்:

- “உமக்கு பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டுபண்ணிவைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது!” (சங்கீதம் 31:19)

- அவர்கள் உமது மிகுந்த தயவை நினைத்து வெளிப்படுத்தி, உமது நீதியை கெம்பீரித்துப் பாடுவார்கள்" (சங்கீதம் 145:7)

தேவனில் அன்புகூருகிறவர்களுக்கு அவர் மிகவும் வியக்கத்தக்கவைகளை ஆயத்தப்படுத்தி வைத்திருக்கின்றார் என்பதை நாம் விசுவாசிக்கவேண்டும். தேவனை அனுபவிக்கின்றதினூடாகவே அவருடைய இந்த நன்மையை அனுபவிப்பதன் இரகசியம் உள்ளது; ஆகவே, தேவனே நம்முடைய வாழ்க்கையின் மிக உன்னதமான தேடல் என்பதை நாம் அறிந்துகொள்ளுவோம். இயேசு அதை இவ்வாறு கூறினார், "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" (மத்தேயு 6:33). இவ்வசனமானது சரீரப்பிரகாரமானதேவைகள் நமக்கு முக்கியம் என்பதைக் கற்றுக்கொடுக்கின்றதோடு நாம் அவருடைய இராஜ்யத்தை தேடும்பொழுது தேவன் அவற்றை தருவதாகவும் நமக்கு வாக்குப்பண்ணியுள்ளார்.

## உக்கிராணத்துவத்தின் இன்றியமையாத பகுதிகள்

## *நோக்கம் 2:*

*உக்கிராணத்துவத்தின் இரு பிரதான பகுதிகளைக் குறித்து கலந்துரையாடல்.*

### உங்களது நேரத்தைக் கொடுத்தல்

படைப்பில் மிகமுக்கியமான பகுதியான அநேகமாக அநேகரால் கவனிக்காதுவிடப்படும் நாள் ஓய்வுநாள் அல்லது சபாத் நாளாகும். தேவன் ஆறு நாளும் கிரியை செய்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் என்று வேதாகமம் நமக்கு காண்பிக்கின்றது. தேவன் மனிதர்களுக்காக இந்த முறையை ஏற்படுத்தினதோடு, மோசேக்கு நியாயப்பிரணமாத்தை கொடுக்கும்போதும் ஓய்வுநாளை ஆசரிப்பதை பத்துக் கற்பனைகளில் ஒரு கற்பனையாக ஏற்படுத்தினார் (யாத்திராகமம் 20:8-11 வரை பார்க்கவும்). மேலதிகமாக, இயேசு இப்பூமியில் வாசம்பண்ண வருகையிலும், அவர் தம்மை "ஓய்வுநாளுக்கு ஆண்டவராக" வெளிப்படுத்தினார் (மத்தேயு 12:8). அவர் ஓய்வுநாளில் அநேக அற்புதங்களைச் செய்வதை வழக்கமாக்கிக்கொண்டார் ஆனாலும், இயேசு யார் என்பதை யூதர்கள் அறிந்திராததினிமித்தம் அவர்களை இது கோபமடையச் செய்தது.

வாரத்தின் ஏழாம் நாளில் யூதர்களுடைய ஓய்வுநாள் அல்லது சபாத் கொண்டாடப்படுகின்றது. ஜனங்கள் ஆறுநாளும் வேலைசெய்து ஏழாம் நாளில் ஓய்ந்திருக்கவேண்டும். கிறிஸ்தவர்களாகிய நமக்கு வாரத்தின் முதலாம் நாள் ஞாயிராகும், அதுவே நம்முடைய ஓய்வுநாளுமாகும். நாம் தேவனைக் கனப்படுத்துமுகமாக அர்ப்பணித்த ஒரு விசேஷித்த நேரமுமாகும்.சபை உருவான பின்னரே வாரத்தின் ஏழாம் நாள் வாரத்தின் முதலாம் நாளாக மாற்றமடைந்தது. இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து வாரத்தின் முதலாம்நாள் உயிர்த்தெழுந்தார் என்ற நம்பிக்கையே ஆதிக்கிறிஸ்தவர்கள் இந்த நாளுக்கான சிறப்பை அங்கீகரிப்பதற்கு அவர்களை தூண்டியது.

வாரத்தில் ஒருநாளை தேவனுக்கென கொடுப்பது மிகவும் முக்கியமாகும். இது தேவனுடனும் மற்றைய விசுவாசிகளுடனும் ஒன்றாக நேரத்தை செலவிடுவதற்கு நமக்கு இடமளிக்கின்றது (அப்போஸ்தலர் 20:7 ஐபார்க்கவும்). அது நமக்கு வேதாகமத்தை ஆழமாக கற்றுக்கொள்ளுவதற்கு சந்தர்ப்பமளிக்கின்றதோடு நம்முடைய உழைப்பின் முதற்பலனானவைகளை தேவனுக்கு திருப்பிக்கொடுப்பதற்கும் சந்தர்ப்பத்தை அளிக்கின்றது. நீதிமொழிகள் 3:9-10 கூறுகின்றது, "உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும்." நீங்கள் ஒரு விவசாயியாக இல்லாமலிருக்கலாம், என்றாலும், நீங்கள் ஒரு தொழில்செய்து அதில் வருமானம் ஈட்டுவீர்களாயின் அதில் ஒரு பகுதியை உங்களுடைய முதற்பலனாக தேவனுக்கு அர்ப்பணிக்க முடியும். உங்கள் நேரத்திலும் உங்கள் உழைப்பிலும் தேவனுக்கு ஒரு பங்கை திருப்பிக்கொடுக்கின்றீர்கள் என்பதே அதனுடைய மெய்யான அர்த்தம்.

**கர்த்தருக்கு தசமபாகம் கொடுத்தல்**

அப்போஸ்தலர் பவுல் கொடுத்தலைக் குறித்ததான முக்கியமான கட்டளைகளை அளிக்கின்றார். அவர் இவ்வாறு எழுதுகின்றார், "பரிசுத்தவான்களுக்காக சேர்க்கப்படும் தர்மபணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்துவைக்கக்கடவன்" (1 கொரிந்தியர் 16:1-2).

இந்த பகுதியிலிருந்து ஆதிக் கிறிஸ்தவர்கள் தங்களுடைய வருமானங்களிலிருந்துதொடர்ந்தும் மொத்தத் தொகையிலிருந்து ஒரு பகுதியை கொடுத்துவந்ததை நாம் கற்றுக்கொள்ளுகின்றோம். இப்படியாக, எல்லோரும் அதாவது ஏழைகள், ஐசுவரியவான்கள் இதற்கிடையில் காணப்படும் எவரேனும் பங்குகொள்ள முடிகின்றது. சகலரும் தங்கள் மொத்தத் தொகையிலிருந்து ஒரு பகுதியை கொடுக்கின்றபடியால் ஒருவரும் அவன் அல்லது அவள் தாங்கள் கொடுக்கும் அளவு மற்றவர்களை விடக் குறைந்ததென்று எண்ணி வெட்கப்படத்தேவையில்லை. இது எளிமையானது; நீங்கள் அதிகமாக சம்பாதிக்கும்போது, நீங்கள் அதிகமாக பங்களிப்புச் செய்யமுடியும்.

வாரத்தின் முதல் நாள் நாம் ஆராதிப்பதற்காக ஒன்றுகூடி வரும்பொழுது நாம் கொடுப்பதற்கும் ஆயத்தமாக இருக்கவேண்டும். கொடுத்தல் என்பது ஆராதனை அனுபவத்தின் தொடர்ச்சியான ஒரு பகுதியாகும். பவுல் கொரிந்தியருக்கு கொடுத்த கட்டளைகள் போல, கொடுத்தலானது நம்முடைய வருமானத்தின் அல்லது செழிப்பின் மொத்தத் தொகையில் ஒரு பகுதியாக இருக்கவேண்டும். ஆகவே, தேவன் உங்களை அதிகமாக ஆசீர்வதிக்கும்போது நீங்கள் அதிகமாக தேவனுக்கு கொடுக்கவேண்டும்.

நீங்கள் வேதாகமத்தை நன்கு அறிவீர்களாயின் மொத்தத் தொகையிலிருந்து ஒரு பகுதியை கொடுக்கும் முறையானது அநேக காலங்களுக்கு முன்பதாக தெய்வீக-கட்டளையின்படி இருந்து வந்ததொன்றாகும். இக்கொடுத்தல் முறையானது தசமபாகம் என்று

அழைக்கப்பட்டது. நம்முடைய வருமானத்திலிருந்து பத்தில் ஒரு பங்கை கொடுப்பதையே இது குறிப்பிடுகின்றது. இதைக் குறித்து நீங்கள் முன்னொருபோதும் கேள்விப்படாதிருந்தால், பாடத்தின் இந்தப் பகுதியானது தசமபாகத்தைக் குறித்தான வேதாகம கோட்பாட்டைக் குறித்து உங்களுக்கு அறிமுகப்படுத்தும்.

தசமபாகத்தை குறித்த வசனங்களை வேதாகமத்தில் எங்கு காணலாம்? பழைய ஏற்பாட்டின் கடைசிப் புத்தகமான மல்கியா புத்தகத்தில் தசமபாகத்தைக் குறித்த தேவனுடைய கட்டளை காணப்படுகின்றது:“என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னை சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்” (மல்கியா 3:10).

இங்கு தேவன் தசமபாகம் தமக்கு சொந்தமானது எனவும் ஜனங்கள் அதை கொடுக்க மறுக்கவோ அல்லது அதில் தங்களுக்கென்று ஒரு பாகத்தை வைத்திருக்கவோ கூடாது எனவும் கூறுகின்றார்கள்.தசமபாகத்தை கொடுக்க மறுப்பதென்பது தேவனுக்கு அதிகாரபூர்வமாக உரிமையானதை களவெடுப்பதற்கு சமனாகும். கவனியுங்கள் தேவன் தம்முடைய ஜனங்களை பரிபூரணமாக ஆசீர்வதிப்பாரெனவும் அவர்கள் தசமபாகம் கொடுத்ததினிமித்தம் எதிலும் குறைவுபடமாட்டார்கள் என்றும் தேவன் வாக்களித்துள்ளார். நீங்கள் தசமபாகம் கொடுத்ததன் பின் உங்கள் வருமானத்தின் 90 சதவீதமானதை ஆசீர்வதிப்பாரெனவும் அதைப் பெருகப்பண்ணுவார் என்பதையும் உங்களால் நம்பக்கூடியதாகவுள்ளதா? உலகெங்கிலுமுள்ள மில்லியன்கணக்கான விசுவாசிகள் தசமபாகம் கொடுத்து தேவனுடைய ஆச்சரியமான ஆசீர்வாதங்களை அனுபவித்துள்ளார்கள்.

ஆகவே, தசமபாகம் கொடுத்தலானது எவ்வாறு கிரியை செய்கின்றது? மெய்யாகவே அது மிகவும் எளிமையானது. நாம் நம்முடைய வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும்போது முதலாவதுநாம் செய்யவேண்டியது என்னவெனில், பத்தில் ஒரு பகுதியை வேறாக்கி அதை ஒரு பக்கத்தில் வைக்க வேண்டும். அதை நாம் வீட்டுப் பொருட்கள் வாங்குவதற்கோ, ஏதேனும் கட்டணங்கள் செலுத்தவோ, திரைப்படங்கள் பார்ப்பதற்கோ அல்லது மற்ற காரியங்களுக்கோ அதை செலவிடக்கூடாது. தசமபாகமானது தேவனுக்கென அர்ப்பணிக்கப்பட்டதாகும். நாம் நம்முடைய சபையில் மற்ற விசுவாசிகளுடன் ஆராதனைக்காகவும் ஐக்கியத்திற்காகவும் ஒன்றுகூடும்பொழுது, இந்த தசமபாகத்தை காணிக்கைப் பையில் ஒரு ஆவிக்குரிய ஆராதனையின் கிரியையாக அதை கொடுக்கின்றோம். நாம் உற்சாகமாக அதை தேவனுக்கு கொடுக்கவேண்டும். சபையானது அத்தசமபாகங்களைப் பெற்று அவற்றை கிறிஸ்து இயேசுவின் சுவிசேஷ ஊழிய வளர்ச்சிக்காக அதை ஞானமாக பயன்படுத்தும்.

தசமபாகமானது சபையினதும் அதன் பல்வேறு ஊழியங்களையும் நடப்பிப்பதற்காக பணத்தேவைகளைச் சந்திக்கும் தேவனுடைய வழியாகும். அனைத்து விசுவாசிகளும் தசமபாகத்தை செலுத்தினால், உள்ளூர் சபைகளும் ஏனைய உதவிசெய்யும் ஊழியங்களும் பண விடயத்தில் ஒருபோதும் குறைவுபடமாட்டாது என்பது சாதாரணமான உண்மையாகும். நாம் செலுத்தும் தசமபாகமானது தேவனே அனைத்து உடைமைகளுக்கும் சொந்தக்காரர் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளுவதைக் காண்பிக்கின்றது. இந்த கீழ்ப்படியும் செயலானது சகல

சுயநலத்தின் கட்டையும் பேராசையையும் உடைப்பதற்கு உதவிபுரிகின்றது. அத்துடன் அப்பணமானது போதகர்களுக்கும் மிஷனரிகளுக்கும் உதவிசெய்வதற்கும், கட்டிடங்களை வாங்குவதற்கும், வேதாகமங்களை வாங்குவதற்கும், பரிசுத்தவான்களுக்கு உதவிசெய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை நடப்பிப்பதற்கும் உதவிசெய்வனவாக அமைகின்றதை நாம் அறிந்துள்ளோம் என்பதைக் காண்பிக்கின்றது. முதலில் தசமபாகம் செலுத்துவது என்பது முடியாததொன்றாகக் காணப்படினும், தேவன் தம்முடைய வார்த்தையில் எத்தனை உண்மையுள்ளவர் என்பதை நீங்கள் காணும்போது கொடுத்தல் எத்தனை பாக்கியமும் சந்தோஷமானது என்பதைக் காண்பீர்கள். அநேக விசுவாசிகள் தசமபாகத்திற்கும் மேலாக கொடுப்பர். எம்மில் ஒருவருவரும் தேவன் கொடுத்ததற்கு மேலாக அல்லது அதிகமாக கொடுக்கமுடியாதென்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

## விசுவாசம், அர்ப்பணித்தல் மற்றும் காத்திருத்தல்

### *நோக்கம் 3:*

*விசுவாசம், அர்ப்பணித்தல் மற்றும் காத்திருத்தலானது எவ்வாறு தேவனுடைய திட்டத்தில் ஒரு பகுதியாகின்றதென்பதை விபரித்தல்.*

#### விசுவாசித்தலின் கோட்பாடு

நாம் தேவனுடன் சஞ்சரிக்கும்போது அவருடைய இராஜ்ஜியமான ஒரு புதிய இராஜ்ஜியத்தை அவர் நமக்கு அறிமுகப்படுத்துகின்றார். இரட்சிக்கப்படுவதற்கு முன்பு நாம் இந்த உலகத்தாலும் அதன் நம்பிக்கை முறைகளாலும் மூடப்பட்டிருந்தோம். இரட்சிக்கப்பட்டதன் பின்னர் வாழ்வதற்கு இன்னுமொரு வழியுண்டென்பதை நாம் அறிந்துகொள்வதற்கு ஆரம்பிக்கின்றோம், அது நம்முடைய தாலந்துகள் மற்றும் சாதனைகளை அடிப்படையாகக் கொண்டு வாழ்வது அல்ல, மாறாக விசுவாசத்தில் வாழ்கின்றதை வேண்டிநிற்கின்றது.

விசுவாசம் என்பது இரு உலகங்கள் உண்டென்பதை உறுதியாக நம்புவதிலிருந்து ஆரம்பிக்கின்றது, ஒன்று காணப்படும் உலகம் மற்றொன்று காணப்படாத உலகம். எபிரெயர் 11:1 அதை இவ்வாறு விளக்குகின்றது: “விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கின்றது.” நாம் வாழும் இச்சரீரப்பிரகாரமான உலகமானது ஐம்புலன்களினூடாக அனுபவிக்கப்படுகின்றது. ஆவிக்குரிய உலகம் மிகவும் யதார்த்தமானது என்றாலும் அது விசுவாசத்தினூடாகவே அனுபவிக்கப்படுகின்றது.

நம்முடைய வாழ்க்கையில் ஒவ்வொரு பகுதியிலும் தேவனுடைய ஆசீர்வாதங்களை அறிந்துகொள்ளவேண்டுமெனில் காணப்படாத ஆவிக்குரிய உலகம் புறக்கணிக்கப்பட முடியாது. அதற்கு மிகஉயர்ந்த முன்னுரிமையை அளிக்கவேண்டும். ஆகவே, நாம் நம்முடைய விசுவாசத்தை உபயோகப்படுத்த கற்றுக்கொள்ளவேண்டும். பவுல் இவ்வாறு கூறுகின்றார், “நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கின்றோம்” (2 கொரிந்தியர் 5:6). விசுவாசமே தேவனுடைய வாக்குப்பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்குநமக்கு

உதவிசெய்கின்றது. எபிரெயர் 11:2 விசுவாசத்தைப் பற்றி இவ்வாறு கூறுகின்றது, "அதினாலே முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள்." நம்முடைய வாழ்வில் தேவனிடத்திலிருந்து அனுமதி அல்லது தயவு கிடைக்கின்றதைப் பார்க்கிலும் வேறெந்த மிகப்பெரிய வரப்பிரசாதமுமில்லை.

நாம் விசுவாசிகளாக முதிர்ச்சியடையும்போது விசுவாசமானது நம்முடைய வாழ்வில் வளர்ச்சியடைகின்றது. எவ்வாறாயினும், நம்மை நாமே தாழ்த்தி தேவனுடைய வசனத்தைக் கற்றுக்கொள்ளுவதே பிரதானமான முன் நிபந்தனையாகும். ரோமர் 10:17 இல் பவுல் எழுதுகின்றார், "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்." நமக்கு தேவை ஏற்படும் எந்நேரத்திலும் நாம் விசுவாசத்துடன் தேவனை நோக்கிப் பார்க்கவேண்டும் அவருடைய வார்த்தையை நம்பவேண்டும் அத்துடன் அவர் நம் தேவைகளை சந்திப்பார் என்பதையும் நாம் நம்பவேண்டும்.

## அர்ப்பணித்தலின் கோட்பாடு

விசுவாச வாழ்க்கையானது அர்ப்பணிப்பு என்கிறதான முக்கியமான ஒரு விடயத்திற்கு வழிநடத்துகின்றது. எபிரெயர் 11 இல் அர்ப்பணிப்பானது எவ்வாறு விசுவாசத்துடன் இசைவாக பயணிக்கிறதென்பதை எடுத்துக்காட்டுக்கள் வாயிலாக காண்பிக்கின்றது. அங்கே ஆபேலைக் குறித்து என்ன சொல்லுகிறதென்பதைக் கவனியுங்கள்: "விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்து தேவனே சாட்சி கொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்" (எபிரெயர் 11:4).

ஆபேலும் அவன் சகோதரன் காயீனும் தேவனை ஆராதிக்கும்படி வந்தனர் (ஆதியாகமம் 4). காயீன் தான் அறுவடை செய்த தன் நிலத்தின் கனியை கொண்டு வந்தான். ஆபேல் தன்னுடைய மந்தையில் தலையீற்றுக்களில் சிலதைக் கொண்டு வந்தான். தேவன் ஆபேலுடைய காணிக்கையை அங்கீகரித்தார் என்றும் காயீனுடையதை அவர் அங்கீகரிக்கவில்லை என்றும் வேதாகமம் கூறுகின்றது. காயீனுடைய காணிக்கையில் என்ன குறைபாடு இருந்ததென்பது நிச்சயமாக நமக்குத் தெரியாது. ஆனாலும் ஆபேல் காணிக்கையாக தனது மந்தையில் ஈடுசெய்யமுடியாத அங்கத்தவர்களை கிரயமாக செலுத்தினான் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். சிலவேளைகளில் ஆபேல் அந்த ஆட்டுக்குட்டிகளை நேசித்து அவைகளை மிக உயர்வாகவும் பெறுமதிமிக்கவைகளாகவும் எண்ணியிருக்கலாம். இருப்பினும், தேவனுக்கு ஒரு அர்த்தமுள்ள காணிக்கையை செலுத்த அவனுக்கு வேண்டியதாயிருந்தது. அதினாலே தன் மந்தையைப் பார்க்கிலும் தேவனை பெறுமதிமிக்கவராக எண்ணினான் என்பதை கிரியையில் காண்பிக்க அவனுக்கு அவசியமாயிற்று. இரு உலகங்கள் இருப்பதை ஆபேல் அறிந்துகொண்டான். தன்னுடைய மந்தையிலிருந்து தலையீற்றை காணிக்கையாக செலுத்திய பலியை தேவன் அங்கீகரிப்பார் என்பதையும் அவன் அறிந்திருந்தான்.

ஆபேலினிடத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளலாம். நாம் கொடுப்பது எதுவாயிருந்தாலும் அதை தேவனுக்கென்று கொடுக்கும்பொழுது பயப்படாது நம்முடைய மிகவும் சிறந்தவற்றை நாம் அவருக்கு கொடுக்கமுடியும் என்பதுடன் சிலநேரங்களில் அர்ப்பணிப்புடனும்

கொடுக்கமுடியும்.கொடுத்தலானது நம்முடைய சொந்த வாழக்கைகளை கொடுப்பதிலிருந்து ஆரம்பிக்கட்டும். ரோமர் 12:1 இல் பவுல் கூறுவதைப்போல, "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." இயேசுவும் இந்த அர்ப்பணிப்பைக் குறித்து கூறுகின்றது என்னவெனில், "தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல" (மத்தேயு 10:38). தேவனுடைய வளமான ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வதற்கான வழியானது அர்ப்பணிப்புள்ள வாழ்வை வாழ்தலினூடாகவே கண்டுகொள்ளப்படுகின்றது.

## காத்திருத்தலின் கோட்பாடு

கிறிஸ்தவர்கள் உட்பட எந்தவொரு மனுஷனும் பொதுவாக தங்களுடைய வாழ்க்கையில் குறித்த ஒரு மட்டத்திலான ஆசீர்வாதத்தையாகிலும் அனுபவிக்க வேண்டும் என்பது சாதாரணமான விடயமாகும். தேவன் ஆசீர்வாதத்திற்கு எதிரானவர் என்று ஒருவரும் உங்களை வஞ்சியாதிருப்பார்களாக. அது "பணம்" மாத்திரம் அல்ல ஆகிலும் அது அதைவிட ஓரளவு எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கும் "பண ஆசை"(1 தீமோத்தேயு 6:10). இயேசு நமக்கு ஜீவனையும் அதன் பரிபூரணத்தையும் குறித்து வாக்களித்துள்ளார் (யோவான் 10:10). நம்முடைய வாழ்க்கைக்குத் தேவைப்படும் தெய்வீக அசீர்வாதத்தின் அறுவடைக்குபொறுமை அவசியமாயிருக்கின்றது. நாம் இந்த கோட்பாட்டை காத்திருத்தல் என்று அழைக்கின்றோம்.

பவுல் இதைக் குறித்து கலாத்தியர் 6:9 இல் பேசுகின்றார்: "நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்." வாழ்க்கையிலும் கொடுப்பதிலும் உண்மையாக இருப்பது என்பது விதைகளை நிலத்தில் விதைத்து முடிவில் அது அறுவடை தரும் வரை காத்திருத்தலுக்கு சமனாகும். அப்போஸ்தலர் பவுல் இந்த ஒற்றுமையை 2 கொரிந்தியர் 9:6-10 இல் கொடுக்கப்பட்டுள்ள வசனத்துடன் கலந்துரையாடுகின்றார். அது என்ன கூறுகிறதென்பதை நாம் வாசிப்போம்.

> பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகல வித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்...விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை

அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார்.

பவுலுடைய போதனைகளில் சில இன்றியமையாத பாடங்களை நான் இங்கு எடுத்துக்காட்டுகிறேன்:

- நாம் எவ்வளவு விதைக்கிறோம் என்பதே நாம் எவ்வளவு அறுப்போம் என்பதைத் தீர்மானிக்கின்றது.
- உற்சாக மனதுடன் கொடுக்கவேண்டும், விசனமாயும் அல்ல கட்டாயமாயுமல்ல.
- அறுவடை செய்தல் என்பது தேவனுடைய தயவை அனுபவித்தலாகும். நம்முடைய வாழ்க்கையில் ஒவ்வொரு பகுதியிலும் நாம் ஆசீர்வதிக்கப்படவேண்டுமேயன்றி வெறுமனே பொருளாதாரத்தில் மாத்திரம் அல்ல.
- நம்முடைய அறுவடையானது நாம் வாழ்வதற்கும், எதிர்கால அறுவடைக்காக விதைப்பதற்கு அல்லது முதலீடு செய்யவதற்கு போதுமானதாகவும் அமையும்.

தேவனுக்காக காத்திருப்பதற்காக செல்விடும் நேரமானது ஒரு அறுவடையை கொண்டு வருவதற்காகவேயின்றி அது ஒரு வீணான நேரம் அல்ல. அறுவடைக்காக காத்திருக்கும் காலப்பகுதியில் தேவன் அநேகமாக மிகச்சிறந்த காரியங்களை நம்முடைய வாழ்க்கையில் செய்வதோடு மிகப்பெரிய ஆவிக்குரிய பாடங்களையும் கற்றுத் தருகின்றார். மெய்யாகவே தேவனுக்கு நம்முடைய வெற்றியும் ஆசீர்வாதமும் மாத்திரமே அதிக முக்கியத்துவம் வாய்ந்த காரியங்களல்ல என்பதை எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். தம்முடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக மாற்றுவதே அவருடைய உயர்ந்த முன்னுரிமையாகும். தேவன் நம்மோடு இடைப்படும்போது எப்போதும் இதையே நோக்கமாகக் கொண்டுள்ளார்.

2 பேதுரு 1:5-7 ஐ வாசியுங்கள். இந்த அதிகாரத்தில், நம்முடைய வாழ்வில் தேவன் காண விரும்பும் கிறிஸ்துவுக்குரிய குணாதிசயங்களின் பட்டியலைக் காணலாம். நம்முடைய விசுவாசத்துடன் கூட்டவேண்டிய முதலாவது விடயம் பொருள்சம்பந்தப்பட்ட ஆசீர்வாதத்தின் அறுவடை அல்ல மறாக நற்கிரியை (சிறந்த நன்னெறி,நல்லொழுக்கம்) அதிலிருந்து, ஞானம், இச்சையடக்கம், பொறுமை, சகோதர சிநேகம் மற்றும் அன்பு இவைபோன்ற ஏனைய குணாதிசயத் தரங்கள் கூட்டப்படுகின்றது. பேதுரு மேலும் கூறுகையில், “இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது” (2 பேதுரு 1:8).

ஆகவே, விதைக்க ஆரம்பியுங்கள்! நீங்கள் விதைத்த பின்னர் அறுவடைக்காக பொறுமையாக காத்திருக்கும்போது சோர்ந்துபோகாதீர்கள். அது நடைபெறும். மற்றும் காத்திருக்கும் காலத்தில் தேவன் தம்முடைய முழு நிறைவான கிரியையை உங்களில் நடப்பிக்கும்படிக்கு அவரை அனுமதியுங்கள்.

## ஆராதனையும் உக்கிராணத்துவமும்

### *நோக்கம் 4:*

*ஒரு நல்ல பொருளாதார உக்கிராணத்துவத்தில் தொடர்ச்சியாகவும்உண்மையாகவும் தேவனை ஆராதிப்பது ஏன் முக்கியமாகின்றது என்பதை விளக்குதல்.*

### நோவாவின் முன்மாதிரி

வீழ்ச்சிக்கு முன்பதாக தேவனுடன் உரையாடுவதும் தேவனை ஆராதிப்பதும் மனித வாழ்க்கையின் இயற்கையான ஒரு பகுதியாக காணப்பட்டது. மனுகுலம் தன் முழு விருப்பத்துடன் பாவம் செய்தபோது, தேவனுடனான அந்த நெருங்கிய தொடர்பு உடைந்துபோனதுடன் அவருடைய ஏராளமான ஆசீர்வாதங்களும் இழக்கப்பட்டது. பூமியின் மீது சாபம் வந்தது. இனி ஒருபோதும் மனிதர்கள் இயல்பாகவே ஆவிக்குரியவற்றை லௌகீகமானவற்றிற்கு மேலாக வாஞ்சிக்கப்போவதில்லை. அவர்கள் தற்போது இயற்கையான உலகிற்கு, தீமையான செயல்களுக்கு கவர்ந்து இழுக்கப்பட்டுள்ளதோடு வீழ்ச்சியினால் வந்த சாபத்திற்கு தப்பித்துக்கொள்ள வழிகளைத் தேடுகின்றனர். ஒரே மெய்த் தேவனை ஆராதிப்பதற்குப் பதிலாக மாற்றீடுகளைத்தேட ஆரம்பித்தனர்.

முடிவில் பாவம் நிறைந்த இவ்வுலகை ஜலப்பிரளயத்தினால் அழிப்பதற்கு தேவன் தீர்மானித்தபோது அவர் ஒரு தனித்துவமான நபரை காப்பாற்றும்படி தெரிந்துகொண்டார். அந்நபர் தன்னுடைய சந்ததியில் நீதிமானாகவும் உத்தமனாகவும் வாழ்ந்ததினூடாக தேவனை ஆராதனை செய்தவராவார். ஆதியாகமம் 6:8 கூறுகின்றது, “நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது.” இந்த கிருபையானது தேவனுக்கும் நோவாவுக்கும் இடையேயான ஒரு உடன்படிக்கை உறவிற்கு வழிநடத்தியது. இந்த உறவினால் நோவாவும் அவன் குடும்பத்தாரும் தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பிப் பிழைப்பர் என்ற உறுதி காணப்பட்டது (ஆதியாகமம் 6:18-22).

ஜலப்பிரளயத்திற்குப் பின்னர், நோவா ஒரு பலிப்பீடத்தைக் கட்டி பலிசெலுத்தி தேவனை ஆராதித்தான். இந்த ஆராதனை முறையானது தேவன் சிருஷ்டிகரும் எல்லாவற்றிற்கும் சொந்தக்காரரும் என்பதை ஏற்றுக்கொள்ளுவதாக அமைகின்றது. அத்துடன் தங்களை அற்புதவிதமாக பாதுகாத்துக்கொண்டதற்காக நன்றியை தெரிவிப்பதாகவும் அமைகின்றது. தேவன் நோவாவுக்கு கொடுத்த மிகப்பெரிய உடன்படிக்கையின் வாக்குத்தத்தமானது ஆதியாகமம் 8:22 இல் காணப்படுகின்றது, “பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைக் காலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை என்று தம்முடைய உள்ளத்தில் சொன்னார்.” இந்நாள் வரைக்கும் இந்த வாக்குத்தத்தமானது நம்மிடத்தில் நிறைவேறி வருகின்றது.

விசுவாசிகளாக நாமும் தேவனுடன் ஒரு உடன்படிக்கை உறவிற்குள் காணப்படுகின்றோம். நம்முடைய வாழ்க்கைக்கான கிருபைகளுக்கான ஏராளமான அதியமான ஆசீர்வாதங்களையும் இது உள்ளடக்குகின்றது. நாம் நியாயத்தீர்ப்பிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளோம். தேவன் நம்மில் கரிசனையுள்ளவராயிருக்கின்றார். அவர் நம்முடைய தேவைகளை சந்திக்கின்றார். இவ்வாழ்க்கை முடியும்போது தேவன் நமக்காக ஓர் இடத்தையும் ஆயத்தப்படுத்தியிருக்கின்றார். எமக்கு முன்பாக எதிர்பார்ப்புள்ள அற்புதமான நித்தியகாலம் உண்டு. நம்முடைய முதலாவது மாறுத்தரமே ஆராதனையாக இருக்கவேண்டும். நாம் ஆராதிக்கும்போது, நம்முடைய கவனம் தேவன் மீது தவிர லௌகீக காரியங்களில் இருக்கக்கூடாது. கொலோசெயர் 3:1-2 இல் பவுல் இவ்வாறு கூறுகின்றார், “நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.”

நாம் இந்த பூமியில் வாழும் வரை தேவன் நம்மோடுகூட உறவுகொள்ள வாஞ்சிக்கின்றார். மேலோட்டமான மேலெழுந்தவாரியான ஒரு உறவு அல்ல, மாறாக உரையாடலும் ஐக்கியமும் நிரம்பிய உறவையே தேவன் எதிர்பார்க்கின்றார். நாம் அவரை அதிகமாக அறிந்துகொள்ளும்போது அவருக்கான நம்முடைய அன்பு அதிகரிக்கின்றதோடு நாம் பேரார்வத்துடனேகூட அவரை ஆராதிப்போம்.

இது தொடர்பாக வேதாகமத்தில் காணப்படும் ஆபிரகாமிற்கு தேவனோடு காணப்பட்ட உறவிற்கான உதாரணத்தைப்போலவேறெந்த மேலான ஒரு உதாரணமும்நிச்சயமாக இல்லை. யாக்கோபு கூறுவதுபோல அது அவ்வளவு நெருக்கமானதாகும், “அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான்” (யாக்கோபு 2:23). தேவன் ஆபிரகாமுடனும் அவன் சந்ததியுடனும் ஒரு விசேஷித்த உடன்படிக்கையை ஏற்படுத்தியதோடு நம்புவதற்கரிய வாக்குத்தத்தங்களையும் கொடுத்தார். தேவன் தனக்கும் தன்னுடைய சந்திக்கும் கானான் என்னும் தேசத்தை தருவார் என்பதை ஆபிரகாம் அறிந்திருந்தார். தன்னுடைய சந்ததிக்கூடாக முழு உலகமும் ஆசீர்வதிக்கப்படும் என்பதையும் அவர் கண்டுகொண்டார். தேவன் எப்பொழுதும் அவருடைய தேவைகளைச் சந்தித்தார், மேலும் தன்னுடைய முதிர்வயதில் அற்புதவிதமாக ஒரு மகனையும் அவனை அவருக்கு சுதந்திரவாளியாகவும் தந்தருளினார். அவர் எங்கெங்கு பயணித்தாரோ அங்கெல்லாம் ஒரு பலிப்பீடத்தைக் கட்டி அங்கு தேவனைத் தொழுதுகொள்ளுவது அவருடைய மாறுத்தரமாக இருந்தது.

தேவனை ஆராதிப்பதும் அவருடன் சிநேகிதராயிருப்பதுமே இலக்காயிருக்கவேண்டும். உங்களுடைய பெறுமைதியைக் குறித்தும் அல்லது உங்கள் பணம் மற்றும் உடைமைகளைக் குறித்தும் அக்கறைக்கொள்வதற்கு பதிலாக தேவனுடைய பெறுமதியின் மீது கவனம்செலுத்தவேண்டும். நாம் தேவனை ஆராதிக்கும்பொழுது, நம்முடைய ஊழியத்தை (எபிரெயர் 13:15-16 ஐபார்க்கவும்), நம்முடைய ஆஸ்தியை (பிலிப்பியர் 4:16-18), நம்முடைய துதியையும் மற்றும் நம்மையும் (ரோமர் 12:1) காணிக்கையாக செலுத்துகிறோம். ஆராதனை

என்பது சமயரீதியான ஒரு கடமை என்று எண்ணி செய்வதல்ல. அது மிகவும் இயல்பானதும் உண்மையானதுமாகும்.

தேவனை ஆராதிப்பதில் உள்ள நன்மை என்னவெனில் அது நம்முடைய வாழ்வில் அனைத்து பகுதிகளிலும் ஊற்றெடுக்கும். தேவன் நம்முடைய தேவைகளெல்லாவற்றையும் சந்திக்கின்றதோடு ஒருபோதும் திறக்கமுடியாத கதவுகளை தேவன் நமக்காக திறப்பதோடு அதை ஒருவனாலும் பூட்டவும் முடியாது. தேவன் வானத்தை திறந்து நமது மடிமீது பணத்தை கொட்டுவதாகவும் அதனால் நீங்கள் உங்கள் வேலையை விட்டுவிடவேண்டும் அல்லது உங்கள் குடும்பத்தின் தேவைகளை சந்திப்பதை நிறுத்திவிடவேண்டுமென்பது இதன் அர்த்தமல்ல. நீங்கள் சிறந்ததொரு வேலையை தேடும்படியும் போதியளவு வருமானத்தை பெற்றுக்கொள்ளும்படியும் உங்கள் வாழ்க்கை முழுவதையும் முன்கொண்டு செல்லும்படி தேவன் உங்களை அனுமதிக்கின்றார். தேவனுடைய கிருபையானது வாழ்வதற்கான உற்சாகத்தை கூட்டுகின்றதோடு தேவனுடைய மகிமைக்காக செய்யும் காரியம் எதுவானாலும் அதில் சிறப்பாயிருப்பதற்கு நமக்கு உதவிசெய்கின்றது.

## மனனம் செய்வதற்கு ஆலோசிக்கப்ட்ட வசனங்கள்

சங்கீதம் 24:1

சங்கீதம் 31:19

மல்கியா 3:10

மத்தேயு 10:8, 38

ரோமர் 12:1-2

1 கொரிந்தியர் 10:31

2 கொரிந்தியர் 9:6-10

கொலோசெயர் 3:1-2

# பாடம் 9

## ஏன் தேவன் பாடுகளை அனுமதிக்கின்றார்?

ஏன் தேவன் பாடுகளை அனுமதிக்கின்றார்? சில நேரங்களில் மனிதர்களுக்கு கடும் வேதனையையும் மிகக் கஷ்டமான சூழ்நிலைகளையும் ஏன் தேவன் அனுமதிக்கிறார் என்பதை முழுவதுமாக புரிந்துகொள்ளுவது மிகவும் கடினம். சில பாடுகள் இயற்கை காரணங்களினிமித்தம் உண்டாகின்றது அதாவது சூறாவளி, தீ, பூமி அதிர்ச்சிகள் போன்றவையாகும். தத்துவ ஞானிகள் இவற்றை இயற்கை தீமைகள் என்று அழைப்பர். மற்றைய பாடுகள் மனிதர்களின் செயல்களால் உண்டானது அவர்கள் தங்கள் சுதந்திரத்தை பாவம் செய்வதற்கும், அழிவு மற்றும் மோசமான செயல்கள் செய்வதற்கும் பயன்படுத்தியதன் பிரதிபலனாகும். தத்துவ ஞானிகள் இவற்றை நீதியுள்ள தீமைகள் என்று அழைப்பர்.

ஏன் தேவன்பாடுகளை அனுமதிக்கின்றார் என்பதற்கான எல்லாக் காரணங்களையும் எம்மால் ஒருபோதும் புரிந்துகொள்ளமுடியாத அதேவேளை தேவனுடைய வசனம் வாழ்க்கையின் இந்த கஷ்டமான கேள்விகளுக்கான சில உறுதியான பதில்களைத் தருகின்றது. உண்மையாகவே, நாம் இப்பொழுது இந்தப் பாடத்தை இன்னும் அதிகமாக கற்றுக்கொள்ளும்போது, சிலவேளை எமது வாழ்க்கையில் இப்பொழுது காரியங்கள் நன்றாக நடைபெற்றுக்கொண்டுமிருக்கலாம். நாம் சற்று நன்றாக சோதனைகளுக்கும் கஷ்டங்களுக்கும் இனி முகங்கொடுக்க நேரிடும்போது தாங்கள் ஏன் கஷ்டப்படுகின்றார்கள் என்று வியப்புடன் காணப்படுபவர்களுக்கு தேவையான பதிலை கூறவதற்காக நாம் நன்றாகவே ஆயத்தப்பட்டிருப்போம்.

ஐசுவரியமான வாழ்க்கையிலிருந்து தரித்திரமான வாழ்க்கைக்குள் கடந்து சென்ற யோபுவின் வாழ்க்கை ஒரு நல்ல உதாரணமாகும். யோபு புத்தகத்தின் முதல் இரண்டு அதிகாரங்களுகும் அவருக்கு என்ன நடந்ததென்பதை விபரிக்கின்றது. ஆனாலும், பின்வருகின்ற முப்பத்தைந்து அதிகாரங்களும் அவருக்குள் என்ன நடக்கிறதென்பதைக் குறித்து கூறப்பட்டுள்ளது. நாம் யோபுவை ஒரு வெற்றியுள்ள மனிதன் என்று அறிமுகப்படுத்துகிறோம். அவன் நல்ல ஆரோக்கியமுள்ளவனாக, பிள்ளைகள், மற்றும் ஐசுவரியத்தில் மகிழ்ந்திருந்தார். இருப்பினும், பாடுகளை அனுபவிக்கும்படிதேவன் யோபுவை அனுமதித்தார். யோபுக்கு உண்டான சகலவற்றையும் எடுத்துக்கொள்ளுவதற்கு தேவன் சாத்தானுக்கு அனுமதிகொடுத்தார். அவருடைய ஆரோக்கியம் அவரை விட்டு நீங்கியது; அவருடைய வேலைக்காரர்கள் கொலைசெய்யப்பட்டார்கள்; அவருடைய மிருகஜீவன்கள் யாவும் திருடப்பட்டது அல்லது கொல்லப்பட்டது; அவருடைய குமாரரும் குமாரத்திகளும் அழிந்துபோனார்கள். இந்த பேரழிவின் மத்தியிலும் யோபுடைய பிரதிசெயலானது மிகவும் கனப்படுத்தத்தக்கதாக இருந்தது. “அப்பொழுது யோபு எழுந்திருந்து, தன் சால்வையைக் கிழித்து, தன் தலையை சிரைத்து, தரையிலே விழுந்து பணிந்து” (யோபு 1:20). பாடுகளில்

யோபுடைய பிரதிசெயலானது நமக்கு ஒரு மிகப்பெரிய மாதிரியாகும். இவ் உலகத்திற்குரிய காரியங்கள் தற்காலிகமானவை என்பதை அவர் அறிந்திருந்தார். அவருடைய பிள்ளைகள் மற்றும் உடைமைகள் ஆகியவை தேவனுக்கு சொந்தமானவை என்பதையும் அவர் அறிந்திருந்தார். மனிதர்களாக நாம் இவ்வுலகத்திற்கு ஒன்றுமில்லாமல் வந்தோம் என்பதையும் ஒன்றுமில்லாமல் போவோம் என்பதையும் யோபு புரிந்துகொண்டிருந்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக, தன்னுடைய பாடுகளில் தேவனை தூஷியாமல், யோபு தான்கொண்ட பேச்சுத்திறனால் இவ்வாறு கேட்கின்றார், "தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ என்றான்" (யோபு 2:10). அவனுடைய எல்லா இழப்புகளின் மத்தியிலும் அவர் தன் உதடுகளால் பாவம் செய்யவில்லை. அவர் தன்னுடைய மிகப்பெரியதும் பொறுக்கவியலாததுமான மனவேதனையிலும் சாவை விரும்பியபோதும் (யோபு 3 ஆம் அதிகாரத்தை வாசியுங்கள்). அவர் தன்னுடைய விசுவாசத்தை கைவிடவுமில்லை தேவனை தூஷிக்கவுமில்லை. பின்நாளில் தேவன் யோபுவைத் தேற்றி நல்ல ஆரோக்கியத்தைத் தந்து முன்னிருந்ததைப் பார்க்கிலும் அவரை அதிகமாக ஆசீர்வதித்தார்.

ஒருவரும் பாடுகளை அனுபவிக்கிறதற்கு விரும்பமாட்டார்கள். ஆகிலும், உண்மை என்னவென்றால் சில பாடங்களை பாடுகளினூடாக மாத்திரமே கற்றுக்கொள்ள முடியும்.

## பாடத்தின் முக்கிய அம்சங்கள்

பாடுகள் கனிகளை உருவாக்கும்

நல்ல குணாதிசயத்தின் உருவாக்கம்

சாத்தானுடைய கரத்தில் பாடுகள்

பாடுகள் நம்முடைய பாவங்களைக் கடிந்துகொள்ளும்

பாடுகள் கிறிஸ்துவுடன் விசுவாசிகளை ஐக்கியப்படுத்தும்

பாடுகள் தேவனைச் சார்ந்திருப்பதற்கு கற்றுத்தரும்

பாடுகள் நம்மை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்தும்

## பாடத்தின் நோக்கங்கள்

1. *பரிசுத்த ஆவியின் கனிகளின் வளர்ச்சிக்கு பாடுகள் எவ்வாறு உதவிபுரிகிறதென்பதை விளக்குதல்.*

2. *பாடுகள் எவ்வாறு நல்ல குணாதிசயத்தை உருவாக்குகிறதென்பதை விளக்குதல்.*

3. *தேவனுடைய ஜனங்களுக்கு எதிராக சாத்தான் உபயோகிக்கும் சூழ்ச்சித்தந்திரங்களை இனம்காணல்.*

4. *கீழ்ப்படியாத கிறிஸ்தவர்களை ஒழுக்கப்படுத்துவதற்காக தேவன் ஏன் பாடுகளைப் பயன்படுத்துகிறார் என்பதை விளக்குதல்.*

5. *பாடுகள் எவ்வாறு கிறிஸ்துவுடன் நம்மை ஐக்கியப்படுத்துகின்றதென்பதை விபரித்தல்.*

6. *பாடுகள் எவ்வாறு கிறிஸ்துவின் மீதான நம்முடையசார்ந்திருத்தலை அதிகரிக்கின்றது என்பதை விளக்குதல்.*

7. *பாடுகள் எவ்வாறு கிறிஸ்தவர்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துகின்றதென்பதை சுட்டிக் காண்பித்தல்.*

### பாடுகள் கனிகளை உருவாக்கும்

### *நோக்கம் 1:*

*பரிசுத்த ஆவியின் கனிகளின் வளர்ச்சிக்கு பாடுகள் எவ்வாறு உதவிபுரிகின்றதென்பதை விளக்குதல்.*

#### கனிகளை உருவாக்குதல்

தேவன் நம்முடைய வாழ்க்கையில் கனிகளைக் குறித்து வலியுறுத்துவதோடு அதை உருவாக்குவதற்காக அவரிடத்தில் ஏராளமானதும் வித்தியாசமானதுமான வழிகளுமுண்டு. இவ்வழிகளில் சிலவை நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தைக்கூடாக ஒரு விளைவை ஏற்படுத்த, ஜெபத்தின் பிரதிபலன்மற்றும் பாடுகளும்கூட உள்ளடங்கும். நம்மில் எவரும் இன்னல்களை எதிர்நோக்கியிருப்பதில்லையென்றாலும் தேவன் அதை நம்முடைய வாழ்க்கையில் அனுமதிக்கிறார் என்றால் அதன் அர்த்தம் நல்ல கனிகளை உருவாக்குவதற்கேயாகும். நம்மில் கனிகளைக் காணும்படி தேவன் வாஞ்சிக்கின்றார். யோவான் 15:8 இல் “நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா

மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்." என்று இயேசுகூறுகின்றார். கலாநிதி. நோர்மன் வின்சன்ட் பீயல் இவ்வாறு கூறினார்.

> பிரச்சினைகள் இல்லாத மனிதர்கள் கல்லறைகளில் மாத்திரமே இருக்கின்றார்கள், உண்மையாகவே அவர்களில் சிலருக்கும்கூட பிரச்சினைகள் உண்டு. உங்களுக்கு பிரச்சினைகள் இருக்கிறதென்றால், நீங்கள் உயிரோடிருக்கின்றீர்கள், உங்களுக்கு அதிகமான பிரச்சினைகள் இருக்கிறதென்றால் நீங்கள் இன்னும் அதிகமாக உயிரோடிருக்கின்றீர்கள் என்பதே அதன் எளிமையான அர்த்தம். உங்களிடத்தில் மனித அளவு பிரச்சினைகள் இல்லாவிடின் நீங்கள் முழங்காலில் இருந்து தேவனிடத்தில் இந்த கொஞ்சத்தில் உங்களை "நம்பும்படி" கேளுங்கள்.

பாடுகள் நல்ல கனிகளை உருவாக்குகிற அதேவேளை அதற்கு கெட்ட கனிகளை உருவாக்கும் ஆற்றலும் உண்டு. பாடுகளுக்கு எவ்வாறு நாம் மாறுத்தரம் அளிக்கிறோமென்பது நமது தேர்வாகும். ஒன்று நாம் கசப்பாக அல்லது நன்றாக, நன்றியுள்ளவர்களாக அல்லது வெறுப்புள்ளவர்களாக இவ்இரண்டில் ஒன்றாக முடியும். பாடுகள் உருவாக்குகிறதான சில நல்ல கனிகளைக் குறித்து நாம் கலந்துரையாடுவோம்.

## பாடுகளில் பொறுமை

பொறுமை என்னும் குணாதிசயமானது அநேக மனிதர்களிடத்தில் இன்றைய நாட்களில் குறைபாடாக காணப்படினும் கிறிஸ்தவ முதிர்ச்சியில் அது இன்றியமையாதவொரு அம்சமாகும். நாம் சோதனைகளுக்கு முகங்கொடுக்கும்போதும் தேவனுக்காக காத்திருக்கக் கற்றுக்கொள்ளுகிறபோதும் பொறுமையும் விடாமுயற்சியும் வளர்ச்சியடைகின்றது. லூக்கா 8:15 "நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்" என்று கூறுகின்றது.

வயது முதிர்ந்த ஒரு விசுவாசியிடம் ஜெபிப்பதற்காகச் சென்ற ஒரு வாலிபனைக் குறித்த ஒரு கதை இவ்வாறு கூறுகின்றது. இந்த வாலிபனுக்கு பொறுமை அதிகமாக அவசியமாக காணப்பட்டது. இந்த வயது முதிர்ந்தமனிதன் கர்த்தர் இந்த வாலிபனுக்கு நாள்முழுவதும் உபத்திரவத்தை அனுப்ப வேண்டுமென ஜெபம்பண்ணினார். குழப்பமடைந்த இந்த வாலிபன் ஏன் அவர் பொறுமைக்காக ஜெபிக்காமல் உபத்திரவத்திற்காக ஜெபிக்கின்றார் என்று வினவினான், அதற்கு அந்த முதியவர், "உபத்திரவத்திற்கூடாகவே நாம் பொறுமையைக் கற்றுக்கொள்ளமுடியும்" என்று பதிலளித்தார்.

இப்படியாக தேவன் தம்முடைய வேலையை முடிக்கும் வரை நமக்குள் கிரியை செய்கிறதற்கு நாம் அவருக்குஇடங்கொடுக்கவேண்டும்! யாக்கோபு 1:2-4 இல், "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும்

நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது" என்று புத்திகூறுகின்றது.

**உபத்திரவத்தில் சந்தோஷம்**

சந்தோஷமானது பாடுகளின் பலனாகும். கஷ்டங்களுக்கூடாக நீங்கள் கற்றுக்கொள்ளும் பாடங்களே நீங்கள் அனுபவிக்கப்போகும் மிகப்பெரிய சந்தோஷங்களாகும். பாடுபட்டதன் பின்னர், எஞ்சியிருக்கும் உங்களுடைய வாழ்க்கைகாக நீங்கள் ஒரு சாட்சியைக்கொண்டிருப்பீர்கள். கஷ்டமான நாட்கள் வருமென இயேசு கூறினார். "என்னிடத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்" (யோவான் 16:33). தேவன் நம்மை பாடுகளுக்கூடாக நடத்திச்செல்லுவார் என்பதை அறிந்து நாம் சந்தோஷமாயிருக்க முடியும். அதனால் கவலைப்படுவதற்கு அவசியமில்லை.

## நல்ல குணாதிசயத்தின் உருவாக்கம்

## *நோக்கம் 2:*

*பாடுகள் எவ்வாறு நல்ல குணாதிசயத்தை உருவாக்குகிறதென்பதை விளக்குதல்.*

பாடுகள் குணாதிசயத்தில்உயர் நன்னெறியையும், பெலத்தையும் உருவாக்குகின்றன. பாடுகளுக்கும் இன்னல்களுக்கும் நாம் எவ்வாறு பிரதிசெயல் காண்பிக்கிறோம் என்பதிலேயே நம்முடைய குணாதிசயம் வெளிப்படுகின்றது. நாம் மீண்டும் யோபுவைக் குறித்துப் பார்ப்போம். வேதாகமம் அவனை உத்தமனென்றும் சன்மார்க்கனென்றும் தேவனுக்கு பயந்து பொல்லாப்பை விட்டு விலகுகிறவனுமாயிருந்தான் என்று விபரிக்கின்றது (யோபு 1:1). இது அவர் எவ்வித துரதிஷ்ட நிலைமைக்கும் முகங்கொடுக்க முன்னிருந்த நிலையாகும். பாடுகள் அவனை நெருக்கும்வரை அவனுடைய உண்மையான குணாதிசயம் வெளிப்படவில்லை. யோபுவின் இன்னல்களுக்குப் பின்னர் வேதாகமம் என்ன கூறுகிறதென்பதைக் கவனியுங்கள், "இவையெல்லாவற்றிலும் யோபு பாவஞ்செய்யவுமில்லை, தேவனைப் பற்றிக் குறைசொல்லவுமில்லை" (யோபு 1:22). நீங்கள் பாடுகள் அனுபவிக்கிறவேளையில் தேவனை நோக்கிப் பார்க்கும்பொழுது, அதற்கு நன்றாக பிரதிசெயல்களைக் காண்பிக்கக்கூடியவிதமாகவும் உங்கள் வாழ்க்கையில் அதிகமான கனிகளையும் உருவாக்குவதற்கும் அவர் உங்களுக்கு உதவிசெய்வார்.

நீங்கள் நல்ல குணாதிசயமுள்ள ஒரு நபரா? மற்றவர்கள் பார்க்காதபோது நீங்கள் யார் என்பதே குணாதிசயம் என்று விபரிக்கப்படுகின்றது. நாம் பாடுகளைஅனுபவிக்கும்போது ஆற்றலை வளர்க்கக்கூடிய குணாதிசயத்தின் மூன்று பகுதிகளை தொடும்படிக்கு என்னை அனுமதியுங்கள்.

## பாடுகள் பலவீனமானவர்களை வலிமையாக்கும்

முதலாவதாக, பாடுகள் உங்களை வலிமைமிக்கவர்களாகுவதற்காக உதவிசெய்யும். மரம் வெட்டுபவர் ஒருவர் மலையின் கீழுள்ள ஓடையில் மிதக்கும் மரத்துண்டுகளில் எப்போதாவது ஒரு தடவை தன்னுடைய கூர்மையான கொக்கியைக் கொண்டு சிலவற்றை குத்தி எடுத்து அவற்றை மற்றவற்றிலிருந்து வேறுபடுத்துவதை விடுமுறைக் காலத்தைக் கழிக்க வந்த நபர் ஒருவர் வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தார். ஏன் அவ்வாறு செய்கிறார் எனக் கேட்டபொழுது அந்த தொழிலாளி பதிலளிக்கும் விதமாக கூறியது என்னவென்றால், "உங்கள் பார்வைக்கு இந்த மரக்கட்டைகள் எல்லாம் ஒரே மாதிரியானவை போலத் தெரியலாம். ஆகிலும் சிலவை மிகவும் வித்தியாசமானவையாகும். நான்கடந்துபோவதற்கு இடங்கொடுத்த மரங்களாவன பள்ளத்தாக்குகளில் வளர்ந்தவையும் எப்பொழுதும் புயல்காற்றிலிருந்து பாதுகாக்கப்பட்டவையுமாகும். அவற்றின் வைரம் கரடுமுரடானதாகும். நான் கொக்கியில் குத்தி மற்றவற்றிலிருந்து வேறுபடுத்தினவைகள் உயர்ந்த மலைச் சிகரங்களில் வளர்ந்த மரங்களாகும். அந்த மரங்கள் சிறிதாக இருந்த காலங்களிலேயே மிகவும் பலத்த காற்றுகளால் அடிபட்டவையுமாகும். இதுஅந்த மரங்களை வலிமையாக்கியதுடன் அதற்கு அழகிய வைரத்தையும் கொடுத்தது. நாம் அவற்றை தெரிவுசெய்யப்பட்ட வேலைக்கென சேமித்துவைப்போம். அவை மிகவும் சிறந்தவை என்பதால் அவற்றை சாதாரண மர வேலைகளுக்கு பயன்படுத்த முடியாது" என்று அவர் கூறினார். பாடுகள் எவ்வாறு வலிமையை உருவாக்குகிறது என்பதற்கு இக்கதை ஒரு நல்ல உதாரணமாகும்.

1 பேதுரு 4:12-13கூறுகிறது, "பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்." இயேசுவினுடைய மகிமை எப்பொழுது வெளிப்படும்? நிச்சயமாகவே அது மகிமையுடனேகூடிய அவருடைய இரண்டாம் வருகையின்போது வெளிப்படும், ஆனாலும்

நம்முடைய பாதையில் அவருடைய விடுதலையை அனுப்பும்போதும்கூட அவருடைய மகிமை வெளிப்படும். அதற்கும் மேலாக, தேவனுக்கு வேண்டியபடி அவருடைய ஜனங்களாக நம்மை வனையும்போதும் நாம் இயேசுவினுடைய குணாதிசயத்தை பிரதிபலிக்கும்போதும் அவருடைய மகிமை வெளிப்படும்.

## பாடுகளுக்கூடாக சரிப்படுத்துதல்

இரண்டாவதாக, தவறுகைளை சரிப்படுத்துவதற்கு பாடுகள் உதவுகின்றது. நம் எல்லோருடைய வாழ்க்கையிலும் குற்றங்குறைகளும் கறைகளும் காணப்படுகின்றன. அவற்றில் சிலவை சிறியதும் சிலவை அவற்றைபார்க்கிலும் பெரியவையுமாகும். அநேகமாக நாம் நம்முடைய சொந்தக் குறைபாடுகளைக் குறித்து குருடாகவும் அல்லது அவற்றை சகித்துக்கொள்வதற்கு விருப்பமுள்ளவர்களாகவும் இருக்கிறோம். "ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" என்று இயேசு எமக்குக் கூறினார் (மத்தேயு 5:48). "பூரணத்துவத்திற்கான" கிரேக்க வார்த்தை *டெலியோஸ்* ஆகும். இது "முழுமை" என்றும்

மொழிபெயர்க்கப்படும். நீதியிலும் ஆவிக்குரிய ஒழுக்கப்பண்புகளாகிய இவைகள் ஒன்றிலும் குறைவுபடாமல் தேவன் நம்மை “முழுமையாக” காண வாஞ்சிக்கின்றார்.

நம்முடைய குறைபாடுகளில் நிதானமாக கிரியை செய்வதற்கான ஒரு வழி பாடுகளிடமுண்டு. எரிகின்ற சூளையில் மட்பாண்டம் நீர் குமிழ்களால் சேதமடையாதபடி குயவன் களிமண்மை இரக்கமற்ற விதமாக அல்லது கொடூரமான விதமாக பிசைந்து அவற்றை அகற்றுவான். பரிசுத்த ஆவியானவரும் நமக்குள்அவ்வாறே கிரியை செய்கின்றார். அது வேதனைகுரியதாக இருந்தாலும் முடிவில் அது பெறுமதிமிக்கதாயிருக்கும். நாம் பாடுகளுக்கூடாக கடந்துபோகும்போது நாம் முகங்கொடுக்கும் காரியங்கள் எல்லாம் நம்முடைய கட்டுப்பாட்டை மீறும்போதும் நம்முடைய பொறுமைக் குறைப்பாடாது மிகவும் கடுமையாய் பாடுகளில் சோதிக்கப்படும். லௌகீகமானவையே உண்மை என்ற எண்ணமும் ஐசுவரியத்தின் மீதான நம்முடைய நாட்டமும்அநேகமாக இந்த பாடுகளுக்கூடாக தொடப்படுகின்றது. வேதாகமத்தில் காணப்படும் விசுவாச வீரர்களிடம் தேவன் எவ்வாறு கிரியை செய்தாரோ அவ்வாறே நம்மிடத்திலும் அவர் கிரியை செய்கின்றார். பாடுகளுக்கூடாக அவர் நம்முடைய வாழக்கையின் ஒவ்வொரு பகுதியையும் பரீட்சிக்கிறதுடன் அந்த பாடுகள் மிகப்பெரிய பெலத்தையும் கட்டியெழுப்புகின்றது.

**பாடுகளுக்கூடாக உறுதி**

மூன்றாவதாக, பாடுகள் நம்முடைய அடிக்கடி மாற்றமடையும் தன்மையை மாற்றுகின்றது. நம்மில் அநேகர் இந்த நிச்சயமற்ற தன்மையுடன் போராடுகின்றோம். நாம் அனலாக இருக்கிறோம் பின்னர் குளிராகவிருக்கிறோம், மேலே போகின்றோம் பின்னர் கீழே வருகின்றோம், உள்ளே செல்கின்றோம் பின்னர் வெளியே வருகின்றோம். நாம் விசுவாசிகளாகும்போது நம்முடைய வாழ்க்கை உறுதியாகவும் திடமாகவும் இருக்கும்மென்று நாம் நினைக்கிறோம். ஆகிலும், மிக விரைவாக நாம் அந்த பாதையிலிருந்து விலகி விடுகிறோம். வேதாகமத்தில் காணப்படும் மிகப்பெரிய தலைவர்களும் நபர்களும் கொள்கை மாறாமல் நிலைத்திருத்தல்என்கின்ற விடயத்துடன் போராடினவர்களாவர். உதாரணமாக, தீமோத்தேயுவுக்கு தைரியப்படுத்தல் அவசியமானபோது, இதனிமித்தமாக, நான் உன்மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனல்மூட்டி எழுப்பிவிடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன் என்றார் பவுல் (2 தீமோத்தேயு 1:6). மற்றப் பக்கமாக, தங்களுடைய ஆவிக்குரிய வரங்களை துஷ்பிரயோகம்பண்ணும்வரை கொரிந்துவிலிருந்த முழு சபைக்கும் மிதமிஞ்சிய ஆவிக்குரிய உயர்வுகொடுக்கப்பட்டிருந்தது. 1 கொரிந்தியர் 12 இல் பவுல் அவர்களுடைய பேரார்வத்தை குறித்து அவர்களை கடிந்துகொள்ளுகின்றார். பாடுகளிடம் நம்மை மிதமிஞ்சுவதிலிருந்து பாதுகாக்கும் ஒரு அற்புத வழியுண்டு.

நாம் அனைவரும் ஆவிக்குரிய பலவீனத்திற்குட்பட்டவர்களாயிருக்கின்றோம். ஆகிலும் தேவன் எம்மை பெலப்படுத்துவார் என்று நாம் உறுதி கொள்ளமுடியும். நாம் செய்வதற்கென அழைக்கப்பட்டுள்ள வேலையை தொடர்ந்தும் நம்முடைய மனித பெலத்தைக் கொண்டு அளவிடுவோமெனின் நிச்சயமாகவேநாம் அதைரியப்பட்டுவிடுவோம். எவ்வாறாயினும், தேவன் நம்முடைய விசுவாசத்தை பயிற்சி செய்வதற்கும் நம்முடைய பெலத்தை அதிகரிப்பதற்கும் சரியான நேரத்திலும் சரியான அளவிலும் சோதனைகளை அனுப்புவார்.

அவர் ஒருபோதும் அழிப்பதற்காக சோதனைகளை அனுப்புவதில்லை மாறாக நம்முடைய குணாதிசயத்தை கட்டியெழுப்புவதற்காக மாத்திரமேயாகும். பாடுகளிலிருந்து விடுதலையடைவதற்கு நாம் குறிப்பிட்ட ஒரு வழியை சார்ந்து அதை எதிர்பார்க்கின்றோம். ஆகிலும் நாம் எதைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது நம்முடைய பிதாவுக்கு வேண்டியதாயிருக்கின்றது என்பதை கற்றுக்கொள்வது அதைவிடவும் முக்கியமாகும். லூக்கா 22:31-32, “பின்னும் கர்த்தர்: சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரனை ஸ்திரப்படுத்து என்றார்.” பாடுகள் மற்றவர்களுக்கு உதவிசெய்வதற்காக நம்மைபயிற்றுவிக்கின்றது.

## சாத்தானுடைய கரத்தில் பாடுகள்

### *நோக்கம் 3:*

*தேவனுடைய ஜனங்களுக்கு எதிரான சாத்தானுடைய சூழ்ச்சித்தந்திரங்களை இனம்காணல்*

#### ஓர் உண்மையான எதிரி

1 பேதுரு 5:8-9 இவ்வாறு கூறுகின்றது, “தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகின்றான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரர்களிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே.” அப்படியானால் ஒருவன் எவ்வாறு பிசாசினுடைய கரத்தில் பாடனுபவிக்கமுடியும்? எதிரியின் மூன்று சூழ்ச்சித்தந்திரங்களே நம்முடைய அதைரியம், வஞ்சனை மற்றும் மனக் குழப்பத்திற்கு காரணமாயமைகின்றன.

#### அதைரியம்

பின்வரும் இந்த சூழ்நிலையை உங்களால் இனங்காண முடியுமா? நீங்கள் ஒரு கடினமான காலத்தில் இருக்கின்றீர்கள்என்று வைத்துக்கொள்ளுங்கள். தொழிலில் காரியங்கள் எதுவும் சரியாக நடைபெறவில்லை. நீங்கள் நோயோடுகூட போராடுகின்றீர்கள். நீங்கள் நேசிக்கும் ஒருவர் பிரச்சினையின் மத்தியிலிருக்கின்றார். இந்த கஷ்ட காலத்தின் அநேக வாரங்களுக்குப் பின்பதாக, நீங்கள் பலவீனமாகவும் காயப்பட்டவராகவும் உணருகின்றீர்கள். எதையும் சிந்திக்காத ஒருநபர் இரக்கமற்ற விதமாக உங்களிடம் தொடர்ந்தும் சில எதிர்மாறான, நியாயமற்ற அல்லது புண்படுத்தும்விதமாக ஏதோ ஒன்றைக் கூறுகின்றார்.

நம்மை அதைரியப்படுத்தினால், பெலனற்றவர்களாக நம்மை மாற்ற முடியும் என்பதை சாத்தான் நன்கு அறிவான். யெசபேலின் தாக்குதலுக்கு பின்பதாக எலியா தீர்க்கதரிசி அதைரியப்பட்டு தன்னுடைய ஊழியத்தை நிறுத்தவேண்டுமென எண்ணினார். யோனா தீர்க்கதரிசியும் அதைரியத்துடனும் கோபத்துடனும் காணப்பட்டார்; நினிவேயில் தன்னுடைய ஊழியத்திற்குப் பிறகு தான் மரிக்கவேண்டும் என்று நினைத்தார். வேதாகமத்தில் அதைரியத்திற்கு முகங்கொடுத்த பல தலைவர்களுள் இவர்கள் இருவரும் அடங்குவர்.

ஒரு கிறிஸ்தவனாக இந்த அதைரியத்தை சாத்தானுடைய ஒரு அக்கினியஸ்திரம் என்று நீங்கள் நிச்சயமாக அறிந்துகொள்ளவேண்டும். அதை உங்கள் ஆவிக்குள் வாழவிடாதீர்கள் அத்துடன் அது கோபமாக கசப்பாக வளர்வதற்கு இடங்கொடுக்காதீர்கள். அதற்காக ஜெபியுங்கள். நம்பத்தகுந்த ஒரு கிறிஸ்தவ நண்பன் அல்லது போதகரிடம் அதைக் குறித்துப் பேசுங்கள். பிசாசை திடமாக எதிர்த்து நில்லுங்கள்.

**வஞ்சனை**

பிசாசானவன் வஞ்சிப்பதில் திறமைசாலி. வேறு எந்த வழிகளைப் பார்க்கிலும் அவன் சபைக்குள் அநேக பாடுகளை வஞ்சனை மூலமாக கொண்டுவந்திருக்கின்றான். பிரதானமாக சத்தியத்தை திரிப்பதனூடாகவே வஞ்சிக்கிறான்; அதிலும் விசேடமாக வேதவாக்கியங்களை. அப்போஸ்தலர் பேதுரு இந்த சூழ்ச்சிக்கெதிராக நம்மை இவ்வாறு எச்சரிக்கின்றார். 2 பேதுரு 3:16 இல் அவன் இவ்வாறு எழுதுகிறான், “கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்.”

சாத்தான் தேவனுடைய வசனங்களை அரைச்-சத்தியத்துடன் பேசுகிறான். மத்தேயு 4 ஆம் அதிகாரத்தில் சாத்தான் இயேசுவினிடத்திற்கு வந்து தெய்வீக தேவைகளை சந்தித்தல், தெய்வீக பாதுகாப்புக்கான மற்றும் தெய்வீக நிலை குறித்த அரைச் சத்தியங்களைத் தெரிவித்தான். ஆனாலும் இயேசு தேவனுடைய வார்த்தையைக் கொண்டு அவனை எதிர்த்துநின்றார். இன்றும் கள்ளத்தீர்க்கதரிசிகள் அரைச் சத்தியத்தை நம்புகின்றார்கள். அவர்கள் கற்களை அப்பங்களாக மாற்ற முயற்சிக்கின்றார்கள்.யோகா ஆற்றல் மூலம் ஒரு பொருளையோ சரீரத்தையோ அந்தரத்தில் எழச்செய்யும் ஆற்றல் போன்றவற்றிற்காகப் பரிந்துபேசுகிறவர்கள். இந்த போலித்தனமான செயல்களினால் வல்லமையையும் அதிகாரத்தையும் பெற்றுக்கொள்ளகின்றனர். தேவனுடைய வார்த்தைக்கு மாணவனாக இருப்பது மாத்திரமே தேவனுடைய முழுமையான சத்தியத்திற்கும் சாத்தானுடைய அரைச் சத்தியத்திற்கும் உள்ள வித்தியாசத்தை கண்டுகொள்ளமுடியும்.

**மனக் குழப்பம்**

அதைரியத்தாலும் வஞ்சனையினாலும் சாத்தான் உங்களை பாடுகளுக்குட்படுத்த முடியாதுபோனால், அதன் பின்னர் அவன் உங்கள் வாழ்க்கையின் திட்டமிடும் மையமான உங்கள் மனதை தாக்குவதற்கு முயற்சிப்பான். வாழ்க்கையினதும் நித்தியத்தினதும் சகல தீர்மானங்களும் மனதால் எடுக்கப்படும். நம்முடையவெற்றிக்கான அல்லது அழிவுக்கான ஆயுதங்களை உருவாக்கும் மனது ஓரு படைக்கலைச்சாலையாகும். எந்நாளும் தான்

வெற்றிபெறுவதற்காக உங்கள் மனதைதீமையினால் நிரப்புவதற்கு சாத்தானுக்கு அவசியமில்லை; உங்களை குழப்பமடையச் செய்வதே அவனுக்கு வேண்டியதாயிருக்கின்றது.

தேவனுடைய சத்தத்தை உங்களுக்கு அடைக்கும்படி குழப்பங்களை, சோர்வுகளை, பயங்களை மற்றும் ஓய்வில்லாமையை மற்றும் ஏதேனும் ஒரு காரியத்தை உண்டாக்கப் பார்க்கிறான். எவ்வாறாயினும் நம்முடைய மிகப்பெரிதான ஆவிக்குரிய உள்ளத்தெழுச்சி என்னவென்றால் பரிசுத்தாவியினால் வழிநடத்தப்படுவதேயன்றி மாம்சத்தினால் அல்ல என்பதே. நாம் செய்யும் எல்லாவற்றிலும் கிறிஸ்துவினுடைய மனது நமக்கு காணப்படவேண்டும். ரோமபுரியிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு பவுல், "நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகுகிறதினாலே மறுரூபமாகுங்கள்" என்று புத்திசொல்லுகின்றார் (ரோமர் 12:2).

நாம் நீண்ட காலத்திற்கு சாத்தானுடைய கரத்தில் பாடுபடவேண்டிய அவசியமில்லை. ஆம், அவன் தொடர்ந்தும் தாக்குவான் என்றாலும் நாம் மிகவும் விரைவாக அவனுடைய முயற்சிகளை அறிந்துகொள்ளும்போது, துரிதமாகஅவனுக்கு எதிரான செயலில் ஈடுபடமுடியும். ஆகவே, தெளிவாகவும் விழிப்புடனும் இருந்து பிசாசினுடைய தந்திரங்களுக்கு எதிர்த்து நில்லுங்கள்.

## பாடுகள் நம்முடைய பாவங்களைக் கடிந்துகொள்ளும்

## *நோக்கம் 4:*

*கீழ்ப்படியாத கிறிஸ்தவர்களை ஒழுக்கப்படுத்துவதற்காக தேவன் எவ்வாறு பாடுகளைப் பயன்படுத்துகிறார் என்பதை விளக்குதல்.*

### பாவம் தேவனுடைய கவனத்தை ஈர்க்கும்

பாவ நடத்தைக்கு அடிமையாய் இருப்பதைப்பார்க்கிலும் பாடனுபவிப்பதற்கான துரிதமான வழிகள் வேறில்லை. பாவமானது தன் சொந்த இயற்கை மற்றும் தவிர்க்கவியலாத விளைவுகளின் தொகுதியை சுமந்துவருகின்றது. நீங்கள் பொய் சொன்னீர்களானால் நேர்மையற்றவராகவும் நம்பிக்கைக்கு பாத்திரமற்றவராகவும் வெளிப்படுவீர்கள். நீங்கள் களவெடுத்தீர்களானால் சிறையில் அடைக்கப்படுவீர்கள். நீங்கள் வீண்பேச்சு பேசுவீர்களானால் அல்லது கிசுகிசுத்தீர்களானால் சொற்ப உண்மையுள்ள நண்பர்கள் மாத்தரமே உங்களோடு இருப்பார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு விசுவாசியின் வாழ்க்கையில், பாவம் எப்போதும் தேவனிடத்திலிருந்து ஒரு பிரதியுத்தரத்தை வரவழைக்கின்றது.

தேவன் எம்மில் அதிகமாக அன்பு வைத்துள்ளார் என்பதனால் எம்முடைய வாழ்க்கையிலுள்ள பாவங்களை அவர் கண்டும் காணாதது போல் இருக்கமாட்டார். நீங்கள் பாவம் செய்வீர்களென்றால் பெற்றோர்கள் தங்கள் கீழ்ப்படியாத பிள்ளைகளை

திருத்துவதுபோல, தேவன் உங்களை திருத்துவதற்கு முயற்சி செய்வார் என்பதை கவனத்திற்கொள்ளுங்கள். மாறுபட்ட அளவுகளிலான பாடுகள் தேவனுடைய திருத்துதலில் அல்லது ஒழுக்கப்படுத்தலில் இன்றியமையாததொன்றாகவிருக்கிறது.

## இரட்சிப்பின் கிரயம்

கிறிஸ்தவர்கள் கலகம் மற்றும் பாவம் செய்யும்போது தங்களை எச்சரிப்பவர்கள் கொஞ்சம் அதிகமாக செய்கிறார்கள் என்று சிலவேளைகளில் எண்ணுகின்றார்கள். அவர்கள் தங்கள் நடத்தைகளுக்கு சாக்குபோக்குகளைச் கூறுவதோடு தங்கள் பாவம் சிறியது அல்லது முக்கியமானதல்ல என்பதுபோல பாசாங்கு செய்கின்றனர். தேவன் அவர்களுடைய குறைகளைகண்டும் காணாததுபோல இருப்பார் என்று ஊகிக்கின்றார்கள். ஆனால் தேவன் ஒருபோதும் பாவத்திற்கான சாக்குபோக்குகளை ஏற்றுக்கொள்ளமாட்டார்! நம்முடைய இரட்சிப்பிற்காக கிறிஸ்து நம்புவதற்கரிய கிரயத்தை செலுத்தியுள்ளார். தேவன் நம்முடைய வாழ்க்கையில் விசாலமானதொரு முதலீட்டைச் செய்துள்ளார். நம்முடைய கவனத்தைக்கொள்ளும்படிக்கும் அவரண்டை நம்மை திருப்பிக்கொள்வதற்கும் அவர் எதைவேண்டுமானாலும் செய்வார். எதிர்கால ஆசீர்வாதங்களை நாம் இழந்துவிடாதபடி இப்பொழுதும் கூட அவர் நம்முடைய வாழ்க்கையில் வேதனையை அனுமதிக்கலாம்.

எபிரெயர் நிருபத்தை எழுதியவர் இவ்வாறு கூறுகின்றார், “பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே” (எபிரெயர் 12:4). பாவத்திற்கு விரோதமான நம்முடைய தனிப்பட்ட போராட்டமானது நம்மை இரட்சிக்கிறதற்காக கிறிஸ்து செலுத்திய கிரயத்துடன் ஒப்பிடும் போது அது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. முதலில் நம்முடைய வாழ்வில் தேவனுடைய ஒழுக்கப்படுத்தலானது ஒரு மிதமிஞ்சிய செயல் என்றே நாம் நினைப்போம். இருப்பினும் சங்கீதம் 103:10“அவர் நம்முடைய பாவங்களுக்குத் தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார்” என்று கூறுகின்றது.  உண்மையாகவே நாம் பெற்றுக்கொள்ள வேண்டிய தண்டனையோடு ஒப்பிடும்போது தேவன் ஒருபோதும் நம்மிடத்தில் கடுமையாக செயற்படவில்லை என்பதை நாம் காண்போம். அவர் கிருபையுள்ள தேவன், நமக்கான சிறந்தவற்றை மாத்திரம் வாஞ்சிக்கும் தேவன்.

## பிதா நம்முடைய மிகச் சிறப்பான வாஞ்சைக்கு நேராக செயல்படுகின்றார்

நாம் எந்தக் குடும்பத்திற்குச் சொந்தமானவர்கள் என்பதை அறிந்திருத்தல் அவசியமானதாகும். நம்முடைய வாழ்க்கையில் கிறிஸ்து இல்லாதிருந்த காலத்தில் பிசாசானவனே நம்முடைய பிதாவாகக் காணப்பட்டான்.இப்பொழுது, நாம் கிறிஸ்தவர்களான நாள்முதல் தேவனே நம்முடைய பரலோகப் பிதாவாக இருக்கின்றார். அப்போஸ்தலர் யோவான் இவ்வாறு எழுதுகின்றார், “நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்!” (1 யோவான் 3:1). தங்கள் பிள்ளைகளோடு பேசுவதற்கும் அவர்களை ஒழுங்குபடுத்துவதற்கும் எல்லாவித உரிமையும் பெற்றோருக்கு உண்டென்பதை அனைவரும் அறிந்த விடயமே. பிள்ளைகள் மற்றும் ஒழுக்கப்படுத்தல் ஆகிய விடயத்தில் இரண்டு

பொதுவான ஆளுமைகள் உண்டென்பதை பெற்றோர்களால் சொல்லக்கூடும்: அடம்பிடிக்கும் பிள்ளைகள் மற்றும் இணங்குகின்ற அல்லது கீழ்ப்படிவுள்ள பிள்ளைகள். அடம்பிடிக்கும் பிள்ளைகள் ஒழுக்கப்படுத்தலை எதிர்க்கக்கூடியவர்கள். ஆதனால் அவர்களை பயிற்றுவிப்பதற்கு பெற்றோர்கள் மேலதிகமாக கஷ்டப்படவேண்டியிருக்கும். இணங்குகின்ற அல்லது கீழ்ப்படிவுள்ள பிள்ளைக்கு கொஞ்சமாகவே ஒழுக்கப்படுத்தல் தேவைப்படுகின்றது. உண்மையாகவே, அந்த கொஞ்ச ஒழுக்கப்படுத்தல் அவர்களோடு அதிக காலத்திற்கு நிலைநிற்கும்.

தேவனுடைய ஒழுக்கப்படுத்தலின் கீழும் விசுவாசிகள் மீது இந்த அடிப்படை பிரதிசெயல் உண்டென்பதை நாம் காணலாம். காலத்திற்குக் காலம் இந்த இரு ஆளுமையுடைய விசுவாசிகளுக்கு தேவனுடைய ஒழுக்கப்படுத்தலானது தேவைப்படுகின்றது. சிலர் எதிர்ப்பர், சிலர் அதைத் தழுவிக்கொள்வர். எபிரெயர் 12:5-6 கூறுகின்றது, “அன்றியும்: என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்.” நம்மை நேசிப்பதினிமித்தமே தேவன் நம்மை ஒழுக்கப்படுத்துகின்றார்.

## ஊதாரி மகனிடமிருந்து ஒரு பாடம்

பிசாசனவன் திருடவும், கொல்லவும், அழிக்கவுமே வருகின்றான், ஆனாலும் கிறிஸ்து கொடுப்பதற்கும், கட்டியெழுப்புவதற்கும், புதுப்பிக்கவுமே வந்தார். ஊதாரி மகனுடைய உவமையை வாசிக்கவும் (லூக்கா 15:11-32 ஐப் பார்க்க). கீழ்ப்படியாத இந்த மகனின் மீது தகப்பனுடைய இருதயம் மிகவும் உண்மையுள்ளதாக காணப்பட்டது.அவர் அவனை வீட்டிற்கு வரவேற்றார், புத்திரசுவிகாரத்தை புதுப்பித்தார். அவனுடைய வருகையை கொண்டாடினார். இந்த கதையில் வரும் தகப்பன் தேவனை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்.

ஊதாரி மகனுடைய தகப்பனைப் போலல்லாது, சில சுய-நீதியுள்ள கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றும் வழிதவறின ஒருவனை கட்டியெழுப்பவேண்டியவர்கள் தேவனுடைய கிருபையை அப்படிப்பட்டவர்களிடத்தில் பாராட்டத் தவறிவிடுகின்றனர். தேவனுடைய அன்பின் வெற்றியைக் கொண்டாடுவதைப் பார்க்கிலும், இந்த சுய-நீதியுள்ள கிறிஸ்தவர்கள் தேவனுடைய குடும்பத்திற்குள் திரும்பி வந்தவர்களிடத்தில் தங்களுடைய சொந்த ஒழுக்கத்தை பலவந்தமாக திணிக்கப்பார்க்கின்றனர். ஆகிலும் நாம் வழி தவறி சென்ற விசுவாசிகளை நிபந்தனையின்றி அன்பு செய்யவும் அவர்களை அவருடைய குடும்பத்திற்குள் ஏற்றுக்கொள்ளவும் வேண்டுமென கிறிஸ்து வாஞ்சிக்கிறார்.

## பாடுகள் கிறிஸ்துவுடன் விசுவாசிகளை ஐக்கியப்படுத்தும்

### *நோக்கம் 5:*

*பாடுகள் எவ்வாறு கிறிஸ்துவுடன் நம்மை ஐக்கியப்படுத்துகின்றதென்பதை விபரித்தல்.*

#### பாடுகள் தவிர்க்க முடியாதவை

சில மனிதர்கள், அநேகமாக கிறிஸ்தவர்கள் பாடுகளிலிருந்து விடுவிக்கப்படவேண்டுமென்று எண்ணுகின்றார்கள். நாம் கிறிஸ்துவின் சீஷர்களாயிருப்பதனால் மோசமான கஷ்டங்களிலிருந்தும் உபத்திரவங்களிலிருந்து நாம் எம்மை பாதூகாத்துக்கொள்ள முடியுமா? நாம் அடிக்கடி கேள்விப்படும் பாதுகாப்பின் வேலியைப் பற்றி என்ன சொல்லுவோம்? அது நம்மை எல்லா வேதனையிலிருந்தும் துயரத்திலிருந்தும் பாதூகாக்காதா?

பேதுருவின் கூற்றுக்கு இணங்க கிறிஸ்தவர்கள் பாடுகளிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களல்ல. 1 பேதுரு 4:12-13 இவ்வாறு அறிக்கைச் செய்துள்ளது, “பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்.” அப்போஸ்தலர் பவுலும்கூட இவ்வாறு எழுதுகிறார், “இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்” (பிலிப்பியர் 3:10).

தேவனுடைய மிகப்பெரிய மனிதர்களான இவ்விருவரும் கிறிஸ்தவ வாழ்க்கையில் பாடுகளை எதிர்பார்த்திருந்தனர். இனி ஒருபோதும் தற்காலிக ஆசீர்வாதங்களில் மகிழ்ச்சியடையவோ அல்லது நமக்கு தெய்வீக பாதுகாப்பு கிடைக்காது என்பது இதன் அர்த்தமல்ல. கிறிஸ்தவர்களான நாம் எப்போதும் தேவனுடைய விழிப்புள்ள கண்பார்வையின் கீழ் இருக்கிறோம் என்பதை நம்பவேண்டும். எந்த ஆசீர்வாதங்களும் எந்தப் பாடுகளும் தேவனுடைய அனுமதியின்றி நம்முடைய வாழ்க்கைக்குள் வரமாட்டாது.

#### பாடுகளின் ஐக்கியம்

அப்போஸ்தலர் பேதுரு “அவருடைய பாடுகளுக்கு நாம் பங்காளிகள்” என்று கூறுகின்றார் (1 பேதுரு 4:13). “அவருடைய (இயேசுவின்) பாடுகளின் ஐக்கியத்தை” நாம் அறிந்திருக்கவேண்டும் என்பதைக் குறித்து பவுல் பேசுகின்றார் (பிலிப்பியர் 3:10). மற்றவருடைய அதே அனுபவத்தை பகிர்ந்துகொள்ளுதலே ஐக்கியமாகும். வாழ்க்கைப் பயணத்தில் பாடுகளைத் தவிர்ப்பதைப் பார்க்கிலும், நாம் அதை எதிர்பார்த்திருக்கவேண்டும் மேலும் நாம் அதை வரவேற்கவும் வேண்டும். காரணம் என்ன? நாம் வேதனையை

சகித்துக்கொள்ளும்போது, நாம் பாவத்தினால் பாடுகள் அனுபவிக்கவில்லை மாறாக நாம் கிறிஸ்துவுடன் ஓர் விசேஷித்த ஐக்கியத்தை அனுபவிக்கின்றோம் என்று எண்ணவேண்டும். இது மிகவும் கடினமாகத் தோன்றினாலும், பாடுகள் அனுபவித்தல் மாத்திரமே தனக்கு உண்டான நன்மைஎன்பதை பவுல் புரிந்துகொண்டார். நம்முடைய பாடுகளானது இயேசுவின் இறுதியான பாடுகளுக்கு மிகவும் சிறிய அளவில் மாத்திரம் சம்பந்தப்பட அனுமதியளிக்கும்.

## ஏன் இயேசு பாடுகள்பட்டார்

நம்முடைய பாவங்களுக்காக தம்முடைய குமாரன் பாடுகள்பட அனுமதிக்கவும் அதற்கூடாக நம்முடைய இரட்சிப்பை வாங்குவதும்ஆதிமுதற்கொண்டு தேவனுடைய திட்டமாக இருந்தது. ஏசாயா தீர்க்கதரிசி இவ்வாறு எழுதினார், “கர்த்தரோ அவரை (இயேசு) நொருக்கச் சித்தமாகி, அவரை பாடுகளுக்குட்படுத்தினார்” (ஏசாயா 53:10). இது நம்முடைய மனித மனதிற்கு விசித்திரமாகக் காணப்படுகின்றது; தன்னுடைய மகன் அப்படிப்பட்ட வேதனைகளை அனுபவிப்பதை வாஞ்சிக்கும் எந்தவொரு தகப்பனைக் குறித்து நம்மால் நினைத்துக்கூட பார்க்கமுடியாது.

தேவனுடைய வழிகளானது விசுவாசிக்காத மனித மனதிற்கு முட்டாள்தனமாகத் தோன்றலாம். அவருடைய வழிகள் நம்முடைய வழிகளைப் பார்க்கிலும் உயர்ந்ததும் ஞானமுள்ளதுமாகும். ஆகவே, அது உருவாக்கப்போகும் கடைசிப் பலனினிமித்தம் தன் குமாரன் காயப்படுவதில் தேவன் பிரியமாயிருந்தார். சிலவேளைகளில் பூமிக்குரிய தகப்பன்மாரும் தங்கள் பிள்ளைகள் வேதனைப்படும்படி சில பாடுகளை அனுமதிக்கின்றார்கள் ஏனெனில் அது மிகுந்த நன்மையைக் கொண்டுவரும் என்பதால். ஒரு பிள்ளை விழுந்து அப்பிள்ளையினுடைய கையில் கடுமையாக அடிபட்டிருந்தால் நிச்சயமாக அழுவான் அதுமட்டுமின்றி யாராவது தன் கையைப்பிடித்து விடுவார்களோ என்றும் அது இன்னும் தனக்கு வேதனையைத் தரும் என்று பயந்தும் அழுவான். எவ்வாறாயினும், தகப்பன் பிள்ளையின் மீதான அன்பினால் அந்த செயற்பாடு கடுமையான வேதனையாயிருந்தாலும் உடைந்த அந்த எலும்புகளை சரிசெய்யும்படி வைத்தியரை அனுமதிப்பார்.அந்த சேதத்தை சரிசெய்வதற்கு சத்திர சிகிச்சை அவசியமெனின், அது இன்னும் எத்தனை வேதனை மிக்கதாக காணப்படினும் தகப்பன் அதையும் அனுமதிப்பார். அவ்வாறு செய்வது மிகப்பெரிய நன்மையை உண்டாக்குகிறதினிமித்தம் அதனை தகப்பன் நியாயமான செயல் என எண்ணுகின்றார்.

யோவான் ஸ்நானகன் முதலாவது இயேசுவை ஜனங்களுக்கு முன்பதாக தெரியப்படுத்தும்போது செய்யும்போது, அவர் இவ்வாறு அறிவித்தார், “இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி!” (யோவான் 1:29). இயேசு தான் பாடுகள் அனுபவிக்கிறதற்கும் மரிப்பதற்கும் வந்தேன் என்று மீண்டும் மீண்டும் தன்னுடைய சீஷர்களுக்குக் கூறினார். லூக்கா 24 ஆம் அதிகாரத்தில், முதலாவது உயிர்த்த ஞாயிறன்று எம்மாவூருக்கு போய்க்கொண்டிருக்கும் இயேசுவின் இரண்டு சீஷர்களைக் குறித்து பார்க்கிறோம். இயேசு சில நாட்களுக்கு முன்னதாக சிலுவையிலறையப்பட்டார். இந்த சீஷர்கள் இயேசு உயிரோடெழுந்து காணப்படுகின்றார் என்ற செய்தியை கேள்விப்பட்டு குழம்பி கவலையடைந்தனர். இயேசு அவர்களை கடிந்துகொண்டு, கிறிஸ்து இவ்விதமாகப்

பாடுபடவும், தமது மகிமையிலே பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா என்று சொல்லி" (லூக்கா 24:26).

இயேசு பாடுபட வேண்டியது தேவனுடைய முக்கியமான திட்டமாக இருந்தது. எபிரெயர் நிரூபத்தை எழுதியவர் இவ்வாறு கூறுகின்றார், "ஏனென்றால் தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையிலே கொண்டு வந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகின்றது அவருக்கேற்றதாயிருக்கின்றது" (எபிரெயர் 2:10). இயேசு ஏற்கனவே பாவமற்ற பூரணராயிருந்தார். ஆகவே, பாவம் தொடர்பான கல்வாரியின் கிரியையானது அவரை பூரணமாக்கவில்லை. *பூரணத்தை* கிரேக்க மொழி இவ்வாறு மொழிபெயர்க்கிறது "முடிவு அல்லது முழுநிறைவு." கல்வாரி சிலுவையானது இயேசுவின் இப்பூமிக்குரிய பணியின் உச்சகட்டமாகும். இதையன்றி அவர் தேவனுடைய சித்தத்தை முடிக்கவோ அல்லது முழுநிறைவுபடுத்தியிருக்கவோ முடியாது. அதனால் தான் இயேசு சிலுவையில், "முடிந்தது" என்று சத்தமிட்டார் (யோவான் 19:30).

இயேசுவும்கூட பாடுகளினூடாக கீழ்ப்படிவை கற்றுக்கொண்டார். ஒரு மனிதனாக, அவர் தேவனுக்கு கீழ்ப்படிவதைக் குறித்து கற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்தது. அவர் தெரிவு செய்யவேண்டியவராயிருந்தார். அவர் கைதுசெய்யப்படும் முன்னதாகவும் சோதிக்கப்படும் முன்னதாகவும் கெத்சமனே தோட்டத்தில் அவர் போராடிய விதத்தை நாம் காணக்கூடியதாகவிருக்கின்றது. "சற்று அப்புறம்போய், முகங்குப்புற விழுந்து: என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்" (மத்தேயு 26:39). பிதாவாகிய தேவன் இயேசுவை மரணத்திலிருந்து விடுதலையாக்கினார் (எபிரெயர் 5:7), என்றாலும்கூட நம்முடைய அற்புதமான இரட்சகரும், பரிபூரண தெய்வீகமும் பரிபூரண மனுஷீகமும் உடையவருமானவர் பாடுகளை சகிக்கவேண்டியதாயிருந்தது.

உங்கள் வாழ்க்கையைக் குறித்தும்கூட தேவனுக்கு ஒரு திட்டம் உண்டு. நாம் அவருடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருக்க வேண்டுமென அவர் விரும்புகின்றார். அது நடைபெறுவதற்காக நாம் கிறிஸ்துவின் பாடுகளில் பங்குகொள்ள வேண்டும்.

## சரியான மனோபாவம் முக்கியமானது

பாடுகள் இலகுவானவை அல்ல. வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்கு நுழைவதற்கு முன்னதாக இஸ்ரவேல் புத்திரர்கள் நாற்பது வருஷமளவும் வனாந்திரத்தில் அலைந்து திரிந்ததைக் குறித்து கவனியுங்கள். மோசே அவர்களுக்கு இவ்வாறு நினைவுபடுத்தினார், "உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிறுமைப்படுத்தும்படிக்கும், தம்முடைய கட்டளைகளை நீ கைக்கொள்வாயோ கைக்கொள்ளமாட்டாயோ என்று அவர் உன்னைச் சோதித்து, உன் இருதயத்தில் உள்ளதை நீ அறியும்படிக்கும், உன்னை இந்த நாற்பது வருஷமளவும் வனாந்திரத்திலே நடத்தி வந்த எல்லா வழியையும் நினைப்பாயாக" (உபாகமம் 8:2). அதே தேவன் நம்மை பரீட்சிக்கிறார் என்பதை நாம் நம்பமுடியும். அவர் நம்மையும்கூட பாடுகளினூடாக கொண்டு செல்லுவார்.

## பாடுகள் தேவனைச் சார்ந்திருப்பதற்கு கற்றுத்தரும்

### *நோக்கம் 6:*

*பாடுகள் எவ்வாறு கிறிஸ்துவின் மீதான நம்முடைய சார்ந்திருத்தலை அதிகரிக்கின்றது என்பதை விளக்குதல்.*

**சுயத்தை சார்ந்திருப்பதன் பிரச்சினைகள்**

அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய வலிமிக்க பாடுகளினூடாக ஒரு பெறுமதிமிக்க பாடத்தினைக் கற்றுக்கொண்டார். அவர் அதை 2 கொரிந்தியர் 1:9, “நாங்கள் எங்கள் மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம்” என்று குறிப்பிட்டுள்ளார். எம் அனைவருடைய இயற்கை சுபாவத்திநிமித்தமே நாம் சுயத்தை சார்ந்திருப்பதற்கு விருப்பமுள்ளவர்களாயிருக்கின்றோம். தேவனை நாம் மறந்துவிடுகின்றோம். ஆகிலும் நமது தேவை என்னவென்பதை தேவன் மிகச் சரியாக அறிவார். நாம் முற்றிலும் அவரையே சார்ந்திருக்கும்படி நம்மை கொண்டு செல்வது எது என்பதையும் அவர் அறிந்திருக்கின்றதோடு அதற்குள் பாடுகள் அனுபவிக்கும் காலப்பகுதியும்கூட உள்ளடங்கக்கூடும்.

ஒருசில நேரங்களில் தேவன் உங்களை விட்டு மிக தூரமாயிருப்பது போலத் தோன்றும். அவர் உங்களை மறந்துவிட்டாரோ என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். இராஜாவாகிய தாவீதும் இதை அனுபவித்தவராய் சங்கீதம் 22 இல் இது குறித்து எழுதியுள்ளார். இயேசுவும் கூட இந்த கைவிடப்பட்ட உணர்வை அனுபவித்திருக்கின்றார். அவர் சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும்போது, இயேசு இவ்வாறு சத்தமிட்டார், “என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?” (மத்தேயு 27:46).

நாம் ஆராதிக்கும் தேவன் நம்மை ஒருபோதும் கைவிடுவதில்லை என்று வாக்குப்பண்ணியுள்ளார் (எபிரெயர் 13:5). ஏ.டபிள்யூ. டோசர் இவ்வாறு கூறினார், நம் அனைவருக்கும் தேவனை தவிர வேறோன்றும் இல்லை என்று நினைக்கும் காலம் வரும். ஆரோக்கியமும், செல்வமும், நண்பர்களும், மறைவிடமும் வேகமாய் கடந்துபோய்விடும் அப்போது நம்மிடத்தில் எஞ்சியிருப்பது தேவன் மாத்திரமே. பொய்யான விசுவாசமுள்ளவர்களுக்கு அது பயப்படுத்தக்கூடிய நினைவாகும். ஆனாலும் மெய்யான விசுவாசமுள்ளவர்களுக்கு அது மனதை மகிழ்ச்சியாக்கும் மனதிற்கு அமைதியைக் கொண்டுவரும் நினைவாகும்.

உங்கள் வாழ்விலிருந்து தேவன் காணாமல் போய்விட்டார் என எண்ணும்போது நீங்கள் என்ன செய்வீர்கள்? நீங்கள் தொடர்ந்தும் ஜெபிப்பீர்கள், ஆராதிப்பீர்கள். நீங்கள் தேவனுடைய வார்த்தையை தொடர்ந்தும் வாசிப்பீர்கள். நீங்கள் வசனத்தை மேற்கோள் காட்டுவீர்கள். நீங்கள் அவருக்காக வாழ்வதில் விடாமுயற்சியுடன் காணப்படுவீர்கள். நீங்கள் வேதாகமத்தில் வாசித்த விடுதலையைக் குறித்த கதைகள் மற்றும் உங்கள் சக விசுவாசிகளின் வாயிலிருந்து கேட்டவற்றை உங்கள் ஞாபகத்திற்கு கொண்டு வருவீர்கள். தேவன் உங்கள்

வாழ்க்கையில் செய்த நன்மைகளை நினைவுபடுத்துவீர்கள். தேவன் மீதுள்ள உங்கள் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் அறிக்கையிடுவதை நீங்கள் ஒருபோதும் நிறுத்தமாட்டீர்கள். இறுதியில் அந்த மூடுபனி விலகும்.

**நாம் சாட்சியாளர்கள்**

நம்முடைய கடுந்துயரங்களுக்கூடாக நாம் எதைக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளோம் என்பதை உலகம் கண்டுகொள்ளும். நம்மை கவனித்துக்கொண்டிருக்கும் விசுவாசிகளல்லாதவர்கள் உண்மையாகவே நாம் தேவனில் சார்ந்திருகின்றோமா அல்லது கிறிஸ்தவம் என்பது இன்னுமொரு வெறுமையான மதமா என்றுகேட்பார்கள். நம்முடைய விசுவாசம் நம்மை பாடுகளுக்கூடாக கொண்டு செல்லக்கூடியளவு வலிமைமிக்கதா என்று அவர்கள் ஆச்சரியப்படுவார்கள். பாடுகள் என்றால், முன்னொருபோதும் இல்லாதவாறு தேவன்மீது சார்ந்திருக்கும்படி நம்மை வேண்டுகிறதும் நம்மை வற்புறுத்துகிறதுமாகும். பாடுகள் அனுபவித்துக்கொண்டிருக்கும்போது தேவன் இன்னும் நம்முடனேகூட இருக்கின்றார் என்ற சத்தியத்தை நாம் பற்றிக்கொள்ள வேண்டும். நாம் மனனம் செய்யவேண்டிய முக்கியமானதொரு வசனம்ஏசாயா 46:4 இல் காணப்படுகின்றது, "உங்கள் முதிர்வயதுள்ளவரைக்கும் நான் அப்படிச் செய்துவந்தேன்; இனி மட்டும் நான் உங்களைத் தாங்குவேன்; நான் அப்படிச்செய்துவந்தேன்; இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன்." நீங்கள் பாடுகளுக்கூடாக கடந்து சென்றுகொண்டிருக்கும்போதும் இப்படிப்பட்ட வாக்குத்தத்த வசனங்களை பிடித்துக்கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் பயனுள்ள சாட்சியாளர்களாக்குவதற்கு அது உங்களை பெலப்படுத்தும்.

## பாடுகள் நம்மை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்தும்

### *நோக்கம் 7:*

*பாடுகள் எவ்வாறு கிறிஸ்தவர்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துகின்றதென்பதை சுட்டிக் காண்பித்தல்.*

**நல்லதும் கெட்டதுமான அனுபவங்கள்**

எல்லா அனுபவங்களும் ஒன்றோடொன்று எவ்வாறு தொடர்புபட்டுள்ளது என்பதை தேவன் அறிவார். சகல விடயங்களையும் அவருடைய கடைசி முடிவை நோக்கி நகர்த்த அவரால் கூடும். ஆகவே, நாம் ஒவ்வொரு சந்தர்ப்ப சூழ்நிலையையும் மிகப்பெரிதான நன்மைக்கான உச்சகட்டமான ஒரு பகுதி என்பதை எம்மால் பார்க்க முடியும். ரோமர் 8:28 குறிப்பிடுகின்றது, "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்." தேவனுடைய அனுமதிக்கப்பட்ட திட்டத்தில் எந்தவொரு அனுபவமும் வீணானதொரு அனுபவமல்ல. நம்முடைய நன்மைக்காகவும் மற்றவர்களுடைய நன்மைக்காவும் அது நல்லதாயினும் சரி அல்லது கெட்டதாயினும் சரி அவர் எல்லாவற்றையும் பயன்படுத்துகிறார்.

## மோசேயின் உதாரணம்

மோசேயினுடைய வாழ்க்கையை கவனியுங்கள். அவர் தன்னுடைய வாழ்க்கையை ஒரு எபிரெய அடிமைகளின் புத்திரரில் ஒருவனாக ஆரம்பித்து கிட்டத்தட்ட கொல்லப்படவேண்டிய ஒருவனாயிருந்தார். தெய்வீக அதிர்ஷ்டத்திற்கு நன்றி. பின்னர், அவன் பார்வோனின் குமாரத்தியால் தத்தெடுக்கப்பட்டான். நாற்பது வருடங்களாக ஒரு சுகபோகமான வாழ்வை வாழ்ந்தான், எகிப்தின் சிறந்தவற்றை அனுபவித்து மகிழ்ந்தான். அவன் எகிப்திய மொழியிலும் அதனுடைய கலாசாரத்திலும் தேர்ச்சிபெற்றான்.

அதன்பின்னர் ஒருநாள் எல்லாம் மாறியது. எபிரெயன் ஒருவன் அடி வாங்கிக்கொண்டிருக்கையில் அவனுக்கு உதவிசெய்ய முயற்சிக்கையில் மோசே ஒரு எகிப்தியனை கொன்றான். இது மோசேயின் மீது பார்வோனின் கடுங்கோபத்தை கொண்டு வந்தது. அதனால் மோசே எகிப்திலிருந்து மீதியான் வனாந்திரங்களுக்கு ஓடிச்செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு அங்கே நாற்பது வருடங்கள் வாழ்ந்தான். அங்கே அவன் நாடோடிகளின் மகளை திருமணம்செய்துகடைசியில் அவர்களுடைய மந்தைகளை பராமரிக்கவேண்டிதாயிற்று. இது ஒரு தாழ்மையான வேதனையான அனுபவமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. மோசே தேவனுக்கேற்ற ஒரு மிகப்பெரிய தலைவனாக வேண்டுமெனில் இதுவும் அவசியமாக காணப்பட்டது. எனவேதான், சில பாடங்களை பாடுகளினூடாக மாத்திரமே கற்றுக்கொள்ள முடியும். சாமுவேல் ரதர்போர்ட் கூறினார், “நான் பாடுகள் என்னும் அடித்தளத்தில் இருந்தாலும் நான் தேவனுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட நல்ல திராட்சை ரசங்களைத் தேடுவேன்.”

## மனதுருக்கமுள்ள ஊழியம்

பாடுகள் நமக்கு மற்றவர்கள் மீது ஒரு தனித்துவமான மனதுருக்கத்தைத் தரும். சில சபைகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்பட்டவர்கள், விவாகரத்து செய்தவர்கள், கடுந்துயரத்திலிருக்கின்றவர்கள் மற்றும் மதுபானத்திற்கு அடிமைப்பட்டவர்கள் ஆகியவர்களுக்கு உதவிசெய்வதற்குசில சபைகள் மீட்புக் குழுக்களை வழங்குகின்றார்கள்.

இக் குழுவில் வேலை செய்யும் அநேகர் தாங்களே இப்படிபட்ட கஷ்டங்களுடன் போராடினவர்களாவர். இந்த ஊழியங்கள் மனதுருக்கமுள்ள இருதயங்களிலிருந்து பிறந்தவையாகும்.

## தைரியப்படுத்தக்கூடிய திறமை

பாடுகள் மனதுருக்கத்தை கற்றுத் தருபவை மாத்தரம் அல்ல அத்துடனேகூட பாடுகளை அனுபவிக்கும் மற்றவர்களையும் தைரியப்படுத்த பெறுமதிமிக்க தெளிவான படிப்பினையைத் தருகின்றது. பாடுகளை அனுபவித்திருந்தால் தேவன் நம்மை எங்கனம் பாடுகளுக்கூடாக நடத்தி வந்தார் என்பதை நாம் மற்றவர்களுக்குக் கூற முடியும். தேவனுடைய மாறாத அன்பையையும் கரிசனையையும் குறித்து நாம் சாட்சி பகிர முடியும். பாடுகளில் தாங்கள் தனிமையாக இல்லையென்பதையும் அத்துடன் அவர்கள் நினைப்பதைவிடவும் அதிகமான அழுத்தத்தின் மத்தியிலும் அவர்களால் இன்னும் தாங்கிக்கொள்ள முடியும் என்பதையும் அவர்கள் அறிந்துகொள்ளச் செய்யமுடியும்.

## முடிவுரை

நீங்கள் இப்பொழுது பாடுகளை தாங்கிக்கெண்டு செல்லலாம் அல்லது செல்லாமலும் இருக்கலாம். இந்த எளிமையான வேதாகம சத்தியங்கள் வாழ்க்கையின் நோக்கத்தையும் உங்கள் மனோபாவத்தையும் மாற்ற வல்லதாகும். நீங்கள் பாடுகளைக் குறித்து வெட்கப்படவோ அல்லது பயப்படவோ தேவையில்லை. நீங்கள் வேதனைமிக்க தாங்கொண்ணா சூழ்நிலைகளைக் கடந்துபோவீர்களானால் கிறிஸ்துவுக்கான உங்கள் அர்ப்பணிப்பைக் குறித்து ஒருவரும் உங்களை குறைத்து மதிப்பிடவோ அல்லது கேள்விகேட்கவோ அனுமதிக்காதீர்கள். தேவன் உங்கள் வாழ்க்கையில் கிரியை செய்து கொண்டிருக்கிறார். நீங்கள் முகங்கொடுக்கும் விடயம் எதுவாயிருந்தாலும் சரி தேவனுடைய கிருபை உங்களுக்கு எப்பொழுதும் போதுமானதாக இருக்கும்.

## மனனம் செய்வதற்கு ஆலோசிக்கப்ட்ட வசனங்கள்

ரோமர் 8:28

ரோமர் 12:2

எபிரெயர் 13:5

1 பேதுரு 4:12-13

1 யோவான் 3:1

# பாடம் 10

## தேவனுடைய சித்தத்தை எவ்வாறு கண்டுபிடிப்பது?

வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ மிக முக்கியமான திறவுகோல்களில் ஒன்றாக அமைவது தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்வதைக் குறித்து கற்றுக்கொள்வதாகும். அவருடைய சித்தத்திற்கு நீண்ட நாள் திட்டம் உள்ளடக்கப்படுவதோடு நாம் எடுக்கும் தீர்மானங்களின் விசேட விபரங்கள், நாம் செல்லும் இடங்கள், நாம் திருமணம் முடிக்கும் நபர், நாம் செய்யும் தொழில்கள், நாம் பயன்படுத்தும் தாலந்துகள், நாம் வளர்க்கும் திறமைகள், நாம் செய்யும் ஊழியங்கள் மற்றும் வாழக்கையின் பல்வேறு அம்சங்களும் உள்ளடங்கும். தம்முடைய பிள்ளைகள் தம்முடைய சித்தத்தை புரிந்துகொண்டு அதை நிறைவேற்றுகிறதில் மகிழ்ச்சியடைய வேண்டுமென்பதே தேவனுக்கு அவசியமாயிருக்கின்றது. அவருடைய சித்தம் எப்பொழுதும் நமக்கு மிகச் சிறந்தது என்பதால் தேவனுடைய கட்டளையை பகுத்தறிய அல்லது அதை கடைபிடிக்க தவறிவிடுதலானது மிகப்பெரிதான ஏமாற்றத்திற்கு வழியமைத்துவிடும்.

மனிதர்கள் தங்கள் வாழ்க்கைக்கு சிறந்தவை எவை என்பதை தீர்மானிப்பதற்காக ஏராளமான ஆர்வமிக்க யோசனைகளைக் கொண்டுள்ளனர். அநேகர் இன்று தங்களை வழிநடத்த அல்லது தங்களுக்கு பாதைகாட்ட சில நிச்சயமற்ற சக்தியாகிய “அதிர்ஷ்டத்தை” நம்புகின்றனர். தாங்கள் அதிர்ஷ்டசாலிகள் என்று உணர்ந்தால் லொத்தர் சீட்டை வாங்குவார்கள். அவர்களுடைய தீர்மானங்கள் பெயரளவான “அதிர்ஷ்ட உணர்வுகளின்” மீதே சார்ந்துள்ளது. மற்றவர்கள்குறி சொல்லுபவர்களிடம் அதாவது வருவதை முன்னுரைப்பவர்களிடம் அல்லது மந்திரவாதிகளிடம் செல்கின்றனர். பெரும் எண்ணிக்கையிலானோர் சோதிடம் பார்த்தல் என்ற காரியத்திற்குள் பிடிக்கப்பட்டுள்ளனர். கடவுள், அதிர்ஷ்டம் அல்லது சோதிடத்தை நம்பாத மற்றவர்கள், “நான் என்னை நம்புகின்றேன்”. நானே என் சொந்த திட்டங்களை உருவாக்குகிறேன். என் வாழ்க்கையை எவரும் வழிநடத்தவில்லை!”எனக் கூறுவர்.

வேதாகமத்திற்கிணங்க தம்முடைய பிள்ளைகள் ஆவிக்குரிய ரீதியில் குழப்பமடைவதை தேவன் விரும்பவில்லை. நாம் மிகவும் தெளிவான பாதையில் காணப்படவேண்டுமென்பதே அவருக்கு அவசியமாயிருக்கின்றது. எபேசியர் 5:17 இல் நாம் இவ்வாறு வாசிக்கின்றோம், “ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்.” ஒரு கிறிஸ்தவனாக உங்களுடைய வாழ்க்கையில் தேவனுக்கு ஒரு திட்டம் உண்டென்கின்ற நம்பிக்கை வேண்டும். அது மிகவும் உற்சாகமானதும் நிறைவுள்ளதுமாகும். தேவன் எரேமியா மூலம் கூறுகின்றார், “ ‘நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல,

சமாதானத்துக்கேதுவான நினைவுகளே' " (எரேமியா 29:11). தேவனால் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட விதியை கண்டுபிடிப்பது மிகவும் எழுச்சிமிக்கதாகும்.

## பாடத்தின் முக்கிய அம்சங்கள்

புதிய பிறப்பும் தேவனுடைய சித்தமும்

ஜெபமும் தேவனுடைய சித்தமும்

தேவபக்தியும் தேவனுடைய சித்தமும்

தேவனுடைய சித்தத்தை தீர்மானித்தலில் வேதவசனத்தின் பங்கு

பரிசுத்த ஆவியானவரும் கிறிஸ்தவர்களும்

தேவன் மனிதர்களையும் சூழ்நிலைகளையும் பயன்படுத்துதல்

## பாடத்தின் நோக்கங்கள்

1. *தேவனுடைய சித்தத்தை கண்டுபிடிப்பதற்கு ஏன் மறுபடி பிறத்தல் இன்றியமையாதது என்பதை விளக்குதல்.*

2. *தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்வதற்கு ஏன் ஜெபம் அத்தியவசியமானது என்பதை விளக்குதல்.*

3. *தேவபக்திக்கும் தேவனுடைய சித்தத்தை அறிதலுக்கும் இடையே உள்ள தொடர்பை குறிப்பிடுதல்.*

4. *தேவனுடைய சித்தத்தை தீர்மானித்தலில் உதவிசெய்யும் தேவனுடைய வசனத்தை எவ்வாறு கற்பதென்பதைக் காண்பித்தல்.*

5. *கிறிஸ்தவர்களை வழிநடத்துதலில் பரிசுத்த ஆவியானவரின் பங்கை விளக்குதல்.*

6. *தேவன் தம்முடைய ஜனங்களின் வாழ்க்கையை வழிநடத்துவதற்காக எவ்வாறு சூழ்நிலைகளைப் பயன்படுத்துகிறார் என்பதை கலந்துரையாடல்.*

## புதிய பிறப்பும் தேவனுடைய சித்தமும்

### *நோக்கம் 1:*

*தேவனுடைய சித்தத்தை கண்டுபிடிப்பதற்கு ஏன் மறுபடி பிறத்தல் இன்றியமையாதது என்பதை விளக்குதல்.*

---

தேவன் நம்முடைய வாழ்க்கையை வழிநடத்த வேண்டும் என்று எதிர்பார்ப்பதற்கு முன்பதாக நாம் மனப்பூர்வமாக நம்மை அவரிடத்தில் ஒப்படைக்க வேண்டும். தங்களை அவரிடத்தில் ஒப்படைக்காதவர்களுக்கு பாதைகாட்டுவேனென்றும் வழிநடத்துவேனென்றும் கர்த்தர் ஒருபோதும் வாக்குப்பண்ணவில்லை. இரட்சிக்கப்படாதோரை கவனித்துப்பாருங்கள்; வேதாகமத்தில் விபரிக்கப்பட்டுள்ளபடி அவர்கள் இருளில் வாழ்கின்றவர்களாய், தொலைந்துபோனவர்களாய், தேவனற்றவர்களாகவும் காணப்படுகின்றார்கள். இரட்சிக்கப்படாத ஒரு நபர் மூடுபனிக்குள் இருப்பதுபோலக் காணப்படுகின்றார். நீங்கள் எங்கே செல்கின்றீர்கள் என்று கூறமுடியாத ஒரு அடர்த்தியான மூடுபனிக்குள் என்றாவது காணப்பட்டுள்ளீர்களா? உங்களால் நிலப்பகுதியை பார்க்கமுடியாது. நீங்கள் குழப்பமடைந்து சரியான பாதையில்தானா நகர்கின்றீர்கள் என்றும் உங்களால் உறுதியாக கூறமுடியாத விதமாக உணர்ந்திருப்பீர்கள். மிகவும் அடர்த்தியான மூடுபனிக்குள் பயணம் செய்வது என்பது மிகவும் ஆபத்தானதாகக்கூட இருக்கலாம். அதுபோலவே, இரட்சிக்கப்படாத நபரும் ஆபத்தான சூழ்நிலைகளை சந்திக்கும் அபாயத்தை நோக்கி ஓடுகிறது மாத்திரமல்லாமல்தேவன் அவர்களுக்காக வைத்திருக்கும் நன்மைகளையும் தவறவிடுகின்றனர்.

உண்மையான கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமே தெய்வீக வழிநடத்தலைக் குறித்த நிச்சயம் உண்டு. அப்போஸ்தலர் பவுல் இவ்வாறு எழுதுகின்றார், “மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்” (ரோமர் 8:14). மறுபடி பிறத்தலுக்கும் தேவனுடைய சித்தத்தைஅறிந்துகொள்ளுதலுக்கும் இடையே உள்ள தொடர்பானது சரியான விமானத்தில் ஏறுகிறதும் சரியான இடத்தைச் சென்றடைகிறதற்கும் சமனாக தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. நீங்கள் சரியான விமானத்தில் ஏறுவீர்களானால்அது மேகங்களுக்கு மேலே உயரப் பறந்தாலும் கண்பார்வைக்கு எந்த நிலப்பகுதியும் தெரியாவிட்டாலும் நீங்கள் அது செல்லும் வழியைக் குறித்து கவலைப்படத் தேவையில்லை. தாம் எங்கே செல்கிறார் என்பதை விமானி அறிந்திருக்கிறபடியால் நீங்கள் பாதுகாப்புடன் இளைப்பாற முடியும். அவ்வாறே, கிறிஸ்துவின் மீதான விசுவாசத்துடன் தேவனுடைய குடும்பத்திற்குள் பாதுகாப்புடன் இருக்கின்றீர்கள் என்று நீங்கள் ஒருமுறை உணர்ந்துகொள்ளும்போது,உங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டும்படிக்கும் அவருடைய சித்தத்தை உங்களுக்கு வெளிப்படுத்தும்படிக்கும் அவர் எப்பொழுதும் கடமையில் ஈடுபட்டிருப்பார்.

ஆகவே, மறுபடி பிறத்தலானது தேவனுடைய சித்தத்தை கண்டுபிடிப்பதற்கான முதலாவது படியாகும். நீங்கள் பின்வாங்கிச் சென்றவர்களாக அல்லது நீங்கள் ஒருபோதும் உங்கள் வாழ்க்கையை கிறிஸ்துவுக்கு ஒப்படைக்காதிருந்தால், இன்றே கிறிஸ்து உங்கள்

வாழ்க்கைக்குள் வரும்படிக்கும் உங்கள் பாவங்களை மன்னிக்கும்படிக்கும் அவரை உங்களுடைய கர்த்தராகவும் இரட்சகராகவும் வரும்படியும் கேளுங்கள். இயேசு உங்கள் வாழ்க்கைக்குள் வரும்படி கேட்குமுகமாக உங்களுக்கு வழிகாட்டும்படி உதவிசெய்வதற்காக அமையப்பெற்ற ஒரு சிறிய ஜெபத்தை இந்தப் புத்தகத்தின் முடிவில் காண்பீர்கள்.

## ஜெபமும் தேவனுடைய சித்தமும்

### *நோக்கம் 2:*

*தேவனுடைய சித்தத்தை அறிவதற்கு ஏன் ஜெபம் அத்தியவசியமானது என்பதை விளக்குதல்.*

---

தெய்வீக வழிநடத்தலை பெற்றுக்கொள்ளும் செயல்முறையில் ஜெபமும் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றது. பிலிப்பியர் 4:6 இவ்வாறு கூறுகின்றது "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடேகூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்." கிறிஸ்தவர்கள் தங்கள் இருதயத்தில் உள்ள எல்லாவற்றையும் குறித்து தேவனிடத்தில் பேசவேண்டும். நாம் தேவனுடைய வழிநடத்துதலையும் புரிந்துகொள்ளுதலையும் வேண்டிக்கொள்ளுதலே அதன் அர்த்தம். யாக்கோபு இவ்வாறு எழுதுகின்றார், "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" (யாக்கோபு 1:5).

ஆனாலும், கவலைக்கிடமாக, சிலருக்கு ஜெபத்தை கடைசியாகவே செய்யவேண்டியுள்ளது. ஜெபமானது ஒருபோதும் கடைசித் தெரிவாகக்கூடாது; மாறாக அது நம்முடைய வாழ்வில் வழக்கமான பகுதியாக இருக்கவேண்டும். ஜெபம் நம்மை கர்த்தரண்டை கிட்டிச் சேர்ந்து நம்மை பெலப்படுத்துகிறது. அது தேவனுடைய ஆசீர்வாதத்தையும் அபிஷேகத்தையும் விடுவிக்கின்றது. நாம் ஜெபிக்கும்போது நம்முடைய விசுவாசம் பயிற்சி செய்யப்படுவதைக் காண்கின்றோம். அனுதின ஜெபம் ஆத்துமாவின் உடற்பயிற்சிக்கான கூடம் என்று கூறப்பட்டுள்ளது (ஸைமர் 1923).

இன்னும் இரண்டு எச்சரிக்கைகளை சுட்டிக்காட்டவேண்டும். முதலாவது, நீங்கள் ஜெபிக்கும்போது, அடுத்த முப்பது ஆண்டுகளுக்கு நீங்கள் செய்யவிருக்கும் எல்லாவற்றையுங் குறித்துதேவன் ஒரேடியாக காண்பிப்பார் என்று நீங்கள் ஊகித்துவிடாதீர்கள். தேவன் அவ்விதமாய் கிரியை செய்வதில்லை. அவர் நிச்சயமாகவே எதிர்காலத்தை முற்றும் முழுவதுமாய் அறிந்துள்ளார், எனினும் அவருடைய வழிநடத்தலானது அளக்கப்பட்ட அளவுகளிலேயே வருகின்றது. அவர் நம்முடைய "அனுதின அப்பத்தை" வழங்குவது போலவே நமக்கு தேவைப்படுகின்றபடிகொஞ்சம் கொஞ்சமாகவே நமக்கு வழிநடத்துதலையும் அளிக்கின்றார். அது ஏன்? தேவன் தம்முடைய ஞானத்தின் பிரகாரம் நாம் எந்நேரமும் அவரிடத்தில் வருகிறது அவருக்கு வேண்டியதாயிருக்கிறதோடு, அது சாதாரணமாக அவசர நேரங்களிலோ அல்லது மிக நீண்ட நாட்கள் அவரை புறக்கணித்ததன் பின்னும் அல்ல.

இரண்டாவதாக, நீங்கள் ஜெபிக்கும்போது, திறந்தமனதுடனும் தேவனுடைய சித்தத்தை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாகவும் இருத்தல் வேண்டும். சில நேரங்களில்நாம் தேவனிடத்தில் சென்றுஅவருடைய சித்தத்தைக் நமக்கு காண்பிக்கும்படி கேட்பதற்குப் பதிலாக அவர் நமக்கு எதைச் செய்யவேண்டும் என்பதை கூறி முடித்துவிடுவோம். இது உண்மையாகவே அவரிடத்தில் நம்மை முற்றுமுழுதாக அர்ப்பணித்ததாக அமையாது. உதாரணமாக, ஒரு வாலிபப் பெண் தேவனிடத்தில் தான் திருணம் செய்யவேண்டிய மனிதனைக் குறித்து வழிகாட்டும்படியாக ஜெபிக்கின்றாள் என்று வைத்துக்கொள்ளுவோம். அவள் இவ்வண்ணம் ஜெபிக்கின்றாள், "அன்புள்ள தேவனே, நான் திருணம் செய்யவேண்டிய அந்த மனிதன் யார் என்பதை நீர் அறிவீர். நீர் அவரை எனக்காக ஆயத்தப்படுத்தி அவருடைய வாழ்வையும் வழிநடத்தியிருக்கின்றீர். நீர் எனக்காக வைத்திருக்கும் எவரையேனும் ஏற்றுக்கொள்ள நான் ஆயத்தமாயிருக்கின்றேன். ஆனாலும், அவர் உயரத்தில் குறைந்தவராக இருக்கவிடாதேயும், தயவுசெய்து அவர் ஒரு மிஷனரியாகுவதற்கு நினைக்கும் ஒருவராயுமிருக்கக்கூடாது, அவர் பணப் பற்றாக்குறை இல்லாதவராயிருப்பின் அது பாராட்டத்தக்கதுமாகும்." இப்படிப்பட்ட ஜெபத்திலுள்ள பிரச்சினைகளை உங்களால் காணக்கூடியதாகவுள்ளதா? ஒருவேளை 5 அடி 2 அங்குலம் உயரமானவரும், குறைந்த பொருளாதார வளத்தைக் கொண்டவரும்இந்தியாவில் தொலைந்துபோன ஆத்துமாக்களுக்காக பற்றியெரியும் வைராக்கியம் கொண்ட ஒரு அருமையான மனிதனை தேவன் இந்த வாலிபப் பெண்ணுக்காக வைத்திருந்தால் என்னவாகும்?

இரு வெவ்வேறு சபைகளில் போதகராக ஊழியம் செய்வதற்காக அழைக்கப்பெற்ற ஒரு சுவிசேஷ பிரசங்கியாரைக்குறித்ததே இந்தக் கதையாகும். ஒரு சபை ஸ்கொட்லாந்தில் எடின்பேர்க்கில் உள்ளது மற்ற சபை ஸ்கொட்லாந்தில் கிலாஸ்கௌவ்வில் உள்ளது. அந்த பிரசங்கி இவ்வாறு ஜெபித்தார், "கர்த்தாவே, இவ்விரண்டு சபைகளில் நான் எந்த சபைக்கு செல்ல உமக்கு வேண்டியதாயிருக்கின்றது என்பதை எனக்குக் காண்பித்தருளும். எனினும், தயவுசெய்து அது கிலாஸ்கௌவ் ஆக இருக்கட்டும்." அந்த மனிதன் தன் மனிதனில் ஏற்கனவே நிர்ணயித்துவிட்டான். நாம் விசுவாசத்தோடு ஜெபித்து, வழிநடத்துதலுக்காக கர்த்தரை நம்பும்போது அவர் அதை நமக்குத் தருவார். தேவனுடைய சித்தத்தை பின்பற்றுவதுநம்மைப் பொறுத்ததாகும்.

## தேவபக்தியும் தேவனுடைய சித்தமும்

### *நோக்கம் 3:*

*தேவபக்திக்கும் தேவனுடைய சித்தத்தை அறிதலுக்கும் இடையே உள்ள தொடர்பை குறிப்பிடுதல்.*

---

அப்போஸ்தலர் பவுல் தேவனுடைய சித்தத்தை அறிவதற்கான ஒரு முக்கியமான திறவுகோலை இங்கு வெளிப்படுத்துகிறார். அவர் இவ்வாறு எழுதுகின்றார்,

> "அப்படியிருக்க,சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப்
> பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக
> ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை

முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்” (ரோமர் 12:1-2).

தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்வதற்கான ஒரு திறவுகோல் தேவபக்தியாகும். தேவனை மையமாகக் கொண்டதே தேவபக்தி ஆகும். அது தேவனை பிரியப்படுத்தும் விதமான வாழ்க்கையை வாழுதல் என்கின்ற கருத்தைச் சுமந்துவருகின்றது. கிறிஸ்தவர்களாக நாம் நம்முடைய முழு இருதயத்தோடும் தேவனில் அன்புகூருவதற்காக அழைக்கப்பட்டுள்ளோம். இந்த அன்பானது நாள்தோறும் கர்த்தருடைய கட்டளைகளுக்குகீழ்ப்படிவுள்ள வாழ்க்கை வாழ்வதன் மூலம் கிரியையினால் நிரூபித்துக் காண்பிக்கப்படுகின்றது. இயேசு கூறினார், “நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்” (யோவான் 14:15).

பவுல் தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழ்வதை பழைய ஏற்பாட்டின் பலி என்ற கருத்துடன் ஒப்பிடுகின்றார். மோசேயின் நியாயப்பிரமாணங்களுக்கு கீழ்ப்படிதலாக, பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலர்கள் மிருகஜீவன்களை அடித்து அவைகளை தேவனுக்கு பலியாக முன்வைப்பார்கள். அவர்களுடைய பாவங்களுக்கு பதிலாக மிருகஜீவன்களுடைய இரத்தம் சிந்தப்படும்போது, மனந்திரும்பிய இஸ்ரவேலர்கள் தேவனுடைய மன்னிப்பின் நிச்சயத்தை பெற்றுக்கொள்வர். இந்த பலிகளானது நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் செய்யப்பட்ட இயேசுவின் கடைசி பலியான இது ஒரு எடுத்துக்காட்டு அல்லது ஒரு அடையாளமாகும். இப்பொழுது மென்மேலும் மிருகங்களை பலியிடுவதற்கான அவசியமில்லை. அவர் நம்முடைய முற்றுமுழுதான மன்னிப்பிற்கான கிரயத்தை செலுத்தி முடிந்தாயிற்று.

தேவபக்தியானது நாம் நம்மை ஜீவபலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்தலை சுட்டிக்காட்டுகின்றது. நாம் இதை எவ்வாறு செய்வது? நம்முடைய வாழ்க்கை தேவனுக்கு முன்பாக பரிசுத்தமும் பிரியமுமாக காணப்படவேண்டும். தேவனை அறிவதற்கு முன்பு நாம் செய்ததுபோல செய்யமுடியாது. மறுரூபமாகுதலானது நம்முடையமனதில் ஆரம்பிக்கவேண்டும். பின்னர் அது நம்முடைய மனோபாவத்திலும் நம்முடைய நடத்தையிலும் பிரதிபலிக்கவேண்டும்.

ஒருவர் அவன் அல்லது அவள் மறுபடி பிறவாதிருந்தால் மெய்யாகவே தேவனுடைய வழிநடத்தைலை எதிர்பார்க்க முடியாது. ஜெபம் மற்றும் தேவனுடைய உதவியோடுகூட மாத்திரமே தேவபக்தியுள்ள நபராக மறுரூபமாக முடியும். ஒருவர் தேவனிடமிருந்து அறிந்துகொள்ளவேண்டுமெனில் அவர் பரிபூரணமானவராயிருக்க வேண்டுமென்பது அதன் அர்த்தமல்ல. இவ்வுலகத்தில் தவறிழைக்காதவர்கள் ஒருவருமில்லை; நாம் தவறுகள் செய்கின்றோம். எவ்வாறாயினும், கிறிஸ்தவர்களாக நாம் தவறும்போது பரிசுத்தஆவியானவர் நம்முடைய குற்றங்களை உணர்த்துவராக இருந்தால் நாம் விரைவாக தேவனிடத்திற்கு திரும்பவேண்டியவர்களாயிருக்கின்றோம். நம்முடைய பாவங்களை நாம்

அறிக்கையிடவேண்டும். யோவான் இவ்வாறு எழுதுகின்றார், “நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்” (1 யோவான்1:9). தேவபக்தியுள்ள, ஜெபத்தில் நிரம்பிய, கிறிஸ்துவை பின்பற்றுகின்ற ஒருவன் அவன் அல்லது அவள் தேவனுடைய “ராடர் திரையில்” காணப்படுவதினால் தான் நம்பிக்கையுடன் இளைப்பாற முடியும். அப்படிப்பட்ட நபர்கள் தேவனுடைய பார்வையில் காணப்படுவர் அத்துடன் அவர்களை வழிநடத்துவதற்காக எது சிறந்தது என்பதையும் அவர் அறிவார். தேவபக்தியுள்ள வாழக்கையை வாழ்கின்றதினால் வருகின்ற எந்தவொரு தியாகமும் அல்லது சவாலும் தேவனுடைய சித்தத்தில் இருப்பதை பெறுமதிமிக்கதாக்கிவிடும்.

## தேவனுடைய சித்தத்தை தீர்மானித்தலில் வேத வசனத்தின் பங்கு

### *நோக்கம் 4:*

*தேவனுடைய சித்தத்தை தீர்மானித்தலில் உதவிசெய்யும் தேவனுடைய வசனத்தை எவ்வாறு கற்பதென்பதைக் காண்பித்தல்.*

---

சில மனிதர்கள் தாங்கள் எந்நிற காலுறையை அணிய வேண்டும் எவ்வகையான வாகனத்தை வாங்க வேண்டும், மியாமி அல்லது மெக்சிகோ ஆகிய இவ்விரண்டில் எவ்விடத்தில் விடுமுறை காலத்தை கழிக்கவேண்டும் என்று வேதாகமம் கட்டாயமாக வெளிப்படுத்த வேண்டும் என நினைப்பர். அவர்கள் வேதாகமத்தை திறந்து மனம்போனவாறு தங்கள் விரலை ஒரு வசனத்தின் மீது வைத்து தேவன் அவ்விதமாக தங்களுடன் பேசுவார் என்று நினைத்து  அவ்விதமாக அதை வாசிப்பர்.

தயவுசெய்து இதைப் புரிந்துகொள்ளுங்கள், வேதாகமமானது கோட்பாடுகள் நிறைந்த ஒரு புத்தகமாகும். ஒரு நீல நிற கதிரையை வாங்குவதா அல்லது ஒரு பச்சை நிற கதிரையை வாங்குவதா அல்லது வேலைக்கு ரயிலில் பிரயாணம் செய்வதா அல்லது காரை ஓட்டுவதா என்று கண்டுபிடிக்கும்படி நீங்கள் தேவனுடைய வசனத்தை வாசித்தீர்களானால், நீங்கள் ஏமாறக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு. எனினும் நீங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையைக் குறித்து மிகப்பெரிதான கோட்பாடுகளைக் கற்றுக்கொள்ள வருவீர்களானால் நீங்கள் மிகவும் நிறைவான பலனைப் பெற்றுக்கொள்ளுவீர்கள். இந்த கோட்பாடுகளானது தேவனுடைய சித்தத்தை புரிந்துகொள்ளும் அடிப்படையாகவுள்ளது.நாம் செய்யவேண்டிய தீர்மானங்களின் மீது அவைகள் அற்புதமான ஒளியை பாய்ச்சுகின்றது. தாவீது எழுதினதுபோல, “உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது” (சங்கீதம் 119:105).

இந்த மிகப்பெரிதான கோட்பாடுகளுக்கான உதாரணங்கள் என்ன? முதல் கோட்பாடானது தேவனை எப்பொழுதும் முதன்மைப்படுத்துவதாகும். இயேசு கூறினார், “முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்” (மத்தேயு 6:33). நாம் இங்கே பேசுகின்ற முன்னுரிமைகள் என்ன. கிறிஸ்தவ வாழ்க்கையில் தேவனை முதலில்

வைப்பதே மிக முக்கியமான கடைமையாகும். அவர் முதலாவது இல்லாவிட்டால் எதுவுமே வெற்றிகரமாக அமையாது.

நீங்கள் யாருக்கு அல்லது எதற்கு உங்கள் வாழ்க்கையில் முதலிடத்தைக் கொடுத்துள்ளீர்கள் என்பதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்? அது தேவனா?உங்கள் வேலை, பொழுதுபோக்குகள், நண்பர்கள், பணம் அல்லது வேறு ஏதாயினும் ஒன்றா? மற்ற எந்த காரியங்களிலும் நீங்கள் மகிழ்ச்சியை அனுபவிக்கிறதற்கு தேவன் எதிரானவர் அல்ல. ஆயினும் அவருக்கு எக்காரியத்துடனும் போட்டியிட அவசியமில்லை. நிச்சயமாக அவர் முதலில் இருக்கவேண்டும்! உங்களுடைய முன்னுரிமைகளை சரியாக கொடுக்கும்போது ஏராளமான கேள்விகள் அல்லது தேவனுடைய சித்தத்தைக் குறித்த குழப்பங்களும்கூட மறைந்துவிடும். சி. எஸ். லூயிஸ் இவ்வாறு கற்றுக்கொடுத்தார் நாம் முதன்மையான காரியங்களுக்கு முதலிடத்தை கொடுத்தால் இரண்டாவதாக உள்ள காரியங்கள் அதனோடே வந்து சேர்த்துக்கொள்ளப்படும். எவ்வாறாயினும், நாம் இரண்டாவது காரியங்களை முதன்மைப்படுத்தினால் நாம் முதலாவது காரியத்தையும் இரண்டாவது காரியத்தையும் இரண்டையும் இழந்தவர்களாக காணப்படுவோம் (1970, 280).

அடுத்த மிக முக்கியமான கோட்பாடானது சீஷத்துவமாகும். இயேசு கூறினார், "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றி வரக்கடவன்" (மத்தேயு 16:24). நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவை பின்பற்றவும், ஊழியம் செய்யவும், கீழ்ப்படியும்படிக்குமே நாம் அழைக்கப்பட்டுள்ளோம். சீஷர்கள் இயேசுவுக்கு நேராக தங்கள் கண்களை பதிப்பார்கள். இயேசுவே அந்தப் படத்தின் மையமாக காணப்படுவார்.

அடொல்ப் மென்செல் என்பவரால் வரையப்பட்ட பிரசித்தமான ஓவியம் ஒன்று பெர்னிலில் ஒரு ஓவிய காட்சிக்கூடத்தில் (1815-1905) வைக்கப்பட்டிருந்தது. பகுதியாக பூர்த்திசெய்யப்பட்டிருந்ததே அப் படத்தினுடைய தனித்துவமாகும். மகா பெட்ரிக் தன்னுடைய சில ஆலோசகர்களுடன் பேசுவதையே அப்படத்தினூடாக அவருக்கு காண்பிக்கவேண்டியிருந்தது. அவர் அப்படத்தின் பின்னணியில் அந்த ஆலோசகர்களை வரைந்து அத்துணியின் நடுவில் இராஜாவை வரைவதற்காக இடைவெளிவிட்டு அதற்கான எல்லைக்கோடுகளை கரிக் கட்டையால் வரைந்திருந்தார். எவ்வாறாயினும், அந்த ஓவியத்தை பூர்த்திசெய்யும் முன்பதாக அந்த ஓவியன் மரித்துப்போனார். அதனால் பெட்ரிக் ஒருபோதும் அந்த படத்தில் காணப்படவில்லை.

மெய்யாகவே இயேசு உங்கள் வாழ்க்கைப் படத்தில் இருக்கின்றாரா? உங்களுடைய முக்கிய மையம் அவரா? மரணம் வரும்போது நீங்கள் எவ்வளவு பணத்தை சேர்த்துவைத்தீர்கள் அல்லது உலகத்தில் உங்களுக்கு எத்தனை நண்பர்கள் இருந்தார்கள் என்பதுகூட மிக முக்கியமான கேள்வியாக இராது. நீங்கள் உங்கள் எஜமானிடத்தில் எவ்வளவு உண்மையாக அன்புகூர்ந்து அவரை சேவித்தீர்கள் என்பதே கேட்கப்படுகின்ற மிக முக்கியமான கேள்வியாகும்.

அப்படியானால், வேதாகமத்தின் மிகப்பெரிய கோட்பாடுகளை எவ்வாறு கற்றுக்கொள்வீர்கள்? நீங்கள் அதை வாசிக்கவும் கற்றுக்கொள்ளவும் நேரத்தை செலவிட வேண்டும். கர்த்தருடைய வார்த்தை பிரசங்கிக்கப்படும்பொழுது நீங்கள் அதற்கு கவனமாக

செவிமடுக்கவேண்டும். அதற்கு நேரமும் முயற்சியும் தேவைப்படும். ஆனாலும் அதற்கான பலன்கள் நிச்சயமாகவே பெறுமதி வாய்ந்ததாகும்.

## பரிசுத்த ஆவியானவரும் கிறிஸ்தவர்களும்

### *நோக்கம் 5:*

*கிறிஸ்தவர்களை வழிநடத்துதலில் பரிசுத்தஆவியானவரின் பங்கை விளக்குதல்.*

பரிசுத்த ஆவியானவர் நமக்காக செய்கின்ற அநேக காரியங்களைக் குறித்து வெளிப்படுத்தும் அநேக வசனங்கள் வேதாகமத்தில் உண்டு. இங்கே இரண்டு உதாரணங்கள். ரோமர் 8:14 கூறுகின்றது, “மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.” இயேசு கூறினார், “சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்” (யோவான் 16:13).

இதனுடைய அர்த்தம் என்ன? உண்மையான கிறிஸ்தவர்களுக்கு நபராகிய பரிசுத்த ஆவியானவருக்குள் உட்புறமாக வழிநடத்தப்படும் முறை ஒன்றுண்டு. அநேக நூற்றாண்டுகளாக படகுகளும் கப்பல்களும் வெளிப்புறமாக வழிநடத்தும் முறைகளிலேயே தங்கியிருந்தது. மாலுமிகள் நட்சத்திரங்களைக் அவதானித்து சாத்தியமான நேரங்களில் கரையோரப் பகுதிகளைப் பிடித்து அதை பின்பற்றிச் செல்வார்கள். பின்னர் திசையறி கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன.பின் நாட்களில், மாலுமிகள் வான் அலைகள், சோனர் (sonar) (நீருக்கடியில் எதிரொலிகளை ஏற்படுத்தக்கூடிய கருவி) மற்றும் ராடர் போன்றவற்றின் உதவியுடன் கடற்பிரயாணங்களை மேற்கொண்டனர். இவையெல்லாம் வழிகாட்டுவதற்காக அமையப்பெற்ற வெளிப்புறமான வடிவங்களாகும். அதன்பின்னர் 1950 இல், வழிகாட்டுவதற்கான புதிய வழிமுறையொன்று அமுல்படுத்தப்பட்டது. நட்சத்திரங்கள், நிலம், வான் அலைகள் அல்லது அது செயற்படுத்தப்படுவதற்காக வேறு ஏந்த வெளிப்புறமான காரியங்களும் அதற்கு அவசியமாயிருக்கவில்லை. இது புதிது “உட்புற வழிநடத்தும் முறை” இது கைரொஸை (gyros) அடிப்படையாகக் கொண்டதாகும். இதன் பிரதிபலனாக ஒரு அணுகுண்டு சக்தியைக் கொண்ட நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று அதனுடைய உட்புற வழிகாட்டும் முறையைப் பயன்படுத்தி அவ்வளவு நேரம் நீருள் மூழ்கினபடியே ஹவாய் தீவுகளை விட்டு வட துருவத்து பனிக்கட்டிகளுக்குள் பயணம் செய்து மீண்டும் இங்கிலாந்து நோக்கி பயணிக்கும் திறமைவாய்ந்ததாகும். பரிசுத்த ஆவியானவரும் உள்ளார்ந்த, ஜீவனுள்ள, சகலமும் அறிந்த, எல்லாம் வல்லவராகியஅவர் உங்களுடைய வாழ்க்கையை வழிநடத்தும் உங்கள் தனிப்பட்ட வழிநடத்தும் வல்லுனர் என்பதை சிந்தியுங்கள்.

நாம் இப்பொழுது தெளிவடைவோம். ஆவியானவர் நம்மை வழிநடத்துதல் என்பதன் அர்த்தம் என்ன? அவர் எப்பொழுதும் நம்மிடத்தில் காதில் கேட்கக்கூடிய விதமாகவே பேசுவாரா? அநேக மக்கள், “கர்த்தர் கூறினார் ...” அல்லது “கர்த்தர் எனக்குச் சொன்னார் ...” என்று உரிமை பாராட்டியவாரே சுற்றித்திரிவர். மெய்யாகவே தேவன் அவர்களுக்கு

ஒருபோதும் விசேஷமாக ஒன்றையும் கூறவில்லை. நீங்கள் ஒருபோதும் அவ்வண்ணமாய் பேசும் பழக்கத்திற்குட்பட்டுவிடாதீர்கள். அது தேவதூஷணம் என்கின்ற எல்லைக்குள் வந்துவிடும். பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதாவது காதில் கேட்கக்கூடிய விதமாகப் பேசுவார் ஆயினும் அது வழக்கமான முறையல்ல.

ஆவியானவர் எதை நமக்கு வெளிப்படுத்துவார்? அவர் நம்மிடம் எந்த வணிகப்பெயர் கொண்ட வாசனைப் பொருள் அல்லது பற்பசை வாங்கவேண்டும் என்பதைக் கூறுவாரா? அது சந்தேகத்திற்குரியது. கிறிஸ்தவ வாழக்கையின் முன்நாட்களில் நம்மில் அநேகர் கர்த்தர் நமக்கு நம்முடைய அன்றாட வாழ்க்கையில் சாதாரணமான வழக்கமான காரியங்களில் நமக்கு ஒரு சிறு விடுதலையைக் கொடுத்துள்ளார் என்பதை நாம் புரிந்துகொண்டிருந்தோம். தலை மயிரை எவ்வாறு கோத வேண்டும் அல்லது எந்நிறமான காலுறைகளை அணியவேண்டும் என கர்த்தர் கூறவேண்டும் என்று எதிர்பார்த்திருக்கும் மக்கள் ஆவிக்குரிய விதமாக இன்னும் முதிர்ச்சியடைய வேண்டியவர்களாக உள்ளனர். இப்படிப்பட்ட உலகக்காரியங்களான செயற்பாடுகளை தெரிவுசெய்யும்படி தேவன் நமக்கு மூளையைக் கொடுத்துள்ளார். எந்த வணிகப் பெயரைக் கொண்ட பற்பசையை பாவிக்கவேண்டும் என்று தேவனிடத்தில் கேட்காமலிருப்பதினால் ஏதோ ஒரு வகையில் நாம் பாவம்செய்து விடுவோமோ என்று நாம் பயப்படத் தேவையில்லை.

ஆவியானவருடைய வழிநடத்தலின்போது மனதிற் கொள்ள வேண்டிய நான்கு காரியங்கள் இதோ.

- சாதாரணமாக, பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்தலானது நம்மை விட்டு நீங்காத ஒரு நிலையான, உறுதியான எண்ணத்தை அல்லது உணர்வை மனதில் ஆழப்பதிக்கின்றதாக வருகின்றது. சாதாரணமாக கடந்து போகின்ற தீடீர் எண்ணம், விருப்பம் அல்லது உணர்வுக்கு மேற்பட்டதாயிருக்கும். அநேகமாக முழுநேர ஊழியத்திற்கான தேவனுடைய அழைப்பு இவ்விதமாகவே வருகின்றது. ஆவியானவர் யாரேனும் ஒருவரை இவ் அழைப்பைக் குறித்து தொடர்ச்சியாக இரவும் பகலும் சிந்திக்கச் செய்கின்றார்; அது நீங்கிச் செல்லாது.

- அநேகமாக ஆபத்தான செயல்களிலிருந்து நம்மை காப்பாற்றுவதற்காக மனதிலும் இருதயத்திலும் பரிசுத்தஆவியானவருடைய இந்த எண்ணம் ஆழமாக பதிக்கப்படும்.

- பரிசுத்த ஆவியானவருடைய தொடர்பாடலானது அவர் நம்மை பயன்படுத்தக்கூடிய இடங்களின்பால் வழிநடத்தும். அப்போஸ்தலர் 8 இல், மந்திரியும் தலைவனுமாகிய எத்தியோப்பியனுக்கு கிறிஸ்துவைக் குறித்து சாட்சி பகிரும்படி ஆவியானவர் பிலிப்புவை அவனிடத்திற்கு வழிநடத்தினார். அதன் பயனாக, அந்த எத்தியோப்பிய பிரயாணி கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தப்பட்டு ஞானஸ்நானமும் கொடுக்கப்பட்டான்.

- நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்யும் சரியான பாதையில் காணப்படும்போது பரிசுத்த ஆவியானவர் நமக்கு சமாதானத்தையும் உறுதியையும் தருகின்றார். நாம் அந்த

பாதையை விட்டு விலகும்போதுஅதையும் ஆவியானவர் நமக்கு விரைவாக காண்பிக்கின்றார்.

அனுதினமும் அவருடைய ஆவியினால் உங்களை வழிநடத்தும்படி தேவனிடம் கேட்பதோடு அவருடைய உதவியையும் எதிர்பாருங்கள். ஒரு பாதுகாப்பிற்காக பரிசுத்த ஆவியிடமிருந்து வந்ததென்று நீங்கள் நினைக்கும் மனதில் ஆழமாக பதிந்த ஏதேனும் ஒரு எண்ணம் அல்லது உணர்வை குறித்து ஏற்கனவே வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் கோட்பாடுகளுடன் கவனமாக ஒப்பிட்டுப்பாருங்கள். மனதில் பதிந்த அந்த ஆழமான எண்ணம் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வந்திருப்பின் அது எப்போதும் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய சித்தத்தை உறுதி செய்யும்.

## தேவன் மனிதர்களையும் சூழ்நிலைகளையும் பயன்படுத்துதல்

### *நோக்கம் 6:*

*தேவன் தம்முடைய ஜனங்களின் வாழ்க்கையை வழிநடத்துவதற்காக எவ்வாறு சூழ்நிலைகளைப் பயன்படுத்துகிறார் என்பதை கலந்துரையாடல்.*

---

### தேவன் சூழ்நிலைகளைப் பயன்படுத்துதல்

நமக்கும், நம்மைச் சுற்றிலும் நடக்கும் நிகழ்வுகளே இந்த சூழ்நிலைகளாகும். அப்போஸ்தலர் 19 இல் பவுல் எபேசுவுக்கு வருகின்றார். அங்கே அவர் கர்த்தரால் வல்லமையாக பயன்படுத்தப்பட்டதுடன் அங்கு அவர் மிகவும் பயங்கரமான எதிர்ப்புக்கும் முகங்கொடுத்தார். எவ்வாறாயினும், அவ்விடத்தை விட்டு ஓடிப்போகாமல் அங்கே இருக்கவேண்டுமென்பது தான் அவருக்கான தேவனுடைய சித்தம் என்பதை பவுல் புரிந்துகொண்டார். எப்படி? சூழ்நிலைகள் மூலம். 1 கொரிந்தியர் 16:8-9 இல் பவுல் இவ்வாறு எழுதுகிறார்,“ஆகிலும் பெந்தெகொஸ்தே பண்டிகை வரைக்கும் எபேசு பட்டணத்தில் இருப்பேன். ஏனெனில் இங்கே பெரிதும் அநுகூலமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது; விரோதஞ்செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள்.” “எபேசுவில் தரித்திரு” என்று, நிச்சியமாக பரலோகத்திலிருந்து பேசும் ஒரு குரலை பவுல் கேட்கவில்லை. ஆகிலும் அங்கு தேவன் கிரியை செய்யும் விதத்தையும் அந்த நகரத்தில் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படும் விதத்தையும் அவர் கண்டு புதிய விசுவாசிகளை சீஷத்துவதற்குள் வழிநடத்துவது அவசியமாயிருந்தபடியால் அவ்விடத்தை விட்டுச்செல்லுவதற்கு அவருக்கு அது சரியான நேரமாயிருக்கவில்லை.

சூழ்நிலைகளை தேவனுடைய வீதி சமிக்ஞை விளக்குகள் என்று நினைத்துக்கொள்ளுங்கள். வீதி சமிக்ஞை விளக்குகள் எதற்காக காணப்படுகின்றது? நீங்கள் வாகனத்தைச் செலுத்தும்போது எப்பொழுது செல்லவேண்டும் எப்பொழுது நிறுத்தவேண்டும்என்பதை அவைகள் உங்களுக்கு காண்பிக்கும். வாகனங்களை செலுத்துவோர் வீதி சமிக்ஞை விளக்குகளுக்கு சரியான அவதானத்தை செலுத்தாதே அநேக விபத்துக்கள் நடைபெறக் காரணமாகும். கிறிஸ்தவ வாழ்விலும், நம்மை வழிநடத்துவதற்காகவேதேவன் அநேகமாக சூழ்நிலைகளை பயன்படுத்துகின்றார்.

இங்கே ஒரு உதாரணம் தரப்பட்டுள்ளது.ஓர் இடமாற்றத்திற்கான நேரம் இதுவே என நீங்கள் உணர்கின்றீர்கள் என்று வைத்துக்கொள்ளுவோம்.உங்களுக்கு இயற்கை காட்சி அமைப்பில் ஒரு மாற்றம் தேவையென்று நினைக்கின்றீர்கள். தேவனுக்காக ஏதாகிலும் ஒன்றை வேறு ஒரு நகரத்திலோ அல்லது வேறு ஒரு நாட்டிலோ செய்ய உங்களுக்கு அவசியமாயிருக்கின்றது. எவ்வாறாயினும், சில சூழ்நிலைகள் நீங்கள் நகரக்கூடாதபடி உங்களை தடைசெய்கின்றது: அப்புதிய இடத்தில் ஒரு தொழில் வாய்ப்பு அல்லது வீடொன்று இல்லாதிருக்கின்றது; உங்கள் துணைவர் அதற்கு முற்றிலும் எதிராக இருக்கின்றதோடு உங்களுக்கு முழு நிறைவான சமாதானமுமில்லாதிருக்கின்றது. ஆகவே, நீங்கள் "கர்த்தாவே, இந்த இடமாற்றம் உங்களுக்கு சித்தமா என்பதை எனக்குக் காண்பியுங்கள்." என்று கடுமையான விடாமுயற்சியுடன் ஜெபிக்கின்றீர்கள். தேவன் உங்களை வழிநடத்தும் வரை நீங்கள் பொறுமையுடன் காத்திருக்கின்றீர்கள். இறுதியில், நீங்கள் சூழ்நிலைகள் மாறாதிருக்கக் காண்கின்றீர்கள். தொழில் வாய்ப்பிற்கான எந்தக் கதவும் திறக்கப்படவில்லை. உங்கள் துணைவர் உங்களுடன் சம்மதிக்க உடன்பாடாக இல்லை. எவ்விடத்தில் நீங்கள் வாழவேண்டும் என்கின்ற வழிநடத்தல் உங்களுக்கில்லை. இன்னும் உங்களுக்கு அதற்கான சமாதானம் காணப்படவில்லை. தேவன் உங்களுடைய இடமாற்றத்தை அனுமதிக்கவில்லை என்பதற்கு இந்த சூழ்நிலைகள் மிகவும் நல்ல அடையாளங்களாகும்.

நீங்கள் முயற்சி செய்யக்கூடாது என்று தேவன் உங்களுக்கு சூழ்நிலைகள் மூலமாக காண்பிக்கும்படி முயற்சிசெய்யும்போது அக்காரியங்களை செய்ய முற்படுவது முட்டாள்தனமாகும். நீதிமொழிகள் 22:3 இல் நாம் இவ்வாறு வாசிக்கின்றோம், "விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்துகொள்ளுகிறான்; பேதைகள் நெடுகப்போய்த் தண்டிக்கப்படுகிறார்கள்."

"சிலநேரங்களில் பிசாசானவன் எமது வழிகளில் தடைகளை ஏற்படுத்தி எமது விசுவாசத்தை அழிப்பதற்கும் நம்மை தடுப்பதற்கும் முயற்சிக்கமாட்டானோ? இந்த சூழ்நிலைகள் தேவனுடைய சிவப்பு விளக்கா அல்லது பிசாசினுடைய தடையாஎன்பதை நான் எவ்வாறு அறிந்துகொள்வது?" என்று நீங்கள் கேட்கலாம். அநேகமாக சாத்தான் எம்மை தடைசெய் முயற்சிப்பது உண்மைதான் அதிலும் விசேஷமாக நாம் மிகுந்த ஆர்வத்துடன் தேவனுடைய சித்தத்தை செய்யமுற்படும்போது. நம்முடைய எதிராளியான பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித்திரிகின்றான் என்று வேதாகமம் தெளிவாகக் கூறுகின்றது (1 பேதுரு 5:8). நாம் தேவனுடைய சர்வாயுதவர்க்கங்கள் முழுவதையும் தரித்திருக்கவேண்டும் அப்பொழுது நாம் பிசாசின் திட்டங்களுக்கு எதிர்த்து நிற்க முடியும் என பவுல் எழுதினார் (எபேசியர் 6:11). அதனால் தான் நாம் தேவனுடன் மிக நெருக்கமாக நடக்கவேண்டும் அத்துடன் ஆவிக்குரிய ரீதியாக பெலனுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்.

ஆயினும் இதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள் தேவனைப்போல பிசாசானவன் சகலமும் அறிந்தவனல்ல. மோசமானதும் மூர்க்கமானதுமான சாத்தானும் அவனுடைய பிசாசுக் கூட்டமும் எல்லைகளுள்ள வரையறுக்கப்பட்ட ஜீவன்களாகும். எதிராளியானவன் நம்முடைய வாழ்க்கைக்கான தேவனுடைய அற்புதமான சகல விபரங்களைக் குறித்து அறிந்தவன்னல்ல அதேநேரம் தேவனுடைய ஆவியானவர் இவ்வுலகத்தில் தேவனுடைய

பிள்ளைகளை எவ்வாறு வழிநடத்துகிறார் என்பதும் அவனுக்குத் தெரியாது. அப்போஸ்தலர் பவுல் இவ்வாறு எழுதுகிறார், “மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறிமாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்” (1 கொரிந்தியர் 2:11-12). எதிரியால் செய்யக்கூடியது எல்லாமேநமக்கு தொல்லை கொடுப்பது மாத்திரமே, தேவனுடைய சித்தத்தை பகுத்தறிய முயற்சிக்கும்போது அவன் அதை குழப்புவதற்கு முயற்சிக்கின்றான். தேவன் சரியான வழிநடத்தலைக் கொடுத்த பின்பு அநேக இடையூறுகளை செய்கின்றான்.

குழப்பங்களைத் துரத்தும்படிக்கு நூற்றாண்டுகளாக அநேக தேவபக்தியுள்ள கிறிஸ்தவர்கள் கற்றுக்கொண்டவற்றைக் குறித்து மீட்டுப்பார்ப்போம்:

- தேவன் குழப்பத்திற்கு தேவனல்ல என்பதை அறிந்துகொள்ளல்;
- தேவனுடைய வார்த்தையில் தங்கியிருத்தல்;
- தேவன் எண்ணத்தை தெளிவாக்கும்படிக்கு ஜெபத்தில் தரித்திருத்தல்;
- வழிநடத்துதலுக்காக தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பிடித்துக்கொள்ளல்;
- உங்களை வழிநடத்தக்கூடிய உங்கள் ஆவிக்குரிய நலனை விரும்பும் முதிர்ந்த விசுவாசிகளினிடத்தில் உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.
- நிச்சயமற்றதன்மை விலகும் வரை விடாமுயற்சியுடன் காணப்படவேண்டும்.
- நீங்கள் எவ்வித அவசரமான தீர்மானங்களையும் செய்துவிடாதீர்கள்;

“இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால், இந்த அத்திமரத்திற்குச் செய்ததை நீங்கள் செய்வதுமல்லாமல், இந்த மலையைப்பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொன்னாலும் அப்படியாகும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்றார் (மத்தேயு 21:21). சாவால்கள் எழும்பும் என்றும் தேவனுடைய சித்தத்தை செய்வதை தடுப்பதற்காக பிசாசானவன் தடைகளை ஏற்படுத்துவான் என்பதையும் இயேசு அறிந்திருந்ததினாலேயே அவர் இதைக் கூறினார். நம்முடைய பாதையில் எதிராளி போட்டிருக்கும் எவ்விதமான காரியத்தையும் உடைத்துவிடும்படி நமக்கு அதிகாரம் உண்டென்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டுமென்பதே தேவனுக்கு அவசியமாயிருக்கின்றது.

நாம் தேவனால் நடத்தப்படும்போது வாழ்க்கை முழுவதும் நாம் எச்சரிக்கையாயிருக்கும்படிக்கு அநேக அடையாளங்கள் காணப்படுகின்றன. வாழ்க்கையின் முன்னால் உள்ள பாதையில் நீங்கள் செல்ல முற்படுகையில் நீங்கள் தனியாக இல்லை என்பதைக் குறித்து சந்தோஷமடையமாட்டீர்களா? சூழ்நிலைகளுக்கூடாக தேவன் முக்கியமான ஒன்றை காண்பிக்கும்போது அதைக் குறித்து கவனமெடுக்க இன்றே நேரமெடுங்கள். நீங்கள் மதிப்பீடு செய்யவேண்டிய சூழ்நிலைகளின் பட்டியலை அமைத்துக்கொள்ளுங்கள் அது இப்பொழுது உங்களுக்கு உதவியாக அமையும்.

## தேவன் மனிதர்களைப் பயன்படுத்துதல்

அறிவுரை பெற்றுக்கொள்வதைக் குறித்து நீங்கள் எவ்வாறு உணர்கின்றீர்கள்? சில மனிதர்கள் சிலவேளைகளில் தாங்கள் கேட்பதற்கு விருப்பமற்ற காரியத்தை அப்படியானால் உண்மையை அறிவுறுத்தல் கொடுக்கும் நபர் பேசுவார் என நினைத்து பயப்படுவார்கள். மற்றவர்கள் அறிவுரைகளை பெற பயப்படக்காரணம் அவர்களை பிழையான வழியில் நடத்திவிடுவார்களோ என்று அஞ்சி அப்படிசெய்ய பயப்படுவார்கள். வேறு சிலர் அறிவுரைகளை அல்லது ஆலோசனையைக் பெற்றுக்கொள்வதற்கு வெட்கப்படுகின்றார்கள் காரணம் அது அவர்களை முட்டாளாக காண்பித்துவிடுமோ என்று நினைத்து அப்படிச் செய்யார்கள். அறிவுரைகளை கேட்காததற்கு மிக மோசமான காரணங்களில் இதுவும் ஒன்றாகக் காணப்படலாம். அறிவுரைகளை பெற்றுக்கொள்ளுதல் பலவீனம் அல்லது முட்டாள்தனத்திற்கான ஒரு அடையாளமல்ல. உண்மையாகவே, அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ளுதல் நாம் செய்யக்கூடிய ஞானமான செயல் என்றே வேதாகமம் வெளிப்படுத்துகின்றது.

## இவ்விரு வசனங்களைக் கவனியுங்கள்:

- "மதியீனனுடைய வழி அவன் பார்வைக்குச் செம்மையாயிருக்கும்; ஆலோசனைக்குச் செவிகொடுக்கிறவனே ஞானமுள்ளவன்." (நீதிமொழிகள் 12:15).
- "நல்யோசனை செய்து யுத்தம்பண்ணு; ஆலோசனைக்காரர் அநேகரால் ஜெயங்கிடைக்கும்." (நீதிமொழிகள் 24:6)

நீங்கள் ஏழையோ பணக்காரனோ, படித்தவரோ படிக்காதவரோ யாராக இருப்பினும் அது ஒரு பொருட்டல்ல.எப்பொழுதெல்லாம் தேவனுடைய சித்தத்தைக் குறித்து நீங்கள் மிகப்பெரிய தீர்மானங்களை எடுக்கின்றீர்களோ அப்பொழுது அது உங்களுடையதும் மற்றவர்களுடையதும் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. நீங்கள் தேவபக்தியுள்ளோரின் பங்களிப்பை, அறிவுரைகளை மற்றும் ஆலோசனைகளையும் நாடவேண்டும். அப்படி செய்வதனால் தேவன் உங்கள் வாழ்க்கையில் தலையிட்டு உங்கள் வாழ்க்கையில் பேசும்படி நீங்கள் அனுமதிக்கின்றீர்கள்.

சரியான நபர்களிடத்தில் பேசுவதன் திறவுகோலானது, அந்த நபர்கள் தேவனில் உண்மையாக அன்புகூறுகின்றவர்களும், தேவனுடைய ஆவியில் நிரம்பியவர்களும், தேவபக்தியின் கனியை செயலில் நிரூபித்துக் காட்டுகிறவர்களும், தேவனை உண்மையாய், விசுவாசமாய் சேவிக்கின்றவர்களும், தேவனுடைய மிகச் சிறப்பானவைகள் உங்கள் வாழ்க்கையில் வேண்டும் என நினைப்பவர்களும் மற்றும் ஞானத்திற்கென்று பெயர்பெற்றவர்களுமாவர். ஆவிக்குரியதல்லாத, முட்டாள்தனமானவர்களிடத்தில் அறிவுரைகளை கேட்டால், நீங்கள் கெட்ட ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதமுண்டு. ஒரு டானிஸ் பழமொழி இவ்வாறு கூறுகின்றது "எல்லா மனிதனுடைய ஆலோசனையின்படியும் கட்டுகிறவன் கோணலான வீட்டை பெற்றுக்கொள்வான்." வேதாகமத்தை விசுவாசிக்கும் உங்கள் சபையில்உங்களுக்கு செவிகொடுக்கவும் அவர்களுடைய வெளிப்பாடுகள் அல்லது புத்திமதிகளைத் தருவதற்கு ஆவலாக

உள்ளவர்களும் உள்ளனர்; உங்கள் போதகர் மற்றும் மூப்பர்கள், டீக்கன்கள், ஆசிரியர்கள், மற்றத் தலைவர்கள் இவர்கள் முதன்மையாக தெரிவுசெய்யப்படக்கூடியவர்களாவர்.

## முடிவுரை

தேவனுடைய சித்தத்தை தெரிந்துகொள்வதும் அதைச் செய்வதும் என்பது அநிச்சயம் நிரம்பிய பயப்படவேண்டிய மறைபொருளான ஒன்றாக இருக்கவேண்டிய அவசியமில்லை. நம்மை வழிநடத்துவதும் நமக்கு பாதைகளை காட்டுவதும் தேவனுடைய வாஞ்சையாகும். மிகவும் முழுநிறைவான மனிதர்கள் தேவனுடைய சித்தத்தை அறிந்தவர்களாயும் அதைச் செய்கிறவர்களாயுமிருப்பார்கள். டேவிட் லிவிங்ஸ்டன் மிகவும் புகழ்பெற்ற ஸ்கொட்லாந்து மிஷனரியும் ஆபிரிக்காவில் முன்பின் அறிந்திராத நிலப்பகுதிகளில் பயணித்தவரும், அக்கண்டத்தின் மிகவும் பின்தங்கிய இடங்களில் அநேக வருடங்களாக தன் வாழ்நாளைக் கழித்தவருமாவார். அநேகமாக அவர் நோய்வாய்ப்பட்டு எண்ணிடலங்கா பாடுகளைப் பட்டவருமாவார். ஒருமுறை அவர் சிங்கத்தினால் தாக்கப்பட்டு அடித்து நொறுக்கப்பட்டார் கிட்டத்தட்ட அவருடைய ஒரு கை செயலிழந்துபோனது. அவர் தனக்கு அன்புக்குரியவர்களையும், நண்பர்களையும் இழந்தபோதும், “நான் தேவனுடைய சித்ததமில்லாமல் இங்கிலாந்தின் சிம்மாசனத்தில் இருப்பதை விடவும் தேவனுடைய சித்தத்துடன் ஆபிரிக்காவின் மையத்தில் இருப்பேன்” என்று அவர் பறைசாற்றினார் (Trivette, under “Stay in this field”).

நீங்கள் உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய வழிநடத்துதலைத் தேடுவீர்களானால், இவற்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்:

1. இந்த செயற்பாடானது இரட்சிக்கப்பட்டு தேவனுடைய சித்தத்தை அறியவேண்டும் என்கின்ற மெய்யான வாஞ்சையுடன் ஆரம்பிக்கின்றது.
2. தேவன் தம்முடைய சித்தத்தை உங்களுக்கு காண்பிக்கவேண்டும் என்று நீங்கள் தேவனிடம் ஜெபக்கவேண்டும், கேட்கவேண்டும்.
3. தேவனுடைய உதவியுடன் தேவபக்தியுள்ள ஒரு வாழ்க்கையை வாழவேண்டுமென்று முயற்சிக்கவேண்டும்.
4. வழிநடத்தலுக்காக தேவனுடைய வார்த்தையைக் கவனியுங்கள். வேதவசனத்தின் கோட்பாடுகளால் நடத்தப்படுங்கள்.
5. பரிசுத்த ஆவியானவர் உங்களை வழிநடத்தும்படியும் பாதைகாட்டும்படியும் அவரை நம்புங்கள்.
6. சூழ்நிலைகளுக்கூடாக தேவன் உங்கள் வாழ்க்கையில் என்னத்தைச் செய்கின்றார் என்பதற்கு உங்கள் கவனத்தைச் செலுத்துங்கள்.
7. வழிநடத்துதலுக்காக தேவபக்தியுள்ள மனிதர்களை நாடுங்கள்.

## குறிப்புப் பட்டியல்

Lewis, C. S 1970. *God is the Dock-Essays on Theology and Ethics*. The Trustees of the Estate of C. S. Lewis.

Trivette, Ken. Stay in this Field. http://www.sermonsearch.com/content.aspx?id 15759 (accessed Aug. 2, 2007)

Zwemer, Samuel M. 1923. *Call to Prayer*. New York: Marshall Bros.

## மனனம் செய்வதற்கு ஆலோசிக்கப்பட்ட வசனங்கள்

சங்கீதம் 119:105
நீதிமொழிகள்12:15
நீதிமொழிகள் 22:3
எரேமியா 29:11
ரோமர் 8:14
ரோமர் 12:1-2
எபேசியர் 5:17
யாக்கோபு 1:5

# பாடம் 11

## ஆவிக்குரிய அதிகாரத்தை விளங்கிக்கொள்ளுதல்

இப்பாடத்தின் மூலம் அநேக சுவிசேஷ சபைகளில் "ஆவிக்குரிய அதிகாரம்" என்று அறியப்பட்ட விடயத்தைக் குறித்து கற்றுக்கொள்ளப்போகின்றோம். சில சபைகள் ஆவிக்குரிய அதிகாரத்தை மிகவும் நன்றாக கையாளுகின்றதோடு சில சபைகள் அவ்வாறு செய்வதில்லை. சபைகளில் இது தொடர்பில் கற்றுக்கொடுப்பதோ அல்லது கலந்துரையாடுவதோ இல்லாதபடியினால் கிறிஸ்துவை பின்பற்றுகிற சில உண்மையுள்ள விசுவாசிகளும்கூட இந்த மிக முக்கியமான பாடத்தைக் குறித்த வேதாகம கற்கையைஅறியாமலிருக்கின்றார்கள். இந்த விசுவாசிகள் தங்களுடைய சொந்த ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் தங்களுடைய சபை குடும்பத்திற்கும் சேதம் விளைவிக்கின்ற பழக்கவழக்கங்களையும் மனோபாவங்களையும் பின்னர் வளர்த்துக்கொள்ளக்கூடும்.

### பாடத்தின் முக்கிய அம்சங்கள்

அதிகார வகைகள்

ஆவிக்குரிய அதிகாரத்தை விபரித்தல்

ஆவிக்குரிய அதிகாரத்திற்கு கீழ்ப்படிதல்

ஆவிக்குரிய அதிகாரத்திற்கு விரோதமாக கலகம் செய்தல்

உள்ளூர் சபைகளுக்கு ஆதரவளித்தல்

### பாடத்தின் நோக்கங்கள்

1. *நடைமுறையிலுள்ள வித்தியாசமான அதிகார வகைகளை இனம்காணல்.*
2. *ஆவிக்குரிய அதிகாரத்தை விபரித்தல்.*
3. *ஆவிக்குரிய அதிகாரத்திற்கு கீழ்ப்படிதல் என்றால் என்ன என்பதன் அர்த்தத்தை விளக்குதல்.*
4. *ஆவிக்குரிய அதிகாரத்திற்கு விரோதமாக கலகம்செய்யும் சுபாவத்தை குறித்து கலந்துரையாடல்.*
5. *உங்கள் சபைக்கும் அதனுடைய ஆவிக்குரிய தலைவர்களுக்கும் உதவிசெய்யக்கூடிய மற்றும்ஆதரவளிக்கக்கூடிய வழிமுறைகளை இனம்காணல்.*

## அதிகார வகைகள்

### *நோக்கம் 1:*

*நடைமுறையிலுள்ள வித்தியாசமான அதிகார வகைகளை இனம்காணல்.*

---

அதிகாரம் உண்மையானதாகும். அனுதின வாழ்க்கையில் நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு வகையான அதிகாரங்களுக்கு கீழ்ப்பட்டவர்களாயிருக்கின்றோம். நாம் அனைவரும் நன்கு பரிச்சயமான ஐந்து வித்தியாசமான அதிகாரங்களை இனம்கண்டுகொள்வோம். முதலாவது தேவனுடைய அதிகாரம். தேவன் மனிதர்களுக்கு சுய விருப்பத்தையும் நாம் பின்பற்றவேண்டிய பாதையை தெரிவுசெய்வதற்கான சுதந்திரத்தையும் கொடுத்திருந்தாலும் தேவனுடைய அதிகாரமே முடிவான அதிகாரமாகும். மக்கள் தங்கள் எண்ணங்கள், வார்த்தைகள், தீர்மானங்கள் மற்றும் கிரியைகளுக்கான கணக்கு ஒப்புவித்தலை அவர் ஏற்படுத்தியிருக்கின்றார். உதாரணமாக, கிறிஸ்தவர்கள் நிபந்தனையின்றி கிறிஸ்துவினுடைய தெய்வீக அதிகாரத்திற்கு கீழ்ப்படியும்பொருட்டு அழைக்கப்பட்டுள்ளனர். இயேசு பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு சற்றுமுன்னர் அவர் தம்முடைய சீஷர்களுக்கு இவ்வாறு கூறினார், “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது” (மத்தேயு 28:18).

இரண்டாவதாக, ஒரு நிபுணத்துவமுள்ள அதிகாரம். ஆய்வுகளை மேற்கொள்வதிலும், கற்றுக்கொள்வதிலும் அநேக வருடங்களைக் கழித்த பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் அந்த பாடத்தில் நிபுணத்துவத்தை அல்லது அதிகாரத்தை பெற்றுக்கொள்வார். ஒரு புகழ்பெற்ற காற்பந்தாட்ட அல்லது ஜிம்நாஸ்டிக் செய்யும் ஒருவர் அவன் அல்லது அவள் தாம் தெரிந்துகொண்ட ஒரு விளையாட்டுத்துறையில் அதிகாரத்தை கொண்டுள்ளார் என்பதை நாம் அவதானிக்கலாம். உணவு விடுதியில் வேலை செய்யும் நபர் ஒருவர் ஆரம்பத்தில் பாத்திரங்களை கழுவ ஆரம்பித்து, பின்பு ஒரு சிப்பந்தியாக பணிபுரிகின்றான். அதன் பின்னர் சமயற்காரனாக முன்னேறிமுகாமையாளராக பதவி உயர்வடைவான். அவன் அல்லது அவள் தாங்கள் வியாபாரத்தின் அனைத்து மட்டங்களையும் நன்கு அறிந்திருப்பார். ஞானமுள்ளவன் இக்காரியங்களையெல்லாம் அத்துறை குறித்த ஆழ்ந்த அறிவின் மூலம் கற்றுக்கொள்வான்.

மூன்றாவதாக, அதிகாரமானது பலாத்காரமுள்ள அதிகாரம், அடக்குமுறை அல்லது கொடுங்கோல் ஆட்சிமுறை, துஷ்பிரயோகம் மற்றும் திறமையாகக் கையாளுதல் போன்றவற்றால் கைப்பற்றப்படுகின்றது. எதிர்ப்பினாலும் நேர்மையற்ற முறைகளினாலும் அதிகாரத்திற்குள் பிரவேசித்து மோசமாகவும் அநீதியாகவும் தங்கள் மக்கள் மீது அதிகாரம் செலுத்தி ஆக்கிரமிப்புச் செய்தவர்கள் தொடர்பில் வரலாறு அநேக உதாரணங்களால் நிரம்பியுள்ளது. இவ்வாறான, தேவபக்தியற்ற நடத்தையுள்ள, அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் அதிகாரத்திலிருக்கின்ற தலைவர்களால் அந்நாடுகளில் வாழும் கிறிஸ்தவர்கள் நிச்சயமாக பாடநுபவிக்கவேண்டியதாகவுள்ளது. அப்போஸ்தலர் பேதுரு இவ்வாறு எழுதுகின்றார், “நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடு சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாக பிரீதியாயிருக்கும்” (1 பேதுரு 2:20). நீங்கள் அடுத்த கட்டத்திற்குச் செல்லும் முன்னர் 1 பேதுரு 3:13-17 ஐயும் வாசியுங்கள்.

நான்காவதாக, ஒப்படைக்கும் அதிகாரம். உதாரணமாக, ஒரு கடை முதலாளி புதிதாக வாடகைக்குக் கொண்ட ஒரு தொழிலாளியை மேற்பார்வை செய்யும்படிக்கு தன்னுடைய மற்றுமொரு தொழிலாளியிடம் அவ்வேலையை ஒப்படைக்கலாம். ஒரு சபைப் போதகர் தன்னுடைய அங்கத்தினன் ஒருவருக்கு ஒரு எல்லைகடந்த ஊழியம் அல்லது ஒரு சிறுவர் நிகழ்ச்சிக்கு தலைமை வகிக்கும்படி கூறலாம். விசுவாசிகளாக நாம் இவ்வாறான அதிகாரத்தை செய்யும்படி நேரத்திற்கு நேரம் கேட்கப்படலாம். நாம் அதற்கு கீழ்ப்படிய வேண்டும்.

ஐந்தாவதாக,நம்பப்பட்டதும் பொறுப்புள்ளதுமான அதிகாரம். இந்த அதிகாரத்திற்கு உதாரணமாக பொலிஸ் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரங்கைளை உள்ளடக்கலாம். நாட்டின் பிரஜைகளை பாதுகாப்பதற்கும், நாட்டின் சட்டதிட்டங்களை பலப்படுத்துவதற்கும் மக்களின் நன்மைகளை கவனிக்கும்படியாகவும் சமூகம் இவர்களை நம்புகின்றது. இப்படிப்பட்ட அதிகாரங்கள் நிறைவாக அமையாது. என்றாலும், புதிய ஏற்பாட்டிற்கு ஏற்ப கிறிஸ்தவர்கள், தேசத்தின் மக்கள் சமுதாயத்திற்குரிய அதிகாரங்களுக்கு கீழ்ப்படியும்படி கட்டளைபெற்றுள்ளனர். அங்கணமே தேவனுடைய மேலான நீதியான அதிகாரத்தையும் உடைக்கமுடியாது. நீங்கள் அடுத்த கட்டத்திற்குச் செல்லும் முன்னர் ரோமர் 13:1-7; 1 பேதுரு 2:13-17 ஐ வாசியுங்கள்.

## ஆவிக்குரிய அதிகாரத்தை விபரித்தல்

### *நோக்கம் 2:*

*ஆவிக்குரிய அதிகாரத்தை விபரித்தல்.*

---

கிறிஸ்தவ பின்னணியில் ஆவிக்குரிய அதிகாரம் என்பது சபைக்குள் அதாவது கிறிஸ்துவின் சரீரத்திற்குள் தேவனால் ஸ்தாபிக்கப்பட்ட அலுவல்கள் அல்லது பதவிகளுக்கான அதிகாரத்தைசுட்டிக் காட்டுகின்றது. எபேசியர் 4:11-13 இல் பவுல் இவ்வாறு எழுதுகின்றார், “மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகர்களாகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.”

மேலே கூறப்பட்டுள்ளவாறு ஐந்து அலுவல்கள் அல்லது பதவிகளான அப்போஸ்தலர், தீர்க்கதரிசி, சுவிசேஷகர், மேய்ப்பன் மற்றும் போதகர் ஆகிய இவைகள் சிலநேரங்களில் ஐந்து வகையான ஊழிய அலுவல்கள் என்று அழைக்கப்படுகின்றது. அநேக கிறிஸ்தவர்கள் மிக சிறப்பாக மேய்ப்பன் அல்லது போதகர் என்ற ஊழிய அலுவலுடன் தொடர்புபட்டுள்ளனர். நீங்கள் ஒரு கிறிஸ்தவன் என்றால்நிச்சயமாக போதகர் அல்லது வேதாகம ஆசிரியரைக் குறித்து அறிந்திருப்பீர்கள். உண்மையாவே, அநேக வேதாகம வல்லுனர்கள் அல்லது புலமை வாய்ந்தவர்கள் எபேசியர் 4:11 இல் காணப்படும் கிரேக்கர்கள், மேய்ப்பன் மற்றும் போதகர்

ஆகிய இவ்விரண்டு அலுவல்களும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ள ஊழியங்கள் என்று குறிப்பிடுகின்றார்கள். இந்தப் பகுதியை பூர்த்திசெய்வதற்காக ஒவ்வொரு உள்ளூர் சபைக்கும் ஒரு தலைவர் தேவைப்படுகின்றார். மேய்ப்பன் அல்லது போதகருக்கான தகுதிகள் மற்றும் பொறுப்புக்களைக் குறித்து வேதாகமமானது மிகத் தெளிவாக உள்ளது. புதிய ஏற்பாடு இந்த மேய்ப்பன் அல்லது போதகரை "மூப்பர்" மற்றும் "கண்காணி" என்றும் அழைக்கின்றது. தயவுசெய்து 1 தீமோத்தேயு 3:1-7 மற்றும் 1 பேதுரு 5:1-4 வரை வாசிப்பதற்கு நேரத்தை எடுத்துக்கொள்ளுங்கள்.

சபை மேய்ப்பன்/போதகர் ஆகிய பதவி நிலையை வகிப்பவர்களுக்கு பாரிய பொறுப்பு உள்ளது. தேவனுடைய ஜனங்களை ஊழியத்திற்காக ஆயத்தப்படுத்துவதும்அவர்களை விசுவாசத்தில் முதிர்ச்சியடைய உதவிசெய்வதுமே இவர்களது வெளிப்படையான நோக்கமாகும். இதனால் அவர்கள் தேவனுக்கு பிரியமானவர்கள் என்பது அர்த்தமல்ல. சாதாரணமாக அவர்கள் அழைக்கப்பட்டிருப்பது தெய்வீக ஆயத்தத்தோடு கற்றுக்கொடுக்கிறதற்கும் பிரசங்கிக்கிறதற்கும் மற்றும்தங்களுடைய சக விசுவாசிகளை பராமரித்து வழிநடத்தவேண்டிய பொறுப்பையும் பெற்றுள்ளார்கள். கிறிஸ்துவினாலேயே இவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கும் இப்படிப்பட்ட வேலையை நிறைவேற்றும்படிக்கே இவர்கள் அதிகாரம் பெற்றுள்ளனர். அது அவர்களுக்கு மனிதர்களால் வழங்கப்பட்ட வேலையல்ல. எவ்வாறாயினும், உள்ளூர் சபைகளின் பின்னணியை நோக்குமிடத்து விசுவாசிகள் தங்கள் மேய்ப்பரையும் போதகரையும் அறிந்துகொள்ளவும் நம்புவதற்கும் அவர்களுக்கு சில காலம் செல்லும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

அநேக தேசங்கள் மக்களாட்சியினால் நன்றாக இயங்கி வருகின்றதினால் அதனுடைய பிரஜைகளுக்கு அநேக உரிமைகளையும் வரப்பிரசாதங்களையும் கொடுக்கின்றது. உலகளாவிய மற்றும் உள்ளூர் இவ்விரண்டு சபைகளும் உண்மையாகவே மக்களாட்சியற்றது. இது உங்களுக்கு ஒரு அதிர்ச்சியாகக்கூட இருக்கலாம்! தனிப்பட்ட கிறிஸ்தவர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லவோ அல்லது தங்களுடைய உள்ளூர் சபையில் ஒரு உடன்பாடான மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கவோ முடியாது என்ற விடயத்தைக் குறித்து இதில் கூறப்படவில்லை. உண்மையாகவே, அவர்கள் அதைச் செய்வது நல்லது. அல்லது போதகர்கள் மாத்திரம் தேவனுடைய சத்தத்தைக் கேட்கின்றார்கள் என்பது இதன் அர்த்தமல்ல. மெய் அர்ப்பணிப்புடன் காணப்படும் எல்லா இருதயங்களிலும்தேவன் பேசுகின்றார். இல்லையென்றால் மேய்ப்பர்கள் மற்றும் போதகர்களுக்கு மாத்திரமே செயற்பாடுள்ள ஊழியம் உண்டு என்று அர்த்தமாகிவிடும். உண்மையென்னவென்றால் எல்லா விசுவாசிகளும் செயற்பாடுள்ளவர்களாக இருக்கவேண்டும். தங்களுடைய தாலந்துகள் திறமைகள் மற்றும் வளங்களைக் கொண்டு தேவனுக்கு ஊழியம் செய்யவேண்டும்.

சபையானது மக்களாட்சியற்றது என நாம் கூறும்பொழுது நாம் கருதுவது என்னவென்றால், முடிவில் வழிநடத்துகின்றவர் தேவன் என்றும் அவருடைய நிகழ்ச்சி நிரலை செயற்படுத்த ஆவிக்குரிய தலைவர்களை பயன்படுத்துகிறார் என்பதாகும். சபையில் ஆவிக்குரிய தலைவர்கள் தேவனுடைய நோக்கத்தையும் திட்டத்தையும் முன்கொண்டு செல்லுவதற்காக மீண்டும் விசுவாசிகளுடன் செயற்படுவர்.ஓர் உள்ளூர் சபைக்கான ஆவிக்குரிய வழிநடத்தலானது தரிசனம் மற்றும் திட்டங்கள் குறித்து தேவன் அதனுடைய போதகர் அல்லது தலைமைத்துவ குழுவுக்கு வெளிப்படுத்துவதிலேயே தங்கியுள்ளது என்பதை

நாம் புரிந்துகொள்வது இன்றியமையாததாகும். அவர்கள் அதற்காக ஜெபித்து அத்திட்டங்களைக் குறித்து கலந்துரையாடுவார்கள். நிச்சயமாகவும் மிகச் சரியாகவும் அது தேவனுடைய சத்தமா என்பதை பகுத்தறிவார்கள்; அதன் பின்னர் அதை நடைமுறைப்படுத்துவார்கள்.

அத்தோடு மேய்ப்பர்கள் / போதகர்கள் போன்ற ஆவிக்குரிய தலைவர்கள் தேவனை நம்பி தேவனுடைய வார்த்தையை பயமில்லாமல் பிரசங்கிப்பதற்கான பொறுப்பை ஏற்பார்கள். கள்ளப் போதனைகளை சரிப்படுத்தி தேவைப்படும்போது அவற்றை கடிந்துகொண்டு விழுந்துபோன மறுசீரமைப்புத் தேவைப்படுவோர்க்கு உதவிசெய்வார்கள். இப்பொழுது 2 தீமோத்தேயு 4:1-5 வரை வாசிப்பதற்கு நேரமெடுத்துக்கொள்ளுங்கள்.

## ஆவிக்குரிய அதிகாரத்திற்கு கீழ்ப்படிதல்

### *நோக்கம் 3:*

*ஆவிக்குரிய அதிகாரத்திற்கு கீழ்ப்படிதல் என்றால் என்ன என்பதன் அர்த்தத்தை விளக்குதல்.*

---

எபிரெயர் 13:17 விசுவாசிகளுக்கு இவ்வாறு கட்டளை கொடுக்கின்றது: "உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்கு பிரயோஜனமாயிருக்கமாட்டாதே."

ஒரு கிறிஸ்தவன் ஆவிக்குரிய அதிகாரத்திற்கு கீழ்ப்படிதல் என்பதன் அர்த்தம் என்ன? சிலவேளைகளில் அதன் அர்த்தம் இதுவல்ல என்பதை சுட்டிக்காட்டுவதன் மூலம் அதை விபரிக்க உதவிசெய்யும். உதாரணமாக ஆவிக்குரிய அதிகாரத்திற்கு கீழ்ப்படிதலானது ஒரு விசுவாசி அடிமையாக இருப்பதோ அல்லது அவ் அதிகாரத்தின் கட்டளைகளுக்கு கண்மூடித்தனமாக கீழ்ப்படிவதோ அல்ல. எந்த ஒரு மேய்ப்பர் / போதகரானாலும் அல்லது எந்தவொரு சபைத் தலைவர்களும் ஒருபோதும் அவ்வாறு கோரவில்லை. அவர்கள் அங்கணம் செய்வார்களாயின் நிச்சயமாகவே அவர்கள் சமநிலை அற்றவர்களும் மெய்யான தேவபக்தியை அவர்களுடைய மனோபாவங்களில் செய்முறைப்படுத்திக்காட்டவில்லை என்பது அதன் நிச்சயமானதொரு அடையாளமாகும்.

கீழ்ப்படிதல் என்பது உங்களுக்கு கூறப்படுபவற்றையெல்லாம் நிபந்தனையின்றி ஏற்றுக்கொள்ளவதல்ல. அத்துடன் ஒவ்வொரு விசுவாசியும் வேதாகமத்தைப் பயன்படுத்தி தங்களுடைய நிலைமையை குறித்து கூறப்பட்டவைகளை மதிப்பீடு செய்வதற்கான உரிமையும் பொறுப்பும் அவர்களுக்கு உண்டு. எந்த சூழ்நிலையின் கீழும் நீதியான கட்டளைகள் கொடுக்கப்பட்டிருக்கும் தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைக்கு எதிரான நடத்தையில் பங்குகொள்ளவும் கூடாது. யார் செய்யச் சொன்னாலும் அது ஒரு பொருட்டல்ல.

மெய்யான கீழ்ப்படிதலானது முதலாவதாக, அது இருதயத்தின் மனோபாவமாகும். அது தாழ்மையைக் குறித்து பேசுகின்றது. கீழ்ப்படியும் ஒரு நபர் அவன் அல்லது அவள் இன்னுமாக தேவனையும் மற்றவர்களையும் சார்ந்துள்ளார் என்பதை புரிந்துகொள்ளுவார். உதவிசெய்யக்கூடிய தெளிவும் தேவபக்தியுள்ள ஞானத்தையும் பகிர்ந்துகொள்ளுவதற்காக தேவன் இந்த தலைவர்களை ஸ்தாபித்துள்ளார் என்பதை கீழ்ப்படியும் ஒரு நபர் அறிந்துகொள்ளுவார். தங்கள் முழு ஆற்றலையும் சென்றடைவதற்காக தலைவர்கள் உட்பட தேவனிடத்திலும் மற்ற கிறிஸ்தவர்களிடமும் இணைக்கப்பட்டிருக்க வேண்டியதன் அவசியத்தை விசுவாசிகள் நன்றாக புரிந்துகொள்ள வேண்டும்.

கீழ்ப்படிதல் என்பது நடத்தைக்குரியதாகும். கீழ்ப்படியும் ஒரு நபர் அதிகாரத்திற்கு தகுந்த மரியாதையைக் காண்பிப்பார். தங்களுடைய பகுதி (அல்லது பணி) யானது தேவனிடத்திலிருந்து உண்டான அழைப்பு என்பதை எப்போதும் மனதில் சுமந்தவண்ணமிருப்பர். புத்திமதிகளுக்கு, சரிப்படுத்தல்களுக்கு, கருத்துக்களுக்கு மற்றும் வேண்டுகோள்களுக்கு தகுந்த விதமான அக்கறையைச் செலுத்துவர். கிறிஸ்துவின் சரீரத்தில் ஆவிக்குரிய அதிகாரத்திற்கு கீழ்ப்படிவோடு காணப்படவேண்டுமேயன்றி வற்புறுத்தி அல்லது பலவந்தப்படுத்தி அல்ல. விசுவாசிகள் தங்கள் தலைவர்களுக்கு சந்தோஷத்துடனேகூடிய ஒத்துழைப்பை வழங்குவார்கள்.

அநேக கிறிஸ்தவர்கள் தலைமைத்துவத்திலிருப்பவர்களுக்கு நன்றியுள்ளவர்களாகவும் மதிப்பளிக்கின்றவர்களாகவுமிருக்கின்றார்கள். என்றாலும், குறிப்பிட்ட சில மக்கள்ஆவிக்குரிய அதிகாரம் என்னும் இப்படிப்பினையை ஏற்றுக்கொள்வதற்கு கஷ்டப்படுகின்றார்கள். அவர்களின் இந்த தயக்கம் அல்லது விருப்பமின்மைக்கான சில காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளது:

முதலாவதாக, சிலநபர்கள் விருப்பத்துடன் அதிகாரத்திற்கு கீழ்ப்படிவதில்லை. சிலநேரங்களில் அவர்கள் பிள்ளைகள், இளம் வயதினர் போல கலகம் செய்கின்றனர். வளர்ந்தோரின் மனோபாவங்களுடன் காணப்பட்டாலும் அந்த நடத்தைகள் வசனத்திற்கு ஏற்றதல்லாததாயும், ஆரோக்கியமற்றதாயும் சகல நல்ல உறவுகளுக்கும் தீங்கு விளைவிக்கின்றதாயுமிருக்கின்றது. அப்படிப்பட்டவர்கள் முதலாவது தங்களை தேவனிடத்திற்கு கீழ்ப்படுத்தி தங்களுடைய இருதயத்தை மாற்றும்படி அவரிடத்தில் கேட்கவேண்டும்.

இரண்டாவதாக, சில மக்கள் கொள்கையில்லாத வஞ்சனையுள்ள சபைத் தலைவர்களால் காயப்படுத்தப்பட்டுள்ளதால், இப்பொழுது கிறிஸ்துவின் சரீரத்தில் அதிகாரத்தில் இருக்கும் எவரைக் குறித்தும் சந்தேகத்துடன் காணப்படுகின்றனர். ஆயினும், பெரும்பான்மையான மறுபடி பிறந்த, ஆவியில் நிறைந்த சபைத் தலைவர்கள் மெய்யாகவே தேவனில் அன்புகூறுகின்றனர், கிறிஸ்துவை சேவிக்க வாஞ்சிக்கின்றனர், தங்களின் சபைக்கு மிக சிறந்தவற்றை வேண்டுகின்றவர்களாயிருந்தாலும், சபை மேய்ப்பர்களும் ஏனைய ஆவிக்குரிய தலைவர்களும் இன்னும் மனிதர்களும் தவறிழைக்கக்கூடியவர்களாகவுமிருக்கின்றனர். சிலநேரங்களில் அவர்களும் தவறிவிடுகின்றனர். ஒரு சில நேரங்களில் ஒரு சிலர் மிகப்பெரிய பாவத்தை செய்து விடுகின்றனர். இதினிமித்தம் சொல்லொண்ணா வேதனையை கிறிஸ்தவர்களுக்கும், தேவனுக்கு அகௌரவத்தையும் கொண்டுவருகின்றனர். தங்களுடைய

சுயநலமான விருப்பங்களை முன்னேற்றிக்கொள்வதற்காக செல்வாக்குச் செலுத்தும் தங்கள் பதவியை தவறாக பயன்படுத்திவிடுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் கோட்பாடுகளில் தவறி சமநிலையற்றவர்களாவதுடன் வேதவசனத்திற்கு ஏற்றதல்லாத படிப்பினைகளுக்கும் ஆதரவளிக்கின்றனர். அவர்கள் அதிகாரப் பசியையுடையவர்களாகி எல்லா விமர்சனங்களையும் குற்றங்காணுதலையும் தாண்டிச் செல்வார்கள். தன் ஜனத்தை அடக்கி ஆளுகை செய்யும் ஒரு கொடிய இராஜாவைப் போல தங்கள் சபையையும் ஆளுகை செய்வர். இப்படிப்பட்ட துஷ்பிரயோகமுள்ள சபைத் தலைவர்களால் காயப்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒரு முறையான கிறிஸ்தவ ஆலோசனை பரிந்துரைசெய்யப்படுகின்றது. ஆலோசனையானது இந்த காயங்களை குணப்படுத்த உதவுவதுடன் கசப்பையும் கோபத்தையும் குறைக்கவும் உதவும். காயப்பட்டவர்களுக்கு கருணையுள்ள, புரிந்துணர்வுள்ள, மற்றும் ஒரு அன்பான சபையை கண்டுபிடிக்கவும் அவர்களுடன் சேர்ந்து இருக்கக்கூடிய ஒரு போதகரைக் கண்டுபிடிக்கவும் உதவிசெய்ய வேண்டும்.

மூன்றாவதாக, சில மக்கள் தங்கள் சபைத் தலைவருடன் சில விடயங்கள் தொடர்பில் மிகவும் பலமாக உடன்படாதிருக்கின்றதோடு அனைத்து விடயங்களிலும் அவர்களுக்கு எதிராக இருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம் என நினைக்கின்றார்கள். உதாரணமாக, அவர்கள் தங்கள் போதகருக்கு இவ்வாறு கூறலாம், “நான் உங்களுடன் உடன்படும் வரைக்கும் உங்களுக்கு அதிகாரம் உண்டு. நான் உடன்படாதிருக்கும்போது உங்களுடைய ஆவிக்குரிய அதிகாரத்திற்கான உரிமையை இழந்துவிடுவீர்கள்.” போதகர்கள் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் இந்த தவறான வாதத்தின் நிலைகுறித்து எடுத்துக்காட்ட வேண்டியது அவசியமாகும். சபையில் உள்ள அனைவரும் எப்பொழுதும் எல்லாப் பிரச்சனைகளுடனும் உடன்படுவார்கள் என்று வேதாகமம் கற்றுக்கொடுக்கவில்லை. விசுவாசிகள் ஒருவரையொருவர் நேசித்து, சமாதானத்திற்கும் மன்னிப்பிற்கும் ஊக்கமளித்து, கிறிஸ்துவின் சரீரத்தின் ஒற்றுமையை கட்டியெழுப்புவதிலேயே நோக்கமாயிருக்கும்படி கற்றுக்கொடுக்கின்றது.

நான்காவதாக, சில சபைத் தலைவர்கள் பெற்றுக்கொள்ளும் வெற்றிகள் அல்லது அங்கீகாரத்தைக் குறித்து சில ஜனங்கள் கோபமடைகின்றனர். இது பொறாமையும் தேவனுடைய வார்த்தையில் இது பாவம் என்றும் கண்டிக்கப்பட்டுள்ளது. அப்போஸ்தலர் பவுல் இதை கவனித்தார், “மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம் ..... பொறாமைகள்” (கலாத்தியர் 5:19-20).

ஐந்தாவதாக, சில ஜனங்கள் தங்கள் சபையிலுள்ள ஆவிக்குரிய அதிகாரத்தை, தங்கள் தலைவரின் வயது, இனம் மற்றும் கல்வி தகைமைகள், பின்னணி, அல்லது ஏனைய தனிப்பட்ட காரணங்களின் காரணமாக புறக்கணிக்கின்றனர். இதுவும் தேவனுடைய வார்த்தைக்கு ஒவ்வாத நடத்தையாகும். கலாத்தியர் 3:26-28 கூறுகின்றது, “நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கின்றீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும், கிரேக்கனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.”

ஆறாவதாக, சிலநபர்கள் தேவன்மீது கோபத்துடன் காணப்படுகின்றனர். தாங்கள் அனுபவித்த வேதனையான அனுபவங்களுக்காக தேவனை குறை கூறுகின்றனர். தங்களுடைய முட்டாள் தனமான தெரிவுகளினால் வாழ்க்கையில் உண்டான விளைவுகளுக்காக அவர்கள் தேவனை குறை கூறுகின்றனர். அப்படிப்பட்டவர்கள்ஓர் உள்ளூர் சபைக்குள் பிரவேசித்து மீண்டும் முன்னிருந்த நிலைக்குத் திரும்ப ஆரம்பிப்பர். சில நேரங்களில் அவர்களுக்கு மேய்ப்பர்களுக்குள்ளும், போதகர்களுக்குள்ளும் முதலீடு செய்யப்பட்டிருக்கும் ஆவிக்குரிய அதிகாரத்தை நம்புவதற்கும் அதைப் பாராட்டுவதற்கும் கடினமாக இருக்கலாம்.

ஏழாவதாக, சில கிறிஸ்தவர்கள் மிகையான பெருமை கொண்டவர்களாக இருப்பது துரதிஷ்டமானது என்றாலும் இது உண்மையும்கூட. தாங்கள் மாத்திரமே மிகவும் ஆவிக்குரியவர்கள் எனவும், நீதிமான்களெனவும், அல்லது ஆவிக்குரிய தலைவர்களைப் பார்க்கிலும் ஞானமுள்ளவர்கள் எனவும் நினைக்கின்றனர். ஆவிக்குரிய வாழ்வில் ஆழத்தை காணவும், வேதாமத்தைக் குறித்து நன்கு அறிவுடையவர்களாக காணப்படவும், முன்மாதிரியான, தேவபக்தியுள்ள வாழ்க்கையை வாழ்வதற்கும் மற்றும் ஞானமுடையவர்களாயிருக்க வேண்டுமென்பதும் நிச்சயமாகவே அனைத்து விசுவாசிகளுக்கும் இது சாத்தியமானதும் வாஞ்சிக்கத்தக்கதுமாகும். எவ்வாறாயினும், மெய்யான தாழ்மையானது மற்றவர்கள் முன்நிலையில் தங்கள் வெற்றிகளில் கர்வம்கொள்வதிலிருந்தும் அல்லது மற்றவர்களை கீழே வீழ்த்துவதிலிருந்தும் விலக்கும். மிகையான பெருமையுடையவர்கள் ஆவிக்குரிய தலைவர்களை விமர்சிப்பதோடு அல்லது குற்றங்காண்பதொடு அவர்களுடைய பலவீனங்களை புரிந்துகொள்ளாமல் தேவனே அவர்களை தலைமைத்துவத்திற்கு அழைத்திருக்கின்றார் என்பதை மறந்து அன்பில் நடக்காமலுமிருப்பர். எல்லாவற்றிற்கும் மேலாக, சபைத் தலைவர்கள் உட்பட அனைவரும், தேவனுடைய நடைமுறையிலிருக்கும் வேலையில் காணப்படுகின்றனர்.

எட்டாவதாக, சபையிலுள்ள சில தனிப்பட்ட நபர்கள் மெய்யாகவே மறுபடி பிறந்தவர்கள் அல்ல. சிலநேரங்களில் அவர்களும் விசுவாசிகளைப் போல நடந்துகொள்வார்கள். அவர்கள் அநேகமாக உலகத்திற்குரிய மனோபாவங்களையும் நடத்தைகளையும் கொண்டிருப்பார்கள். ஆவிக்குரிய தலைவர்களிடம் மரியாதையின்றியும் கவனியாமலும் நடந்துகொள்ளுவர்.

## ஆவிக்குரிய அதிகாரத்திற்கு விரோதமாக கலகம் செய்தல்

### *நோக்கம் 4:*

*ஆவிக்குரிய அதிகாரத்திற்கு விரோதமாக கலகம் செய்யும் சுபாவத்தைக் குறித்து கலந்துரையாடல்.*

நம்முடைய இப்பாவ உலகமானது கலகத்தினால் நிறைந்துள்ளது. அத்தேசத்தின் சட்டதிட்டங்களுக்கு அல்லது தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியக்கூடாதென தீர்மானித்த ஆண்களாலும் பெண்களாலும் சிறைச்சாலைகளும், சிறைக்கூடங்களும் நிரம்பியுள்ளது. அநேகர் சட்டத்தை மீறுவதால் மாட்டிக்கொள்வோமென்று ஒருபோதும் எதிர்பார்த்திருப்பதில்லை. மற்றவர்களை விடவும் தாங்கள் மிகவும் புத்திசாலிகள் என்று

அவர்கள் கற்பனை செய்கின்றார்கள். எவ்வாறாயினும், வேதாகமம் இவ்வாறு எச்சரிக்கின்றது, "நீங்கள் இப்படிச் செய்யாமற்போனால், கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தவர்களாயிருப்பீர்கள்; உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும் என்று நிச்சயமாய் அறியுங்கள்" (எண்ணாகமம் 32:23). ஒருவர் தேவனுக்கு விரோதமாகவும் அல்லது சமுதாயத்திற்கு விரோதமாகவும் எப்பொழுதும் கலகம் செய்துகொண்டிருக்க முடியாது. தேவனுக்கு விரோதமாகவும் மனிதர்களுக்கு விரோதமாகவும் கலகம் செய்வதிலேயே வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்கள் ஒரு அழிவான சூழ்நிலையிலிருந்து அடுத்தகட்டத்திற்கு செல்லுவார்கள். இறுதியில் இந்த வாழ்க்கை நிறைவுபெற்றதுமே அவர்கள் தேவனுக்கு பதில் கூற வேண்டியவர்களாயுமிருக்கின்றார்கள். ரோமர் 14:10 "நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போம்" என்பதை வாக்குப்பண்ணியுள்ளது.

கவலைக்கிடமாக, சபையிலும் கலகம் இடம்பெறக்கூடும். அது அநேக வடிவங்களிலும் ஏற்படலாம். ஜெபத்தினூடாக, வேதாகம படிப்பினூடாக, ஆராதனையினூடாக தேவனிடத்தில் கிட்டிச்சேர்வதில் கவனமெடுத்துக்கொள்ளாத மற்றும் ஏனைய சக விசுவாசிகளுடனான ஐக்கியத்திலும் கவனமில்லாதிருக்கின்ற ஒரு விசுவாசி உலகத்தின் பாவ நடவடிக்கைகளில் சிக்கிக்கொள்ளலாம். ஒருவர் மீது மன்னியாமையை தரித்து வைத்துக்கொண்டிருக்கின்ற ஒரு கிறிஸ்தவன் ஒரு கசப்பான ஆவியை வளர்க்கலாம். கிறிஸ்துவைப் பின்பற்றுமொருவர் மயையை அல்லது ஏமாற்றத்தை வாழ்க்கையில் அனுமதித்திருந்தால் சபைக்குள் அல்லது சபைத் தலைவருடன்அந்த போதகருக்கு எதிரான ஒரு எதிர்மாறான மனோபாவத்தை வளர்க்கலாம். ஒரு கிறிஸ்தவன் தேவனுடைய ஜனங்களைக் குறித்து அல்லது தலைவர்களைக் குறித்து முட்டாள்தனமாக அர்த்தமற்ற விதமாக கிசுகிசு அல்லது மோசமான, வெறுக்கத்தக்க விமர்சனத்தில் அல்லது குற்றங்காண்பதில் ஈடுபடலாம். விருப்பத்துடன் செய்யப்படும் இது உள்ளூர் சபைகளிலும் அதன் தலைவர்களுடைய வாழ்க்கையிலும் வேதனையை உருவாக்குவதோடு அவர்களுடைய உபயோகத்தை அது தடைசெய்யும்,வேகத்தை குறைத்து விடும்.

பழைய ஏற்பாட்டில் எகிப்தின் அடிமைத்தனத்தினின்று விடுவித்து இஸ்ரவேல் மக்களை வழிநடத்தின மோசேயினுடைய கதை காணப்படுகிறது. அற்புதங்கள் நிறைந்த அந்தக் கதை அங்கேயே முடிந்துவிடவில்லை. வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்கு பிரவேசிக்கும்படி ஆயத்தமாகுமளவும் நாற்பது வருடங்களாக இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்ததேவன் மோசேயை பயன்படுத்தினார். அவர் ஒரு தீர்க்கதரிசி மாத்திரமல்லாமல் அவர்களுடைய மேய்ப்பன் அல்லது போதகராகவுமிருந்தார். அநேகந் தடவைகள் ஜனங்கள் பொறுமையை இழந்ததுமல்லாமல் பாவ நடவடிக்கைகளில் ஈடுபட்டதோடு மோசேக்கு விரோதமாகவும் அவருடைய சகோதரன் ஆரோனுக்கு விரோதமாகவும் எழும்பி அவர்கள் மீது நியாயமற்ற விதமாக குற்றங்கண்டு அவர்களை வசைமொழியால் தாக்கி முறுமுறுத்தார்கள். ஒரு இடத்தில் மோசேயும் ஆரோனும் செய்யும் அனைத்தையும்குற்றங்கண்டு கோபப்பட்ட இஸ்ரவேலருக்கு மோசே அளித்த பிரதியுத்தரத்தை கவனியுங்கள். மோசே ஜனங்களிடத்தில், "நீங்கள் எங்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதற்கு நாங்கள் எம்மாத்திரம்? .... உங்கள் முறுமுறுப்புகள் எங்களுக்கு அல்ல, கர்த்தருக்கே விரோதமாய் இருக்கிறது என்றான்" (யாத்திராகமம் 16:7-8).

ஒரு விசுவாசி விருப்பத்துடன் அல்லது பிடிவாதமாக தேவன் சபையில் வைத்திருக்கும் ஆவிக்குரிய அதிகாரத்திற்கு விரோதமாக கலகம்செய்தலானது, அது தேவனுக்கு விரோதமாக கலகம் செய்தலாகும். வேத வசனத்தினால் ஆதரவளிக்கப்பெறும் இது மிகவும் பலத்த கூற்றாகும். இயேசு கூறினார், "நான் அனுப்புகிறவனை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான், என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (யோவான் 13:20). அதேபோல இயேசு அனுப்புகின்ற எவரையேனும் புறக்கணிப்பவர் அந்த செய்தியாளனை மாத்திரம் புறக்கணிக்கவில்லை இயேசுவையும் புறக்கணிக்கின்றான். கிறிஸ்தவன் என்று தன்னை உரிமைபாராட்டும் ஒருவருக்கு இது ஒரு நல்ல நிலைமையல்ல. ஆவிக்குரிய அதிகாரத்திற்கு விரோதமாக தொடர்ந்து கலகம் செய்தலானது தேவனுக்கு விரோதமாக செய்யப்படும் கலகத்திற்கு சமனாகும்.

எவ்வாறாயினும், போதகர்களும் ஏனைய ஆவிக்குரிய தலைவர்களும் தங்களுக்கு வேண்டியதைச் செய்வதற்கும் அல்லது கூறுவதற்குமான உரிமை உண்டு என்பது இதன் கருத்தல்ல. அவர்களும்கூட தேவனுக்கும், கர்த்தருக்குள் அவர்களுக்கு மேலானவர்களுக்கும் கணக்கொப்புவிக்க வேண்டியவர்களாயுள்ளனர். யாக்கோபு இவ்வாறு கூறுகின்றார், "என் சகோதரரே, அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" (யாக்கோபு 3:1). ஆவிக்குரிய தலைவர்களுக்கு தேவன் அதிகப்படியான கணக்கொப்புவித்தலை வைத்துள்ளார்.

எவ்வாறாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட தலைவர்களுக்கு விரோதமாக கலகம் செய்யும் நிலைமையில்எந்தக் கிறிஸ்தவனையும் காண்பதற்கு தேவனுக்கு ஒருபோதும் தேவையற்றிருக்கின்றது. தங்கள் தலைவர்களுக்கு எதிராக சண்டையிடுபர்கள் மெய்யாகவே பிசாசினுடைய கண்ணியில் விழுந்துவிடுவார்கள் என்பது தேவனுடைய வார்த்தையில் தெளிவாக காண்பிக்கப்பட்டுள்ளது. எபேசு சபையிலிருந்தஆவிக்குரிய தலைவனாகிய தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வாறு கூறி எழுதினார்,

> கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்கவேண்டும். எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும், பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும். (2 தீமோத்தேயு 2:24-26).

## உள்ளூர் சபைகளுக்கு ஆதரவளித்தல்

### *நோக்கம் 5:*

*உங்கள் சபைக்கும் அதனுடைய ஆவிக்குரிய தலைவர்களுக்கும் உதவிசெய்யக்கூடிய ஆதரவளிக்கக்கூடிய வழிமுறைகளை இனம்காணல்.*

---

தங்களுடைய உள்ளூர் சபைக்கு ஆதரவு வழங்குவதற்கான பல்வேறு வழிகள் உண்டு. முதலாவது, கிறிஸ்தவர்கள் சபை ஆராதனைக்கு தொடர்ந்து சமூகமளிப்பதில் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும் அத்தோடு சபையின்காரியங்களிலும் பங்குபற்ற வேண்டும். எபிரெயர் 10:24-25 "மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒவருவரையொருவர் கவனித்து; சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கின்றீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்" என்று நமக்குக் கூறுகின்றது. தேவனுடைய ஜனங்களுடைய கூடுகையில் சமூகமளிப்பதைக் குறித்து சில ஜனங்கள் குறைத்து மதிப்பிடுகின்றனர். மற்றவர்களுடன் ஒன்றிணைதலானது நம்மை ஊக்கப்படுத்துகின்றதுடன் நமக்கு ஊழியம்செய்வதற்காக பல மணிநேரம் ஜெபித்து ஆயத்தப்படுத்தின ஆவிக்குரிய தலைவர்களையும் அது எழுச்சியூட்டி உற்சாகமளிக்கின்றது. அத்துடனேகூட வெறுமனே அமர்ந்திருக்கிறவர்களாகவும் மனித இயந்திரங்களைப்போலவும் இல்லாதபடிக்கு நாம் நண்பத்துவமாக சபையின் ஆராதனையில் பங்குகொண்டு பிரசங்கியார் பிரசங்கத்தில் நல்ல விடயமொன்றை சுட்டிக்காட்டும்பொழுது "ஆமென்" என்ற வார்த்தையைச் சொல்லி உற்சாகப்படுத்தலாம்.

இரண்டாவதாக, நாம் ஜெபிக்கவேண்டும். சில காரியங்கள் அதாவது சில நல்ல காரியங்களும்கூட ஜெபத்தை விட முக்கியமானதாகவும் ஆச்சரியமானதாகவும் இருக்கலாம். சிலர் ஒரு வாத்தியக் கருவியை இசைக்க விரும்புவர். மற்றவர்கள் சுவிசேஷத்திற்காக அர்ப்பணித்திருப்பர். இன்னும் சிலர் தேவையுள்ளோருக்கு உதவிசெய்வதில் ஆர்வமுள்ளவராயிருப்பர். குறிப்பிட்ட சிலர் தேவனுக்கு ஊழியம் செய்யுமுகமாக சரீரப்பிரகாரமான ஊழியத்தில் மகிழ்ச்சியடைவர். எவ்வாறாயினும், ஜெபித்தலானது ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமையென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கொலோசெயர் 4:2 கூறுகின்றது, "இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்." குறிப்பிட்ட விதமாக, நாம் நம்முடைய ஆவிக்குரிய தலைவர்களுக்காக ஜெபிக்கவேண்டும். இதை ஏற்றுக்கொள்ளுவது உங்களுக்கு கடினமாயிருக்கலாம். ஆகிலும், ஆவிக்குரிய தலைவர்களும் நம்மைப்போல சோதனைகளுக்கும் ஆவிக்குரிய போராட்டங்களுக்கும் முகங்கொடுக்கின்றார்கள். ஆவிக்குரிய தலைவர்களை விழச்செய்துவிட்டால் அல்லது அவர்களை அதைரியப்படுத்திவிட்டால் அவர்கள் ஊழியத்தை இடைநிறுத்தி விடுவார்கள் என்பதை சாத்தான் நன்கு அறிவான். அது முழுச் சபைக்கும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திவிடுகின்றது. உங்கள் சபை போதகருக்காவும் அவருடைய குடும்பத்திற்காகவும் தொடர்ந்தும் ஜெபிப்பதால் அவர்களுக்கு மகத்தான உதவியைச் செய்கின்றீர்கள்.

மூன்றாவதாக, கிறிஸ்தவர்களாக நாம் நம்முடைய மேய்ப்பர்களையும் வேதாகம ஆசிரியர்களையும் அறிந்திருத்தல் வேண்டும். எபேசியர் 4 இல் மேய்ப்பர்களும் போதகர்களும் சபைக்கு ஒரு வரம் என்பதை நாம் கற்றுக்கொண்டோம். இயேசு கட்டிடங்களையோ, பணத்தையோ அல்லது தொழில்நுட்பத்தையோ விட்டுச்செல்லவில்லை. தேவன் நமக்கு மனிதர்களைக் கொடுத்து அவர்களை அழைத்து அவர்களுக்கு வல்லமையை கொடுத்திருப்பது சபையில் அன்புகூறுவதற்காகவும் ஆசீர்வதிப்பதற்குமாகும். நாம் இன்னும் அதிகமாக தலைவர்களை அறிந்துகொள்ளும்போது நாம் இன்னும் அதிகமாக அவர்களை நம்புவதற்கும் ஆரம்பிப்போம்.

நான்காவதாக, நாம் நம்முடைய ஆவிக்குரிய தலைவர்களைக் குறித்து ஒரு உயர்ந்த மதிப்பீட்டை வைத்திருத்தல் அவசியம். பவுல் அடியார் 1 தீமோத்தேயு 5:17 இல் எழுதுவதை கவனித்துப் பாருங்கள், “நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும்.” தேவன் நம்முடைய ஆவிக்குரிய தலைவர்கள் சபையில் செய்யும் பதவி நிலை அல்லது ஊழியத்திற்கு தகுதியானவர்கள் என்பதினாலேயே அவர்களை அழைத்துள்ளார். நம்மைச் சுற்றியுள்ள உலத்தைச் சாரந்த சமூகத்தில் இரட்சிக்கப்படாத மக்கள் தங்களுடைய தலைவர்களுக்கு எதிராக வன்முறையுடனும் கோபத்துடனும் எதிர்ப்பது அரிதல்லவே. தங்கள் முதலாளிக்கு, காவல் அதிகாரிக்கு (பொலிசார்), ஒரு நகர அலுவலருக்கு அல்லது தேசிய தலைவரிடத்தில் மரியாதையின்றி நடக்கக்கூடும். லௌகீக உலகத்தில் சமூதாயத்தில் அவ்வாறு செய்யமுடியுமென்றாலும் தேவனுடைய சபையில் அவ்வாறு செய்வதற்கு எவ்வித இடமும் இல்லை.

ஐந்தாவதாக, கிறிஸ்தவ ஊழியத்தின் பொறுப்புக்களை பகிர்ந்துகொள்ள உதவிசெய்ய வேண்டும். சபையில் உள்ள முழு ஊழியத்தையும் அதில் உள்ள போதகர் மற்றும் ஒரு கொஞ்ச அளவு மக்கள் மாத்திரமே தனியாக செய்யவேண்டுமென்பது தேவனுடைய நோக்கமில்ல. சபையில் தொன்நூறு சதவீதமான வேலை பத்து சதவீதமானோராலேயே செய்யப்படுகின்றது என்று அநேகமாக சொல்லப்படுகின்றது. துக்கத்திற்கிடமாக, மிகவும் நல்ல ஊழியக்காரர்களை இது மிகவும் வருத்திவிடுகின்றது. உதவிசெய்வதற்கும், சேவைசெய்வதற்கும் மற்றும் கொடுப்பதற்கும்ஒவ்வொரு விசுவாசியும் பங்குகொண்டால்ஒருவரும் அதிக பாரத்தை சுமக்கத் தேவையில்லை. ஆகவே, உங்கள் உள்ளூர் சபைகளில் ஊழியம்செய்வதற்கு விருப்பமுள்ளவர்களாயிருங்கள். “அவனவன் செய்கின்ற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து” (எபேசியர் 6:8). உங்கள் வரம் எதுவென்று கண்டுபிடித்து அதை உபயோகிக்கும்போது பெருமகிழ்ச்சி உங்களுடையதாகின்றது.

இறுதியாக, புதிதாக கிறிஸ்துவை இரட்சகராகவும் கர்த்தராகவும் அறிந்துகொண்டவர்களுக்கு பழக்கமற்ற வேதாகம கருத்துக்களை அறிமுகப்படுத்துவதினால் இந்தப் பாடம் சவாலாக அமைகின்றது. எவ்வாறாயினும், இந்த பாடமானது ஒவ்வொரு விசுவாசிக்கும் மிகவும் அதிகமாகபொருத்தமானதாக அமைகின்றது. வழிநடத்துவதில் சந்தோஷம் அடைகின்ற ஒரு கிறிஸ்தவனாக இருக்கும்படிக்கும், அவருடைய இராஜ்யத்திற்காக பெரிய காரியங்களைச் செய்யும்படிக்கும் தேவன் கதவுகளை திறப்பாராக.

## மனனம் செய்வதற்கு ஆலோசிக்கப்ட்ட வசனங்கள்

யாத்திராகமம் 16:8

மத்தேயு 28:18

யோவான் 13:20

எபேசியர் 4:11-13

1 தீமோத்தேயு 5:17

2 தீமோத்தேயு 2:24-26

2 தீமோத்தேயு 4:2

எபிரெயர் 10:24-25

எபிரெயர் 13:17

யாக்கோபு 3:1

# பாடம் 12

## ஊழியத்தில் உங்கள் இடத்தைக் கண்டுபிடித்தல்

மற்றவர்களுடைய தேவையில் நல்லபிரதியுத்தரத்தைக் காண்பித்தலானது வெகுமதிகளை கொண்டு வருபவையாக சில காரியங்கள் அமைகின்றது. நம்முடைய வாழ்க்கையை மற்றவர்ளோடு பகிர்ந்துகொள்ளுவதற்கான சில நியமங்களை பவுல் இயேசுவினுடைய வார்த்தைகளிலிருந்து மேற்கோள் காட்டுகின்றார்: “வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்” (அப்போஸ்தலர் 20:34-35). சந்தோஷமான கிறிஸ்தவ வாழ்க்கைக்கான மிக முக்கியமான படிமுறையானது மற்றவர்களுக்கு சேவை செய்யும்படிக்கு உங்கள் வாழ்க்கையைக் கொடுப்பதாகும். ஊழியத்தில் உங்கள் வாழ்க்கையை பகிர்ந்துகொள்ளுதலானது ஆவிக்குரிய விதத்தில் உங்களையும் உங்களால் சேவையைப் பெற்றுக்கொள்ளுகிறவர்களையும் பெலப்படுத்துகின்றது.

வேதாகமத்திற்குரிய கிறிஸ்தவமானது மிகப்பெரிய இரண்டு அடிப்படை கட்டளைகளின் மீது தங்கியுள்ளது. முதலாவது, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூரும்படி (மத்தேயு 22:37) கிறிஸ்தவர்களுக்கு கூறப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டளையானது முதலாவது கட்டளையிலிருந்து இயற்கையாகவே ஊற்றெடுக்கின்றது: “உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக” (மத்தேயு 22:39). தேவன் மீதான ஒரு கிறிஸ்தவனுடைய அன்பானது மற்றவர்களில் அன்புகூருவதனூடாகவும் அவர்களுக்கு சேவைசெய்வதனூடாகவும் முழுமையாக வெளிப்படுத்தப்படுகிறதனூடாக காண்பிக்கப்படுகின்றது. இக்குறிப்பைக் குறித்து வேதாகமம் மிகவும் தெளிவாக உள்ளது. விசுவாசிகள் செயற்பாடுள்ள விதமாகவும் உற்சாகமாகவும் மற்றவர்களுக்கு ஊழியம்செய்யும்போது தேவன்மீதுள்ள நேர்மையான அன்பை அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள். தேவனிடத்தில், “நான் உம்மை நேசிக்கின்றேன்,” என்று கூறுவது நல்லது, ஆகிலும் தேவனில் அன்புகூருதலானது வார்த்தைகளை விடவும் அதிகமானதை கோருகின்றது.

“என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்” (1 யோவான் 3:18) என்ற யோவானுடைய வார்த்தைகளைக் குறித்து சிந்தியுங்கள். கிறிஸ்தவர்கள் அனைவரும் பேசினாலும் அங்கு எவ்விதமான செயலும் காணப்படவில்லை என்பதைக் குறித்து யோவான் மிகவும் அக்கறைகொண்டார். ஒருவரில் ஒருவர் அன்புகூருகிறோம் என்பதைக் கூறுவது எத்தனை இலகுவானது! தாங்கள் அன்புகூறப்படுகின்றார்கள் என்பதை மக்களுக்கு சொல்லப்படவேண்டியது அவசியமாக இருந்தாலும், ஒரு சிலவேளைகளில்தான்

வார்த்தைகளும்கூட போதுமானதாக அமைகின்றது. மாற்றுகின்றதான ஊழியமானது அன்பை கிரியையில் காண்பித்தலை வலியுறுத்துகின்றது.

நமக்கான இயேசுவின் தியாகபலியான மரணத்தைக் குறித்து யோவான் வியப்படைகின்றார். இயேசுவின் தியாகபலியானது தேவனுடைய அன்பை உணரக்கூடியதும் பார்க்கக்கூடியதாகவுமாயிருக்கின்றது என்பதை அவர் அறிந்துகொண்டார். அதுபோலவே, கிறிஸ்தவர்களும் அன்பை தியாகத்துடனும் செயற்பாடுள்ள விதத்திலும் செய்முறை மூலமும் நிரூபித்துக்காண்பிக்க வேண்டுமென்பதை யோவான் விசுவாசித்தார். யோவானுக்கு இணங்க கிறிஸ்தவ அன்பின் செயற்பாடுள்ள வெளிப்பாடுகளானது பயனுள்ள கிறிஸ்தவ ஊழியத்தின் அடிப்படையாகக் காணப்படுகின்றது (1 யோவான் 3:17).

காயப்படுத்தப்பட்ட உலகத்திற்கு அன்புடன் ஊழியம்செய்வதற்குத் தேவையான மனோபாவத்தையும் கருவிகளையும் வளர்க்கும்படியாகவும் உங்களுக்கு உதவிசெய்யுமுகமாகவே இப்பாடம் வடிவமைக்கப்பட்டுள்ளது. நீங்கள் இந்தப்பாடத்தைப் படிக்கும்போது மற்றவர்களுக்கான உங்கள் தனிப்பட்ட ஊழியத்தை வெளிப்படுத்துவதற்காக உதவிசெய்யும்படி தேவனிடத்தில் கேளுங்கள். நீங்கள் கற்றுக்கொள்ளும்போதும் ஜெபிக்கும்போதும் இந்த அடிப்படைச் சத்தியத்தை நினைவுகூருங்கள்: கிறிஸ்தவ அன்பே பயனுள்ள சகல ஊழியங்களுக்கும் அடிப்படையாகும் (1 கொரிந்தியர் 13). அதனால், உங்கள் இருதயத்தை அன்பினால் நிரப்பும்படி பரிசுத்தஆவியானவரை அழையுங்கள். அதன்பின் இயற்கையாக ஊற்றெடுக்கக்கூடிய ஒரு ஊழியம் சாத்தியமாகும்.

## பாடத்தின் முக்கிய அம்சங்கள்

ஒரு விசுவாசியின் பொறுப்பு

ஊழியத்தில் தனித்துவம்

சேவகத்தன்மையுள்ள ஊழியம்

உள்ளூர் சபைக்கு விசுவாசமாயிருத்தல்

ஊழியத்தில் தேவனுடைய சித்தத்தை கண்டுபிடித்தல்

உள்ளூர் சபையில் தேவன்

ஒரு புதிய மட்டத்திலான ஊழியம்

## பாடத்தின் நோக்கங்கள்

1. *உள்ளூர் சபையில் விசுவாசிகளுக்கான ஊழியப் பொறுப்புகளை விபரித்தல்.*

2. *ஊழியத்தில் தனிப்பட்ட தனித்துவத்திற்கு வேதாகம விளக்கத்தைக் கொடுத்தல்.*

*3. நல்ல சேவகனின் கலவையை விளக்குதல்.*

*4. உரிமையையும் விசுவாசத்தையும் உள்ளூர் சபைகளுக்குள்செய்முறைகள் மூலம் நிரூபித்துக்காண்பித்தல்.*

*5. ஊழியத்தில் தேவனுடைய சித்தத்தைக் கண்டுபிடிப்பதற்கான படிமுறையை விபரித்தல்.*

*6. உள்ளூர் சபையின் ஊழியத்தில் தேவனுடைய பங்கை கலந்துரையாடல்.*

*7. உள்ளூர் சபைக்குள் ஊழியத்தின் ஒரு புதிய மட்டத்தை ஆயத்தப்படுத்துவதின் படிமுறைகளைக் காண்பித்தல்.*

## ஒரு விசுவாசியின் பொறுப்பு

### *நோக்கம் 1:*

*உள்ளூர் சபையில் விசுவாசிகளுக்கான ஊழிய பொறுப்பை விபரித்தல்.*

அநேகமாக மக்கள் ஊழியம் என்னும் பதமானது ஒரு விசேஷித்த குழுவான சபைத் தலைவர்கள், மேய்ப்பர்கள், போதகர்கள், மற்றும் சுவிசேஷகர்களுக்கு மாத்திரம் பிரயோகிக்கப்படுகின்றதென்று நினைக்கின்றனர். எவ்வாறாயினும், புதிய ஏற்பாடானது வித்தியாசமான ஒன்றை கற்றுக்கொடுக்கின்றது. *ஊழியம்* என்கின்ற இந்த வார்த்தையானது கிரேக்க மொழியில் டயகொனியா *(diakonia)* என்று மொழிபெயர்க்கப்படுகின்றது. *டயகொனியா* என்தன் பொருள் என்னவெனில் கருணையோடும் அன்போடும் தேவையின் மத்தியில் இருப்பவர்களுக்கு மாறுத்தரம் சொல்லுதலாகும். முதலாம் நூற்றாண்டு சபையில் பொதுவாக சபையின் சகல பகுதிகளிலும் உள்ள எல்லா ஊழியங்களையும் இவ்வார்த்தையானது உள்ளடக்குகின்றது. அதனால் சபையிலுள்ள யாரேனும் ஒருவரைக் கொண்டு நடாத்தப்படுகின்ற கிறிஸ்தவ சேவையானது ஊழியமாக கருதப்படுகின்றது. இன்று ஊழியத்தைக் குறித்த அப்படிப்பட்ட பார்வையானது உள்ளூர் சபைக்குள் உள்ள அனைத்து விசுவாசிகளுக்கும் ஒரு அர்த்தமுள்ள ஊழியத்தை தேடுவதற்கு உற்சாகப்படுத்தும்.

உள்ளூர் சபையில் உள்ள ஊழியத்தைக் குறித்து ஒரு நிலையான புரிந்துணர்வை ஒன்று கொரிந்தியர் 12 ஆம் அதிகாரம் அளிக்கின்றது. அத்துடனேகூட வரங்களுக்கூடாக வெளிப்படுத்தப்படுகின்ற ஊழியத்தைக் குறித்த மிகமுக்கியமான தகவல்களை இவ் அதிகாரமானது வெளிப்படுத்துகின்றது.

- சபைக்குள் உள்ள ஊழியம்செய்வதற்கான வரங்களில் பல்வேறு வித்தியாசங்கள் உள்ளதுடன்அவ்வெளிப்பாடுகளுக்கு பரிசுத்தஆவியானவரே பொறுப்பாக இருக்கின்றார் (வசனங்கள் 4-5).

- அங்கணமே ஊழியம்செய்வதற்கானவரங்களின் வெளிப்பாடுகளில் பல்வேறு விதமானவித்தியாசங்கள் உண்டென்றாலும், "எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கின்ற தேவன் ஒருவரே" இது ஒவ்வொருவருக்கும் விசேஷித்த வரங்களை திறக்கின்றது (வசனங்கள் 6-7).

- அற்புதமான பல்வேறு வகையான வரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவன் தாம் தெரிந்துகொள்ளும் எந்த தனிப்பட்ட நபர்களுக்கூடாகவும் அந்த வெளிப்பாடுகளை அதிகாரமுள்ளதாக்குகின்றார் (வசனங்கள் 4-11).

- நம்முடைய மனித சரீரங்களைப்போல கிறிஸ்துவின் சரீரமானது (சபை) அநேக வித்தியாசமான அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது (வசனங்கள் 12-14). தேவன் வித்தியாசமான ஆளுமைகளை பெறுமதிமிக்கதாக எண்ணி தன்னுடைய சபைக்கு வரங்களை அளிக்கின்றார்.

- மற்றவர்களைப்போல எமக்கு ஒரு ஊழியம் இல்லையென்பதால் நாம் முக்கியமற்றவர்கள் என நாம் ஒருபோதும் நினைக்கக்கூடாது (வசனங்கள் 14-17).

- தேவன் தனித்துவமாக வரங்களையும் ஊழியத்தையும் ஒழுங்குபடுத்தி அவற்றை தனிப்பட்ட நபர்களுக்கு அளிக்கின்றார் (வசனங்கள் 18-19).

- கிறிஸ்துவின் சரீரத்தின் நிறைவுக்கும் அதனுடைய சமநிலைக்காகவும் தேவன் வெவ்வேறு விதமான மக்களையும் வரங்களையும் பயன்படுத்துகிறார் (வசனங்கள் 21-26).

- தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் வரங்களுக்கூடாகவோ அல்லது ஊழியங்களுக்கூடாகவோ நாம் அனைவரும் மற்றவர்களுக்கு உதவிசெய்யும்படிக்கு வாஞ்சிக்கவேண்டும் (வசனங்கள் 27-31).

ஊழிய வாழ்க்கையை ஒவ்வொரு விசுவாசியினுடைய ஆவிக்குரிய பிரகாசமான ஒளியாகவே பவுல் கண்டார். மிகப்பெரிய படிப்பினைகள் மற்றும் பிரசங்கங்களையும் விட அதிகமானது அவ் ஊழியத்துடன் ஈடுபடுகின்றதென்பதை பவுல் விளங்கிக்கொண்டார். அத்துடன் ஊழியமானது நடைமுறையை சார்ந்ததும் மனித அனுபவத்தின் ஒவ்வொரு பகுதியையும் தொடுகின்றதாயுமிருக்கின்றது. ஒரு விஸ்தாரமான ஊழியம் பல்வேறு விதமான சூழ்நிலைகளின் மத்தியிலும் முயற்சிசெய்கின்றது என்பதை பவுல் அறிந்திருந்தார் (ரோமர் 12:4-13)

# ஊழியத்தில் தனித்துவம்

## *நோக்கம் 2:*

*ஊழியத்தில் தனிப்பட்ட தனித்துவத்திற்கு வேதாகம விளக்கத்தைக் கொடுத்தல்.*

"ஒரு வகை" என்பதே *தனித்துவம்* என்ற வார்த்தையின் அர்த்தம். நீங்கள் ஒரு வகையானவர்கள்! உங்களைப்போல வேறு ஒருவர் இல்லை. உதாரணமாக உங்கள் கைவிரல் ரேகை அல்லது கால்விரல் ரேகையானது வேறு ஒருவருடன் பொருந்தமாட்டாது. மற்ற ஒவ்வொருவரையும் விட உங்கள் ஆளுமையானது வித்தியாசப்படுகின்றது. ஆளுமை என்பது உங்களைக் குறித்ததொரு மிகவும் வெளிப்படையான விடயமாகும். நீங்கள் மற்றவர்களுடன் எவ்வாறு தொடர்புபடுத்துகிறீர்கள் என்பதும் உங்கள் தொடர்பாடலுமே உங்கள் ஆளுமையின் முக்கிய அம்சங்களாகும். வாழ்க்கையைக் குறித்த உங்கள் பொதுவான மனோபாவம் உங்கள் ஆளுமையைக் குறித்த இன்னொரு கோணமாகும்.

நம்மை தனித்துவமாக உருவாக்கவேண்டியதற்கான தேவனுடைய தெரிவானது பல்வேறு வகைகளுக்கான அவருடைய வாஞ்சையை வெளிப்படுத்துகின்றது. பல்வேறு வகைகளுக்கான தேவனுடைய வாஞ்சையை குறித்து சிருஷ்டிப்பானது அநேக வெளிப்பாடுகளை கொண்டுள்ளது. ஏராளமான வண்ணங்களைக் கொண்ட பல்வேறு வகையான பறவைகள் அல்லது கடலில் உள்ள விசித்திரமான மீன்கள் ஆகியன இந்த தனித்துவத்திற்கு உதாரணங்களாகும். தேவன் ஒரு வகையான அழகிய கம்பீரமான மலைகளையும் இன்னொரு வகையான மிதமான சரிவுகளையும் வளைவுகளையும் கொண்ட அழகிய சமவெளிகளையும் கொடுத்துள்ளார். தேவனுடைய வெவ்வேறு வகையான படைப்புகள் வரையரையற்றவைகளாகும்.

தேவன் படைப்பில் தனித்துவத்தைக் கொண்டாடுகிறதுபோல தம்முடைய சபையிலும் அவருக்கு பல்வேறு வகைகள் தேவைப்படுகின்றது. தேவனுக்கான அன்பை ஜனங்கள் எவ்வாறு வெவ்வேறு விதமாக வெளிப்படுத்துகின்றார்கள் என்பதை நீங்கள் கவனித்துள்ளீர்களா? இந்த உதாரணத்தைக் குறித்து சிந்தியுங்கள்: ஒரு வயோதிப பெண்மணி எப்பொழுதும் ஒரு உணவுப் பொதி ஒன்றைவாங்குவார். அவரிடம் கொஞ்சப் பணம் மாத்திரமே இருந்தபடியினால் அவர் தியாகம் செய்தே இவ்வுணவை வாங்குகின்றார். தேவையோடு இருக்கும் ஒரு குடும்பத்திற்காக அவர் இந்த உணவுப்பொதியை அவர்களின் வீட்டுவாசலின் முன் வைத்துப் போய்விடுவார். தேவையுடன் காணப்பட்ட இந்தக் குடும்பத்திற்கு இந்த ஆசீர்வாதம் எங்கிருந்து வந்ததென்பது ஒருபோதும் தெரியாது. தேவையுள்ளவர்களுக்கு இரகசியமாக உணவு வழங்குவது இந்தப் பெண்மணி மற்றவர்களுக்கு ஊழியம் செய்யும் ஓர் தனித்துவமான முறையாகும்.

தனித்துவம் என்பது நம்முடைய வாழ்க்கையின் மனோபாவம் மற்றும் செயல்களில் பிரதிபலிக்கின்றது. நாம் மற்றவர்களுக்கு ஊழியம்செய்யும்போது நம்முடைய தனித்துவம் பிரகாசிக்கின்றது. இவ் உதாரணத்தைக் கவனியுங்கள்: அதிகமாக மக்கள் எப்பொழுதும் நடமாடும் வீதியின் ஓரத்திற்கு ஒரு மனிதன் ஆப்பிள் பழங்களை ஒரு பெட்டி நிறைய

வாங்கிக்கொண்டுபோகின்றார். மக்கள் வீதியில் நடந்துபோகும்போது தன்னுடைய ஒரு கையில் சுவிசேஷ துண்டுப்பிரசுரத்தையும் மறுகையில் ஆப்பிள் பழத்தையும் வைத்துக்கொள்ளுவார். எப்போதும்போல ஜனங்கள் கருணையுடன் ஆப்பிளையும் சுவிசேஷ துண்டுப்பிரசுரத்தையும் எடுத்துக்கொள்ளுவார்கள்.

நம்முடைய அனுபவங்களில்கூட நாம் தனித்துவமானவர்கள். ஒவ்வொரு விசுவாசியினதும் இந்த தனித்துவமான அனுபவத்தை அநேகமாக மற்றவர்களுக்கு உதவிசெய்யும் ஒரு கருவியாக தேவன் பயன்படுத்துகின்றார். உதாரணமாக மற்றவர்களுடைய கஷ்டகாலத்தில் உதவிசெய்யும்படிக்கு நம்முடைய கடந்தகாலத்தின் கஷ்டங்களை தேவனால் பயன்படுத்தமுடியும். பவுலைப்போல மற்றவர்களை தேற்றும் கருவியாக நம்முடைய அனுபவங்களை வழங்கமுடியும். பவுலுடைய இருளான அனுபவங்கள் மற்றவர்களுக்கு நம்பிக்கையை கொண்டுவருகின்றதற்குப் பயன்பட்டது. கீழே கொடுக்கப்பட்டுள்ள பந்தியில் அவர் எதை கூறுகின்றார் என்பதை கவனியுங்கள்:

> நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும் ... ஸ்தோத்திரம், தேவனால் எங்களுக்கு அருளப்படுகின்ற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர். எப்படியெனில், கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது. (2 கொரிந்தியர் 1:3-5)

தேவனுக்கு வழங்குவதற்கு உங்களிடத்தில் சொற்பமே உள்ளதென்று கவலைப்படாதீர்கள். உங்கள் தனித்துவமும் உங்கள் அனுபவமும் மற்றவர்களுக்கு உதவிசெய்யக்கூடிய இருவழிகளாகும்.

## சேவகதன்மையுள்ள ஊழியம்

## *நோக்கம் 3:*

*நல்ல சேவகனின் கலவையை விளக்குதல்.*

---

“எனது உள்ளூர் சபையில் நான் எவ்வாறு கிறிஸ்துவை சிறந்த விதமாக சேவிக்க முடியும்?” என்ற கேள்வியை கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் கேட்கவேண்டிய மிகவும் முக்கியமானதொரு கேள்வியாகும். இந்த முக்கியமான கேள்வியானதுதேவனுடைய இருதயத்திற்கு மிக நெருக்கமானதாகும். நீங்கள் அவருடைய சபையில் எவ்வாறு சிறப்பாக சேவைசெய்ய முடியுமென்பதை தேவன் ஏற்கனவே அறிந்துள்ளார்.அத்துடனேகூடகிறிஸ்தவ சேவையை வழிநடத்தவேண்டும் என்ற உங்கள் வாஞ்சையையும்கூட அவர் அறிந்துள்ளார். கிறிஸ்தவ ஊழியத்தைக் குறித்த ஜெபத்துடனான உங்கள் கவனிப்பானது குறிப்பிட்ட ஊழியங்களைக் குறித்து தேவன் உங்களிடத்தில் பேசுவதற்கு இடமளிக்கின்றது.

ஜெபத்துடனேகூட ஊழிய இலக்கில் அக்கறைகொள்ளும்போது அது உங்களுக்கு உங்களுடைய தனிப்பட்ட “வரம் கலவையை (பல்வேறு வகைப்பட்ட வரங்களின் கலவை)” குறித்து சிந்திப்பதற்கு உதவிசெய்கின்றது. வரம் கலவை என்கின்ற இந்த சொற்றொடரானது ஆற்றல்மிக்க ஊழியத்தின் திறமையின் கலவை என்பதற்கு பிரயோகிக்கப்படுகின்றது. இந்த ஊழிய திறமைகளானது அநேகமாக தாலந்து, திறமைகள் மற்றும் ஆவிக்குரிய வரங்கள் என்று கருதப்படுகின்றது. இந்த திறமைகளுக்கான வரைவிலக்கணங்கள் வருமாறு:

- தாலந்துகள் இயற்கைத் திறமைகள் ஒரு மனிதனுக்கு அவன் பிறப்பிலிருந்து உண்டானதாகும். உதாரணமாக, சில நபர்கள்பாடும் அல்லது பொது இடங்களில் பேசும் திறமையைக் கொண்டுள்ளனர். இந்த இயற்கை திறமைகள் கற்றுக்கொள்ளுவதாலும் பயிற்சிசெய்வதாலும் மென்மேலும் வலுப்படுத்தப்படுகின்றது.
- திறமைகளானது அதிகமாக போதனை மற்றும் பயிற்சியினூடாக - முறை சார்ந்ததும், முறை சாராததும் மற்றும் அனுபவத்திற்கூடாகவும் பெறப்படுகின்றது. நிர்வாகம் மற்றும் கணக்கியல் திறமைகள் போன்றவை கற்றுக்கொள்ளுகின்ற இந்த திறமைகளுக்கு உதாரணங்களாகும்.
- ஆவிக்குரிய வரங்களானது மிகவும் விசேஷித்த திறமைகளாகும். அவை ஒரு நபருக்கு பரிசுத்த ஆவியின் வல்லமையினூடாக பெற்றுக்கொடுக்கப்படுகின்றது. ஆவிக்குரிய வரங்களின் ஒரு நீண்ட பட்டியலை ரோமர் 12:6-8 இலும் 1 கொரிந்தியர் 12:7-11 இலும் காணலாம்.

ஊழியத் திறமையை பயிற்சிசெய்யக்கூடிய மிகவும் முக்கியமான படி என்னவென்றால் நீங்கள் உங்களை ஒரு சேவகனாக்கும்படி தேவனிடத்தில் கேட்கவேண்டும். சேவகனுக்குரிய மனோபாவமானது உங்கள் விசேஷித்த திறமைகளுக்கான ஏராளமான கதவுகளைத் திறக்கும் (1 பேதுரு 4:7-11). அத்துடன் தனித்துவமான தாலந்துகள், திறமைகள் மற்றும் அவருடைய சேவகர்களின் வரங்களை எவ்வாறு தேவன் பயன்படுத்துகின்றார் என்பதை புரிந்துகொள்வதற்காக நீங்கள் வேதாகமத்தை படிக்கவேண்டும்.

மற்றவர்களுக்கு சேவை செய்யும்படிக்கே தேவன் நம்மை அழைத்துள்ளார். ஒரு சேவகத்தன்மையான ஊழியமானது மனோபாவத்துடனேயே ஆரம்பிக்கின்றதென்று அவர் கற்பித்தார். ஒரு பயனுள்ள ஊழியத்திற்காக நம்முடைய வரங்களின் உயர்ச்சியும் திறமைகளுமானது ஒரு முதன்மையான பிரச்சினை அல்ல. ஊழியத்தை உன்னதமான தரத்தில் வருடக்கணக்காக பயன்படுத்துவது பிரயோஜனமற்றது! அதைவிட சேவகமனப்பான்மையே மிகப்பெரிய ஊழியத்தின் தரம் எனறு இயேசு கற்பித்தார் (மத்தேயு 20:25-28).

ஒரு சேவக மனப்பான்மையினூடாக இந்த வரம் அல்லது திறமை தனது உயரிய வெளிப்பாட்டை அடைகின்றதென்று பவுல் புரிந்துகொண்டார். அவருடைய வார்த்தைகளைக் கவனியுங்கள்: அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணகாரர்போல ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள். ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்த பெலத்தின்படி செய்யக்கடவன்;

எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக ஆமென். (1 பேதுரு 4:10-11)

பில் பிரைட், இவர் கம்பஸ் குருசேட் போ கிறைஸ்ட் இன் தலைவரும் ஸ்தாபகருமாவார். பில் இன் மரணத்திற்குப் பின்னரும் அவருடைய ஊழியம் உலகில் மிகப்பெரிய அளவில் தொடர்ந்தும் காணப்பட்டது. உலக்கெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்கள் மீதும் உலகத் தலைவர்கள் மீதும் பில் பிரைட்மிகப்பெரிய மரியாதை கொண்டிருந்தவராவார். அவர் மிகுந்த திறமையுள்ள மனிதனாவார். அவர் ஊழியத்தை தாழ்மையுடனும் சேவக மனப்பான்மையுடனும் சுமந்து வந்தார். பயனுள்ளதும் வைராக்கியமுள்ளதுமான ஊழியத்தை செய்வதற்காக பிரைட் என்பவர் குறிப்பிட்ட சேவகர்களுக்கான (ஊழியர்களுக்கான) நான்கு தகமைகள்.

- *தியாகம்:* எந்தவொரு தனிப்பட்ட சுகபோகமாக இருப்பினும் அதைவிடுத்து எப்போதும் மற்றவர்களை முன்பதாக வைப்பதே அர்ப்பணிப்பாகும்.

- *தாழ்மை:* மற்றவர்களுக்கு ஊழியம்செய்யும்படிக்கு உங்கள் சொந்த உரிமைகளை சரணடைத்தலே தாழ்மையாகும். இயேசுவைப்போல இராஜ்யத்தின் ஊழியத்தில் நாம் இந்த உண்மையுள்ள தாழ்மையை மிகத் தீவிரமான ஒரு காரியமாகவே கவனிக்கவேண்டும்.

- *ஊக்கப்படுத்தல்:* இயேசு நிலையாக தம்முடைய சீஷர்களுக்கு கவனத்துடன்கூடிய பயிற்யளித்தலின் மூலமாகவும் சிந்திக்கக்கூடிய வார்த்தைகள் மூலமாகவும் கற்றுக்கொடுத்து அவர்களை ஊக்கப்படுத்தினார்.

- *கொடுத்தல்:*மற்றவர்களினால் புறக்கணிக்கப்படுகின்ற நபருடைய தேவைகளை கொடுக்கின்ற நபர் அறிவார். எதையும் எதிர்பாராது மற்றவர்களுக்கு கொடுத்தலானது மிகப்பெரிய சந்தோஷத்தைக் கொண்டுவரும் ஊழியமாகும் (பிரைட் 2004, 104-107).

போராடிக்கொண்டிருக்கின்றவர்களுக்கு ஊழியம் செய்வதே இயேசுவினுடைய வைராக்கியமாக இருந்தது. ஊழியத்தில் நாம் பின்பற்றக்கூடிய அவருடைய வாழ்க்கை நமக்கு ஒரு மாதிரியாகும். கிறிஸ்துவுக்காக நம்முடைய உள்ளூர் சமுதாயத்தை சென்றடைவதற்கு ஊழியத் திறமைகளானது இயேசுவின் ஆவியை பிரதிபலிப்பதில் தங்கியுள்ளது. ஊழிய வேலைகளை முடிப்பதற்கு வேறு எவ்வித சாதாரணமான வழிகளுமில்லை.

## உள்ளூர் சபைக்கு விசுவாசமாயிருத்தல்

### *நோக்கம் 4:*

*உரிமையையும் விசுவாசத்தையும் உள்ளூர் சபைக்குள் செய்முறைகள் மூலம் நிரூபித்துக்காண்பித்தல்.*

---

உரிமையானது வைராக்கியமுள்ள ஊழியத்தின் மையமாகும். சபை தேவனுக்கு சொந்தமானது என்பதை நாம் அறிவோம். சபையை சொந்தமாக்கிக்கொள்ளுவதற்காக இயேசுவின் தியாக பலியான மரணத்தின் மூலமாக தேவன் அந்தக் கிரயத்தை செலுத்தினார் (1 கொரிந்தியர் 6:19-20). எவ்வாறாயினும் சபையானது தன்னைத் தானே கவனித்துக்கொள்ளுவதற்கான பொறுப்பை தேவன் தாமே அதற்கு கொடுத்துள்ளார். பவுல் அடிகளார் இந்த அக்கறை செலுத்தும் உரிமையை மனதிற்கொண்டு இவ்வாறு கூறுகின்றார், "அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்" (ரோமர் 12:5). உள்ளூர் சபைகளில் இருக்கும் விசுவாசிகள் ஒருவருக்கொருவர் ஒரு ஆழமான பொறுப்புணர்வு உள்ளவர்களாக இருக்கவேண்டுமென்பது பவுலுக்கு அவசியமாயிருந்தது. சக ஊழியர்களை நோக்கிய இந்த உரிமையின் முதுகெழும்பானது நம்முடைய நிரந்தரமான பொறுப்பாயிருக்கின்றது.

ஒருவரில் ஒருவர் அன்புகூருவதும் அக்கறைகொள்ளுவதும் எத்தனை முக்கியமானதாயிருக்கின்றது! ஒருவரில் ஒருவர் அக்கறைகொள்ளும் விசுவாசிகள் கஷ்ட நாட்களிலும் ஒருவரை ஒருவர் சார்ந்திருப்பார்கள். அநேகமான வேளைகளில், அழுத்தமும் கஷ்டமும் காணப்படும்போது கிறிஸ்தவர்கள் உறவுகளை முறித்துக்கொள்கின்றார்கள். நிச்சயமாக ஒன்றில் உரிமை பாராட்டும்போது அது மிக இலகுவில் உடைந்துவிடாது, ஆனாலும் உடைந்த பொருட்களை செப்பனிடும்போது அதற்கு நேரமெடுக்கும், சிலநேரங்களில் பணமும் தேவைப்படும்.

சபைக்குள் கஷ்ட நாட்களில் நம்முடைய நியாயப்படுத்தல்களும்கூட தவறாகிவிடுகின்றது. அப்பொழுது அநேகமாக நாம் இன்னுமொரு சபை நல்லதென்று நினைப்போம். ஆகிலும் முழு நிறைவான சபைகள் எங்கும் இல்லை. தவறு நடைபெறும் காலத்தைப் பொறுத்தே புதிய சபையானது நல்லதாக காணப்படும். அத்துடன் நாம் அழுத்தத்தின் காரணமாக சில மாற்றங்களை செய்யும்போது சிலநேரங்களில் நம்முடைய ஊழியத்தின் செல்வாக்கும் தொலைந்துபோகக்கூடும். ஒன்றை பாதியில் விடுவதற்கு முன்பும் அதை விட்டு நகரந்துசெல்ல முன்பும் நீண்ட நாள் ஜெபமும் சுய-பரிசோதனையும் செய்யப்படல்வேண்டும். காரியங்கள் பிழைக்கும்போது நாம் சீக்கிரமாக நம்முடைய உரிமையை விட்டுக்கொடுக்கக்கூடாது என்பதில் கவனமாயிருக்கவேண்டும்.

உரிமை என்பது விசுவாசம் மற்றும் விடாமுயற்சி ஆகிய தகமைகளுடாக பிரதிபலிக்கின்றது. நேரம் கடினமாகும்போது நாம் இன்னும் அதிகமாக ஒருவரில் ஒருவர் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு கிறிஸ்தவ மனோதத்துவ நிபுணரான கேரி கொலின் என்பவர் "அக்கறை கொள்ளுவது கடிமானதும், சவாலானதும், அதிக நேரத்தை

கொள்ளுகின்றதும் மற்றும் அநேகமாக தடையுள்ளதுமாயிருக்கின்றது" என்று எழுதினார். ஆனாலும் அக்கறையானது அக்கறை காண்பிப்பவர் மற்றும் அக்கறை கொள்ளப்படுகின்ற இருவருக்கும் இது ஒரு சுகமளிக்கும் சிகிச்சை ஆகும்." மேலதிகமாக அவர் கூறுகையில் பிரச்சினையான நேரத்தில் ஒருவரில்லொருவர் அக்கறை கொள்ளுதலானது திருப்பதிகரமானதும் ஆழமான மகிழ்ச்சியைக் கொண்டு வருகிறதான உணர்வாயுமிருக்கின்றதென்றும் அவர் கூறினார் (கொலின்ஸ் 1980, 18).

சபைக்கானதேவனுடைய உரிமைத்துவத்திற்காக இயேசு முடிவான கிரயத்தை செலுத்தினார். ஒரு ஆரோக்கியமுள்ள சபைக்காக கிரயம் செலுத்தும்போது விசுவாசிகளும் தேவனை மகிமைப்படுத்துகின்றார்கள். பொறுமை, மன்னிப்பு மற்றும் அன்பானது சபைக்கான ஒரு ஆழமான அக்கறையை பிரதிபலிக்கின்றது. நினைவிற்கொள்ளுங்கள் உங்களுக்கு சொந்தமான ஒன்றின் மீது நீங்கள் அக்கறை காண்பிக்குமுகமாக முழு பொறுப்பை எடுப்பதே உரிமை ஆகும்."நாம் ஒருவருக்கொருவர் சொந்தமானவர்கள்; ஆகவே, நாம் ஒருவர்மீது ஒருவர் அக்கறைகொள்ளுகின்றோம்!" என்ற இந்த வல்லமையுள்ள செய்தியை வெற்றியுள்ள ஊழியம் சத்தமிட்டுக்கூறும்.

## ஊழியத்தில் தேவனுடைய சித்தத்தைக் கண்டுபிடித்தல்

### *நோக்கம் 5:*

*ஊழியத்தில் தேவனுடைய சித்தத்தைக் கண்டுபிடிப்பதற்கான படிமுறையை விபரித்தல்.*

---

உள்ளூர் சபைக்குள் காணப்படும் ஊழியமானது அற்புதமானதொரு சவாலாகும். உள்ளூர் சபைக்குள் ஊழியத்தில் உங்கள் இடத்தை கண்டுபிடித்தலானதுவிசுவாசத்தின் உண்மையான துணிச்சல்மிக்கசெயலாகும். இந்த துணிச்சல்மிக்க செயலானது உங்களுடைய பகுதியில் ஓர் இன்றியமையாத வேலையை கோரி நிற்கின்றது. நாம் வாஞ்சிப்பதுபோல தனிப்பட்ட ஊழியத்தில் தேவனுடைய வழிநடத்துதலானது ஒரு முக்கியமான பகுதியாகும். இயேசு கூறிய வார்த்தைகளை நினைவுபடுத்துவது மிகவும் நல்லதாகும்: "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்கு திறக்கப்படும்; ஏனென்றால் கேட்கிற எவனும் பெற்றுக்கொள்ளுகின்றான்; தேடுகிறவன் கண்டடைகின்றான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்" (மத்தேயு 7:7-8).

அத்துடனேகூட நாம் மேலே கொடுக்கப்பட்டுள்ள இந்த வசனத்தை பொதுவாக ஜெபத்துடன் தொடர்புபடுத்துகின்றோம் அத்துடன் தேவனுடைய சித்தத்தில் முன்னோக்கிச்செல்வதற்கு இதுவும் ஒரு வல்லமையான கூற்றாகும். இயேசுவுக்கு இணங்க, ஜெபத்திலும் வாழ்க்கையிலும் நமக்கு ஒரு உறுதியான மனப்பான்மை இருக்கவேண்டியது அவசியமாகும். கேளுங்கள், தேடுங்கள்மற்றும் தட்டுங்கள் என்ற வினைச்சொற்களானது ஜெபத்திலும் வாழ்க்கையிலும் நாம் அதை அனுகும் விதத்தில் வல்லமையை அதிகரிகப்பண்ணுதலை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. கேட்டல் என்பது செயலற்றதாகும்.

தேடுதல் என்பது கேட்டல் என்பதற்கும் ஒருபடி அப்பாற் செல்லுகின்றது; தேடுதலானது நாம் ஏதோ ஒன்றிற்காக கவனிக்கின்றோம் என்பதை சுட்டிக்காட்டுகின்றது. உறுதியாக தேடுபவர்கள் பதிலைப் பெற்றுக்கொள்ளும்படியாக கதவைத் தட்டுகின்றார்கள்.

ஜெபத்தின் படிமுறையாகிய கேட்டல், தேடுதல் மற்றும் தட்டுதல் ஆகியன சரியான நேரத்தில் சரியான ஊழியத்தை கண்டுபிடிப்பதற்கு உங்களுக்கு உதவிசெய்கின்றன. ஆவிக்குரிய கண்டுபிடிப்பிற்கான இந்த குறிப்பான படிமுறையானது உங்கள் வாழ்க்கை முழுவதும் உங்களுக்கு உதவிசெய்யும். விசுவாசிகள் ஒவ்வொரு காலங்களிலும் தேவனுடைய புதிய வழிநடத்துதலை பெற்றுக்கொள்ளுகின்றனர். அப்படியே ஊழியத்திலும் திசைமாற்றம் உண்டு. பறக்கும் ஒரு விமானத்தைப்போலதேவனால் கொடுக்கப்பட்ட ஊழியத்தின் இலக்கிற்கு நாம் அநேகமாக நடுவழி திருத்தங்களைசெய்யும்படி வேண்டப்படுகின்றோம்.

உங்கள் மனப்பான்மையான ஜெப நோக்கானது ஊழியத்திற்கான தேவனுடைய சித்தத்தை கண்டுபிடிப்பதற்கான வெவ்வேறு படிமுறைகளை பிரயோகப்படுத்தக்கூடும். சபைக்காக உங்கள் தனிப்பட்ட ஊழியத்தை கண்டுபிடிப்பதற்கு எப்பொழுதும் பின்வரும் இந்தப் படிமுறைகளும் உள்ளடக்கப்படுகின்றது.

- *மற்றவர்களை அனுகுதல்:* தேவபக்தியுள்ள நபர்கள் சபை ஊழியத்திற்கான உங்கள் பெலனை குறித்து இனங்காண முடியும். நீதிமொழிகள் 11:14 குறிப்பிடுகின்றது, "அநேக ஆலோசனைக்காரர்கள் உண்டானால் சுகம் உண்டாகும்." இவ் ஆலோசனைக்காரர்களில் போதகர், ஓர் தேவபக்தியுள்ள மூப்பர், அல்லது ஒரு நம்பிக்கையுள்ள மற்றும் முதிர்ச்சியடைந்த நண்பன் ஆகியோர் உள்ளடக்கப்படுவர்.

- *வார்த்தையில் தேடுதல்:*தேவனுடைய வசனம் நம்முடைய கால்களுக்குத் தீபமும்; நம்முடைய பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது (சங்கீதம் 119:105). அளக்கப்பட்ட வெளிச்சமுள்ள ஒரு சிறிய விளக்கை சங்கீதக்காரன் இங்கு குறிப்பிடுகின்றார். அவரிடத்தில் அடுத்த அடிக்கான வெளிச்சம் மாத்திரமே உள்ளது. உங்கள் ஊழியத்திற்கான வாய்ப்புக்கள் பார்வைக்கு வரையறுக்கப்பட்டவையாக இருக்கும்போது அதைக் குறித்து அதிகமாக கவலைப்படாதீர்கள். விசுவாசத்தோடு வார்த்தையைப் படியுங்கள். ஊழியத்தில் ஒரு நேரத்தில் ஒரு அடி மாத்திரமே எடுத்து வையுங்கள்.

- *அனுபவங்களை மொழிபெயர்த்தல்:* உங்கள் அனுபவங்கள் உங்கள் ஊழியத்தை வடிவமைப்பதற்காக ஓர் முக்கிய பங்கை வகிக்கின்றது. யோசேப்பினுடைய வாழ்க்கையை வழிநடத்துவதற்காக தேவன் எவ்வாறு நன்மையையும் தீமையையும் பயன்படுத்தினார் என்பதைப் பாருங்கள் (ஆதியாகமம் 37-48). அநேகமாக ஊழியத்தில் தம்முடைய சித்தத்தை பகுத்தறிவதற்கும் அதை நிறைவேற்றுவதற்கும் உதவிசெய்யும்படி தேவன் சூழ்நிலைகளைப் பயன்படுத்துகின்றார்.

- *ஜெபத்தை பயன்படுத்தல்:* நீதிமொழிகளின் புத்தகம் மிகப்பெரிய ஞானத்தை பகிர்ந்துகொள்ளுகின்றது: "உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளை செவ்வைப்படுத்துவார்" (நீதிமொழிகள் 3:5-6). அனுதினமும் உங்கள் உள்ளூர் சபையில் உங்கள் ஊழியத்தை குறித்து ஜெபிப்பது நியாயமற்ற காரியமல்ல. உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய ஊழியதிட்டத்தைக் கண்டுபிடிப்பதை விடவும் சில விடயங்கள் முக்கியமானவையாகும்.

உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய ஊழியம் தொடர்பான திட்டத்தை தேடும்பொழுது, தாவீதினுடைய வார்த்தைகள் உங்களை உற்சாகப்படுத்தும்: "ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்தியபேரின்பமும் உண்டு" (சங்கீதம் 16:11).

நீங்கள் வாழும்படியாய் தேவன் உங்களை சிருஷ்டித்த சரியான விதத்திலே வாழ்வதிலும் ஊழியம் செய்வதிலுமுள்ள சந்தோஷம் என்னவென்று நீங்கள் அறிவீர்களா? அவருடைய சபைக்காக உங்கள் ஊழியத்தை கண்டுபிடித்து ஊழியம்செய்வது மிகப்பெரிய சந்தோஷத்தைக்கொண்டு வருகின்றது. நீங்கள் விசுவாசத்தில் நடக்கும்போதும் அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிவுடன் நடக்கும்போதும் சந்தோஷமும் சமாதானமும் தேவனுடைய மிகப்பெரிய வெகுமதிகளாக காணப்படுகின்றது.

## உள்ளூர் சபையில் தேவன்

### *நோக்கம் 6:*

*உள்ளூர் சபையின் ஊழியத்தில் தேவனுடைய பங்கை கலந்துரையாடல்.*

ஊழியத்தில் நம்முடைய பங்கானது தேவனுடைய திட்டத்திற்கு கீழ்ப்படிவை வேண்டுகின்றது. ஊழியத்தில் தேவனுடைய பங்கானது அவருடைய சித்தத்தை சுமந்துசெல்லுவதற்காக நமக்கு திறமையையும் வலிமையையும் குறித்து கற்றுக்கொடுக்கின்றது. எந்தவொரு ஊழியத்தை செய்வதற்கும் தேவனுடைய வல்லமை வேண்டும்.நாம் தேவனை அறியவும் அவரை புரிந்துகொள்ளும்படியாகவும் ஜெபிக்கும் பவுலினுடைய இந்த வார்த்தைகளை மனனம்செய்யுங்கள்"தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும் பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கின்ற சுதந்திரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்; தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகாமேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தர்த்துவத்துக்கும் இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா

நாமத்துக்கும்மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படிசெய்து" (எபேசியர் 1:18-20).

பவுலினுடைய இந்த ஜெபமானது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினூடாக தேவனுடைய வல்லமை வெளிப்படுத்தப்பட்டதை சுட்டிக்காட்டுகின்றது. தேவனுடைய வல்லமை நம்முடைய அன்றாட வாழ்க்கைக்குள் பெலனை கொண்டுவருகின்றதென்பதை நாம் புரிந்துகொள்ளுவது அவருக்கு வேண்டியதாயிருக்கின்றது. இப்பொழுது இயேசு உன்னத அதிகாரத்துடன் நம்முடைய வாழ்க்கைகளை ஆளுகை செய்கின்றார் என்பதை அவர் கற்றுக்கொடுக்கின்றார். அவரே சபையின் உன்னதமான தலையாகவுமிருக்கின்றார் (எபேசியர் 4:15) மற்றும் சபையில் ஊழியம் செய்யும் அனைவருக்கும் அவருடைய வல்லமையான வாழ்க்கையின் பூரணத்தை அளிக்கின்றார்.

நான் என்னுடைய இளம்பிராயத்தில் பிரசங்கிக்க ஆரம்பித்தேன். எனக்கு பதினாறு வயதாயிருக்கும்போது, ஒரு சில தொடர்ச்சியான கூட்டங்களில் பிரசங்கிக்கும்படி என்னிடம் கேட்கப்பட்டது. அந்த கூட்டங்களின் முதல் இரவுகளை என்னால் மிகவும் நான்றாக நினைவுபடுத்த முடிகின்றது! அப்போஸ்தலர் பவுலின் மிக அற்புதமான மனமாற்றத்தைக் (அப்போஸ்தலர் 9) குறித்து நான் மிகவும் கஷ்டப்பட்டு அதனுடைய முக்கிய அம்சங்களை ஆயத்தப்படுத்தினேன். நான் மிகவும் கஷ்டப்பட்டு படித்து என்னுடைய முயற்சிகளின் மீது தேவனுடைய ஆசீர்வாதங்களையும் தேடினேன்.

அந்த இரவு அப்பிரசங்கத்தை வெளியிடுவது நான் கற்பனை செய்ததைவிடவும் மிகவும் கடினமாகவிருந்தது. என்னுடைய பிரசங்கத்தில் எவ்வித ஜீவனும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை, சபையில் மிகவும் சொற்ப அளவான பிரதியுத்திரங்களையே நான் பெற்றுக்கொண்டேன். பிரசங்கத்தை முடித்தவுடன் நான் ஆழமாக அதைரியத்திற்குள்ளானேன். நான் பிரசங்கிக்கும் மற்றும் கற்றுக்கொடுக்கும் ஊழியத்திற்கு மெய்யாகவே அழைக்கப்பட்டேனா என்பதைக் குறித்து வியப்படைந்தேன்.

அடுத்தநாள் காலை என்னுடைய ஊழியத்தில் தேவனுடைய அபிஷேகத்தை வேண்டி நான் மிகவும் தேவையோடுகூட உண்மையாக ஜெபத்தில் தேவனைத் தேடினேன். "தேவனே, இன்று இரவு நீர் என்னுடைய பிரசங்கத்தை ஆசீர்வதிப்பீரானால் என்னுடைய வாழ்க்கை முழுவதும் உமக்காக பிரசங்கிக்க முடியும், உம்மையன்றி இதை என்னால் செய்யமுடியாது" இதுவே என் வார்த்தைகளாயிருந்தது. தேவனுடைய உதவி இல்லாமல் இன்னுமொரு தோல்வியைக் குறித்து நான் பயந்தேன்.

அந்த இரவு ஒர் அற்புதம் நடந்தது. நான் பிரசங்கிக்க ஆரம்பித்ததும் தேவனடைய பிரசன்னம் என்னை மூடிக்கொண்டதை உணர்ந்தேன். அதிகாரத்துடன் வார்த்தைகள் என் உதடுகளிலிருந்து மிக இலேசாக வர ஆரம்பித்தது. தேவன் என் உதடுகளை ஆளுகை செய்தபடியினாலேயே அவ்வாறு ஆயிற்று. அதன் பிறகு அபிஷேகத்திற்காக நான் ஜெபித்த ஜெபத்திற்கு தேவன் மிகவும் வல்லமையாக பதிலளிதார் என்பதையும் நான் அறிந்துகொண்டேன்.நாற்பது வருட ஊழியங்களுக்கு பின்னரும் அந்த வல்லமையான இரவின் பெறுமதியை நான் இன்னும் நினைவுகூறுகின்றேன். என்னுடைய ஊழியத்திற்கான

தேவனுடைய அழைப்பும் ஊழியத்திற்கான அவருடைய அதிகாரமும் வல்லமையும் ஒன்றாகசேர்ந்து வந்த தருணம் அதுவே.

சிலவேளைகளில் ஊழியத்திற்கான உங்களுடைய அழைப்பு பிரசங்கிப்பதற்காக இருக்காது. உங்களுக்கும் ஊழியத்திற்காக அதிகாரமும் வல்லமையும் தேவைப்படுகின்றது. தேவனுடைய ஆசீர்வாதமும் தேவனுடைய கிருபையும் சபைக்குள் ஒவ்வொரு வகையான ஊழியத்தையும் நிச்சயமாக ஆசீர்வதிக்கும்.

## ஒரு புதிய மட்டத்திலான ஊழியம்

### *நோக்கம் 7:*

*உள்ளூர் சபைக்குள் ஊழியத்தின் ஒரு புதிய மட்டத்தை ஆயத்தப்படுத்துவதின் படிமுறைகளைக் காண்பித்தல்.*

விசுவாசிகளும் விசுவாசிகல்லாதவர்களுமாகிய நீங்கள் இருசாராரும் ஊழியத்தின் புதிய மட்டங்களை கண்டுபிடிக்கவேண்டுமென்று தேவன் வாஞ்சிக்கின்றார். ஊழியத்தின் புதிய மட்டம் என்பதற்கு இரண்டு காரியங்கள் உண்டு: உங்களுடைய தற்போதைய ஊழியம் புதிய மட்டத்திலான ஆவிக்குரிய தரத்திற்கு உயர்த்தப்படுதலும் ஊழியத்தின் புதிய பாத்திரத்தை ஏற்றுக்கொள்ளுவதற்கு நீங்கள் திறமையுள்ளவராயிருத்தலும் ஆகும். அநேகமாக இந்த பாத்திரம் மற்றவர்களுக்கு ஊழியம்செய்வதில் அதிகமான பொறுப்பையும் உள்ளடக்குகின்றது.

ஊழியத்தில் புதிய மட்டத்தை சாதித்தல் என்பது எவ்வாறாயினும், மற்றவர்களுடைய பார்வையில் நீங்கள் மிக முக்கியமானவர்களாயிருப்பீர்கள் என்பது அதனுடைய அர்த்தமல்ல. ஊழியம் என்பது ஒருபோதும் தனிப்பட்ட நிகழ்ச்சிநிரலோ அல்லது தேவனுக்கான உங்கள் ஊழியத்தை மற்றவர்கள் எவ்வாறு காண்கின்றார்கள் என்பதும் அல்ல. ஊழியம் என்பது எப்பொழுதும் சுயநலமின்றி மற்றவர்களுக்கு சேவை செய்வதன் மூலம் தேவனுக்கு செய்யும் சேவையாகும். நீங்கள் உங்கள் எதிர்கால ஊழியத்தற்கு உண்மையுள்ளத்தோடு ஆயத்தமாகும்போது புதிய மட்டத்திலான சேவைகள் வரும். எப்பொழுதும் உங்கள் ஊழியம் ஒரேமாதிரியாவே இருக்கும் என்று ஊகித்துவிடாதீர்கள்; தேவன் உருவாக்கும் எந்தவொரு புதிய வழிக்கும் திறந்தவர்களாக இருங்கள்.

## முடிவுரை

புதிய வழிக்காக ஆயத்தப்படும் உங்கள் ஊழியத்தின் நன்மைகளானது இப்பொழுது நீங்கள் தேவனுக்காக செய்துகொண்டிருக்கும் ஊழித்தில் நன்மை பயக்கும். உங்கள் ஊழியத்தின் அடுத்த மட்டத்திற்கு இந்த படிமுறைகளை ஜெபத்துடன் கவனியுங்கள்:

- தொடர்ந்தும் வார்த்தையை படித்து அதை மனனம் செய்யுங்கள். மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதில் தேவனுடைய வார்த்தையே முதன்மை கருவியாக காணப்படுகின்றது.
- உங்கள் வாழ்க்கைக்கு அல்லது ஊழியத்திற்கு உங்களை ஆயத்தப்படுத்துவதற்கு உதவக்கூடிய புத்தகங்களை வாசியுங்கள் கற்றுக்கொள்ளுங்கள்.
- உங்கள் ஜெபம், வார்த்தையை கற்றுக்கொள்ளுதல் மற்றும் தனிப்பட்ட பரீட்சை அடங்கிய விசுவாசத்துடன் ஒரு தியான நேரத்தை வளர்த்திடுங்கள்.
- உங்கள் பலவீனங்களை ஏற்றுக்கொள்ளுங்கள் தனிப்பட்ட தடைகளை மேற்கொள்ளுவதற்கு தேவனுடைய ஆவியானவர் உங்களுக்கு உதவிசெய்யும்படி அனுமதியுங்கள்.
- நெகிழும் தன்மையையும் பொறுமையையும் கற்றுக்கொள்ளுங்கள்.தேவன் நம்முடைய வாழ்க்கை திட்டத்தில் எப்போதாவது மாத்திரமே நம்முடைய நேர அட்டவணை அல்லது திட்டத்தின் நிழற்படத்திற்கு இணங்க கிரியை செய்கின்றார்.
- மற்றவர்களுக்கு நேர்மையாயிருத்தல் மற்றும் உங்கள் உள்ளூர் சபைக்கு விசுவாசமாயிருத்தல் போன்ற மிக முக்கியமான தகமைகளை வளர்த்துக்கொள்ளுங்கள்.
- உங்கள் ஊழியத்தைக் குறித்து மற்றவர்களிடம் கணக்கொப்புவிக்கக்கூடியதாயிருத்தல். “தனியாக” பறத்தல் என்பது தேவனுடைய வேலையில் வெற்றியை உண்டாக்காது. நீங்கள் உங்கள் குழுவில் உள்ள ஏனைய அங்கத்தவர்களிடம் கணக்கொப்புவித்தலானது வெற்றியுள்ள உறுதியான ஊழியத்தை அமைக்க உதவிசெய்யும்.
- ஊழியத்தில் உங்கள் அனுகுமுறையில் படைப்பாற்றலை ஊக்கமளித்து வளர்த்திடுங்கள். நீங்கள் தனித்துவமானவர்கள். தேவன் உங்களுடைய விசேஷித்த வரங்களை, தாலந்துகள் மற்றும் திறமைகளை பயன்படுத்த விரும்புகின்றார்.

## குறிப்புப் பட்டியல்


Bright, Bill. 2004. *Discover the Real Jesus*. Wheaton:\ Tyndale.

Collins, Gary. 1980. *The Joy of Caring*. Waco, TX: Word Book.


## மனனம் செய்வதற்கு ஆலோசிக்கப்ட்ட வசனங்கள்

நீதிமொழிகள் 3:5-6

மத்தேயு 20:25-28

மத்தேயு 22:37-40

ரோமர் 12:5

ரோமர் 12:4-8

2 கொரிந்தியர் 1:3-5

எபேசியர் 1:18-20

1 யோவான் 3:18

# பாடம் 13

## அதிசிறப்பிற்காக கடுமுயற்சிசெய்தல்

நீங்கள் தற்போது இருக்கும் நிலையைப் பார்க்கிலும் இன்னும் நன்றாக இருக்கவேண்டுமென விரும்புகின்றீர்களா? நீங்கள் அதிசிறப்பையடையும்படி பேரார்வம் கொண்டுள்ளீர்களா? முழுமைக்காக கடுமுயற்சி செய்யும்போது நீங்கள் யாதார்த்தமாக வாழ்கின்றீர்களா? ஒரு கிறிஸ்தவனுக்கு அதிசிறப்பு என்பது தூரத்திலுள்ள கனவைவிட மேலானதாக இருத்தல் வேண்டும். அதுவே நம்முடைய அன்றாட வாழ்க்கையின் நோக்கமும் வாழ்நாள் முழுவதுமான தேடலுமாயிருக்கவேண்டும். கொரிந்தியருக்கு எழுதின நிரூபத்திலே முடிவுரை வாழ்த்துதலில் பவுல் கொரிந்தி சபைக்கு "நற்சீர் பொருந்துங்கள்" என வேண்டிக்கொள்ளுகின்றார் (2 கொரிந்தியர் 13:11). பவுலுடைய இந்தக் கட்டளை நமக்கும் இன்று நீடிப்புச்செய்யப்பட்டுள்ளது. நாம் என்ன செய்தாலும், எங்கு எதைச் செய்தாலும் அதை மிகவும் சிறப்பாக செய்யும்படிக்கே தேவன் நம்மை அழைத்துள்ளார்.

எழுத்தாளர் சிக் சிக்ளர் இவ்வாறு எழுதுகின்றார்,

> நம்மிடத்தில் இருப்பதைக் கொண்டு சிறப்பானதைச் செய்தலே வெற்றியாகும். வெற்றி என்பது செய்தலில் உள்ளது; அது பெறுகின்றதிலல்ல; அது முயற்சிசெய்தலில் உள்ளது; அது சாதனையிலல்ல. வெற்றி என்பது தனிப்பட்ட தரமாகும். அது நமக்குள் இருக்கும்உச்சத்தை அடைவதும், எம்மால் முடிந்த எல்லாமாகுவதுமாகும். நாம் நம்முடைய மிகச் சிறந்ததைச் செய்தால், நாம் வெற்றிபெற்றவர்களாவோம். வெற்றி என்பது உங்களிடம் இருக்கும் திறமையின் உச்சளவான பயன்பாடாகும்.

வெற்றியை பற்றி பேசும்போது என்னுடைய மிகப்பிரியமான உதாரணங்களில் ஒருவர் சேர் வின்சன்ட் சர்ச்சில் ஆவார். இவர் மிகவும் பயங்கரமான தடைகளை மேற்கொண்டவர். எவ்வாறாயினும் தன்னுடைய முன் நாட்களில்சர்ச்சில் அதிசிறப்படையவேண்டுமென தீர்மானித்திருந்தார். வெறுமனே வாழ்வது அல்ல ஒரு வாழ்க்கையே அவருக்கு அவசியமாயிருந்தது. அதிசிறப்பான பாதையில் பயணிப்பதற்காகவே அவர் தனக்கென ஒரு அடையாளத்தை உருவாக்கவேண்டியிருந்தது (Mansfield 1995, 125). வெறுமனே வாழ்வது என்பது மரணத்தை விட மேலானது அல்ல. ஒருவரால் வரலாற்றை பிரதிபலிக்கவோ அல்லது வரலாற்றை படைக்கவோ முடியும் என்பதை சர்ச்சில் நம்பினார்.

## பாடத்தின் முக்கிய அம்சங்கள்

அதிசிறப்பும் சாதாரண நிலையும்

ரெபேக்காளின் அதிசிறப்பு

நேர்மையும் அதிசிறப்பும்

அதிசிறப்பிற்காக திட்டமிடல்

## பாடத்தின் நோக்கங்கள்

1. *அதிசிறப்பிற்கும் சாதாரண நிலைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை விளக்குக.*
2. *ரெபேக்காள் எவ்வாறு தன்னுடைய அதிசிறப்பை செய்முறைகள் மூலம் நிரூபித்துக் காண்பித்தாள் என்பதை விளக்குதல்.*
3. *நேர்மைக்கும் அதிசிறப்பிற்கும் இடையே உள்ள தொடர்பை காண்பிக்க.*
4. *அதிசிறப்பிற்காக திட்டமிடுதலானது ஏன் இன்றியமையாததெனக் காண்பித்தல்.*

### அதிசிறப்பும் சாதாரண நிலையும்

### *நோக்கம் 1:*

*அதிசிறப்பிற்கும் சாதாரண நிலைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை விளக்குக.*

சாதாரணமாக எதிர்பார்த்த ஒன்றிற்கு அப்பாற் செல்லுதலே அதிசிறப்பாகும். எவ்வாறாயினும், குறைந்ததை செய்தலே சாதாரண நிலையாகும். ஒன்று நல்லதாகவோ அல்லது கெட்டதாகவோஅற்ற விதத்தில் செய்தல், எதிர்பார்ப்பதை மாத்திரம் செய்வதேயன்றி அதைவிட மேலாக ஒன்றையும் செய்யாதிருத்தல் மற்றும் முன்னேற்றத்தைப் பற்றிய எதைக் குறித்தும் அக்கறை கொள்ளாமையுமாகும். பின்வருபவை அதிசிறப்பிற்கும் சாதாரண நிலைக்குமான வேதாகம உதாரணங்களாகும்.

வெளிப்படுத்தல் புத்தகத்தில் பிலதெல்பியா சபையானது மிகவும் சிறப்பாயிருந்தது. லவோதிக்கேயா சபையானது நடுத்தர நிலையுள்ளதாக அதாவது அனலுமில்லாமல் குளிருமில்லாமல் சாதாரணமாக காணப்பட்டது. ஆபிரகாம் அதிசிறப்பாயிருந்தார்; லோத்து

சாதரண நிலையிலிருந்தார். சாமுவேல் சிறப்பாக இருந்தார்; ஏலிசாதரண நிலையிலிருந்தார். தானியேல் சிறப்பாயிருந்தார்; பாலாம்சாதரண நிலையிலிருந்தார். அதன் பின் இயேசு, நிச்சயமாக சிறப்பே உருவானவராயிருந்தார்.

அதிசிறப்பை எடுத்துக்காட்டல்கள் வாயிலாக காண்பித்தால், "ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம்வரப் பலவந்தம்பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ" என்று இயேசு கூறினார் (மத்தேயு 5:41). அந்நாட்களில், ஒரு ரோமப் படைவீரனுக்கு தன்னுடைய பொதியை ஒரு மைல் தூரமளவும் கொண்டுசெல்லும்படிக்கு ஒருவனை தெரிந்துகொள்ளுவதற்கு சட்டம் அனுமதித்திருந்தது. அந்த பொதியானது மிகவும் பாரமானதும் அவ்வீதிகள் மிகவும் கரடுமுரடுமாகும். அநேகமாக அந்த படைவீரர்கள் கொடூரமானவர்களாகக்கூட இருப்பர். அவ்வேலையானது எப்பொழுதும் சுமையாகவே காணப்படும். ஆனாலும், அந்த மோசமான நிலைமையிலும் இன்னும் அதிகமாக கொடுக்கும்படியும் இன்னும் அதிகாமாக செய்யும்படியும் இயேசு கூறினார்.

அதற்கு எதிர்மாறாக, சில மனிதர்கள் இவ்வாறு உணர்கின்றார்கள் என ஜிம் கொன்வே எழுதினார் "மகத்தான மனிதானாகும்படி தேவையோடிருக்கும் ஒருவனை பலவீனப்படுத்துவதற்கு . . . ஓட்டங்களைப் பெற்றுக்கொள்வதைக் குறித்து பொருட்படுத்தத் தேவையில்லை. தலை இல்லாமலேனும் பந்தாட்டத்தில் ஜெயம் எடுப்போம்" (Maxwell 1999, 34). இங்கு கொன்வேயின் நிலையானது நடுத்தர நிலை அல்லது சாதாரண நிலையில் ஒன்றாகும்.

சாதாரண நிலை அல்லது நடுத்தர நிலையானது தேவனுடைய பிள்ளைகளுக்கு ஒருபோதும் நல்லதல்ல. ஒருபோதும்! சாதாரணமாக அல்லது ஒரு விசேஷித்த நோக்கத்திற்கு குறைவுபட்டிருக்கும் ஒரு கிறிஸ்தவனாக இருக்கும்படி தேவன் உங்களை அழைக்கவில்லை. காரியங்களை சரிசெய்யும்படிக்கும்உங்கள் உலகத்தை மாற்றுவதற்குமே அவர் உங்களை அழைத்துள்ளார். பரிசுத்தவான்களாக நாம், கடினமாக உழைப்பதற்கும் பெரிய கனவு காண்பதற்கும் அதிசிறப்படைவதற்கும் நம்மை நாம் ஒழுக்கப்படுத்திக்கொள்ளவேண்டும். இதுவே அதிசிறப்பின் மொழி.

## ரெபேக்காளின் அதிசிறப்பு

### *நோக்கம் 2:*

*ரெபேக்காள் எவ்வாறு தன்னுடைய சிறப்பை செய்முறைகள் மூலம் நிரூபித்துக் காண்பித்தாள் என்பதை விளக்குதல்.*

ஆதியாகமம் 24 ஒரு மிகச் சிறந்த ஒரு அதிகாரம். இங்கு மிகவும் வயது சென்ற ஆபிரகாம் தன்னுடைய மகனாகிய ஈசாக்கிற்கு ஒரு துணையைத் தேடுகின்றார். ஆபிரகாமுடைய மனைவி சாராள் அண்மைக் காலத்தில் மரித்திருக்கவேண்டும் என்பது தெளிவாகும். எனவே வயது முதிர்வும் கடுந்துயரமும் ஆகிய இவ்விரண்டும் ஒரே சமயத்தில் நிகழ்ந்ததால் தன்னுடைய மகனுக்காக ஒரு மணமகளை தேடுவதற்கான ஒழுங்குபடுத்தல்களைச் செய்வதற்கு தான்

தவறிவிட்டதைக் குறித்த விழிப்புணர்வு ஆபிரகாமிற்கு ஏற்பட்டது. ஈசாக்கிற்கு தற்போது நாற்பது வயதாகின்றது. அந்நாட்களில் அத்தேசத்தில் அப்படிப்பட்ட காரியங்களைக் குறித்து பார்த்துக்கொள்ளுவது தகப்பனுடைய பொறுப்பாயிருந்தது. ஆபிரகாம் இந்த முக்கியமான காரியத்தில் பங்குகொள்ளவில்லை. இந்த வேலையை தன்னுடைய வீட்டின் மூத்த ஊழியக்காரனிடத்தில் கையளித்திருந்தார்.

உடனடியாக அந்த ஊழியக்காரன் பல்லக்கு சுமைகளை தூக்குபவர்களையும் ஒட்டகங்களையும் ஒழுங்குபடுத்தினான். பயணத்திற்கு தேவையானவைகளும் புதிய மணவாட்டிக்கான பெறுமதிமிக்க பரிசுக்களும்ஒவ்வொரு மிருகஜீவன்கள் மீதும்சுமத்தப்பட்டது. "பின்பு அந்த ஊழியக்காரன் தன் எஜமானுடைய ஒட்டகங்களில் பத்து ஒட்டகங்களைத் தன்னுடனே கொண்டுபோனான்; தன் எஜமானுடைய சகலவித உச்சிதமான பொருள்களும் அவன் கையில் இருந்தன" (ஆதியாகமம் 24:10). புரிந்துணர்வுடன், அந்த ஊழியக்காரன் இவ்வாறு ஜெபித்தார்:

> "என் எஜமானாகிய ஆபிரகாமுக்குத் தேவனாயிருக்கிறகர்த்தாவே, இன்றைக்கு நீர் எனக்கு காரியம் சித்திக்கப்பண்ணி, என் எஜமானாகிய ஆபிரகாமுக்குத் தயவுசெய்தருளும். இதோ, நான் இந்தத் தண்ணீர்த்துரவண்டையில் நிற்கிறேன், இந்த ஊராருடைய பெண்கள் தண்ணீர் மொள்ளப் புறப்பட்டு வருவார்களே. நான் குடிக்க உன் குடத்தைச் சாய்க்க வேண்டும் என்று நான் சொல்லும்போது: குடி என்றும், உன் ஒட்டகங்களும் குடிக்கும்படி வார்ப்பேன் என்றும் சொல்லும் பெண் எவளோ, அவளே நீர் உம்முடைய ஊழியக்காரனாகிய ஈசாக்குக்கு நியமித்தவளாகவும், என் எஜமானுக்கு அநுக்கிரகம் செய்தீர் என்று நான் அதினாலே அறியவும் செய்தருளும் என்றான்" (12-14 வசனங்கள்).

அவ்விடத்தில் எத்தனை தண்ணீர்துரவுகள் இருந்ததென்பதைக் குறித்து எம்மால் கூற முடியாது. அவ்ஊழியக்காரன் அந்த ஒரு தண்ணீர்த் துரவண்டை மாத்திரம்தான் நிறுத்தினானா அல்லது வேறு துரவுகளண்டையிலும் நிறுத்தினானா என்பதும் எமக்குத் தெரியாது. அவர் உதவி கேட்டபொழுது தன்னுடைய ஒட்டகங்களுக்கு தன்னையே தண்ணீர்மொண்டு வார்த்துக்கொள்ளும்படி எத்தனை பெண்கள் அவரிடம் கூறினார்கள் என்பது பற்றியும் எமக்குத் தெரியாது. ஆனாலும் கடைசியாக, ரெபேக்காள் என்னும் பெயருள்ள மிகுந்த அழகிய இளம் பெண்ணொருத்தி தண்ணீர் மொண்டுகொள்ளும்படியாக வந்தாள். அது மாலைவேளையாயிருந்ததுடன், அவள் மிகவும் களைப்புற்றிருந்தாள். அவள் தன்னுடைய தண்ணீர்க் குடத்தை நிரப்பிக் கொண்டு போகத் தயாராயிருந்தபோது அவ் ஊழியக்காரன் அவளுக்கு எதிர்கொண்டோடி வந்து இவ்வாறு கேட்டார்,

> "அப்பொழுது அந்த ஊழியக்காரன், அவளுக்கு எதிர்கொண்டோடி: உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் குடிக்கத் தரவேண்டும் என்றான். அதற்கு அவள்: குடியும் என் ஆண்டவனே என்று சீக்கிரமாய்க் குடத்தைத் தன் கையில் இறக்கிக்கொண்டு, அவனுக்குக்

குடிக்கக் கொடுத்தாள். கொடுத்தபின், உம்முடைய ஒட்டகங்களும் குடித்துத் தீருமட்டும் அவைகளுக்கும் மொண்டு வார்ப்பேன் என்று சொல்லி; சீக்கிரமாய் குடத்துத் தண்ணீரைத் தொட்டியிலே ஊற்றிவிட்டு, இன்னும் மொண்டுவரத் துரவண்டையில் ஓடி, அவனுடைய ஒட்டகங்களுக்கெல்லாம் மொண்டு வார்த்தாள்." (ஆதியாகமம் 24:17-20)

ரெபேக்காளின் தயவுக்கு பிரதிபலனாக, "அந்த மனிதன் தலைகுனிந்து, கர்த்தரைப் பணிந்துகொண்டு கூறியதாவது, 'என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாயிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; அவர் தம்முடைய கிருபையையும், தம்முடைய உண்மையையும் என் எஜமானை விட்டு நீக்கவில்லை; நான் பிரயாணம்பண்ணிவருகையில், கர்த்தர் என் எஜமானுடைய சகோதரர் வீட்டுக்கு என்னை அழைத்துக்கொண்டுவந்தார் என்றான்' " (26, 27 ஆம் வசனங்கள்). அவருடைய ஜெபத்திற்கு பதிலளிக்கப்பட்டது. ரெபேக்காள் ஈசாக்கினுடைய மணவாட்டி ஆனாள்! இந்தச் சம்பவம் எமக்கு அதிசிறப்பைக் குறித்து வல்லமையான சத்தியங்களைக் கற்றுக்கொடுக்கின்றது.

**சிறுகாரியங்களில் அதிசிறப்பு**

ஆபிரகாமுடைய ஊழியக்காரனுடைய யோசனையாக அமைந்த பரீட்சையில் தண்ணீர் மொண்டுகொள்ளுதலையும் ஈடுபடுத்தியது. வெளிப்படையாக அது ஒரு பெரிய காரியம் அல்ல. ரெபேக்காள் தண்ணீர்துரவண்டைக்கு சென்று கிட்டத்தட்ட ஒவ்வொருநாளும் தண்ணீர் மொண்டுகொள்ளுவாள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனாலும் இந்த ஒரு நாளில் அவள் மிகச் சிறியதொரு வேலையை ஓர் படி மேலே உயர்த்திக்கொண்டாள். பூக்கர் டி. வோஷிங்டன் ஒருமுறை இவ்வாறு கூறினார். "சாதரண ஒரு காரியத்தை அசாதாரணமான விதமாக செய்தலே சிறப்பு." பீட்டர்ஸ் மற்றும் ஒஸ்டீன் அவர்கள் (1985) கூறியதாவது, உங்கள் செயலாளர் தொலைபேசியில் பதிலளிக்கும் விதத்திலும், உங்கள் எழுத்துவினைஞர் உங்கள் தொகுப்பை கையாளும் விதத்திலும், உங்கள் முழு கம்பனியிலும் நீங்கள் முக்கியமற்றவராகக் காணப்படினும் உங்களை ஒரு வாடிக்கையாளராக சில மக்கள் நடத்துவதிலும் ஆகிய இவற்றிலேயே உங்கள் வியாபாரத்தின் சிறப்பானது தீர்மானிக்கப்படுகின்றதெனக் கூறினார்கள்.

நீங்கள் உங்கள் வேலையில் செலவிடும் நிமிடங்களைக் குறித்த விதத்தில் கவனமாயிருப்பீர்களெனில், உங்கள் மேல் அதிகாரி உங்களிடத்தில் மேலும் பெரிய பொறுப்புக்களை உங்களை நம்பி ஒப்படைக்க விரும்புவார். நீங்கள் உங்கள் சில்லறைகள் மற்றும் உங்கள் சதங்களில் உண்மையுள்ளவர்களாயிருந்தால் நீங்கள் ஒருபோதும் ஐந்து, பத்து மற்றும் இருபதுகளை களவெடுக்கமாட்டீர்கள்.

அண்மையில் இங்கிலாந்தின் லண்டன் நகரத்திற்கு சென்றபோது, நான் பெரும் எண்ணிக்கையான ரோல்ஸ்-ரோய்ஸ் (Rolls-Royce) கார்களைப் பார்த்து வியந்தேன். நான் வசிக்கும் பகுதியில் உள்ள மக்கள் அப்படிப்பட்ட வாகனங்களை ஓட்டமாட்டர்கள். ஆகவே நான் அமெரிக்காவில் எனது வீட்டிற்கு சென்றபோது, அப்படிப்பட்ட சொகுசான கார்களின் விலையை ஆய்வுசெய்தேன். 2006 ரோல்ஸ்-ரோய்ஸ் Phantom அதனுடைய சில்லறை

விற்பனை விலை 328,750 டொலர் என்று கண்டுபிடித்தேன். ஒரு மாதத்திற்கு அதற்கான கட்டணம் 5,355 டொலர் ஆகும். எப்படி அந்தக் கார் அவ்வளவு விலை அதிகமாக காணப்படுனின்றது? அதற்கு சில காரணங்கள் உண்டு:

- Phantom VI காரின் உடற்பகுதியை செய்வதற்கு 800 மனித மணித்தியாலங்களுக்கும் மேல் எடுக்கின்றது.
- இந்த ரோல்ஸ்-ரோய்ஸ்ஸுனுடைய ரேடியேட்டர் கிரில் (Radiator grille) ஆனது முழுவதுமாக கைகள் மற்றும் கண்களின் உதவியுடன் செய்யப்பட்டதாகும்; அளவிடை உபகரணங்கள் எதுவும் பயன்படுத்தப்படவில்லை.
- ஒவ்வொரு ரோல்ஸ்-ரோய்ஸ்ஸுனுடைய பொறியானது (engine) முழுவதுமாக கைகளால் நிர்மாணிக்கப்பட்டதாகும். ரோல்ஸ்-ரோய்ஸ்ஸுனுடைய ரேடியேட்டரை செய்வதற்கு ஒரு நாளைக்கு ஒருவர் தேவைப்படுகிறதுடன், அதை பொலிவுபடுத்துவதற்கு ஐந்து மணித்தியாலங்கள் வரை செலவிடப்படுகின்றது.

ரோல்ஸ் ரோய்ஸை தயாரிப்பவர்கள் “மிகச் சிறிய” காரியத்திற்கும் மிக தியாகத்துடன்கூடிய நுண்ணிய அவதானத்தை செலுத்துகின்றனர். இதன் விளைவாக 60 வீதத்திற்கும் அதிகமான கார்களை இன்றும் வீதிகளில் காணமுடிகின்றது. சிறு காரியங்களுக்கு கவனத்தைசெலுத்தாதுவிடும்போது, இறுதியில் பெரிய காரியங்களுக்கான வாய்பும் அற்றுப்போய்விடுகின்றது.

**அதிசிறப்பு முயற்சியையும் அர்ப்பணிப்பையும் கோருகின்றது**

இப்பொழுது நாம் மீண்டும் ரெபேக்காளின் உதாரணத்திற்கு திரும்புவோம். நிச்சயமாகவே, தங்களுடைய சொந்த தேவைக்காக மற்றப் பெண்களும் துரவில் தண்ணீர் மொண்டுகொண்டு இருந்திருப்பார்கள். அதனால் ரெபேக்காள் தன்னுடைய முறை வரும்வரை காத்திருந்திருப்பாள். அவள் உதவிசெய்வதற்கு எந்தளவு பேரார்வமிக்கவளாக இருந்தாள் என்பது உங்களுக்கு நினைவிருக்கின்றதா? அதிசிறப்பு முயற்சியையும் அர்ப்பணிப்பையும் கோருகின்றது; அது அவ்வளவு எளிதாக வந்துவிடாது. ஆபிரகாமின் ஊழியக்காரன் ரெபேக்காளினிடத்தில் “கொஞ்சம் தண்ணீர்” தரவேண்டுமென கேட்டார் (வச. 17). அவள் கொஞ்சத்தை மாத்திரம் கொடுத்து பின் அதை அவள் நிறுத்தியிருக்க முடியும். எனினும் ரெபேக்காள் ஏதோ ஒன்றை வெறுமனே செய்வதற்கு விரும்பவில்லை. கேட்டதைப் பார்க்கிலும் அவள் அதிகம் கொடுத்தாள். பின்னர் அவள் உதவிசெய்வதற்கு உடன்பட்டதுமே ஒரு ஆவிக்குரிய கொள்கை வெளிப்பட்டது. அவள் கொடுத்ததைப் பார்க்கிலும் பெற்றுக்கொண்டாள்.

எவருமே திடீரென அதிசிறப்பெய்வதில்லை. ஒருவர் அதிசிறப்பையடைவதற்கு வாஞ்சிப்பாரானால் அவர் எந்த அர்ப்பணிப்பையும் செய்யத் தயாராக இருத்தல்வேண்டும். ஒரு பழமையான கிரெக்க கதை இவ்வாறு சொல்லப்படுகின்றது, அந்த கிரேக்க சிற்பிகள்தங்களுடைய தயாரிப்பு வேலைகளில் ஒரு சொற்ப அளவேனும் கரடுமுரடான மேற்பரப்பு இருக்கின்றதா என்பதை பார்க்கும்படி தங்களுடைய பெருவிரலின் நகங்களைக்

கிழித்து அவ்விரலின் சதையினால் சோதித்துப்பார்ப்பர். அந்த மிகைப்படுத்தப்பட்ட படிமுறையில் ஏதேனும் குறைபாடு கண்டுபிடிக்கப்பட்டால் அந்த மார்பிளானது போதுமான அளவு மென்மையாக இல்லை.

இந்த சிற்பிகளின் வேலையைப் பார்க்கிலும் கிறிஸ்துவுக்காக பவுலுடைய தனிப்பட்ட அர்ப்பணிப்பானது இதனிலும் இன்னும் பெறுமதிமிக்கதாகும். கிறிஸ்துவுக்காக அவர் சகித்துக்கண்ட சில எண்ணிக்கையான காரியங்களை அவர் பட்டியற்படுத்துகின்றார்:

> மிகுந்த பொறுமையிலும், உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும், இடுக்கண்களிலும்; அடிகளிலும், காவல்களிலும், கலகங்களிலும், பிரயாசங்களிலும், கண்விழிப்புகளிலும், உபவாசங்களிலும் . . . . கனத்திலும், கனவீனத்திலும், துர்கீர்த்தியிலும், நற்கீர்த்தியிலும்; எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தராகவும், அறியப்படாதவர்களென்னப்பட்டாலும் நன்றாய் அறியப்பட்டவர்களாகவும், சாகிறவர்கள் எனப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும், தண்டிக்கப்படாதவர்கள் எனப்பட்டாலும், கொல்லப்படாதவர்களாகவும்; துக்கப்படுகிறவர்கள் எனப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் எனப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாயும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும், சகலத்தையுமுடையவர்களாயும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம். (2 கொரிந்தியர் 6:4-10)

அத்துடன், இஸ்ரவேலரின் மிகப்பெரிய இரட்சிப்பிற்காக மோசே செலுத்திய கிரயத்தையும் கவனியுங்கள். யோபு, நோவா, பேதுரு, மற்றும் எபிரெயர் 11 ஆம் அதிகாரத்தில் விசுவாச வீர்களின் புகழின் அரங்கத்தில் காணப்பட்ட ஆண்களினதும் பெண்களினதும் பட்டியலைக் கவனியுங்கள். தனிப்பட்ட தியாகத்தை செய்திராவிடின் இவர்கள் எதை நிறைவேற்றியிருக்கக்கூடும்?

## நேர்மையும் அதிசிறப்பும்

## *நோக்கம் 3:*

*நேர்மைக்கும் அதிசிறப்பிற்கும் இடையே உள்ள தொடர்பை காண்பித்தல்*

### நேர்மை என்றால் என்ன

*Integrity (நேர்மை)* என்ற ஆங்கில வார்த்தையானது "முழுமை" அல்லது "நிறைவு" என்ற லத்தீன் பதத்தின் அர்த்தத்திலிருந்து வருகின்றது. நல்ல நடத்தைக்குரிய நன்னிலையில் நம்முடைய வாழ்க்கையின் எந்தப் பகுதியும் குறைவுபடாதிருப்பதும் நம்முடைய இருதயங்கள்

இரண்டுபடாமல் இருப்பதுமே நேர்மையாயிருத்தல் என்பதன் அர்த்தம். ஒருவரும் கவனிக்காத வேளையிலும் சரியான காரியத்தை செய்வதினூடாக நேர்மையானது செய்முறைகள் மூலம் நிரூபித்துக்காண்பிக்கப்படுகின்றது.

வேதாகமம் நேர்மைக்கான கையேடு என்பதனால் நாம் நேர்மையைக் குறித்து வேதாகமத்திலிருந்து கற்றுக்கொள்ளுகின்றோம். தேவனுடைய வார்த்தையானது என்றென்றைக்கும் பரலோகத்தில் நிலைபெற்றுள்ளது. வேதாகமானது கொள்கை மாறாத உறுதியானதாகையால் அனைத்து கலாசார மக்களும் ஒரே மாதிரியான சத்தியங்களைதேடிப்பெற்றுக்கொள்ள முடியும். நமது வாழ்க்கையில் நேர்மையின் வெளிப்பாடானது அவருடைய மக்களாக நம்மைக் குறித்த தேவனுடைய எதிர்ப்பார்ப்புக்களை அறிந்துகொள்ளுவதிலிருந்தும் சுய ஒழுக்கத்திலிருந்தும் தேவனுடைய உண்மைத்தன்மையின் மீது நமது ஆழமான நம்பிக்கையிலிருந்தும் நமது வாழ்க்கையில் தேவனுடைய ஆவியானவரின் கிரியையிலிருந்தும்மற்றும் எல்லாச் சூழ்நிலையிலும் அயராது நேர்மையாயிருக்கும் தீர்மானங்களிலிருந்தும் வருகின்றது.

**தனிப்பட்ட நேர்மை**

நேர்மையுள்ள நபர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை ஒரு முகத்தையும் வாரநாட்களில் அதற்கு நேர் எதிரான முகத்தையும் கொண்டிருக்கமாட்டார். தேவனுடைய வேலையை ஒரு கையிலேயும் பிசாசினுடைய வேலையை மறுகையிலேயும் கொண்டிருக்கமாட்டார். நேர்மையானது நோக்கத்தில், விருப்பத்தில் மற்றும் இருதயத்தில் ஒருமையைப் பேசும். நீதிமொழிகள் 10:9 கூறுகின்றது, “உத்தமமாய் நடக்கிறவன் பத்திரமாய் நடக்கிறான்; கோணலான வழிகளில் நடக்கிறவனோ கண்டுபிடிக்கப்படுவான்.” நேர்மையில் நடக்கிறவனுடைய நன்மைகளில் ஒன்று நம்பிக்கை.

அமரர் பேப் சஹாரியாஸ் நேர்மையின் நபர் என்று அறியப்பட்டவராவார். சஹாரியாஸ் 1932 ஆம் ஆண்டு ஒலிம்பிக் amateur கோல்ப் (குழிப்பந்தாட்டம்) விளையாட்டில் வெற்றியாளரும் பின்னர் கோல்ப் விளையாட்டில் நிபுணருமானாள். ஒரு சந்தர்ப்பத்தில் அவள் தற்செயலாக தவறான பந்தை விளையாடினபடியினால் இரு அடிகளால் தன்னையே தண்டித்துக்கொண்டாள். “நீ ஏன் அதைச் செய்தாய்?” என்று ஒரு நண்பர் கேட்டார். “ஒருவரும் உன்னைக் பார்க்கவில்லை. ஒருவருக்கும் அதனுடைய வித்தியாசம் தெரியாது.” “நான் அதை அறிந்துள்ளேன்,” என்று பேப் சஹாரியாஸ் பதிலளித்தார்கள். பேப் நேர்மையை செய்முறைகள் மூலம் நிரூபித்துக் காண்பித்தார்கள். அவள் பொது இடத்திலும் தனிமையிலும் இரண்டிலும் உண்மையாயிருந்தாள் (Cohen 1998, 11).

அத்துடன் தனிப்பட்ட நேர்மையானது ஒரு கூட்ட பெறுமதிகளைகடைப்பிடித்தலையும் உள்ளடக்குகின்றது, அவைகள் உண்மை மற்றும் வஞ்சனையிலிருந்து விடுதலையையும் இணைக்கின்றது. சரியான விடயத்தை சரியான நேரத்தில் சரியான காரணங்களுக்காக செய்தலே அதன் அர்த்தம்.

வருடத்திற்கான வியாபாரி என Brandweek என்ற சஞ்சிகையினால் பெயரிடப்பட்ட லெனாட் ரொபட்ஸ் இவ்வாறு கூறினார், “நீங்கள் அதை பொய்யாக்க முடியாது. எதையும் பொருட்படுத்தாமல் நீங்கள் சரியானதற்காக நிற்க வேண்டும். நீங்கள் உங்கள் நேர்மையை 90 சதவீதமாக வைத்துக்கொண்டு ஒரு தலைவராக முடியாது. அது 100 சதவீதமாக இருத்தல்வேண்டும்” (Cohen 1998, 8). நேர்மையின் துணிச்சல் என்று ஒரு சுவரொட்டியில் தலைப்பிடப்பட்டு எழுதப்பட்டிருந்த வார்த்தைகள் “கடும் கஷ்டத்தின் மீது உங்களிடம் தைரியமாயிருத்தலே உயர் துணிவாகும். பிழையிலிருந்து சரியானதை, வசதியிலருந்து நன்னெறியை, புகழிலிருந்து சத்தியத்தை தெரிவுசெய்தல்...ஆகிய இந்த தெரிவுகளே உங்கள் வாழ்க்கையை அளவிடுகின்றது. பின்நோக்கிப் பாராது நேர்மை என்னும் பாதையில் பயணியுங்கள். ஏனென்றால், சரியான விடயத்தை செய்யும்படிக்கு ஒருபோதும் தவறான நேரமிருக்காது.”

நீங்கள் நேர்மை உள்ள ஒரு நபரா? நீங்கள் அதிசிறப்பை நோக்கி தீவிரமாக நகர வேண்டுமா, அப்படியானால் தொடர்ந்தும் உங்களிடம் இக்கேள்விகளைக் கேளுங்கள்:

- நான் இன்று முற்றுமுழுதும் உண்மையாக இருந்தேனா?
- நான் என்னுடைய பொருளாதார கடமைகளைச் சந்தித்தேனா?
- என்னுடைய எதிர்பாலரிடத்தே நான் தகுதியான விதமாக நடந்துகொண்டேனா?
- என்னுடைய பொது மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை குற்றமற்றதாக காணப்பட்டதா?
- என்னுடைய பொறுப்புக்கள் யாவையும் விட்டுக்கொடுக்காது விருப்பமுள்ள ஆவியுடன் நிறைவேற்றினேனா?
- நான் இன்று தேவனை சந்தித்தேனா?
- நான் ஆரோக்கியமற்ற நினைவுகள் அல்லது பாலியல் சம்பந்மான படங்கள் குறித்த நினைவுகளில் ஈடுபட்டேனா அல்லது மற்றவர்கள் மீது இரக்கமற்ற கடுமையான உணர்வுகளை வளர்த்தேனா?
- நான் சமீபத்தில் என்னுடைய எண்ணங்களைக் குறித்து ஆராய்ந்து பார்த்தேனா?
- நான் என்னுடைய குடும்பத்தினர் அல்லது நண்பர்களுடன் போதியநேரத்தை செலவிட்டேனா?
- நான் அறிக்கையிடப்படாத பாவங்கள் அல்லது மன்னிக்க முடியாத காயங்களில் தரித்திருந்தேனா?

## அதிசிறப்பிற்காக திட்டமிடல்

## *நோக்கம் 4:*

*அதிசிறப்பிற்காக திட்டமிடுதலானது ஏன் இன்றியமையாததெனக் காண்பித்தல்*

அப்படியானால் அதிசிறப்பென்பது தற்செயலாக அல்ல வடிவமைப்பினால் வருகின்றது.திட்டமிடலானது சிறப்பிற்கான நமது வீதிவரைபடமாகும். பின்வருபவை நம்முடைய தனிப்பட்ட திட்டமிடுதலுக்கான சில சிறுகுறிப்புக்களாகும்.

சில மக்கள் இலக்கை சார்ந்திருப்பார்கள். நிச்சயமாகவே இலக்குகள் உந்துவிசையாகவிருந்து நமக்கு உதவிசெய்யும். ஆராய்ச்சியாளர் ஜோர்ஜ் பார்னா ஐக்கிய அமெரிக்க இராஜ்யத்தில் உள்ள கிறிஸ்தவர்களைக் குறித்து இவற்றைக் கவனித்தார்: "வயது வந்தவர்களில் ஐந்தில் மூன்று கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு ஓர் ஆழமான பொறுப்புண்டென்று உரிமைபாராட்டும் அதேவேளை அவர்கள் ஆவியில் வளரும்படிக்கு எவ்விதமான திட்டமிடப்பட்ட முயற்சியிலும் ஈடுபடவில்லை" (Hammett, under "Discipleship Models"). சபைக்குச் செல்லும் பத்தில் நான்கு விசுவாசிகள் மாத்திரமே தங்களுக்காக தனிப்பட்ட ஆவிக்குரிய இலக்குகளை அமைத்துள்ளனர் என்று உரிமைபாராட்டுகின்றனர். தங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியைக் குறித்து மிகத் தீவிரமாக துல்லியமாக ஆவிக்குரிய இலக்குகளை தெளிவாகக்கொண்டிருப்பது பத்தில் இரண்டு விசுவாசிகள் மாத்திரமே. அதற்கும் மேலாக அதிகபட்சமான விசுவாசிகள் வாழ்க்கைக்கான பொதுவான இலக்குகளை உடைய அநேகர் தாங்கள் எவ்வாறு அதனிடத்திற்கு சென்றடைவதென்பதைக் குறித்தஎவ்வித தடயமும் இல்லாதுள்ளனர் (Hammett, under "Discipleship Models").

உங்கள் வாழ்வு காலத்தில் கிறிஸ்துவுக்காக எதை அடையும்படி எதிர்பார்க்கின்றீர்கள்? என நீங்களே உங்களிடம் கேளுங்கள். இப்பொழுதிருந்து இன்னும் ஐந்து வருடத்தில் கர்த்தருக்குள் நீங்கள் எவ்விடத்திலிருக்கும்படி எதிர்பார்க்கின்றீர்கள்? பத்து வருடங்கள்? அந்த இலக்குகளை சென்றடைய நீங்கள் எவ்வாறு திட்டமிட்டுள்ளீர்கள்? எக்கருவிகள் அதை கொண்டு செல்லும்? அவசியமேற்படின் உங்கள் தினசரி வாழ்க்கை முறையில் எவ்விதமான மாற்றங்கள் செய்யவேண்டி ஏற்படும்? கலிபோனியா பல்கலைக்கழக மற்றும் லாஸ் ஏன்ஞசல் பல்கலைக்கழகஆய்வொன்றில் இலக்கை நிறைவேற்றிய 80 வீதமான மக்களில் 5 வீதமானவர்கள் தங்கள் வாழ்க்கையின் இலக்கை எழுதிக்கொண்டவர்களாக காணப்படுகின்றனர்.

அதிசிறப்பை சாதிப்பதற்கு இலக்குகளை அமைத்துக்கொள்ளுவது மிக முக்கியமானதாகும். எல்லா உதாரணங்களிலும் மிகவும் சிறப்பான உதாரணம் இயேசுவே. மிகத் துல்லியமான இலக்குகளுடன் காணப்பட்டார்: எருசலேமிற்குச் சென்றார்; உலகத்தின் பாவங்களுக்காக மரித்தார். மீண்டும் உயிர்த்தெழுந்தார். இயேசு இழந்துபோனவர்களை இரட்சிக்க வந்தார். மிகவும் சிறப்பாக அவர் அந்த இலக்கை நிறைவேற்றினார்.

சிலவேளைகளில் நீங்கள் தேவனுடைய ஊழியத்தில் அழைப்பை குறித்து அக்கறைகொண்டிருக்கலாம். அந்த இலக்கு எவ்வளவு பெறுமதிமிக்கதோ ஒருவன் அந்த இலக்கை தன்னிச்சையாக அடைவதில்லை. அந்த படிமுறையை சிறு துண்டுகளாக உடைப்பது அதைவிட நன்று. ஒருவன் பாடசாலையில் நல்ல தரங்களைப் பெற்றுக்கொள்ளுவதற்காக அர்ப்பணிக்கவேண்டும். தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு அர்ப்பணிக்கவேண்டும், தினசரி ஆவிக்குரிய ஒழுங்குகளுக்குகாகவும், எல்லைகடந்த ஊழியத்தில் செயற்பாடுள்ள விதமாக இருப்பதற்கும் நேரத்தை ஒதுக்கவேண்டும். இந்த ஒவ்வொரு படிமுறையும் இன்னும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும்படிக்கு இன்னும் சிறு

பகுதிகளாக உடைத்துக்கொள்ளுங்கள். அதன்பின்னர் நீங்கள் நிறைவேற்றும் ஒவ்வொரு இலக்கிற்கும் நேராக புள்ளடியிடுங்கள்.

**வளர்வதற்கு உத்தேசித்தல்**

நீங்கள் Achondroplasia என்ற மருத்துவ பதத்தைக் குறித்து அறிந்துள்ளீர்களா? இது dwarfism என்கின்றதான குள்ளமான உருப்பெறுதலாகும். இந்த Achondroplasia ஆனது 25,000 இல் ஒரு குழந்தைக்கு பாதிப்பேற்படுத்தக்கூடியது. இந்த வளர்ச்சி பாதிப்படைந்தவர்களில் ஆண்களின் உயரம் சராசரியாக 4 அடி 3 அங்குலமும் அதேவேளை பெண்களின் வளர்ச்சி 4 அடியுமாகும். ஐக்கிய அமெரிக்க இராஜ்யத்தில் வளர்ந்த ஒரு ஆணின் உயரம் சராசரியாக 5 அடி 9 அங்குலமும் அதேவேளை பெண்ணின் வளர்ச்சி சராசரியாக 5 அடி 5 அங்குலமுமாகும் (சுகாதார புள்ளிவிபரங்களுக்கான தேசிய நிலையம்) இந்த இலக்கங்களானது காலசாரத்திற்கு கலாசாரம் வேறுபடலாம்.

வளரும்படி தேவன் படைத்த நம்முடைய பௌதீக உடலைப்போல, நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையும் வளரவேண்டுமென அவர் எதிர்பார்க்கின்றார். ஒரு போதகராக எழுபது, எண்பது மற்றும் தொன்னூறு வயதிற்கு மேலாகவும் தங்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சியை அனுபவித்த மக்களை பார்த்து நான் சந்தோஷமடைகின்றேன். அப்போஸ்தலர் பவுல் அப்படிப்பட்ட வளர்ச்சியை உற்சாகப்படுத்துகின்றார். எபேசியர் 4:11 இல் “கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகுங்கள்” என்று அவர் சபைகளை உற்சாகப்படுத்துகின்றார். இரண்டு பேதுரு 3:18 இதனையும் கூட்டுகின்றது, நாமும் “இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்.” இங்கே*வளருங்கள்* என்ற வார்த்தையானது மெய்யாகவே “வளர்ந்துகொண்டேயிருங்கள்” என்பதை நமக்குக் கூறுகின்றது. முழு கீழ்ப்படிவையும் கோருகின்ற இது ஒரு கட்டளையாகும்.

சில வருடங்களுக்கு முன்னதாக நான் கிறிஸ்தவ வளர்ச்சியின் வெவ்வேறு படிநிலைகளை விபரிக்கும் ஒரு வளர்ச்சி அட்டவணையொன்றைத் தயாரித்தேன். இந்த அட்டவணையில் நீங்கள் எவ்விடத்திலிருக்கின்றீர்கள் என்பதை பார்க்கவும்.

**ஆவிக்குரிய வளர்ச்சி அட்டவணை**

| புதிய விசுவாசி | கிறிஸ்துவுக்குள் குழந்தை | வளர்ச்சி உருபெற ஆரம்பித்தல் | விசுவாசத்தில் முதிர்ச்சி | சீஷன் |
|---|---|---|---|---|
| வேதாகமம் ஒன்றை வாங்குவார் | வேதாகமம் ஒன்று இருக்கும் | வேதாகமத்தை வாசிப்பர் | வேதாகமத்தை அறிந்திருப்பார் | வேதாகமத்தை கற்றுக்கொடுப்பர் |
| ஜெபம்பண்ண ஆரம்பிப்பார் | பிரச்சினை நேரங்களில் ஜெபம் செய்வார் | அனுதினமும் ஜெபிப்பர் | ஜெப வீரன் | ஜெபம் செய்ய தேடுவர் |
| ஆவிக்குரிய வேர்கள் எதுவுமில்லை | வேர்கள் வர ஆரம்பிக்கும் | வேர்கள் பற்றக்கொள்ள ஆரம்பிக்கும் | வேர்கள் ஆழமாக உள்ளன | வேர்கள் உறுதியானது |
| சபைக்கு பணத்தை கொண்டு செல்வார் | காணிக்கை கொடுப்பர் | தசமபாகம் கொடுக்க ஆரம்பிப்பார் | தசமபாகங்களும் காணிக்கைகளும் | பொருளாதார ரீதியாக தியாகம் செய்வார் |
| ஒரு பசியை வளர்ப்பர் | “பால்” ஆகாரம் எடுப்பார் | தன்னை போஷிக்க ஆரம்பிப்பார் | “திடமானஉணவுகளை” உண்பார் | மற்றவர்களை போஷிக்கக் கூடியவர்கள் |
| பரிசுத்தஆவியைக் குறித்து இன்னும் கேள்விப்படவில்லை | பரிசுத்தஆவியைக் குறித்து கேள்விப்பட்டிருப்பார் | ஆவியில் நிரம்பியிருப்பார் | ஆவியில் ஜெபிப்பார் | ஆவியில் நடப்பார்கள் |
| கனி என்றால் ஆப்பிள் என்று நினைப்பார் | கனி | கனிகொடுக்க ஆரம்பிப்பார் | முதிர்ச்சியடைந்த கனி | 30,60,100 மடங்காக கனிகொடுப்பர் |
| சபைக்கு சமூகமளிக்க ஆரம்பிப்பார் | முடிந்தவேளைகளில் சபைக்கு சமூகமளித்தல் | சபைக்கு உண்மையாக இருப்பார் | சபையை நேசிப்பார் | செல்வாக்குச் செலுத்துபவர் |
| விசுவாசம் பிறக்கும் | விசுவாசம் சிறிது | விசுவாசத்திற்கு உறுதி உண்டு | உறுதியான விசுவாசம் | தைரியமுள்ள விசுவாசம் |
| மனந்திரும்புவார் | இருமனம் உள்ளவர் | சரியானது பிழையானது எது என்பதை அறிவர்.<br>புதிய நண்பர்களை ஏற்படுத்துவார் | விசுவாசக் காரணங்களைக் குறித்துமிகவும் இலகுவாக பேசுவர் | ஊழியம் செய்வார் |
| பாவத்தை அறிக்கை செய்வார்<br>புதிய பழக்கவழக்கங்கள் உருவாகும் | பலவீனமான மனசாட்சி கோட்பாடென்கின்ற ஒவ்வொரு காற்றினாலும் புரட்டப்படுவார் | | நற்பெயர் உண்டு | ஆவிக்குரிய வரங்களை அறிவார்<br>ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபடுவார் |
| நண்பர்கள் ஒரு மாற்றத்தைக் காண ஆரம்பிப்பார்கள் | எளிதாக புண்படக்கூடியவர் | | ஆவியின் கனி உண்டு | கிறிஸ்துவை இன்னும் நன்றாக அறிய தேடுவார் |
| தண்ணீர் ஞானஸ்நானம் | விழுதலுக்கு உட்படக்கூடியவர் | | தனிப்பட்ட பரிசுத்தத்தை காட்சிப்படுத்துவர் | உறுதியுள்ளவர்கள் |
| | | | புண்படுத்தப்படுவதற்கு தாமதிப்பர் | |
| | | | நன்றியறிதல் உள்ளவர்கள் | |

| | | | | |
|---|---|---|---|---|
| பெறுவார் | | | | / நிலையானவர்கள் |

கிறிஸ்துவுக்குள் வளர்தலானது நடைபெற்றுக்கொண்டேயிருக்கின்றதை நீங்கள் காணக்கூடியதாகவுள்ளதுடன் அதிசிறப்பு என்து மனமறிந்து செய்யப்படுகின்ற ஒன்றாகும். எபிரெயர் 5:12-14,

> காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்க வேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கின்றது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானோந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்.

எபிரெய நிரூபத்தின் எழுத்தாளர் அவருடைய வாசகர்களுடைய வாழ்க்கையிலிருந்த பிழையை சுட்டிக்காட்டுகின்றார். அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சியைக் குறித்தும் அந்த குறைவுக்கான பொறுப்பை அவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பதையும் வெளிப்படுத்துகின்றார்.

நிச்சயமாக, கர்த்தர் நாம் எங்கு இருக்கின்றோம் என்பதையும் நாம் அவரில் எங்கு இருக்க வேண்டும் என்பதையும் அவர் சரியாக அறிந்துள்ளார். நீங்கள் ஒருநாளும் வளர்ச்சியடைவதை ஒருபோதும்நிறுத்தாமலிருப்பதற்குத்தீர்மானித்துக்கொள்ளுங்கள்.

**வழிநடத்துனரை தேடுதல்**

வழிநடத்துனர் என்றால் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஆலோசனைக்காரர் அல்லது நம்பிக்கையான அறிவுரையாளர் ஆவார். தீமோத்தேயுவினுடைய வழிகாட்டி பவுலாவார். எலிசாவுக்கு எலியா இருந்தார். பன்னிரெண்டு அப்போஸ்தலர்களுக்கு இயேசு இருந்தார். சாலமோனுக்கு தாவீது இருந்தார்.இன்று நமக்குக்கும்கூட உதவிசெய்வதற்கும் கணக்கு ஒப்புவிப்பதற்கும் கர்த்தருக்குள் முதிர்ச்சியடைந்த ஒருவர் நமக்கு அவசியமாயிருக்கின்றார். ஒவ்வொருவருக்கும் ஒரு பயிற்றுவிப்பாளர் அவசியம். ஒவ்வொருவருக்கும் ஒரு மாதிரி அவசியம். தேவபக்தியுள்ள வழிநடத்துனர் இவ்விரண்டு தேவைகளையும் பூர்த்திசெய்யக்கூடியவராயிருக்கின்றார். நீதிமொழிகள் 1:7 கூறுகின்றது, “மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டைபண்ணுகின்றார்கள்.” “அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும்” (நீதிமொழிகள் 11:14).

இயேசு பேதுருவை தம்முடைய சீஷனாயிருக்கும்படி அழைத்த காலத்திற்குள் மீண்டும் செல்லுவோம். இயேசு அவனைப் பார்த்து: " '*நீ யோனாவின் மகனாகிய சீமோன், நீ கேபா எனப்படுவாய் என்றார்*' (கேபா என்பதற்குப் பேதுரு என்று அர்த்தமாம்)" (யோவான் 1:42). இம்முழு இலக்கியங்களுக்குள்ளும் எதிர்பார்ப்பு நிறைந்த ஐந்து வார்த்தைகளை நாம் இங்கு காணக்கூடியதாகவிருக்கின்றது: "*நீ . . . எனப்படுவாய்.*" பேதுரு அவசரப்படுகின்ற மனிதன்; அவன் மூர்க்கமானவன்; நிலையற்றவன்; துணிவுள்ளவன்; மற்றும் நேர்மையுள்ளவன். அவன் நன்மை செய்வதில் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் நல்லவனாகவும் அல்லது அவன் தீய காரியங்களில் மோசமானவனாகவும் காணப்பட்டான். எவ்வாறாயினும் இயேசு அவனை ஸ்திரப்படுத்தினார். பேதுருவை அறிந்தவர்கள் அவன் எப்போதும் இருப்பதைப் பார்க்கிலும் அவனிடத்தில் ஏதாவது வித்தியாசம் காணப்படுமோ என்று சந்தேகித்தனர். இயேசுவினுடைய தீர்க்கதரிசனங்களுக்கு இணங்க அவன் வளரக்கூடிய சாத்தியக்கூறுகள் எதுவுமில்லை என அவர்கள் கண்டிருந்திருக்கலாம்.

ஆயினும் ஒருநாள் எல்லாம் மாறியது. இயேசு பேதுருவை பார்த்துக் கேட்டார் " '*நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்? சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளுவதில்லை*' " (மத்தேயு 16:15-18).

இதன் பின்னர் அதிக நாட்கள் செல்லுமுன்பு, பெந்தேகொஸ்தே நாளன்று, பேதுரு தைரியமாக எதிர்த்து நின்ற ஜனங்களிடத்தில் மிகுந்த ஆற்றலுடன் சுவிசேஷத்தை பிரசங்கித்தான். மூவாயிரம்பேர் இரட்சிக்கப்பட்டார்கள். இயேசு அவன் எப்படி இருந்தான் என்பதை மாத்திரமல்ல அவன் எப்படி வரப்போகின்றான் என்பதை கண்டதாலேயே பேதுரு ஆவிக்குரிய குள்ளத்திலிருந்து ஆவிக்குரிய இராட்சதனாக மாறினான். நிச்சயமாகவே பேதுரு கனவில்கூட இவ்வாறாக எண்ணியிருக்கமாட்டான். இந்த உண்மை உங்களுக்கும் உரியதாகும்!

நியாயாதிபதிகள் புத்தகம் இதற்கு ஒத்த சம்பவத்தை பகிர்ந்துகொள்ளுகினறது. மீதியானியர்களால் இஸ்ரவேலர் அச்சுறுத்தப்பட்டார்கள். காரியங்களை இன்னும் மோசமாக்கும்படிக்கு மீதியானியரிடத்தில் பெரும் எண்ணிக்கையிலான படைவீரர்கள் காணப்பட்டார்கள். சூழ்நிலையானது நம்பிக்கையற்ற விதமாகக் காணப்பட்டது. நியாயாதிபதிகள் 6:6 இல் பதியப்பட்டுள்ளவாறு, "*இப்படி மீதியானரினாலே இஸ்ரவேலர் மிகவும் சிறுமைப்பட்டார்கள்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள்.*" இஸ்ரவேலர் கர்த்தரை நோக்கி முறையிட்டபோது, பரலோகத்திலிருக்கிற தேவன் அதைக் கேட்டார். அவர் எவ்விதம் பதிலளித்தார்? அவர் எளிமையான ஒருவனை அழைத்தார், அந்த சாதாரண மனிதனுடைய பெயர் கிதியோன். கர்த்தருடைய தூதனானவர் கிதியோனை சந்தித்தபோது, அந்த தூதன் அவனுக்கு மரியாதை செலுத்தி கூறியதாவது, " '*பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னுடனே இருக்கிறார் என்றார்.*' " (வசனம் 12).

அத்தருணமே கிதியோன் ஒளிந்துகொண்டார். இஸ்ரவேலரிடத்தில் காணப்பட்ட அந்த சொற்ப அளவான தானியம் எதிரிகளால் களவாடப்படுவதை தடுப்பதற்கு முயற்சிசெய்துகொண்டிருந்தான். தேவனுடைய தூதனானவருக்கு கிதியோனுடைய பதிலானது அவனது பாதுகாப்பற்ற நிலையைக் காண்பித்தது. தான் இஸ்ரவேல் கோத்திரத்தாரில் மிகவும் சிறியவன் என்பதை அறிவித்தான். தேவன் அவனை பார்த்த விதமாக அதாவது அவன் தன்னை பராக்கிரமாசாலியாக பார்க்காதபடி கிதியோன் தன்னுடைய குறைவுகள் மற்றும் போதாமைகளினால் அழுத்தப்பட்டான். ஆயினும் தேவனுடைய தூதனானவர் விட்டுக்கொடுக்கவேயில்லை. அவர் கிதியோன் இஸ்ரவேலுக்கு மிகப்பெரிதான விடுதலையைத் தருவான் எனவும், அவனுடைய கரங்களினாலே எதிரிகள் அழிக்கப்படுவார்கள் எனவும் கூறினார். அந்த தூதன் கூறியது சரியே. தேவனுடைய உதவியினால், ஒரு இராத்திரியிலே கிதியோன் மீதியானியருடைய படையைத் தோற்கடித்தான்.

கர்த்தர் பார்த்த விதமாக கிதியோன் தன்னை பார்த்தபொழுது, அவன் மாற்றப்பட்ட மனிதனானான். அவன் பராக்கிரமசாலியானான்! நம் மத்தியில் இருக்கும் மிகவும் சாதாரணமானவர்களை தேவன் எப்படி பயன்படுத்தினார் என்பதற்கு கிதியோன் ஒரு மிகச்சிறந்த உதாரணமாவார். அதற்காக கிதியோன் எபிரெயர் நிரூபம் 11 ஆம் அதிகாரத்தில் விசுவாச வீரர்களின் புகழ் அரங்கத்தின் பட்டியலில் ஒரு அங்கத்தினருமானார்.

கிறிஸ்தவன் தேவனுடைய கோணத்தில் பார்க்க ஆரம்பிக்கும்போது, அவன் அல்லது அவளுடைய அனுதின வாழ்க்கையானது வெற்றிகரமானதும் ஜெயமுள்ளதுமாகின்றது. தேவன் சிறப்புக்கான ஒரு காலநிலையை உருவாக்குகின்றார். ஆகவே, வெற்றியுள்ள வாழக்கையை வாழ்வதற்கும், கிறிஸ்துவைப்போலாகுவதற்கும், உண்மையுள்ள ஊழியத்தைச் செய்வதற்கும், உங்களைச் சுற்றியிருக்கிறவர்களை அன்புசெய்வதற்கும், மற்றவர்களை கர்த்தருக்காக ஆதாயப்படுத்துவதற்கும் மற்றும் இலக்குகளை அடைவதற்கும் தேவன் உங்களைப் பார்க்கின்ற விதமாக நீங்களும் உங்களைப் பாருங்கள்.

## முடிவுரை

லுசியானா பாயு என்ற இடத்தில் வாழ்ந்த மூன்று பெண்களைக் குறித்து சொல்லப்பட்ட கதை இது. ஒவ்வொரு நாளும் அவர்கள் முறுமுறுப்பார்கள் “நாம் இங்கே சிறிய பாயுவில் ஒரு மோசமான வாழ்க்கையை வாழுகின்றோம். மூவருக்கும் எவ்வித வாய்ப்புக்களும் இல்லை. மற்றவர்கள் தங்களுக்கு கிடைக்கும் வரையரையற்ற வாய்ப்புக்களால் அந்த நகரத்தில் வாழ்கின்றனர். நாம்? நமக்கு எதுவும் கிடைக்கவில்லை.” பின்னர், ஒருநாள், அவ்வீதி வழியாக இந்த பரிதாபத்திற்குரிய ஆத்துமாக்களை சந்திப்பதற்காக ஒரு பெண் வந்தார்கள். அவர்களுடைய கவலையுள்ள புலம்பலைக் கேட்ட பின்னர் அவள் அவர்களுக்கு கூறினார் ஒன்றுக்கும் உதவாது! உங்களுக்கு வாய்ப்புகள் வேண்டுமா? உங்களுக்கு வாய்ப்புக்கள் கிடைத்தது! நீங்கள் பாயுவில் வாழ்கின்றீர்கள். இந்த பாயு ஆறுகளை பாயச்செய்கின்றது, இந்த ஆறு குடாவுக்குள் செல்லுகின்றது. இந்த குடா கடலுக்குள் செல்லுகின்றது. இப்பொழுதும் நீங்கள் இருக்கின்ற இடத்திலிருந்து நீங்கள் விரும்புகின்ற எவ்விடத்திற்கும் போக முடியும்!”

வாய்ப்புகள் இருக்கின்றது. இங்கிருந்து நீங்கள் போகவேண்டுமென நினைக்கின்ற எவ்விடத்திற்கேனும் போகமுடியும். தொல்லைதரும் இந்தநெருக்கடியை பின்னால் தூக்கியெறிந்து விட்டு ஏன் அதிசிறப்பை நோக்கி நகரக்கூடாது?

## குறிப்புப் பட்டியல்


Cohen, William A. 1998. The Critical Importance of Integrity. Washington, D.C. The Institute of Leader Arts. Online. http://www.stuffofheroes.com.

Hammett, Eddie. Discipleship Models For Today's Church-Breaking Through Denial in your Church. http://www.disciplesshipteam.org/featured_article. html (accessed January 2006).

Mansfield, Stephen. 1995. *Never Give in*. Nashville, TN: Cumberland House Publishing, Inc.

Maxwell, John. 1999. *The 21 Indispensable Qualities of a Leader*. Thomas Nelson Publishers.

National Centre for Health Statistics. http://www.cdc.gov/nchs (accessed August 22, 2007)

Peters, Tom, and Nancy Austin. 1985. A Passion for Excellence. New York: Warner Books.

Ziglar, Zig. ThinkExist.com Quotations. http://en.thinkexist.com/quotes/zig_ziglar (accessed November 20, 2006).